## அர்ப்பணம்...

தேவ கிருபையால் இலங்கை **வானொலியில்** வெளிவந்த தேவசெய்திகளை வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரின் உதவியோடு புத்தகமாக வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இப்புத்தகம் வெளிவர காரணமாயிருந்தவர் அன்பின் சகோதரர் தாமஸ் அவர்கள். அவர் கர்த்தருடைய செய்தியை பல வருடங்களாக வானொலியில் கேட்டு எங்களோடு தொடர்பு கொண்டபோது அவரை சந்திக்க ஒரு சனிக்கிழமை மாலை நேரம் சென்றோம். அப்பொழுது அவர் நமது நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரோடு சேர்ந்து நாங்களும் வானொலிச் செய்தியைக் கேட்டோம். அவருக்கு அந்த நேரத்தில் சொல்லமுடியாத சந்தோஷம் ஏற்பட்டது. இவ்வளவு காலமாக வானொலியில் தேவ செய்தியை கொடுத்து வந்த சகோதரர் நம்மிடம் வந்திருக்கிறாரே என்ற சந்தோஷம்.

சென்னையில் இத்தனை செல்போன் டவர்களும் பல விதமான அலைவரிசைகள் நிறைந்த இடத்தில் மிகத்தெளிவாக நமது 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வானொலி நிகழ்ச்சியை அவர் தனது பழைய வானொலிப் பெட்டியில் கேட்பது எங்களுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. அவருடைய இருயத்தை கர்த்தரே திறந்தார் என்றே சொல்லவேண்டும். அவர் சத்தியத்தைக் கேட்டு சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். சென்னை மெரினாபீச்சில் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தோம். பின்பு அவர் மூலமாக திருவல்லிக்கேணியில் அவருடைய வீட்டிலே சபையாக கூடிவந்தோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட அவர் பேருதவியாக இருந்தார்.

சில ஆண்டுகள் **World Evangelism Bible School** செயல்படவும் அவருடைய இல்லத்தை திறந்துகொடுத்தார். தேவன் அவரையும் அவருடைய குடும்பத்தையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,
**B. Arjunan & Glory**


**Order From**
World Literature Publications
P.O.Box.5, Batlagundu - 624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Mobile : 9443558041 & 6379350509

Sharon Print System, Madurai - 2, Phone - 99439-33377



ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2012

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

**2012**




செய்தியாளர்
B.அர்ஜுனன்


*Published by*
**The Word of Christ**

Vol.7

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ

**2012**

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

**கிறிஸ்துவின் வசனம்**
**ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள்**
**வெளியீடு**
செய்தியாளர்: **B. அர்ஜுனன்**

| | | | | |
|---|---|---|---|---|
| பாகம் - 1 | (2005 - 2006) | 2007 | - | 51 செய்திகள் |
| பாகம் - 2 | (2006 - 2007) | 2012 | - | 53 செய்திகள் |
| பாகம் - 3 | (2007 - 2008) | 2014 | - | 60 செய்திகள் |
| பாகம் - 4 | (2009) | 2019 | - | 52 செய்திகள் |
| பாகம் - 5 | (2010) | 2019 | - | 52 செய்திகள் |
| பாகம் - 6 | (2011) | 2020 | - | 53 செய்திகள் |
| பாகம் - 7 | (2012) | 2021 | - | 52 செய்திகள் |



மாத இதழ் "**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**"
மற்றும் மேற்கண்ட புத்தகங்கள்
தேவைக்கு எங்களோடு தொடர்புகொண்டு
பெற்றுக்கொள்ளவும்.
**Whatsapp மூலம் பெற்றுக்கொள்ளலாம்**
**6379350509**

**Copyright: 2021**
**The Word of Christ Publications**
**First Printing, Tamilnadu - 2021**
**This Printing - 1000 Copies**



# ஆசிரியரைப் பற்றி...

சுமார் 7 ஆண்டுகளுக்கு முன் இலங்கை ரேடியோவிலே சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு கிறிஸ்துவின் வசனம் என்ற தேவசெய்தியை சுமார் 15 நிமிடம் போதகர் ஐயா அர்ஜுனன் அளிக்கும் தேவ செய்தியை தொடர்ந்து கேட்டு வந்தேன். அந்த தேவ செய்தி என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சிறந்த ஆகாரமாக (உணவாக) எனக்கு இருந்தது.

சனிக்கிழமை மாலை 5மணிக்கு கேட்க ஆயத்தமாகிவிடுவேன். அப்பொழுது சில நேரங்களில் கரண்ட் கட்டாகியிருக்கும் அந்த நேரத்தில் ரேடியோவை தூக்கிக்கொண்டுபோய் கரண்ட இருக்கும் பகுதியில் அல்லது நண்பர் வீட்டில் போய் ரேடியோவை வைத்துக் கேட்பேன். அப்பொழுது இந்த செய்திகள் அடங்கிய C.D தேவை என்றால் ரூ. 100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் என்ற அறிவிப்பை கேட்டு தபால் ஆபீஸிற்கு ரூ. 100/- மணியாடர் பண்ண சென்றேன் அப்பொழுது தபால் அதிகாரி Post Box நம்பரை மணியாடர் பாரத்தில் குறிப்பிட முடியாது சரியான வீட்டு முகவரிக்கு தான் மணியாடர் அனுப்ப முடியும் என்று போஸ்ட் ஆபீஸில் சொன்னதால் போதகர் ஐயா அர்ஜுனன் அவர்களிடம் முதலாவதாக போன் மூலம் தொடர்பு கொண்டு முகவரி கேட்டு மணியாடர் செய்து C.D க்களைப் பெற்றுக்கொண்டேன்.

அப்பொழுது ஏற்பட்ட தொடர்பு கர்த்தரின் அநாதி தீர்மானத்தால் ஏற்பட்டது என்று தான் சொல்ல வேண்டும். அதன்பின் ஐய்யா சென்னை வந்தபோது இருவரும் சேர்ந்து ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்டோம். அப்பொழுது ஏற்பட்ட தொடர்பு வளர்ந்து குடும்ப உறவாக மாறி என் மனைவி மருத்துவ மனையில் சுமார் 21/2 வருடங்கள் இருந்தபோது ஐய்யாவும் அவர்கள் துணைவியாரும் பலமுறை மருத்தவமனைக்கு வந்து பார்த்து ஜெபித்து பல உதவிகள் செய்தனர். என் கடைசி மகள் திருமணத்திற்கு அவர்தான் மாப்பிள்ளை பார்த்து கொடுத்தார். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் என்று பவுல் கலாத்திய சபைக்கு கூறியதுபோல அவர் என் குடும்பத்திற்கு உதவியாக இருந்து நிறைவேற்றினார்.

இவைகளை எல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் கிறிஸ்துவின் வசனம் ஆவியும் உண்மையும் இன்றும் நம் வாழ்வில் கிரியை செய்யக்கூடியதாக உள்ளது. நான் கிறிஸ்துவின் வார்த்தைகளை மிகவும் ஆர்வத்துடன் கேட்டதின் விளைவாக அந்த கிறிஸ்துவின் வார்த்தை என் வாழ்க்கையில் கிரியை செய்தது. அப்படியே ஆவியை உயிர்ப்பிக்கும் இன்றும் கிரியை செய்யும் கிறிஸ்து இயேசுவின் ஜீவ வசனத்தை அன்று ஐயா ரேடியோ மூலம் வழங்கியதை தொகுத்து, 52 வார ரேடியோ செய்தியை புத்தக வடிவில் வெளியிட்டுள்ளார். அதில் 7வது தொகுப்பாக இந்த புத்தகம் வெளிவந்துள்ளது. வேதாகமத்தை தெளிவாகக் கற்றுக் கொள்ளுவதற்கு இந்த புத்தகம் நமக்கு உதவி செய்யும். காலம் சமீபமாயிற்று எனவே நாம் விழிப்புடன் கர்த்தராகிய இயேசுவை சந்திக்க ஆயத்தமாகுவோம். பிறரையும் ஆயத்தப்படுத்துவோமாக! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்.

அன்புடன்
வானொலி நேயர் – கிறிஸ்துவுக்குள் சகோதரன்
***R.* தாமஸ்,**
*16th Feb. 2021*



# பொருளடக்கம்


1. தேவன் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன? - What Should We Do To God Be With us?
2. தேவ கிருபை - God`s Grace
3. ஆத்தும இரட்சிப்பு - Soul Saving
4. கர்த்தருக்குள் நிலைத்திருங்கள் - Stand Firm In The Lord
5. சத்தியம் (பகுதி 2) - Truth (Part - 2)
6. நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்துகொள்ளுங்கள் - Only Let Your Conduct Be Worthy Of The Gospel Of Christ
7. நீ பூமியில் உயிரோடிருக்குங்காலத்தில்... - When You Live In The World...
8. கிறிஸ்துவின் நிருபம் - An Epistle of Christ
9. உலக வழிபாடுகள் - The Basic Principles of The World
10. யார் நீதிமான் - Who Is Just
11. உங்களில் இருக்கிறவர் பெரியவர் - The One Who Is In You Is Greater
12. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் - Beware of Covetousness
13. முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை - The Lord`s Church In The First Century
14. அழியாத அன்பு - Undying Love
15. ஒருவரும் கெட்டுப்போகா விரும்பாமல்... - Not Willing Any One To Perish...
16. ஒரு சந்ததி அவரை சேவிக்கும் - A Posterity Shall Serve Him
17. நாம் நடக்கவேண்டியவிதம் - The Way that We Should Walk
18. உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள் - Establish Your Heart
19. மீதியான இஸ்ரவேலர் - The Remnant of Israel
20. கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார் - The Lord Builds the House
21. கர்த்தரை நம்பு - Trust In The Lord
22. இரட்சிப்பின் வசனம் - The Word of Salvation
23. கர்த்தரைச் சார்ந்துகொண்ட யூதபுத்திரர் - The Children of Judah Relied On the Lord God
24. பாக்கியவான்கள் - Blessed
25. தேற்றரவாளன் - The Helper
26. தேவனுடைய வலதுபாரிசத்தில் - At God`s Right Hand
27. பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது - Sin Shall Not Have Dominion Over You

28. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - The Resurrection of Christ
29. தேவனாலே பிறந்தவர்கள் - Children Who is Born of God
30. ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் - Exhort One Another
31. அசுத்தமானதைத் தொடாதிருங்கள் - Don`t Touch What is Unclean
32. உலகமோ அவரை அறியவில்லை - The World Did Not Know Him
33. நன்மைசெய்தவர்கள் மற்றும் தீமைசெய்தவர்கள் - Those Who Have Done Good and Those Who Have Done Evil
34. அவமானம் - Shame
35. கர்த்தருடைய ஆலயம் - The House of The Lord
36. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? - What About Your Life?
37. யோபு பாவஞ்செய்யவில்லை - Job Did Not Sin
38. இளவயதும் வாலிபமும் மாயையே - Childhood and Youth are Vain
39. உங்களை ஒப்புக்கொடுங்கள் - Submit Your Selves
40. இஸ்ரவேலின் நான்கு பெரிய பாவங்கள் - Four Greater Sins of Israel
41. அப்போஸ்தலர்களை மாதிரியாக பின்தொடருங்கள் - Follow Apostolic Example
42. சிறுமையானவன் - The Poor
43. இயேசுவுக்கு சீஷனாயிருக்க தகுதியற்றவர்கள் யார்? - Who Is Not Eligible To Be as Disciples to Jesus
44. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் - The Chosen People
45. மரித்தோரை விட்டு எழுந்திரு - Arise From the Dead
46. இயேசு சுயமாய்ப் பேசவில்லை - Jesus Has Not Spoken of the Own Authority
47. அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுகிறதில்லை - He Does Not Forsaketh His Saints
48. முப்புரிநூல் - A Threefold Cord
49. கிறிஸ்தவர்கள் நான்கு காரியங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் - The Christians Should Abstain from Four Things
50. மேலானவைகளைத் தேடுங்கள், மேலானவைகளை நாடுங்கள் - Seek Those Things Which Are Above
51. எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது - Our Sufficiency Is From God
52. தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் - He Who Humble Himself Shall Be Exalted



## 1. தேவன் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன?
## What Should We Do To God Be With us?

அநேகர் தேவன் தன்னோடிருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் தேவன் எதிர்பார்க்கிறபடி தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்வதில்லை. தேவனுடைய விருப்பத்தை நாம் செய்யும்போது தேவன் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவார். இது குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் வாசிக்கிறோம். "சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" என்கிறார் (பிலி.4:8).

**முதலாவது உண்மையுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** உண்மையான காரியங்கள் எவைகளோ அவைகளையே நாம் அதிகமாக சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். பொதுவாக ஜனங்கள் எப்படியோ வாழ்ந்தால் போதும் என நினைத்து, காலத்தை கடத்திக்கொண்டு, நமக்கேன் வம்பு ஊரோடு ஒத்துப்போய்விடுவோம் என்று அது சரியா தவறா என்பதை குறித்து யோசிக்காமல் மற்றவர்களைப்போலவே நடந்து கொள்வார்கள். அன்பானவர்களே, நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாக இருக்கவேண்டுமானால் அல்லது தேவன் நம்மோடிருக்க வேண்டுமானால் நாம் உண்மைக்கு செவிகொடுக்கவேண்டும் அவைகளைக் குறித்து சிந்திக்கவேண்டும். பவுல் உண்மையாயிருந்தபடியால் அவருக்கு இந்த ஊழியம் கொடுக்கப்பட்டதாக எழுதுகிறார்; "என்னை பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" என்கிறார் (1தீமோ.1;12). நாம் உன்மையுள்ளவர்களாக இருக்கும்போது அவருடைய நாமம் மகிமைக்காக எடுத்துப்பயன்படுத்தப்படுவோம்.

**இரண்டாவது ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** ஒழுக்கம் முதலாவது வீட்டிலும் பின்பு பள்ளியிலும் நமக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த ஒழுக்கத்தை கடைபிடிக்கிறவர்கள் எத்தனைபேர். ஒழுக்கங்கெட்டு நடப்பதாலே அநேகபிரச்சனைகள் ஏற்படுகிறது. பவுல் ஒழுக்கங்கெட்ட சிலரைக்குறித்து எழுதும்போது; "நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக் காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்

காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப் பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது" என்பதாக எழுதுகிறார் (1கொரி.5:11). இப்படிப்பட்டவர்களோடு கையோடு கைகோர்த்து பழக்கம் வைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் வேதாகமம் நமக்கு போதிப்பது என்ன? இப்படிப்பட்ட சகோதரர்கள் இருந்தால் அவர்களோடு கலந்திருக்கக்கூடாது அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. நாம் இப்படிச் செய்யும்போது அவர்கள் மனந்திரும்ப வாய்ப்பு ஏற்படும். இல்லையேல் தங்களுடைய தவறிலே அவர்கள் நிலைத்திருப்பார்கள்.

**மூன்றாவது நீதியுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** நீதி தவறி ஒரு வழக்கு தீர்த்துவிட்டால் நாம் எவ்வளவு தூரம் வேதனைப்படுகிறோம். நீதி தவறிவிட்டார்கள். நடந்ததை மூடிமறைத்து விட்டார்கள் என ஆவேசப்படுகிறோம். இப்படி ஆவேசப்படுகிற நாம் நீதியாக நடக்கவேண்டும். அதையே வேதாகமம் நம்மில் எதிர்பார்க்கிறது. நீதியுள்ளவன் உண்டோ என தேவன் பூமியில் மேல் கண்ணோக்கமாயிருக்கிறார். "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க" என படிக்கிறோம் (2பேது.2:8). நாம் நீதியாய் நடக்கும்போது லோத்தை இரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிப்பார்.

**நான்காவது கற்புள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** கற்பு என்பது மிகவும் முக்கியமானது. கலப்படமற்றது, தூய்மையானது, புனிதமானது. நாம் பெற்றுக்கொண்ட கற்பனை கலப்படமற்றது, தூய்மையானது, அது புனிதமானதும் கூட. இவைகளைப்போல நம்முடைய வாழ்க்கையும் புனிதமானதாக இருக்கவேண்டும். பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடையும்படியாக ஒவ்வொருநாளும் முயற்சிக்கவேண்டும். அவைகளையே சிந்தித்துக்கொண்டு மேலானவைகளை நாடுங்கள். "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (1தீமோ.5:22). பாவம் பலவழிகளில் மனிதனை தொடர்கிறது. நீங்கள் தேவனுக்குப்பிரியமானவர்களாக இருக்கவேண்டுமானால்; நீங்கள் முதலவாது உங்களை சுத்தவானாக அதாவது கற்புள்ளவர்களாக பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**ஐந்தாவது அன்புள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** அன்பு அன்பு என்று எங்கும் எப்பொழுதும் பேசப்பட்டு வருகிறது. அன்பு என்று சொல்லக்கூடிய இந்த மூன்று எழுத்தில் தேவனுடைய பிரமாணம்



முழுமையுமாக உள்ளது என்பதை அறிவீர்களா? "உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்" (யாக்.2:8). அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்தும்போது தேவனுடைய பிரசன்னம் அங்கே இருக்கும். தேவனும் நம்மோடிருப்பார். அன்பினால் அநேக நன்மைகள் உண்டாகும். அன்பை பெற்றுக்கொள்ள அன்பின் ஆண்டவர் இயேசுவின் பாதம் அமர்ந்து கற்றுக்கொள்ளுங்கள்.

**ஆறாவது நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** நலமான காரியங்களை செய்கிறோம் என்று சொல்லி அநேகர் தொண்டு நிறுவனங்களை துவக்குகிறார்கள். வேதாகமத்திலே அநேக நலமான காரியங்களை நாம் காணலாம். "யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்" (அப்.9:36). இவள் எதற்காக இப்படிச் செய்துகொண்டு வந்தாள். இவள் ஒரு தேவனுடைய மனுஷி ஆகையால் இவள் நன்மைசெய்வதை தன்னுடைய நோக்கமாக கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்துகொண்டும், தருமங்களை செய்துகொண்டும் வந்தாள். நீங்கள் ஒரு தேவனுடைய மனுஷனாக அல்லது மனுஷியாக இருப்பீர்களானால் நீங்களும் இந்த தொற்காளைப்போல தான தருமங்களை செய்யமறவாதிருங்கள். அப்பொழுது தேவசமாதானம் உங்களை ஆட்கொள்ளும்.

**ஏழாவது புண்ணிம் எதுவோ என குறிப்பிட்டுள்ளார்.** யார் செய்த புண்ணியமோ இவன் இன்று காப்பாற்றப்பட்டான் என்று சொல்ல கேள்விப்படுகிறோம். மூதாதையார் செய்த நன்மை அவர்களுடைய சந்ததிக்கு கிடைத்திருக்கிறது என்று சொல்வார்கள். நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மைசெய்யவேண்டும். அதுவே வேதாகமத்தில் போதனையாக இருக்கிறது. நல்ல சமாரியனைப் பற்றிய போதனையை சபைகளில் போதகர் பிரசங்கங்களில் குறிப்பிடுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். குற்றுயிராக கிடந்த மனிதனைக் கண்டு "கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்" (லூக்.10:34). இந்த சமாரியனுக்கு அவன் உறவினன் அல்ல. வழியிலே அவனைக் கண்டு அவன்மீது மனதுருகி முதலுதவி சிகிச்சை செய்து தன்னுடைய சுயவாகனத்தில் அவனை ஏற்றிக்கொண்டு, சத்திரம் அல்லது அப்பொழுது இருந்த தனியார்

மருத்துவமனை அங்கு கொண்டு சென்று இவனைக் கவனித்துக் கொள்ளுங்கள் ஏதாவது செலவு ஆனால் அதை நான் திரும்பி வரும்போது கொடுக்கிறேன் என்று சொல்லி தன்னுடைய பயணத்தை தொடர்ந்தான். இவன் செய்தது புண்ணியம் இந்த புண்ணியத்தை நீங்களும் நானும் செய்யும்போது தேவன் நம்மோடிருப்பார்.

இந்த உலகத்திலே எத்தனையோ போராட்டங்களில் தவித்துக் கொண்டிருக்கும் அநேக குடும்பங்களைப் பார்க்கிறோம். அவர்களுக்கு நம்மால் உதவி செய்யமுடியும் ஆனால் உதவி செய்ய யோசிக்கிறோம். குற்றுயிராக கிடந்த மனிதனைப் பார்த்து சமாரியன் யோசித்திருந்தால் அவன் காப்பாற்றப் பட்டிருப்பானா? அன்பு நண்பனே, உனக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக புண்ணியம் செய். மற்றவர்களுக்காக அல்ல. உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடிருப்பதற்காக!

**எட்டாவது புகழ் எதுவே என குறிப்பிட்டுள்ளார்.** புகழ் என்றால் விரும்பாதவர்களே இல்லை என்று சொல்லலாம். உலகப்பிரகாரமான புகழ்ச்சியை அநேகர் விரும்புகின்றனர். அந்தவிதமான புகழ்ச்சி நிலையானது அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதின புத்தகத்தில் ஒரு புகழ்ச்சியை குறிப்பிடுகிறார்; அது என்னவென்றால்; "அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினாலே உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்" என்கிறார் (ரோம.13:3). ஒருவன் நன்மைசெய்யும்போது அவனை அநேகர் நோக்கிப்பார்ப்பார்கள். அதிகாரங்களும் அவனை நோக்கிப் பார்க்கும். நன்மைசெய்யும்போது எந்த அதிகாரமும் ஒருவன் செய்யும் நன்மையை தடுக்காது ஏனெனில் அப்படி தடுக்கும்போது அநேகருக்கு அவர்கள் பதில் சொல்லவேண்டி வரும். ஆகையால் அதிகாரங்களுக்கு பயப்படாதிருக்கவேண்டுமானால் வேதம் சொல்லுகிறபடி நன்மைசெய்யக்கடவோம். அப்பொழுது அதினாலே நமக்கு புகழ்ச்சியுண்டாகும். இந்தவிதமான புகழ்ச்சி நன்மையினாலுண்டாகும் புகழ்ச்சியாக இருக்கிறது.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே! தேவன் நம்மோடிருக்க எட்டு விதமான காரியங்களை நாம் கைக்கொள்ளவேண்டும் என தியானித்தோம். இயேசுவானவர் பன்னிரெண்டு சீஷரோடு இருந்தபோது அவர்கள் அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டார்கள் மூன்றரை ஆண்டுகள் அற்புதரோடிருந்த நாட்கள் அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும். நாம் இயேசுவை



அறிந்து கொண்ட நாள் முதல் அவரும் பிதாவாகிய தேவனும் நம்மோடிருந்தால் அது எத்தனை ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

**கேள்வி நேரம்**

**மேலும் சமாதானத்தின் தேவன் நம்மோடிருக்க நாம் செய்ய வேண்டுவதென்ன?**

பவுல் சொல்லுகிறார்; "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்". நாம் அநேக காரியங்களைக் குறித்து கற்றுக்கொள்ளுகிறோம், அதினாலே அநேக நன்மைகளை அடைந்திருக்கிறோம்.

மேலும் கேட்கிறோம், கண்கூடாக கண்டும் இருக்கிறோம். இவைகளை கற்றுக்கொண்ட நாம் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்போம். நாம் அடைந்த நன்மைகளை மற்றவர்களும் அடைய உதவிடுவோம். நாம் கேட்டவைகளை கேட்டவைகளாகவே விட்டு விடாது, மற்றவர்களும் அவைகளைக்குறித்து கேள்விப்பட இடம் உண்டாக்குவோம். நாம் பார்த்தவைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுவோம். அப்பொழுது சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார். "கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" (2கொரி.13:11). உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 2.தேவ கிருபை
## God`s Grace

**தே**வனுடைய கிருபையை அநேகர் அசட்டை செய்கின்றனர். இப்பொழுது "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி" என தீத்து 2:11-ல் படிக்கிறோம். ஒருவராகிலும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் தேவனுடைய இரக்கம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது, பொதுவாக ஜனங்கள் வேண்டிக்கொள்ளும்போது தான், தன்னுடைய குடும்பம் நன்றாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வார்கள். இன்னும் அதிகமாக வேண்டிக்கொண்டால் தன்னுடைய உறவினர்களுக்காக வேண்டிக்கொள்வார்கள். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின பிதாவாகிய தேவன் இந்த உலகத்தில் உள்ள ஒருவராகிலும்

கெட்டுப்போவதை அவர் விரும்பாமல் எல்லோரும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே அவருடைய கிருபை பிரசன்னமாகி இருக்கிறது. இந்த இரக்கத்தை இரட்சிப்பு என்று எண்ணுங்கள்.

ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? இந்த இரக்கத்தைப் பெறவும், அதை சம்பாதித்துக்கொள்ளவும் நாம் செய்யவேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறது. "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி" என தீத்து 2:12-ல் படிக்கிறோம். தேவனுடைய மனுஷன் எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பதல்ல. தேவனுடைய மனுஷன் இப்படித்தான் வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால் நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே வாழவேண்டும். நம்முடைய பேச்சும் செயல்பாடுகளும் பக்திக்குரியதாகவும், நம்முடைய நடைமுறை வாழ்க்கை பக்திக்குரியதாகவும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர் களாயிராமல் தெளிவானவர்களாகவும் காணப்படவேண்டும். நம்முடைய முற்பிதாக்களில் யோசேப்பு போன்றோர் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர். நாமும் அந்தவிதமாக வாழும்போது தேவ கிருபை நம்மை காத்துக்கொள்ளும்.

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என யோவான் 2:15-ல் பார்க்கிறோம். சதா உலகம் உலகம் என்று உலகவேலைகளைப் பிடித்துக்கொண்டு வாழ்ந்து தேவனுடைய மாபெரும் கிருபையை அசட்டை செய்கின்றனர். நாம் காண்கின்ற யாவற்றையும் பிதாவாகிய தேவன் ஆறுநாட்களில் சிருஷ்டித்தார் என விவிலியம் திருமறை நமக்குப்போதிக்கிறது. அவ்வாறு உண்டாக்கப்பட்ட நாம் ஒரு சிறு வேலைகளை செய்துகொண்டு அதுவே பெரிய வேலையென்று நினைக்கிறோம். அதிலே அதிக கவனம் செலுத்தி நாளடைவில் அதில் அன்புகூரவும் ஆரம்பித்துவிடுகிறோம். இப்படியே உலகம் அநேகரை பற்றிப்பிடிக்கிறது. இப்படிச்செய்யும்போது தேவனுடைய உன்னதமான அன்பை இழக்கிறவர்களாக இருப்போம்.

நம்முடைய எதிர்பார்ப்பு என்ன? இன்றைக்கு எதிர்பார்ப்பு இல்லாமல் வாழ்க்கையில்லை. வாழ்க்கையில் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் எதை எதிர்பார்த்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும்போது; "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்



போதிக்கிறது" (தீத்து 2:13). மற்றவர்களுடைய எதிர்பார்ப்பு வித்தியாசமானதாக இருந்தாலும் நம்முடைய எதிர்பார்ப்பு ஒரு நோக்கத்தோடிருக்கிறது. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறோம். அவர் வரும்போது நாமும் அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் தேவனோடு என்றென்றுமாய் வாழுவோம். அந்த ஆனந்த பாக்கியத்தை நோக்கி இருக்கிறோம். பல வருடங்களாக வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு வாரம் வெளியூர் சுற்றுலா செல்ல அனுமதி கிடைத்தால் அந்த நாட்களை அவர்கள் எவ்விதமான ஆவலோடு எதிர்நோக்கியிருப்பார்களோ அதைப்போல நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றுமாக இருக்கப்போகிறோம் என்பதை நினைக்கும்போது எவ்விதமான சந்தோஷம் எற்படும். ஆகையால் பேதுரு இது குறித்து எழுதும்போது; "இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்கிறார் (2பேது. 3:14).

வெளியூர் செல்ல காத்திருப்பவர்கள் ஆயத்த ஆடைகளோடே தங்களை சுத்திகரித்துக்கொண்டு காத்திருப்பார்கள். நித்திய வாழ்க்கையை எதிர்நோக்கியிருக்கிற நாம் அவர்களைப் பார்க்கிலும் அதிகமாக கறையற்றவர்களாகவும் பிழையில்லாதவர்களாகவும் அவருடைய சந்தியில் சமாதானத்தோடே காணப்படவேண்டுமல்லவா? நீங்கள் எந்த அளவு பரிசுத்தமுள்ளவர்களாய் அவருடைய சந்நிதியில் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கிறீர்கள். தேவனுடைய கிருபையை நாம் பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்த வேண்டியது நம்முடைய வேலையாக இருக்கிறது. ஆயத்தமுள்ளவர்கள் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

தேவனுடைய கிருபையின் இரகசியம் என்ன? தேவன் தம்முடைய கிருபையின் இரகசியத்தை வெளிப்படுத்த சித்தமானார். "அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" என்பது தேவ கிருபையின் இரகசியமாயிருக்கிறது (1தீமோ. 3:16). இதையாரும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது. உலகமறிந்த உண்மையாயிருக்கிறது.

இது எல்லோருக்கும் வெளிப்படுத்தப்பட்டது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆம், கிறிஸ்துவானவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் கீழ்ப்படிந்தவராகிய தம்மைத்தாமே தாழ்த்தினார். அவர்

நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். இயேசுவை சிலுவையில் அறையும்படியாக ஜனங்கள் கூக்குரலிடுகையில் பிலாத்துவின் மனைவி, அவன் நியாயாசனத்தில் உட்காந்திருக்கையில் ஆளனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொல்லச்சொன்னாள். அவர் நீதிபரராயிருந்தபடியினாலும், அவர் நிமித்தமாக அன்று இரவு அவள் சொப்பனத்தில் அநேக பாடுகள் பட்டபடியினாலும் அப்படிச்சொன்னாள். மேலும், தேவதூதர்களால் காணப்பட்டார். ஆம், அவருடைய பிறப்பின்போது திரளான சேனைகள் தோன்றி உன்னதத்திலே தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் உண்டாவதாக என்று சொன்னார்கள். மூன்றரை ஆண்டுகள் தேவனுடைய சுவிசேஷத்தை எருசலேமைச் சுற்றியுள்ள நாடுகளில் பிரசங்கித்தார். அநேக யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தேவனை அறியாத அநேகர் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பினார்கள். உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்.

கிறிஸ்துவானவர் பிறந்தது முதல் இன்றுவரை அவரை உலகமும் விசுவாசித்து ஏற்றுக்கொண்டுவருகிறது. அவர் மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மனிதனோடு மனிதனாக வாழ்ந்து தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றி, முப்பத்து மூன்றாம் வயதில் அவர் சிலுவையில் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்த்து பின்பு நாற்பது நாளளவும் தேவனுடைய காரியங்களை தம்முடைய சீஷர்களோடு பகிர்ந்துகொண்டு பின்பு மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் எடுத்துக்கொள்ளப்படும்போது இரண்டு தேவதூதர்கள் அவர்களை நோக்கி: ஏன் வானத்தை அன்னாந்து பார்த்து நிற்கிறீர்கள் உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எழுந்தருளிப்போன இயேசு மறுபடியும் அப்படியே வருவார் என்றார்கள். இந்த கிருபையின் இரகசியம் உலகமெங்கும் வெளிப்படுத்தப்பட்டது.

ஆகையால் பவுல் தீத்துவுக்கு எழுதும்போது; தீத்து 2:15-ல் "இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக" என்கிறார். உன்னதமான தேவனுடைய கிருபையின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்போது அவைகளை குறித்துப்போதிக்கும்போது சகல அதிகாரத்தோடும் கடிந்துகொண்டு போதித்து புத்திசொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். உலக ராஜ்யங்களில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த கட்டளையை அந்த அரசு எவ்வளவு பகிரங்கமாக வெளியிடும். அந்த ராஜ்யத்தின் கீழ்உள்ள அனைவரும் அந்த கட்டளைக்கு கீழ்ப்படிவார்கள் அல்லவா? அப்படி உலக ராஜ்யங்களின் கட்டளைக்கு கீழ்ப்படியும்போது, உன்னதத்தின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியமல்லவா? ஆகையால் மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு



எழுதும்போது; "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" என்கிறார் (2தீமோ.4:2). புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் காதுகள் ஞானமானவைகள். அநேகர் இவ்விதமான புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாமல் அதைக்குறித்து விமர்ச்சிப்பார்கள். இவர்களுக்கு வேலையில்லாமல் ஏதோ ஒன்றைக் குறித்துப்பேசுகிறார்கள் என்று சொல்லி அலட்சியப்படுத்துவார்கள். ஆகையால் நேரம் கிடைக்கின்றதோ இல்லையோ, கர்த்தருடைய வசனத்தை நீ ஜாக்கிரதையாய் பிரசங்கம்பண்ணு என்கிறார். பிரசங்கியார்கள் பிரசங்கிக்கும்போது சிலர் அதை கவனிக்கவில்லையென்றால் தங்களுடைய பிரசங்கத்தை குறைத்துக்கொள்வார்கள். இங்கே பவுல் தீமோத்தேயுவைப் பார்த்து கடிந்துகொண்டு புத்திசொல்லு என்றார்.

ஆகையால் கர்த்தருடைய ஊழியனுக்கு கடிந்துகொண்டு புத்திசொல்லும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு விபத்து ஏற்படப்போகிறது என்றால் அதை அறிந்த நபர் எந்த அளவு சத்தத்தோடு கடிந்துகொண்டு சொல்லுவார். அதைப்போல தேவனுடைய இந்த கிருபையை அசட்டை பண்ணுகிறவர்களை நாம் கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனெனில் ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

அன்பு சகோதரனே, சகோதரியே! உன்னதத்தின் கிருபையானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதை நீ விசுவாசிக்கிறாயா? நீ விசுவாசிப்பாயானால் இந்த இரக்கம் உன்னை பாதுகாக்கும், உன்னை இரட்சிக்கும். இந்த கிருபைக்கு செவிகொடுத்து உன்னை ஆயத்தப்படுத்துவாயானால் நீ தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வாய். மனிதன் உலகமுழுவதையும் ஆதாயம் செய்து கொண்டாலும் தன் ஜீவனை அவன் நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் ஒன்றுமில்லை. கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து அவன் கீழ்ப்படியும்போது எல்லையில்லா சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுவான். நீங்கள் இவைகளைப் பெற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். தேவனுடைய உன்னதத்தின் கிருபையை அசட்டை பண்ணாமல் அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்குச் செவிகொடுங்கள்.

**"கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து,**
**உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்"**
**சங்கீதம் 85:7**

**கேள்வி நேரம்**

**தேவ கிருபை எப்பொழுது உங்களுக்கு உதவி செய்யும்?**

பவுல் கொலோசெய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் இதை தெளிவு படுத்துகிறார். "அந்த நம்பிக்கையைக்குறித்து, நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பி பலன்தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது" என்கிறார் (கொலோ.1:6). தேவகிருபையை சத்தியத்தின்படி அறிந்துகொள்ளாமல் நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று ஒருவர் நினைத்துக் கொண்டிருப்பாரேயானால் அவருடைய விசுவாசம் வீணாய்போய்விடும்.

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வசனத்தை இங்கே நினைவுகூர்ந்து பாருங்கள். சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. சத்தியத்தை சத்தியத்தின்படி அறிந்துகொள்ளாவிட்டால் அது நமக்கு உதவாது. எடிஎம் பயன்படுத்துகிறவர்கள் தங்களுடைய பாஸ்வேர்டை சரியாக அழுத்தினால் தான் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உலக வங்கி இப்படி ஒரு சரியான வழிகாட்டியை வைத்திருக்கும்போது; உன்னதத்தின்தேவன் அவருடைய கிருபையை அறிந்தகொள்ள சத்திய வழியை ஏற்படுத்தியிருக்கிறார். அதை சரியாக கடைபிடிக்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள். ஆகையால் அன்பானவர்களே, தேவ கிருபையை சத்தியத்தின்படி அறிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 3.ஆத்தும இரட்சிப்பு

## Soul Saving

**நா**ம் ஆத்துமாவில் வாழ்கின்றோம் இந்த ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். சரீரத்தில் நம்முடைய தேவைகளுக்காக பல காரியங்களை செய்து கொள்கிறோம். அது நம்முடைய சரீர பாதுகாப்பிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆகையால் சில வருடங்கள் இந்த மண்ணான சரீரத்தில் வாழ்ந்து பின்பு தேவன் நியமித்திருக்கிற இடத்திற்கு ஆத்துமா கடந்து செல்கிறது. இந்த ஆத்துமா பாதாளத்திற்கு அதாவது அவியாத அக்கினிக்கு தப்புவிக்கப்பட வேண்டுமானால் நாம் இந்த ஆத்துமாவில் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். யாக்கோபு என்ற தேவ தாசன் சொல்லுகிறார்: "நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள்



உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார் (யாக்.1:21). நாம் நம்முடைய வாழ்க்கையில் களையப்பட வேண்டியவைகளை களைந்து இருதயத்தில் வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு நோயாளிக்கு ஆப்ரேஷன் செய்யும்போது அவன் வழக்கமாக செய்யும் தவறை செய்ய முடியாது, அப்படி அவன் மீறி செய்வானேயானால் அவனுக்கு ஆப்ரேஷன் செய்யமாட்டார்கள். அவன் பிழைப்பது கடினமாகிவிடும். நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட ஒரே வழிதான் உண்டு. நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற கர்த்தருடைய வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அப்பொழுதே நம்முடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்புகிடைக்கும்.

**கர்த்தருடைய வசனம்** உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக்கொள்ளும் அநேகர் ஆத்துமாவில் இரட்சிக்கப்படுகிறார்கள். முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை வளர்ந்துபெருகிற்று. ஆதி அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வசனத்தை யூதர்களுக்கு மட்டுமல்ல புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள். "யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13:50). ஆனால் புறஜாதிகள் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள். "புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" (அப்.13:38). இன்றைக்கும் பாரம்பரிய மக்கள் எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கர்த்தருடைய வசனத்தை புறம்பாக்கிப்போடுகிறார்கள்.

ஆகையால் புறஜாதி மக்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்கள் இந்த புறஜாதி மக்களைப்போல கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அப்படி ஏற்றுக்கொள்ளும்போது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறது மாயிருக்கிறது" என சங்.15:7-ல் வாசிக்கிறோம். ஆத்துமாவை உயிர்ப்பிக்கக்கூடியது கர்த்தருடைய வசனமே. இதற்கு நீங்கள் முக்கியதுவம் கொடுத்து உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட முயற்சியுங்கள்.

ஆத்துமா இரட்சிக்கப்பட ஆண்டவர் இயேசுவிடம் கற்றுக்கொள்ள வேண்டும். கல்விக்கூடங்கள் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் அங்கே கிறிஸ்துவினுடைய போதனைகள் இருக்கிறதா? பரிசுத்த வேதாகமத்தின்படி நடக்கிறார்களா? என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். வேதாகமத்திற்கு விரோதமாக நடக்கிற கூட்டங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்கிறவர்கள் சிலர் என்றே பார்க்கிறோம். ஆகையால் கேட்டின் வாசலையே அநேகர் நாடுகிறார்கள். இயேசு சொல்கிறார்; "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்கிறார் (மத்.11:29). எத்தனை பாடசாலைகள் இருந்தாலும் நாம் ஆண்டவர் இயேசுவின் பாதம் அமர்ந்து கற்றுக்கொள்ளும் அநுபவம் தனிச்சிறப்பானது.

ஏனெனில் அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறார். நம்முடைய கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்ளுவார். அவர் கொடுக்கிறதான வசனத்தை அந்த நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்டு கற்றுக்கொள்ளவேண்டும். என்னுடைய கோரிக்கையை முதலாவது அவர் நிறைவேற்றட்டும் பின்பு அவர் என்னசொல்கிறாரோ அதன்படி செய்கிறேன் என்று சொல்கிறவர்கள்தான் அதிகம். ஆனால் ஆண்டவர் சொல்லுகிற காரியம் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார்.

நீங்கள் பள்ளியில் வேலை பார்க்கிற ஒரு ஆசிரியையாக இருக்கலாம் ஆனால் உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் ஆசிரியையாக வீட்டில் இருக்கமுடியாது. நீங்கள் செய்யவேண்டியது என்ன? அவனை ஆண்டவருடைய பாதத்திற்கு கொண்டு செல்லவேண்டும். அப்படியானால் புதிய ஏற்பாட்டை அவனுக்கு வாங்கிக்கொடுத்து அதைப் படிக்கச் சொல்லவேண்டும். அப்பொழுது அவன் இயேசுவின் அநேக போதனைகளை படித்து அதன்படி தன்னை மாற்றியமைத்துக்கொள்ளுவான். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்" (எபி.10:38).

நோவா, ஆபிரகாம் போன்றோரெல்லாம் தங்களோடு வாழ்ந்தவர்களுக்குள்ளே நீதிமான்களாக வாழ்ந்தார்கள். ஆகையால் அவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருந்து அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் காப்பாற்றி ஆசீர்வதித்தார். ஒருவேளை அவர்கள் பின்வாங்கிப்போயிருப்பார்களேயானால் அவர்கள் மேல் அவர்



பிரியமாயிருந்திருக்கமாட்டார். "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர் களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.10:39). ஆகையால் உங்களுடைய ஆத்துமாவைக்குறித்த விஷயத்தில் சற்று கவனமாக இருங்கள். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. அது நித்தியத்தில் தேவனோடு வாழவேண்டும். ஆகையால் உங்கள் ஆத்துமா ஈடேற விசுவாசிகளாக தொடர்ந்து செயல்படுங்கள். ஆண்டவரின் பாதம் அமர்ந்து கற்றுக் கொள்ளும்போது அதற்கு பலன் உண்டு. ஒரு மாணவன் ஆசிரியரிடம் கற்றுக்கொள்ளும்போது பலன் அடைகிறான். அதைப்போல இயேசுவிடம் நாம் கற்றுக்கொள்ளும்போது "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" என்கிறார் பேதுரு (1பேது.1:9).

உலகத்திலே படித்தவர் படிக்காதவர் எல்லோருமே ஏதோ விதத்தில் சம்பாதிக்கிறார்கள் குடும்பங்கள் நடைபெறுகிறது. ஆனால் ஆத்துமா விஷயத்தில் எல்லோருமே அவரவருடைய ஆத்துமாவை காத்துக்கொள்ளமுடியாது. நம்மிடத்தில் அசையாத விசுவாசம் இருக்குமானால் நாம் நம்முடைய ஆத்தும இரட்சிப்பை அடையமுடியும். இல்லையேல் நாம் ஆத்துமாவில் இரட்சிக்கப்படுவது கூடாதகாரியமாகிவிடும்.

உங்களுடைய ஆத்துமா குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட வேண்டும். அதற்கு நான் என்னசெய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். எல்லோரும் குற்றம் செய்து தேவமகிமையற்றவர்களானோம். ஆனால் நாம் மனந்திரும்பும்போது மன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறோம். சிலுவையில் தொங்கிய கள்ளன் குற்றவாளி ஆனால் அவன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு இயேசுவை நோக்கி உம்முடைய ராஜ்யத்தில் அடியேனை நினைத்தருளும் என்று கேட்டபோது அவன் அந்த நிமிடமே மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறான். அதைப்போல் ஐசுரியவானாக வாழ்ந்து மரித்தவன் பாதாளத்திலே வேதனைப்படுகிறான்.

அவன் பூமியிலிருந்த நாட்களில் லாசருவை நினைக்கவில்லை அவனுக்கு உதவி செய்யவில்லை, அவன் மனந்திரும்பவில்லை, ஆனால் பாதாளத்தில் இந்த இடத்திற்கு என் சகோதரர்கள் வந்துவிடாதபடி அவர்களுக்கு செய்தி அனுப்பும்படியாக ஆபிரகாமைப்பார்த்து கேட்டான். அவனுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அது கூடாததாயிருந்தது. நாம் பூமியில் தேவனிடத்தில் விசுவாசம் கொள்ளும்போது ஆத்தும இரட்சிப்பை அடைகிறோம். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்"

என்கிறான் (சங்.16:10). அந்தப்படியாக மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதற்பலனாகிய இயேசு இருக்கிறார். இவைகள் தேவனாலே கூடும்.

ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என காண்கிறோம் (மாற்.12:30). நீங்கள் முழுமையுமாக தேவனிடத்தில் அன்புகூருகிறீர்களா? அன்புகூருகிறேன் என்று சொல்லி ஆண்டவரிலும் மேலாக உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூருவீர்களானால் தேவனுடைய அன்பை இழப்பீர்கள். ஏனெனில் என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் உலகத்தில் உள்ளவைகளைக் காட்டிலும் தேவனிடத்தில் முழுமையுமாக அன்பு செலுத்துங்கள். சிலர் சொல்லுவார்கள் என் சரீரம் இங்கே இருக்கிறது. ஆனால் என்னுடைய நினைவு எல்லாம் வெளிநாடு சென்று உள்ள என் மகன் எப்படி இருக்கின்றானோ என்ற கவலைதான் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது ஒன்று நடந்துவிட்டால் அவர்கள் தங்களுடைய விசுவாசத்தையே மறுதலித்துப்போய்விடுவார்கள்.

அப்படி அநேகர் பின்மாற்றமாகி போனதுண்டு. நீங்கள் உங்களுடைய இருதயத்தையும், ஆத்துமாவையும், மனதையும், பலத்தையும் கர்த்தருடைய சமுகத்தில் முழுமையுமாக கொடுக்கும்போது உங்களை உண்டாக்கின தேவன் உங்களை கண்ணோக்கிப்பார்ப்பார். இந்த விசுவாசத்தை ஆபிரகாம் பெற்றிருந்தார். அந்தவிதமான விசுவாசத்தை நீங்களும் பெற்றுக்கொண்டு; "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று 1தெச.5:23-ல் சொல்லப்பட்டபடி காக்கப்படும். அநேகர் சரீரத்தில் வெளிப்பிரகாரமாக குற்றமற்றவர்களாக நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆத்துமாவில் அல்லது ஆவியில் அசுத்தர்களாக காணப்படுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் மூன்றிலுமே குற்றமற்றவர்களாக வாழ்கிறார்கள். ஒரு மனிதன் செய்யும் தவறை கண்களால் பார்த்துவிடலாம். ஆனால் ஆவிக்குரிய குற்றம் செய்கிறவர்களையும், ஆத்துமாவில் குற்றம்செய்கிறவர்களையும் நாம் அறியோம். ஆனால் தேவன் அறிவார். நியாயத்தில் அப்படிப்பட்டவர்களைக் கொண்டுவந்து நிறுத்துவார். அப்பொழுது அவனுடைய குற்றங்கள் வெளியாகும். ஆகையால் நீங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து



வரும்போது குற்றமற்றதாயிருக்கவேண்டும். ஆகையால் "யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என காண்கிறோம் (எபி.12:14).

**கேள்வி நேரம்**

**நம்முடைய ஆத்துமாவை யாரிடம் ஒப்படைக்கவேண்டும்?**

ஆவி தன்னைத் தந்த தேவனிடத்தில் திரும்பும் என வேதத்தில் படிக்கிறோம். இயேசு சிலுவையில் ஜீவனை விடும் வேளையில் பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றார். தன்னை அனுப்பின பிதாவின் வேலைகளை முடித்து ஜீவனை ஒப்புக்கொடுத்தார். பூமியில் ஆத்துமாவில் சிருஷ்டிக்கப்பட்ட நீங்களும் நானும் அதே காரியத்தையே செய்யவேண்டும். மரண தருவாயில் அநேகர் தங்களுடைய பிள்ளைகளை பார்க்கவிரும்புவார்கள், அல்லது அவர்கள் யாரை அதிகமாக நேசித்தார்களோ அவர்களை பார்க்கவிரும்புவார்கள். ஆண்டவர் தம்மை அனுப்பின பிதாவை நோக்கிப் பார்த்தார். அவரிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார். பேதுரு சொல்லுகிறார்; "தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" என்கிறார் (1பேது.1:9).

நீங்கள் அந்தவிதமாக ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? அல்லது எவனை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல வலம் வரும் பிசாசுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கப்போகிறீர்களா? இன்றே சிந்தித்து உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவர் இயேசுவுக்கும் அவருடைய திருப்பணி வேலைகளுக்கும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது பரலோகத்தின் தேவன் தாமே உங்களை கண்ணோக்கிப்பார்த்து, உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட உதவிடுவாராக! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 4. கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்
## Stand Firm In The Lord

**நா**ங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்று சொல்லுகிற அநேகர் கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அந்த பெயரில் வேண்டுமானால் நிலைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம் ஆனால் அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவில்லை. பின்பு கர்த்தருக்குள் நிலைத்திருத்தல் என்றால் எப்படி? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். பவுல் சொல்லுகிறார்;

"எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுனானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்" என்கிறார் (பிலி.4:1). இந்த வசனத்தில் இந்தப்படியே என்கிறாரே எந்தப்படி? நிலைத்திருக்கவேண்டும். முன்னுள்ள அதிகாரத்தில் அதன் விளக்கத்தையும் தான் கர்த்தருக்குள் நிலைத்திருந்த விதத்தைப் பற்றியும் சொல்லுகிறார். "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" என்கிறார் (பிலி.3:7). லாபமாயிருக்கிறவைகளை விட்டு விடுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. யாரும் நஷ்டத்தை விரும்பமாட்டார்கள். இங்கே பவுல் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் என்கிறார். அவர் தனக்கு லாபமாயிருந்ததை கிறிஸ்துவுக்காக விட்டு விட்டிருக்கிறார் என்பதுவே உண்மை.

சில காரியங்களாலே நமக்கு அதிகமான ஆதாயம் கிடைக்கலாம். ஒரு விக்கிரகத்தை செய்து விற்பனை செய்வதாலே நமக்கு அதிகமான ஆதாயம் கிடைக்கலாம். அந்த ஆதாயம் கிறிஸ்துவை பிரியப்படுத்துமா? அது கர்த்தருக்கு ஏற்ற ஒரு தொழிலா? நாம் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு அது ஏற்ற ஒரு தொழில் அல்ல. ஆகையால் அந்த ஆதாயத்தை நாம் விட்டுவிடவேண்டும். பவுல் ஆசியாவிலே தங்யிருந்த காலத்தில் ஒரு பெரிய கலகம் உண்டானது. தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினாலே சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக்கொண்டிருந்தான். இவன் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்றவேலையாட்களையும் கூடிவரச்செய்து; மனுஷர்களே இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள், இப்படியிருக்க, கைகளில் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக் கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள். இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றும்போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான். இந்த தட்டானைபோல அநேகர் தங்களுடைய தொழில் பாதிக்கப்படும் என்று பயந்து உண்மைக்கு செவிகொடுக்க மறுக்கின்றனர்.

மேலும், பவுல் சொல்லும்போது; "அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும்



நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்கிறார் (பிலி.3;8). கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவு எல்லாவற்றைக்காட்டிலும் மேலானது. அதற்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுவதாக சொல்லுகிறார். சபை கூடுதலை அநேகர் விட்டுவிடுகின்றனர். அன்றைய நாளில் நல்ல வருமானம் கிடைக்கிறது. ஞாயிற்றுகிழமையில் மற்றநாட்களை விட கூடுதலாக விற்பனையாகிறது. வருமானமும் கூடுதலாக கிடைக்கிறது, ஆகையால் அடுத்தவாரம் சபைக்கு செல்லலாம் என்று சிலர் வியாபாரத்தில் தங்களுடைய கவனத்தை செலுத்துகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் கர்த்தரையும் அவருடைய போதனைகளையும் அறிந்துகொள்ளுவது எப்படி? தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் மனுஷன் பிழைப்பான். அவ்வளவு வல்லமையுள்ள வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து புறப்பட்டுவரும். அதைகேட்பதற்கும் அதை அறிந்துகொள்ளுவதற்கும் நாம் முக்கியதுவம் கொடுக்கவேண்டுமல்லவா? அதற்கு நிகரானது இப்பூமியில் ஒன்றுமில்லை. இதை அப்போஸ்தலனாகிய பவுல் நன்கு அறிந்தவராயிருந்தபடியால் எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் என்கிறார்.

மேலும், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்கிறார் (பிலி.3:10,11). உன்னதத்தின் தேவன் மனிதனாக பிறந்து அடிமையின் சாயலானார். அவருடைய பாடுகளை நாம் ஒவ்வொரு வாரமும் நினைவு கூருகிறோம். பவுல் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாக விரும்பி, அந்த பாடுகளை தானும் அநுபவிக்கவேண்டும்.

கர்த்தருக்காக இரத்தசாட்சியாக மரிக்கவும் தன்னை ஆயத்தப்படுத்தினார். நம்மில் எத்தனைபேர் இந்த விதமான சிந்தையோடிருக்கிறோம். கர்த்தருக்குள் ஒரு குறைவுமில்லாமல் வாழ்கிறோம் என்று சாட்சி சொல்லவே விரும்புகிறோம். ஆனால் பவுல் தான் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு அடையாளமாக எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டதாகவும், அவைகளை குப்பையுமாக எண்ணுவதாகவும் குறிப்பிடுகிறார். நாம் ஆண்டவர் இயேசுவோடு பாவங்களுக்கு செத்து ஞானஸ்நானத்திலே உயிரோடு எழுப்பப்படுகிறோம். அதன் பின்பு இவ்வுலகில் கர்த்தருக்குள் ஜீவன்

உள்ளவர்களாக வாழ்கிறோம். அந்த வாழ்க்கையில் அநேக போராட்டங்கள் வருகிறது அதில் சிலர் நிலைத்திருக்கக்கூடாமற்போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படியாயினும் நாம் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கு வரக்கூடிய நஷ்டங்களை குப்பையாக எண்ணுகிறேன் என்று சொல்லி போராடும்போது நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறவர்களாக இருப்போம். கர்த்தருக்குள் ஒவ்வொருநாளும் புதியவைகளே. பழையவைகள் குப்பைகளாகவே போகின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இஸ்ரவேலரைப்போல பின்னிட்டுப் பார்ப்போமானால் எகிப்துக்குப்போவதே மேல் என்று கருதுவோம்.

மேலும், பவுல் "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:12). கிறிஸ்தவ ஓட்டம் என்பது அது மரணபரியந்தமும் ஓடுகிற ஒரு ஓட்டம். அதில் ஒருவர் நான் ஓடிமுடித்துவிட்டேன் என்று சொல்லி ஓய்வு எடுக்கமுடியாது அல்லது நான் தேர்ச்சியடைந்துவிட்டேன் என்றும் சொல்லிவிடமுடியாது. இதையே பவுல் நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் என்று குறிப்பிடுகிறார். அநேகர் தங்களைத்தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள் அல்லது தேற்றிக்கொள்ளுகிறார்கள். அது முடிவான இரட்சிப்பை நமக்கு கொடுக்காது. பவுலைப்போல அந்த நோக்கத்தை தெரிந்துகொண்டு தொடர் ஓட்டத்தில் ஓடவேண்டும். அதுவும் ஆசையாய் தொடரவேண்டும். சிலர் விருப்பமில்லாமல் மற்றவர்களுக்காக ஓடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஓட்டத்தில் வெற்றியடையமுடியாது. அதில் ஒரு விருப்பம் வேண்டும். அப்பொழுதே மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடையமுடியும்.

பவுல் ஓடுகிற ஓட்டத்தில் ஒரு நோக்கம் இருந்தது; "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:14). நாமும் அந்தப்படியாகவே அழைக்கப்பட்டுள்ளோம். பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக ஒவ்வொருநாளும் நாம் போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் பார்ப்போமானால் இலக்கை நோக்கி போகமுடியாது. உலகமும் அதின் ஆசை இச்சைகளும் நம்மை பந்தயப்பொருளை இழக்கச் செய்திடும். தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்ற எண்ணம் நம் முன் எப்பொழுதும் இருக்கவேண்டும். அது உங்களை விட்டு பிரியாதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.



"ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" என்று பிலி.3:15-ல் படிக்கிறோம். அன்பானவர்களே, கர்த்தருக்குள் நிலைத்திருக்கிற நீங்கள் இந்த சிந்தையாயிருங்கள். பவுலைப்போல நோக்கத்தை உடையவர்களாக இருக்கப் பிரயாசப்படுங்கள்.

பழைய ஏற்பாட்டு காலத்திலே கர்த்தரைப் பின்பற்றினவர்களில் சிலர் வீழ்ந்துபோனதை அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார்; "அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரே நாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப் பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:8-12).

இன்றைக்கு சிலர் தங்களை கிறிஸ்துவுக்குள் திடமான நிற்கிறவர்களாகவும் மற்றவர்களை பார்க்கும்போது அவர்களெல்லாம் இரட்சிக்கப்படுவது கடினம் என்று எண்ணுகிறவர்களாவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இங்கே புத்தி சொல்லி எச்சரிக்கிறார். தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையா யிருக்கக்கடவன். பேதுரு அன்று இராவிலே இயேசுவை நோக்கி; ஆண்டவரே காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அந்தப்படியே அவன் இயேசுவை மறுதலித்தான். அவனுக்கு வந்த சோதனையில் அவனால் வெற்றிகொள்ளமுடியாமற்போயிற்று. அதைப்போல தன்னை நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

அன்பு நண்பரே, நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க பவுலைப்போல ஒரு தீர்மானத்தை எடுங்கள். அப்பொழுதே நீங்கள் முடிவு பரியந்தமும்

நிலைத்திருந்து உங்களுக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ளவும், கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக வாழவும் முடியும். கர்த்தருக்குள் நிலைத்திருந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு மேலும் வேதாகமம் கொடுக்கும் ஆலோசனை என்ன?**

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:6,7). நூதனமாக போதனைகளில் அநேகர் சிக்கிக்கொண்டு வளர்ச்சியடைய முடியாமற்போய்விடுகிறார்கள். நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேதாகமத்தின் போதனை போதுமானதாக இருக்கிறது. இயேசுவின் இரண்டாம் வருகை வரை இதைப் படித்து அந்த வசனங்களுக்கு கீழ்ப்படிந்து அதன்படி வாழ நம்மை அர்ப்பணித்தால் போதும். அதையே மேலுள்ள வசனத்தில் பவுல் கொலோசே சபையாருக்கு எழுதுகிறார்.

நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், என குறிப்பிடுகிறார். ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுக்கிற அனைவருமே சரியானபடி அன்று ஒப்புக்கொடுக்கிறார்கள். அப்படியே இயேசுவிற்குள் வேர்கொண்டவர்களாக வளரவேண்டும். ஆனால் நாளடைவில் தங்களுடைய நம்பிக்கையை போதகர் மீதும், மற்ற விசுவாசிகள் மீதும் வைத்து பின்மாற்றமடைகிறார்கள். மேலும், பவுல் சொல்லுகிறார்; அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக என்கிறார். போட்டையும் கொடுத்து துடுப்பையும் கொடுத்து, அக்கரைக்குப்போங்கள் என்றால் போகவேண்டியது தானே. ஐயோ தனியாக எப்படிப்போவது என்றால் எப்படி? சிந்தியுங்கள் செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 5.சத்தியம் (பகுதி 2)
## Truth (Part 2)

**ச**த்தியம் சத்தியம் என்று எங்கும் எப்பொழுதும் பேசப்படுகிறது. எது சத்தியம், யார் சத்தியபரரர் அந்த சத்தியத்தின் பயன் என்ன என்ற காரியங்களைக்குறித்து இன்றைய நாளிலே தியானிப்போம். இயேசு



சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). மேலும், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவா.17:17). இந்த சத்தியபரர் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணினார். ஆனால் அப்பொழுது இருந்த ஜனங்களோ அவரை அறிந்துகொள்ளவில்லை; இதைக்குறித்து யோவான் சொல்லும்போது; "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14). தேவன் மனிதனாக பிறந்தால்தான் மனிதனுடைய கஷ்டங்கள் தெரியும் என்று ஒரு சிலர் சொல்லக்கேள்விப் பட்டிருப்பீர்கள். அந்தப்படியாக இயேசு மாம்சத்திலே வந்து மனிதர்களுக்குள்ளே வாசம்பண்ணினார். அவருக்கும் பல பாடுகள் இருந்தது, அவருக்கும் பசி உண்டாயிற்று, அவரையும் பிசாசு சோதித்தான். முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியிலே தேவனுடைய சித்தம் செய்கிறவராயிருந்தார். அவருக்குப்பின் வந்த ஆவியானவரும் சத்தியமுள்ளவராயிருக்கிறார்; "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்றார் (யோவா.16:13,14).

குமாரன் எப்படி சத்தியபரராயிருக்கிறாரோ அதைப்போல ஆவியானவரும் சத்தியமுள்ளவராயிருக்கிறார். அந்தப்படியே பிதாவனவரும் இருக்கிறார். "அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்" (யோவா.3:33). இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். சத்தியபர ராயிருக்கிறார்கள். இதைத்தவிர உலகத்திலே சத்தியம் சத்தியம் என்று பேசப்பட்டாலும் போற்றப்பட்டாலும் அது சத்தியமாக இருக்காது.

**சத்தியம் நம்மை நேசிக்கும்:** "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வாசிக்கிறோம் (யோவா.3:16). தேவன் சகலத்தையும் உண்டாக்கினவர். அவர் பாவத்தில் வீழ்ந்துபோன மனிதனை மீட்டு எடுக்கும்படியாக தம்முடைய குமாரனையே இந்த உலகத்திற்கு கொடுத்து அன்புகூர்ந்தார். அன்பு அன்பு என்று எல்லோரும் பேசுவார்கள். ஏன், அன்பைப்

பற்றி பேச ஆரம்பித்தால் அடைமழையாக இருந்தாலும் விடாது பேசுவார்கள்! ஆனால் தன்னுடைய குமாரனையே மற்றவர்களுக்கு அடிமையாக வேலைசெய்யும்படி கொடுப்பார்களா? அது எப்படி முடியும் என்பார்கள். ஆனால் தேவன் தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் அவரை சிலுவையில் மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார். இது அகாப்பே அன்பல்லவா! "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவா.4:10). அன்பிற்கு அடையாளமாகவும், தம்முடைய நேசத்திற்கு அடையாளமாகவும் இயேசுவை தேவன் ஒப்புக்கொடுத்தார்.

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்" என்றெல்லாம் 1கொரிந்தியர் 13-ம் அதிகாரம் 4-6 வசனங்களில் படிக்கிறோம். இந்த அன்பின் குணங்கள் நிறைந்த தேவன் சத்தியபரர். அவர் நம்மை நேசிக்கிறார். நீ அவரை அறிந்துகொள்ளவேண்டும். சத்தியம் உன்னை நேசிக்கும்போது அந்த சத்தியத்தை நீ விசுவாசித்துப் பற்றிக்கொள்ளவேண்டுமல்லவா? லாசரு என்ற மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவன் மரித்துபோன செய்தியை அறிந்த ஆண்டவர் இயேசு, நான்கு நாட்களுக்குப்பின்பு சென்றார். அப்பொழுது அங்கிருந்த யூதர்கள்: "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்" (யோவா.11:36). ஆம், லாசருவை அவர் நேசித்தார். அதைப்போல உங்களையும் நேசிக்கிறார். லாசருவை உயிரோடு எழும்பின ஆண்டவர் உங்களையும் எழுப்புவார். அவர் வல்லமையுள்ள தேவன், சத்தியபரர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

**சத்தியம் நம்மை போஷிக்கும்:** இதை நீங்கள் நம்புகிறீர்களா? "தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்" (எபே.5:29). யாராவது தன் மாம்சத்தை போஷித்துக் காப்பாற்றாமல் இருப்பார்களா? ஒருவரும் இருக்கமாட்டார்கள். பசி வந்தால் போதும் அங்குமிங்கும் சென்று தன் பசியைபோக்கும்படியாக முயற்சிப்பார்கள். தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபையை கர்த்தர் போஷிக்க அறிந்திருக்கிறார். அந்த மந்தை அவருடையது. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தைக்கொண்டு அதை சம்பாதித்துள்ளார். அந்த சபையை கர்த்தர் போஷிக்கிறார் என அறிகிறோம். ஒரு முறை இயேசுவை



பின்பற்றின திரளான ஜனங்களைப் பார்த்து கர்த்தர் பரிதபித்தார். "இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்" (மாற்.8:2,3). தம்மைபின்பற்றி வந்த மக்கள் மீது அவர் கொண்ட கரிசனையைப் பார்த்தீர்களா? அவர் சத்தியபரராயிருக்கிறபடியால் அவர்களை நேசிக்கவும் போஷிக்கவும் அறிந்திருந்தார்.

சத்தியபரரின் சத்தியத்தை மூன்றுநாட்களாக கேட்டுக்கொண்டே இருந்த மக்களுக்கு பசியைப்பற்றியே தெரியவில்லை. தேவனுடைய வசனமே அவர்களுக்கு போஜனமாக இருந்தது. அவர்களை அனுப்பும்போது அவர்கள் வழியில் சோர்ந்துபோவார்களே என்று அறிந்து அவர்களுக்கு போஜனங்கொடுத்தார். அவர்கள் திருப்தியாக சாப்பிட்டார்கள். மீதமானதை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள். அந்த அளவுக்கு போஜனம் மீந்திருந்தது. அப்படியென்றால் அவர்கள் எந்த அளவு சாப்பிட்டு இருப்பார்கள் என்று பாருங்கள். அவர்களால் எந்த அளவு சாப்பிடமுடியுமோ அந்த அளவு சாப்பிட்டு இருப்பார்கள். அது அவர்களுக்கு திருப்தியான ஆகாரமாயிருந்தது. சதா உணவை நோக்கிக் கொண்டிருப்பவர்கள் கவனிக்கவேண்டும். "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிற வசனத்தை, பிசாசானவனுக்கு ஆண்டவர் எடுத்துரைத்தார் (மத்.4:4). இதைக்குறித்து நாம் உபாகம புத்தகத்தில் படிக்கிறோம்; "அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்" (உபா.8:3).

அன்பு வாசகரே, **இந்த சத்தியம் உன்னை விடுதலையாக்கும்:** இயேசு சொல்கிறார்; "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:32). சத்தியத்தை அறியாமல் ஒருவன் விடுதலை அடையமுடியாது. பாவத்திலிருந்து விடுதலையடையும்படி விரும்புகிறார்கள். ஆனால் சத்தியபரராகிய இயேசுவிடம் வரப்பயப்படுகிறார்கள். சமுதாயத்தை பார்க்கிறார்கள், உறவினர்களைப் பார்க்கிறார்கள், நாட்டைப்பார்க்கிறார்கள். உண்மையை அறிய இவைகளைப் பார்த்தால் உண்மை நமக்கு உதவுவது எப்படி? "ஆகையால் குமாரன்

விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவா.8:36). அவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுறிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார். அவர் ஒருவரே பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கமுடியும். உங்களுடைய பணத்தையும், நேரத்தையும், விரையம் பண்ணாமல் இயேசுவை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்படுங்கள். வீணானவைகளை நாடி வீணாய்ப்போய்விடாதிருங்கள். அங்குமிங்கும் அலைந்து திரிவதை விட்டுவிட்டு சத்தியத்தை தேடுங்கள். "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டு பிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்" என்கிறார் (எரே.5:1).

சத்தியபரரர் சத்தியத்தை தேடுகிறவன் உண்டோ என்று கண்ணோக்கமாயிருக்கிறார். இஸ்ரவேலரோ பலர் சத்தியத்தை தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் நாடிப் போனார்கள். ஆகையால் தேவன் அவர்களை விட்டு சிலவேளைகளில் விலகினார் என்று காண்கிறோம். இன்றைக்கு நமக்கு மன்னிப்பு வேண்டுமானால் நாம் சத்தியத்தை தேடவேண்டும். அந்த சத்தியத்திற்கு செவி கொடுக்கவேண்டும். அதன்படி நடக்க நம்மை ஆயத்தப்படுத்தவேண்டும். சிலுவையில் தொங்கிய கள்ளன் கடைசிவேளையில் இரட்சிக்கப்பட்டான். அவன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்தான், இயேசுவை நோக்கி மன்றாடினான், சத்தியத்தை நேசித்தான். மற்றகள்ளனுக்கு போதித்தான். இத்தனை காரியங்களையும் செய்த கள்ளனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்.23:43).

நாம் செய்யவேண்டியது என்ன? இந்த சத்தியத்தை வாங்கு, வேதாகமம் அதையே நமக்குப் போதிக்கிறது. "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு" (நீதி.23:23). நம்மில் எத்தனைபேர் இந்த சத்தியத்தை விலைகொடுத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அநேகர் இலவசமாகவே சத்தியத்தை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆகையினாலோ என்னவோ அதற்கு முக்கியதுவம் கொடுக்காதிருக்கிறார்கள். சத்தியம் விலையேறப்பெற்றது அதை நாம் வாங்கவே முற்படவேண்டும். அந்த சத்தியத்தை விற்பனை செய்யவோ அல்லது அதை வியாபார ஸ்தலமாகவோ மாற்றிவிடக்கூடாது. ஆண்டவர் ஒரு உவமையில் சொல்லும்போது; "பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு,



போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" என்றார் (மத்.13:45,46). இந்த வியாபாரியைப்போல சத்தியத்தைக் கண்டுகொண்ட நீங்கள் அதை வாங்கவும் தனதாக்கிக் கொள்ளவும் முயற்சிக்கிறீர்களா? அதை முதலாவது செய்யுங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்" என்று எழுதுகிறார் (எபே.6:14). பிசாசின் தந்திரங்களோடு எதிர்க்க நாம் சத்தியத்தை நம்மில் வார்க்கச்சையைப்போல கட்டிக்கொள்ளவேண்டும். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, சத்தியம் உன்னை நேசிக்கும், உன்னைப் போஷிக்கும், உன்னை விடுதலையாக்கும். இவைகளை பெற்றுக்கொள்ள இன்றே சத்தியத்தை தேடு அதைப் பற்றிக்கொள்.

**கேள்வி நேரம்**

**சத்தியத்தை பற்றிக்கொள்ளுகிறவர்கள் எங்கேயிருப்பார்கள்?**

தேவனோடு இருப்பார்கள். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" என்றார் (வெளி.21:4-7).

பரலோகத்தில் நித்திய நித்தியமாக வாழுவார்கள். இந்த பாக்கியத்தை பெற்றுக்கொள்ள காலம் கடத்தாது சத்தியத்தைத் தேடுங்கள். உலகத்தில் எதை எதையோ வாங்கவும், தேவையற்ற காரியங்களுக்குச் செலவு செய்து பின்பு வருத்தப்படுகிறோம். நீங்கள் முதலாவது சத்தியம் அடங்கிய ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கி அதைப் படிக்க ஆரம்பியுங்கள். அதில் உங்களுக்கு எழும்பும் சந்தேகத்தை குறித்துவைத்துக் கொண்டு உங்கள் போதகரிடம் விளக்கம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்;**
**உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17:17**

# 6. நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்துகொள்ளுங்கள்

## Only Let Your Conduct Be Worthy Of The Gospel Of Christ

**சு**விசேஷத்திற்கு பாத்திரராக நடந்துகொள்வது என்றால் எப்படி என்று நீங்கள் கேட்கக்கூடும். சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படாமல் இருப்பது, சுவிசேஷத்திற்கு உதவியாயிருப்பது மற்றும் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருப்பது இப்படி பல காரியங்களைச் சொல்லலாம். அப்போஸ்தலனாகிய பவுல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிற வனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" என்கிறார் (1கொரி.1:16). சுவிசேஷம் ஒரு மனிதனை இரட்சிக்கிறது. ஆகையால் அதை அவன் உயர்த்தவேண்டிய வனாயிருக்கிறான். "இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது" (கொலோ.1:22,23).

ஆம், தேவன் தெரிந்துகொண்ட விலையேறப்பெற்ற கல்லாகிய இயேசுவின் மீது ஒருவன் விசுவாசம் கொள்ளும்போது அவன் வெட்கப்பட்டுப்போவதில்லை. விசுவாசமாயிருக்கிறவர்களை தாம் அடைந்த சிலுவை மரணத்தின் மூலம் அவர்களை இரட்சிக்கிறார். தாம் தேவனோடு வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல தம்மை விசுவாசிக்கிறவர்களும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி அருள்செய்கிறார். இதற்கு நீங்கள் பாத்திரராக இருக்கிறீர்களா? இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மேன்மையாக எண்ணவேண்டும். நாம் தண்டிக்கப்படவேண்டிய இடத்தில் அவர் சிலுவையில் பாடுகளை அநுபவித்தார். நமக்குப் பதிலாக அவர் தாமே சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தப்பட்டார்.

இந்த சுவிசேஷத்தைக்குறித்து நீ வெட்கப்படுவாயானால் நீ ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. இந்த சுவிசேஷத்தினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். வேறே சுவிசேஷம் இல்லை. "நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினாலே உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல



சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (கொலோ.1:22,23).

இந்த சுவிசேஷம் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரமல்ல, உலகமெங்கிலும் உள்ள தேவனுடைய ஜனங்களை இரட்சிக்கும்படியாக தேவன் ஏற்படுத்தின மாபெரும் திட்டமாக இது இருக்கிறது. ஆகையால், உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்ற கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு இறுதியாக இயேசுகிறிஸ்துவானவர் கொடுத்தார். இதை பெற்றுக்கொண்ட அவர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். இந்த சுவிசேஷத்தை விட்டு விலகாமல் உறுதியுடனிருக்கும்போது நாம் இரட்சிக்கப்படுவோம். மேலும் பவுல் சொல்லுகிறார்; "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்றார் (கலா.2:20).

இந்த சுவிசேஷத்திற்கு நீங்கள் பாத்திரராக இருப்பீர்கள் என்றால் பவுலைப்போல நீங்களும் கிறிஸ்துவுடனே கூட ஞானஸ்நானத்தில் சிலுவையில் அறையப்பட்டவர்களாகவும், அவர் உயிர்த்தெழுந்ததைப்போல நீங்களும் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களாவும் இருப்பீர்கள். ஆகையால் இப்படியாக கிறிஸ்துவின் மரணத்தினாலே உயிர்ப்பிக்கப்பட்டவர்கள். அவருக்காக பிழைத்திருப்பார்கள். நீங்கள் யாருக்காக பிழைத்திருக்கிறீர்கள்? பொதுவாக உலகமக்கள் என் பிள்ளைக்காக நான் உயிரோடிருக்கிறேன். இல்லையென்றால் அன்றே நான் மரித்துபோயிருப்பேன். அவனுக்கு சில காரியங்களைச் செய்யவேண்டும் அதற்காக நான் உயிரோடிருக்கிறேன் என்று சொல்லுவார்கள். அதைப்போல ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைச் சார்ந்துகொண்டு வாழ்வதாக சொல்லுவார்கள்.

ஆனால் பவுல் நான் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ யாருக்காக பிழைத்திருக்கிறாய்? இயேசுவுக்காக பிழைத்திருப்பாயானால் அவரில் அன்பு செலுத்தவேண்டும். உலகத்தில் அன்பு செலுத்திக்கொண்டு நான் இயேசுவுக்காக வாழ்கிறேன் என்பாயாகில் உன் அன்பு மாயமுள்ளதாயிருக்கும். ஆபிரகாம் தன் குமாரனைக் காட்டிலும்

தேவனை அதிகமாக நேசித்தான் ஆகையால் தேவன் அவனை பலியிடும்படியாக சொல்லும்போது சற்றும் யோசிக்காமல் அவனை பலியாக ஒப்புக்கொடுத்தான். இதுதான் அவருக்குப் பாத்திரராக நடப்பதற்குரிய அடையாளமாக இருக்கிறது.

பவுலுடைய ஊழியத்தில் மாற்கு உதவியாக இருந்ததாக குறிப்பிடுகிறார்; "லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (2தீமோ.4:11). இந்த விஷயத்தில் பவுலுடைய ஊழியத்தில் மாற்கு, லூக்கா, தீமோத்தேயு போன்றோர் மிகவும் உதவியாக இருந்திருக்கிறார்கள். இதனால் பவுல் ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கமுடிந்தது என காண்கிறோம். மேலும், ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் இவர்களைப் பற்றி சொல்லும்போது; "அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்" (ரோம.16:4).

ஊழியத்திற்கு இன்று அநேகர் உதவியாக இருப்பதில்லை, உபத்திரவமாக இருக்கிறார்கள். உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவமாக இருக்கக்கூடாது. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்களுடைய கழுத்தைக் கொடுத்தார்கள் என பவுல் குறிப்பிடுகிறார். நாம் எந்த அளவு மற்றவர்களுக்கு ஊழியத்தில் உதவியாயிருக்கிறோம் என்பதை சற்று எண்ணிப்பாருங்கள். ஊழியம் என்பது அது கர்த்தருடையது. அதிலே உண்மையிருக்கவேண்டும், பரிசுத்தம் காணப்படவேண்டும், அநேகர் அதன்மூலமாக நன்மையடையவேண்டும். அப்படிப்பட்ட உன்னதமான ஊழியத்திற்கு உதவியாயிருக்கிறீர்களா? ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும், தங்களுடைய வீட்டை ஆராதனை கூடமாக மாற்றியிருக்கிறார்கள். அன்றைய நாட்களில் தேவாலய வழிபாடு இருந்தது. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் தேவாலய வழிபாடுகளுக்கு செல்லாமல் தங்களுடைய வீடுகளில் தேவனை ஆராதித்து வந்தார்கள். அதைத் தொடர்ந்து நாமும் அவ்விதமாகவே ஆராதிக்கிறோம்.

ஆகையால் என் நாமத்தில் எங்கே இரண்டு மூன்றுபேர் கூடுவீர்களோ அங்கே நான் இருப்பேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறபடி தங்களுடைய வீட்டை முதலாவது அவர்கள் ஆராதனைக்காக கொடுத்தார்கள். அங்கே அநேகர் கூடிவந்தார்கள். இன்றைக்கு நாம் கூடிவரக்கூடிய இடம் முக்கியம் என்று பார்த்துக்கொண்டு அநேகர் வீட்டில் ஆராதனை கூடிவருதலை தவிர்கின்றனர். ஆதியிலே இவர்கள் இப்படியாக கூடி வந்திருக்கிறார்கள்



என்பதற்கு இது போதுமான ஆதாரமாக இருக்கிறது. இயேசுவின் நாமத்தில் நாம் கூடிவரவேண்டும் அதுவே முக்கியம். இடமல்ல. அவருடைய நாமத்தில் நாம் கூடிவரும்போது அங்கே ஆண்டவர் இயேசுவானவர் இருக்கிறார். தேவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறார். அந்த தொழுகை புதியஏற்பாட்டின் படியானதாக இருக்கிறது.

மேலும் நாம் ஊழியத்தில் உதவியாக கொடுத்து தாங்கலாம். பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதும்போது; "நான் தெசலோனிக்கே யிலிருந்தபோது, என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்கிறார் (பிலி.4:16). மற்ற இடங்களில் பவுல் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது; இது நடைபெற்றுள்ளது. நமக்கு ஊழியம் செய்தால் தான் கொடுக்கவேண்டும் என்பது அல்ல, மற்ற இடங்களுக்கும் சுவிசேஷம் கொண்டுசெல்லப்படவேண்டும். ஆகையால் பிலிப்பிய சபையாரைப்போல ஊழியத்திற்கு உதவியாக இருக்கலாம். நம்மால் ஆன உதவிகளை ஊழியர்களுக்கு கொடுத்து உதவிடலாம்.

சபை கூடிவருலை விட்டுவிடாதிருக்கும்போது; சுவிசேஷத்திற்கு பாத்திரராக இருக்கிறோம். பொதுவாக அநேகர் தங்களுடைய வேலையின் நிமித்தமாக சபை கூடிவருதலை விட்டு விட்டு ஏதாவது சாக்குபோக்கு சொல்லுவார்கள். இது உலகமெங்கிலும் இருக்கிற ஒரு பிரச்சனையாகவே உள்ளது. சபை கூடிவருவது என்பது யாருக்காவும் அல்ல நமக்காகவும் தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகவும், தேவனுடைய கட்டளையை நாம் நிறைவேற்றுவதற்காகவும் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம். இதிலே குறைவாக இருந்த எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி.10:25).

சபை கூடிவருவதாலே நாம் சத்தியத்தை கற்றுக்கொள்ளுகிறோம். இவ்வுலகத்திலே கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு மிகவும் பிரயோஜனமுள்ள செய்திகளை நாம் ஒவ்வொருவாரமும் கேள்விப்பட்டு கர்த்தருக்குள் வளர்ச்சியடைய அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது. மேலும் அப்பத்திலும் ரசத்திலும் பங்குகொள்ளுகிறோம். என்னை நினைவு கூரும்படியாக இதில் நிலைத்திருங்கள் என்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார். நாம் அவரில் நிலைத்திருப்பதற்கு இவைகளை நினைவு கூருவது எத்தனை அவசியமான காரியம். இதைக் காட்டிலும் வேறே

காரியத்தைப் பெரிதாக நினைத்து அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போமானால்; நாம் கர்த்தருடைய பந்தியை உதாசினம் செய்கிறோம் என்றுதான் அர்த்தம். சபைக்கு மற்றவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் நாம் முதலாவது ஒழுங்காக ஆராதனையில் கலந்துகொண்டு சாட்சியுள்ள மக்களாக வாழவேண்டும். சிலர் ஊழியர் வெளியூர் சென்று விட்டால் சபைக்கு வரமாட்டார்கள். ஆசிரியர் பள்ளிக்கு வரவில்லை என்றால் மாணவர்கள் அங்கும் இங்கும் ஓடி சிலர் பள்ளியை விட்டு வீட்டுக்கு சென்றுவிடுவார்கள். அதைப்போல ஊழியர் இல்லாவிட்டால் சபையை மூடிவிடவேண்டும் என்றல்ல. நாமாக கூடி பாடல்களை பாடி வேதவசனங்களை ஒருவர் போதிக்க மற்றவர்கள் அமைதலோடு கேட்டு ஜெபித்து கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு பின்பு வரவுக்கு தகுந்த காணிக்கைகளை சேகரித்து ஆராதனையை முடிக்கலாம். இதை உங்களுடைய சபை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறதா?

பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது; "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" (பிலி.1:27). அன்பு நண்பரே, நீங்கள் கர்த்தருக்கு பாத்திரராக நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களை அவருடைய சமூகத்தில் பெற்றுக்கொள்வீர்கள்.

**கேள்வி நேரம்**

**சுவிசேஷத்திற்கு பாத்திரராக நடப்பதற்கு யாரிடமாவது ஆலோசனை பெறவேண்டுமா?**

சில காரியங்களைக் கற்றுக்கொண்டு ஒரே மாதிரியாக செய்யவேண்டும். பவுல் தான் அழைக்கப்பட்டபோது; "உடனே மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்; எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர் களிடத்திலே எருசலேமுக்குப்போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன் என்கிறார்" (கலா.1:16,17). சுவிசேஷம் மிக தீவிரமாக எடுத்துச் சென்று சொல்லப்படவேண்டிய ஒரு மாபெரும் நற்செய்தி.

இயேசுவின் உயிர்த்தெழுதலில் முதலாவது மிகத் தீவிரமாக ஓடிசென்று சீஷர்களுக்கு சொன்னவர்கள் சகோதரிகள். அந்தப்படியாக அநேக பிரசங்கிமார்கள் தொடர்ந்து இன்றுவரை அந்த சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டுவருகிறார்கள். பவுலைப்பேல சுசேஷத்தை அறிவிப்பது நம்மேல்



விழுந்த கடமையாக அதை எடுத்துக்கொண்டு யோசனைபண்ணாமல் உடனே அதை அறிவிக்கும்படி கடந்துசெல்லுங்கள். குறைவுகளை ஒழுங்கு படுத்துங்கள். "நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் பிரியமானவர்களான படியினாலே எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம் என்று சொல்லும் பவுலைப்போல பாத்திரராக நடந்துகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 7. நீ பூமியில் உயிரோடிருக்குங்காலத்தில்...

## When You Live In The World...

இந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? பூமியில் மனிதனுடைய வாழ்நாள் குறுகினதாயிருக்கிறது. அந்த குறுகின நாட்களில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். வேதாகமத்தில் ஒரு ஐசுவரியவானைப் பற்றி படிக்கிறோம். "அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்" (லூக்.16:19). இவன் மற்றவர்களைப் பற்றி கவலைப்படவில்லை. தனக்கு எல்லாம் இருக்கிறது என்று சொல்லி அவைகளை அநுபவித்தான். வாசலிலே கிடக்கும் தரித்திரன் லாசருவை அவன் கண்டுகொள்ளவில்லை. இன்றைக்கு இவனைப்போல இருக்கக்கூடியவர்கள் அதிகமானோர் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். ஒருவேளை அவர்களில் ஒருவனைப்போல நீங்களும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். உங்களிடத்தில் உள்ள பொருள்கள் அனைத்தும் தேவன் கொடுத்த பொருட்களே. அது என்னுடையது என்று சொல்ல ஒருவருக்கும் அதிகாரமில்லை.

ஏனெனில் வானமும் பூமியும் கர்த்தருடையது என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். இவைகளை பிதாவாகிய தேவன் சிருஷ்டித்தார். அவர் ஒன்றுமில்லாமையிலிருந்து இவைகளை உண்டாக்கினார். நாம் ஒரு வீட்டைக்கட்டுகிறோம் என்றால் மணல், கல், மரம் இவைகளைக் கொண்டு கட்டுகிறோம். இவைகளை வேறொரு இடத்திலிருந்து பெற்று ஒன்றுசேர்த்து கட்டுகிறோம். ஏற்கனவே உண்டாக்கப்பட்ட ஒன்றை வைத்து ஒன்றை உருவாக்குகிறோம். இதில் நாம் தேவனுக்கு மேலானவர்கள் அல்ல. ஆகையால், ஒருவன் இல்லாதவனாயிருந்தால் அது அவனுடைய பாடு எனக்கென்ன எல்லாம் இருக்கிறது. கடவுள் என்னை ஆசீர்வதித்து வைத்திருக்கிறார். எனக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லி பிறனுக்கான

காரியங்களைப் பற்றி கவலை கொள்ளாதவர்களாக, தன்னுடைய காரியங்கள் நிறைவானால் போதும் என்று தனக்காகவே வாழ்ந்துகொண்டிராமல் மற்றவர்களையும் கண்ணோக்கிப்பார்க்கவேண்டும்.

லாசரு என்ற ஒரு தரித்திரன் பருக்கள் நிறைந்தவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் அவன் பருக்களை நக்கிற்று. இந்த லாசரு தீமைகளை பூமியில் அநுபவித்தான். அவனால் மற்றவர்களுக்கு உதவ முடியவில்லை. ஆனால் தன் பருக்களை நக்கும் நாய்களை அவன் விரட்டவில்லை. ஒருவகையில் லாசருவினால் நாய்கள் பயனடைந்திருக்கிறது. இன்றைக்கு நாம் அநுதினமும் ரோட்டோரங்களில் லாசருவைப்போல கிடக்கும் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறோம். ஆனால் நம்மால் உதவ முடியவில்லை. போகவேண்டிய இடத்திற்கு போய்சேர தாமதமாகி விடும் என்பதால் தரித்திரர்களைக் கண்டும் உதவாமல் போய்விடுகிறோம். சிலர் உதவ மனமில்லாமல் இவன் என்ன கொடுமை செய்தானோ, இப்படி அலைகிறான் என்று கேவலமாக அவனைப்பற்றி பேசிவிட்டு கடந்துசெல்வார்கள். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் அநுதினமும் காண்கிறோம். உன்னைப்போல உள்ள ஒருவனைக் கண்டு அவனுடைய கஷ்டத்தில் நீ உதவாமற்போனால் நீ இந்த பூமியில் இருந்து வேறு என்ன செய்யப்போகிறாய்?

"ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" (யாக்.2:15-17). உனக்கு பூமியிலே விசுவாசம் இருந்தும் அது கிரியைகளில்லாதிருந்தால் செத்தது என வேதம் சொல்லுகிறது. உலகத்திலே உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் பயன்படுகிறது. பயன்படாத பொருள் ஒன்றுமில்லை. நீ மற்றவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் பயன்படவேண்டும்.

உனக்காகவே நீ வாழ்ந்துகொண்டிருப்பாயானால் உன் நிலைமை என்னவாகும்? சற்றே யோசித்துப்பார். பூமியிலே சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்த ஐசுவரியவான் மரித்து பாதாளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டான். "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக்.16:23). தனக்காகவே வாழ்ந்துகொண்டிருந்த



ஐசுவரியவானை பாதாளம் விழுங்கினது. அங்கே அவன் வேதனைப்பட்டான். பூமியிலே வேதனையை அநுபவிக்காதவன், பாதாளத்திலே வேதனையை அநுபவிக்கிறான். சிலர் சொல்லுவார்கள் எனக்கு ஒரு நோயும் வந்ததில்லை, ஒரு நாள்கூட நான் ஊசி போட்டதில்லை என்பார்கள். இப்படிசொல்லுகிறவர்கள் தாங்கள் ஒரு நீதிமான் என்றும் யாருக்கும் எந்த கெடுதலும் செய்யவில்லை ஆகையால் எனக்கு ஒன்றும் வராது என்பதை மனதில் வைத்து இப்படிச்சொல்லுவார்கள். லாசரு ஒரு பாவியா? அல்லது அவன் அநேகரை வஞ்சித்தானா? அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் அவன் ஒரு தரித்திரனாக இருந்தான் என்று படிக்கிறோம். "திருப்தியுள்ளவர் களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்" (லூக்.6:25). இவ்வசனத்தைப் படிக்கும்போது நமக்கு நிச்சயமாக பயம் ஏற்படும்.

ஏனெனில் எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு. வசதிபடைத்தவர்கள் வசதிபடைத்தவர்களாகவே இருக்கப்போவதில்லை, அதைப்போல ஏழையாய் இருக்கிறவர்கள் ஏழையாகவே இருக்கப்போவதில்லை. உலகம் சுற்றிக்கொண்டிருப்பதைப்போல, இரவுபகல் வருவதைப்போல மாறுபடும். இப்பூமியில் நகைக்கிறவர்கள் ஒரு நாளில் துக்கப்பட்டு அழுவார்கள் அதில் சந்தேகமில்லை. திருப்தியாக இருக்கிறவர்கள் ஒருநாளில் பசியாயிருப்பார்கள். ஐசுவரியவான் அந்தவிதமாக பாதாளத்திலே வேதனையை அநுபவித்துக்கொண்டிருந்தான். இந்த ஐசுவரியவானைப்போல மற்றொரு வசதிபடைத்தவனை ஆண்டவர் இயேசு தம்முடைய உவமையில் குறிப்பிட்டுள்ளார். "ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப் பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:16-20). தனக்காகவே சேர்க்கிறவனுடைய நிலைமை இப்படியே முடியும்.

அந்த ஐசுவரியவானுடைய முடிவு என்னவானது? அவன் எங்கேயிருந்தான்? இந்த பூமியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற உங்களுடைய

முடிவு என்னவாகும்? நீங்கள் எங்கே இருப்பீர்கள்? இதைக்குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? ஐசுவரியவான் அக்கினிஜுவாலையில் வேதனைப்பட்டான். "அவன்; தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்" (லூக்.16:24). ஆபிரகாமுக்கு ஐசுவரியவானும் சரீரபிரகாரமாக ஆதாமின் வழி வந்தவன். லாசரு இப்பொழுது ஆபிரகாமுடைய மடியில் இருக்கிறான். ஆனால் ஐசுவரியவானோ அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறான். அவன் கேட்பதெல்லாம் ஒரு லிட்டர் தண்ணீரோ அல்லது ஒரு டம்லர் தண்ணீரோ அல்ல லாசருவின் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து தன் நாவை குளிரப்பண்ணவேண்டும் அவ்வளவுதான். அப்படியானால் அந்த ஐசுவரியவான் அக்கினிஜுவாலையில் எந்த அளவு நாவறண்டுபோயிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். அதுமாத்திரமல்ல வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டோம் என்பதை எண்ணினான்.

ஆகையால் அவனுக்கு புத்தி வருகிறது; ஆபிரகாமை நோக்கி: "தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன்போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்" (லூக்.16:27,28). சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரே மாதிரியான வீட்டை கட்டிகொடுத்திருப்பார்கள். நான் சில ஊர்களில் அந்த விதமான வீடுகளைப்பார்த்திருக்கிறேன். இந்த ஐசுவரியவானுக்கும் ஐந்து சகோதரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களும் இவனைப்போல உள்ளவர்கள் தான் இவனுடைய பேச்சிலிருந்தே தெரிகிறது. அவர்களும் இந்த இடத்திற்கு வந்துவிடாமல் இருக்க அவர்களுக்கு சாட்சியாக லாசருவை அனுப்பும் என்று கேட்கிறான். பூமியில் உயிரோடிருந்த காலத்தில் சற்றும் திரும்பிப் பார்க்காதவன், அவனைப் பார்த்தாலும் மூக்கைப் பொத்திக்கொண்டு அந்த வழியாக கடந்துசென்றவன். இப்பொழுது லாசருவின் நுனிவிரலினால் நாவை குளிரப்பண்ண தண்ணீர் கேட்கிறான். செய்தி அனுப்ப ஆபிரகாமை நோக்கி மன்றாடுகிறான். அவன் தான் எங்குஇருக்கிறோம் என்பதை அறியாமற்பேசிக்கொண்டிருந்தான்.

இதை அறிந்த ஆபிரகாம் "அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். மேலும் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்றான். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே ஒருவன்



மரித்தோரிலிருந்து எழுந்துபோனாலும் இப்பூமியில் உள்ளவர்கள் நம்பமாட்டார்கள். ஆகையால் நீ என்ன நிலைமையில் இருக்கிறாய். மற்றவர்களை கண்ணோக்கிப் பார். உன்னால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கும் செய்யும்படியாக முயற்சிசெய். "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பெய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று வெளிப்படுத்தின விசேஷம் 21-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு உன்னைத் தப்புவித்துக்கொள்ள நீ காண்கிற சகோதரனுக்கோ, அல்லது சகோதரிக்கோ உன்னை ஒழிக்காது அவர்களுடைய தேவையை அறிந்து அவர்களுக்கு உன்னால் முடிந்த உதவியைச் செய். தேவன் உன்னிடத்தில் இதை எதிர்பார்க்கிறார். உலகத்தில் உள்ள அனைத்தும் ஏதாவது ஒருவகையில் மற்றவர்களுக்கு பயன்பட்டுக்கொண்டிருக்கும்போது நீ பயன்படாமல் உனக்குத்தானே பயனாக இருந்தால் முடிவில் நீ யாருக்கும் பயன்படாமற்போவாய் உன்னுடைய எண்ணத்தையும், முடிவையும், தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடு. அப்பொழுது நீ ஆபிரகாமின் குமாரனாக விசுவாசப்பிள்ளையாக இருப்பாய்.

### கேள்வி நேரம்

**பூமியில் உயிரோடிருக்குங்காலத்தில் ஆவிக்குரிய மனிதனுக்கு கிடைக்கும் பாக்கியம் என்ன?**

"ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுண்டு அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர் மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.

சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை

உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:44-52). இந்த பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள நீங்கள் கர்த்தருடையவர்களாக மாறுங்கள். நீங்கள் கர்த்தருடைய சுவிசேஷ வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அந்த பாக்கியத்தை பெற்று ஆவிக்குரியவர்களாக மாற்றப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 8. கிறிஸ்துவின் நிருபம்
## An Epistle of Christ

**ஒ**ரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறான். நிருபங்கள் எழுதப்பட்டுள்ளதைப்போல அவனுடைய செயல்பாடுகள் கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்கவேண்டும். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதின கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே" என்கிறார் (2கொரி.3:2). அவர்களுடைய இருதயங்களில் எழுதப்படும் அளவிற்கு நற்சாட்சியுள்ளவர்களாக கொரிந்துசபையார் இருந்திருக்கிறார்கள் ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதுகிறார். அப்படியானால் கொரிந்துசபையார் எந்த அளவு ஊழியத்தை தாங்கியிருப்பார்கள், ஊழியத்திற்கு உதவியாயிருந்திருப்பார்கள் என்பதை பவுலுடைய கடிதத்தின் வாயிலாக நாம் அறியமுடிகிறது. அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தைக்குறித்து ஒரு நிருபத்தை வாசித்து தெரிந்துகொள்வதைக்காட்டிலும் கொரிந்து சபையாரின் மூலமாக தெரிந்துகொள்ளலாம் அந்த அளவுக்கு அவர்கள் அப்போஸ்தலர்களைக்குறித்தும், அவர்களுடைய ஊழியத்தைக்குறித்தும் எடுத்துச் சொல்லும் நிருபங்களாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கிற நீங்கள் உங்களுடைய சமுதாயத்தின் மத்தியில் நீங்களே நிருபங்களாக இருக்கிறீர்களா? உங்களைப் பார்த்து மற்றவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அந்த அளவு சாட்சியுள்ள மக்களாக இருக்கவேண்டும் அதையே வேதாகமம் எதிர்பார்க்கிறது. கொரிந்து சபையாரைப்போல கலாத்திய சபையாரும் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பவுல் எழுதும்போது; "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால்,



அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்" என்கிறார் (கலா.4:15). கண்களையே பிடுங்கிக் கொடுத்ததாக கதைகளில் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே கலாத்திய சபையார் பவுல் மீது அந்த அளவு நம்பிக்கையுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பவுலுடைய இந்த கடிதமே சாட்சியாயிருக்கிறது. ஊழியர்களுக்கு உதவி செய்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த ஊழியருக்காக எதையும் செய்யும் மனதையுடையவர்களாக இந்த கலாத்திய சபையார் இருந்திருக்கிறார்கள். கண்களை பிடுங்கிக்கொடுப்பது என்பது சாதாரணவிஷயமல்ல. கண் தானம் செய்யவே யோசிக்கக்கூடிய இந்நாட்களில் கண்களையும் பிடுங்கிக் கொடுக்கவும் ஆயத்தமாயிருந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய நம்பிக்கை எத்தகையது, அவர்கள் அப்போஸ்தலர்கள் மீது வைத்த நம்பிக்கை எத்தகையது என்பதை எண்ணிப்பாருங்கள்.

மேலும் நிருபங்களாக இருந்த மக்கெதொனியா சபையாரைப்பற்றி 2கொரிந்தியர் 8:3-ல் வாசிக்கிறோம். "அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். கொடுத்தல் விஷயத்தில் மக்கொதொனியா சபையார் மிகவும் உற்சாகமுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அநேகர் இருந்தால்தான் கொடுப்பார்கள் அல்லது அதிகமான வருமானம் வந்தால்தான் கொடுப்பார்கள். ஆனால் இந்த சபையார் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்திருக்கிறார்கள். ஏழைவிதவை இரண்டு காசு போட்டதைப்போல தங்களுக்கு உள்ளவைகளையும் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். நாளைக்காக என்னசெய்வோம் என்று ஏங்கும் கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. இவர்கள் எதைக்குறித்தும் கவலைப்படாமல் கர்த்தருடைய ஊழிய விஷயத்தில் கொடுத்து தாங்குகிற மக்களாக இருந்திருக்கிறார்கள். கொடுத்து, கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள். கொடுக்கிறவர்கள் எவரும் தரித்திரர் ஆனதில்லை. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற வசனத்தை மிகவும் உறுதியாக பற்றிக்கொண்டவர்கள். நீங்கள் இந்த மக்கெதொனியா சபையாரைப்போல கொடுத்து, நிருபங்களாக இருக்க பிரயாசப்படுங்கள்.

நிருபங்களாக எழுதப்படுவதைப்போல நிருபங்களாக வாசிக்கப்படவும் வேண்டும். அப்படியானால் நாம் செய்யவேண்டியது என்ன? "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபம் நீங்கள்தானே" என்கிறார் பவுல். இன்றைக்கு நீங்கள் நானும் கொரிந்துசபையாரைப் பற்றி தெரிந்துகொள்ளுகிறோம். சகல மனுஷராலும்

வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபமாக கொரிந்துசபையார் இருந்திருக்கிறார்கள். ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் அநேகரால் வாசிக்கப்படும் நிருபங்களாக ஜீவிக்க வேண்டியது கிறிஸ்தவனின் கடமையாக இருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. அதைப்போல நிருபங்களாக ஒவ்வொருவரும் வாழும்போது இன்னும் அநேகர் நம்மைப்பார்த்து வாசித்து தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. படித்து தெரிந்துகொள்வது ஒரு விதமான ஊழியமாக இருக்கிறது. அதைப்போல நிருபங்களாக ஜீவிப்பது மற்றொரு வகையான ஊழியமாக இருக்கிறது. நீங்கள் எந்த விதமான ஊழியத்தில் நிலைத்திருக்கிறீர்கள்? ஊழியத்தில் வரங்களைப் பார்க்கிறோம் அதைப்போல ஊழியங்களிலும் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் எல்லாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்துபவையாகவே இருக்கவேண்டும்.

பிலேமோன் என்று சொல்லக்கூடிய ஒருவனுக்கு பவுல் எழுதும்போது; "கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு, என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செய்வதாக..." சொல்லுகிறார் (பிலே.4,5). இந்த பிலேமோன் அநேகர் வாசிக்கப்படும் ஒரு நிருபமாக வாழ்ந்திருக்கிறார். எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்பு செலுத்துகிறவராயிருந்திருக்கிறார். இவருடைய அன்பைப் பற்றியும், இவருடைய விசுவாசத்தைப் பற்றியும் அநேகர் பவுலிடம் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் கேள்விப்பட்டு தேவனுக்கு நன்றி சொல்லுகிறவராக பவுல் இருந்திருக்கிறார். பிலேமோனுடைய அன்பும் விசுவாசமும் எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது. அநேகர் பாராட்டும் அளவு விசுவாசமுள்ளதாயும் நிருபமாயும் இருக்கிறதா? நாம் கிறிஸ்துவின் நிருபங்களாக வாழும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துபோகாதிருங்கள்.

இந்த விதமான அன்பு தீமோத்தேயுவின் பாட்டியினிடத்திலும் அவனுடைய தாயினிடத்திலும் காணப்பட்டது; "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் பவுல் (2தீமோ.1:5). இப்படிப்பட்ட விசுவாசமும் அன்பும் உள்ள பாட்டிகளையும், தாய்களையும் இக்காலத்தில் நாம் கண்பது அரிதாக இருக்கிறது. வழி வழியாக பாரம்பரியமாக கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஆதி அன்பும், ஆதி ஐக்கியமும் காணப்படுவதில்லை. தீமோத்தேயு ஒரு உண்மையுள்ள மகனாக வளர்ந்திருக்கிறான் என்றால்



அதற்கு காரணம் அவனுடைய பாட்டி மற்றும் அவனுடைய தாய். இவர்களுடைய அன்பு விசுவாசம், அவனுக்குள்ளும் நிலைத்திருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் வாசிக்கப்படும் நிருபங்களாக வாழ்வார்களேயானால் எங்கும் கிறிஸ்தவர்கள் எழும்ப ஆரம்பிப்பார்கள். உலகம் கிறிஸ்துவை அறிகிற அறிவினால் நிறையப்படும். என் அன்பு சகோதரனே சகோதரியே நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிடாமல் அநேகர் வாசிக்கப்படும் ஒரு நிருபமாக இருக்க பிரயாசப்படு.

நாம் நிருபங்களாயிருக்கவேண்டும். அதற்காக உலகபிரகாரமான ஒரு நிருபமாக அல்ல, அநேகர் உலகத்தில் ஒரு பெரிய சாதனை செய்து நிருபமாயிருக்க பிரயாசம் கொள்ளுகின்றனர். கின்னஸ் புத்தகத்தில் தன்னுடைய பெயர் இடம் பெறவேண்டும் என்று நினைத்து கடுமையாக உழைக்கின்றனர். பின்பு வெற்றியடைந்து அந்தப்புத்தகத்தில் இடம் பிடிக்கின்றனர். நல்லது தான். ஆனால் தேவன் ஏற்படுத்தியுள்ள நிலையான பொக்கிஷத்தில் இடம்பெறவேண்டும். ஜீவபுத்தகத்தில் இடம் பெறவேண்டும். அதற்கான வழி என்ன? கிறிஸ்துவின் நிருபமாயிருக்கவேண்டும். "ஏனெனில், நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளில்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது" (2கொ.3:3).

ஒரு ஊழியக்காரனுக்கு அடையாளம் என்ன? அவனுடைய அங்கியோ, அல்லது அவனுடைய உடல் தோற்றமோ, அல்லது உயர்ந்த படிப்போ, மேலைநாட்டு படிப்போ அல்ல., அவன் பிரசங்கிக்கும் சபையாரே அவனுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். அவனைப்பற்றி அவனுடைய சபையார் சொல்லவேண்டும். ஏனெனில் தனிப்பட்ட நபராக இருந்து அந்த ஊழியத்தை உருவாக்கி இன்று அந்த ஊழியத்தில் ஆயிரம்பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆயிரம்பேர் அந்த ஊழியரைக்குறித்து கொடுக்கும் சாட்சியே நிருபமாக இருக்கிறது. அந்த ஊழியனுக்கு அவன் பிரசங்கிக்கும் சபையே ஜீவனுள்ள நிருபமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட ஊழியத்தை உடைய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும்,விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என்கிறார் (1தீமோ.4:12). ஒரு ஊழியன் எல்லாவற்றிலும் மாதிரியாக

இருக்கபோதிக்கப்படுகிறான். அவனை எல்லோரும் உற்றுநோக்குவார்கள். இளம்பிரசங்கியாராயிருந்தால் அவனுடைய இளமை. இந்த வாலிபனுக்கு என்ன தெரியும் என்று வயதானவர்கள் முறுமுறுப்பார்கள். ஆகையால் வார்த்தையினாலும், நடக்கையினாலும், அன்பினாலும், ஆவியினாலும், விசுவாசத்தினாலும், கற்பினாலும் என்றால் (பரிசுத்தத்திலும்) விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு என்கிறார். எவ்விதத்திலும் ஒருவனும் குற்றப்படுத்தாதபடி ஊழியக்காரன் மாதிரியாக இருக்கவேண்டியவனாயிருக்கிறான். மேலும்; "எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (1தெச.2:19). ஒரு ஊழியனுக்கு அவனுடைய சபையாரின் வளர்ச்சி மிகவும் முக்கியம். அதைப்போல அவர்களெல்லாரும் கர்த்தருடைய சந்நிதானத்தில் காணப்பட வேண்டும் என்பது அதைக்காட்டிலும் முக்கியம். ஏனெனில் முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியாமல் எத்தனையோ பேர் விழுந்துபோய்விடுகின்றனர்.

கடைசிவரை பலவிதமான போராட்டங்களை தங்களுடைய விசுவாசத்தினாலே போராடி இயேசுவின் வருகை மட்டும் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலே நிற்க தகுதியுடையவர்கள். அப்படி நிற்க தகுதியுடைய விசுவாசிகள் காணப்படும்போது அவர்களை வழிநடத்தின அந்த மேய்ப்பனுக்கு பிரதான மேய்ப்பன் சமுகத்தில் மகிழ்ச்சியும் கிரீடமுமாயிருப்பார்கள். அன்பு நண்பரே, நீ ஒரு கிறிஸ்தவனாக இருப்பாயானால் எழுதப்படும் நிருபங்களாக இருக்கப்பிரயாசப்படு, அநேகர் வாசிக்கப்படும் நிருபங்களாக இருக்கப்பிரயாசப்படு, கிறிஸ்துவின் நிருபமாயிரு அப்பொழுது கர்த்தர் உம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

### கேள்வி நேரம்

**நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை எப்படி மற்றவர்கள் கண்டு கொள்வார்கள்?**

இதற்கு ஒரு அடையாளம் வேண்டும் என்பதற்காக, கழுத்தில் சிலுவையை அணிந்துகொள்கிறார்கள். சிலர் தங்களுடைய உடையினால் வித்தியாசப்படுத்திக் காண்பித்துக்கெள்ளுகிறார்கள். சிலர் முகத்தில் தாடி வைத்துக்கொள்ளுகிறார்கள் அல்லது முற்றிலும் மீசையில்லாமல் காண்பித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் வேதாகமம் ஒரு கிறிஸ்தவனை அடையாளப்படுத்த இயேசுவானவர்; "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று



எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவா.13:35). அன்பு எல்லாவற்றிலும் மேலானது. அன்பு இருக்கிற இடத்தில் தேவன் இருப்பார். ஏனெனில் தேவன் அன்பாகவே இருப்பார். அப்படிப்பட்ட இடத்தில் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் வந்து தங்கியிருப்பார்கள். அப்பொழுது அது தேவனுடைய ஆலயமாக மாறும். அன்பு கற்பனைகளுக்கெல்லாம் மேலான கற்பனையாக இருக்கிறது.

அன்பினாலே ஆண்டவருடைய ஊழியம் கட்டப்பட்டிருக்கிறது. அன்பில்லாதவன் தேவனை அறியான் என காண்கிறோம். ஒருவன் தனக்குண்டான எல்லாவற்றையும் அன்னதானம் பண்ணினாலும் அவனுக்கு அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை. அன்பு நிறைந்தவர்களாக கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை உலக மக்கள் அறிந்துகொள்வார்கள். அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 9.உலக வழிபாடுகள்

## The Basic Principles of The World

**உ**லக வழிபாடுகள் ஒரு மனிதனை இரட்சிக்காது. அது மனுஷர்களின் பாரம்பரியத்தை பற்றியதாக இருக்கிறது. பாரம்பரியங்கள் அழிந்துகொண்டேதான் செல்கிறது. அதில் சிலமாற்றங்களை காலத்திற்கு ஏற்றார்போல மாற்றியமைத்துக்கொள்கின்றனர். ஆகையால் "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல" (கொலோ.2:8). நாங்களும் கிறிஸ்துவைதான் கடவுளாக வழிபடுகிறோம் என்று அநேக பிரிவினைவாதிகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய வழிபாடுகளுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இதை நான் சொல்லவில்லை பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. இதை யாரும் மறுக்கமுடியாது. "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்" (யாத்.20:23). இயேசுவுக்கு ஒப்பாகவும் அப்போஸ்தலர்களுக்கு ஒப்பாகவும் ஒரு சொருபத்தை செய்து இதுதான் தெய்வம் என்று கோடிக்கணக்கான ஜனங்கள் அதை வைத்துக்கொண்டு கும்பிடுகிறார்கள். அந்த தொழுகையை தேவன் ஏற்றுக்கொள்ளார். ஏனென்றால்

எனக்கு ஒப்பாக நீங்கள் வெள்ளியினாலும் பொன்னினாலும் தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் என்று சொல்லியிருக்கும்போது அதை அவர் அங்கிகரிக்கமாட்டார். ஆக உலக பாரம்பரியம் புறஜாதி மக்களிடமிருந்து வந்தது. அந்த பாரம்பரிய பழக்கவழக்கங்ளை தேவன் ஏற்றுக்கொள்ளார். "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்துபோகுமே" என்று காண்கிறோம் (கொலோ.2:20-22).

ஒருவன் கிறிஸ்து இயேசுவுக்குள் வரும்போது இந்த உலகத்தின் வழிபாடுகள் அவனோடு ஞானஸ்நானத்தில் மரிக்கவேண்டும். அது மீண்டும் தலைதூக்குமேயானால் அவர்கள் முறைப்படியாக இரட்சிக்கப்படவில்லை என்று தான் அர்த்தம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது புதிய மனிதனாக இருக்கிறான் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின என காண்கிறோம். அப்படியிருக்கும்போது, அவனுடைய வாழ்க்கையில் பழையவைகள் தூளிர்க்கிறது என்றால் அவன் பாராம்பரிய கட்டுகளில் சிக்கியிருக்கிறான் என காண்கிறோம். மாம்சத்தை பேனக்கூடிய உலக வழிபாடுகள் மனுஷர்களின் கற்பனையாக இருக்கிறது. தொடாதே தீண்டாதே ரூசிபாராதே என்பார்கள். இப்படிப்பட்ட போதனைகள் அழிந்துபோகக் கூடியவைகள். "இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிறபேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (அப்.7:42).

இன்றைக்கு அநேகர் மாயமான தாழ்மையையே விரும்புகின்றனர். மாய்மாலக்காரர்கள் மாயமான தாழ்மையாய் நடந்து மற்றவர்களுக்கு குழிபறிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வேண்டுதல் மற்றவர்களுடைய நலனுக்காக இருக்காது. தான்மட்டும் நன்றாயிருக்கவேண்டும் என்றே நினைப்பார்கள். சரீரத்தில் இருந்துகொண்டு நாம் தேவனை ஆராதிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அந்த சரீரத்தைக் கீறிக்கொண்டும், விதவிதமான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டும், பசியோடும், பட்டினியோடும் குதித்துக்கொண்டும் ஒரு விதமான கூச்சலோடும் சப்தத்தோடும் அவரை தொழுதுகொள்ளுவதை தேவன் விரும்புவதில்லை. தேவன் வானங்களிலும் பெரியவர். ஆகையால் தேவன் ஆவியாயிருக்கிறார்



அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என காண்கிறோம்.

காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து தேவனை ஆராதிக்கிற கூட்டத்தை நாம் காணமுடிகிறது. "மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோ.2;19). தேவனை இப்படித்தான் ஆராதனை செய்யவேண்டும் என்ற போதனை அநேகருக்கு தெரிந்த போதும் அவர்கள் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து தேவனை ஆராதிக்கவே விரும்புகின்றனர். மிக அருகாமையில் உள்ள இடத்தில் ஆண்டவரைப்பற்றி நன்கு போதனை கொடுப்பார்கள். அப்படியிருந்தாலும் அங்கே அநேகர் செல்வதில்லை.

காணாத இடத்தில், பாஷைகள் வித்தியாசப்பட்ட ஒரு இடத்திலுள்ள கோவிலையே அநேகர் நாடுகிறார்கள். கொஞ்ச தூரம் சென்று வந்தால்தான் நலமாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் ஜாலியாக சென்று வருவதுபோல இருக்குமா? என்று சொல்லி தொலைவில் இருக்கிற இடங்களுக்கு சென்று கடவுளை வழிபடவே விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து வீணானவைகளை பின்பற்றி வீணராவார்கள். ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே, உங்களையும் இப்படிப்பட்டவர்கள் மோசம்போக்கி விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். நூதனமான காரியங்களை பேசுவதிலும் பின்பற்றுவதிலும் விரும்பமுற்ற அத்தேனே பட்டணத்தாரைப்பற்றி படிக்கிறோம். அங்கே அப்போஸ்தலாகிய பவுல் சுவிசேஷம் அறிவிக்கும்படி சென்றார்; "எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றார் (அப்.17:23).

அறியப்படாத ஒரு கடவுள் இருப்பாரே என்றால் அந்தக் கடவுளுக்கு என்று ஒரு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்து வந்தார்கள். அந்த அளவு எல்லா கடவுளுக்கும் கோவில்களைக் கட்டி ஆராதித்து வந்திருக்கிறார்கள். ஆகையால் பவுல் நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் அறிவிக்கிறேன் என்று சொல்லி கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும் அவருடைய உன்னதமான திட்டத்தைக்குறித்தும் அவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும்

காணாதவைகளில் துணிவாய் நுழைந்த லீஸ்திரா பட்டணத்து யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரியை பற்றி படிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டும் பர்னபாவைக் கொண்டும் தேவன் பெரிய காரியங்களைச் செய்தார். இதை அறிந்த அந்தப்பட்டணத்தார்களுடன் கோவில் பூஜாசாரி "எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்" (அப்.14:13). பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுலை மெர்க்கூரி என்றும் சொல்லி புகழ ஆரம்பித்தார்கள். இதை அறிந்த பவுலும் பர்னபாவும் அவர்கள் தங்களுக்கு பலியிடுவதை விரும்பாமல் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள்தானே நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றார்கள்.

ஆம் பிரியமானவர்களே, இன்றைய உலகம் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து ஆராதிக்கவேண்டிய தேவனை ஆராதிக்காமல் உலகத்தில் உள்ள மனுஷர்களையும், மூதாதையர்களையும், வானமண்டலங்களிலுள்ளவைகளையும், இயற்கைகளையும், ஆராதித்துக்கொண்டு வருகிறார்கள். மேலும் அப்போஸ்தலர்களைப்போல இயேசுவின் நாமத்தை சொல்ல துணிந்த சில மந்திரவாதிகளைப் பற்றி படிக்கிறோம்; " தேசாந்திரிகளாய்த்திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்" (அப்.19:13).

பொல்லாத ஆவிகள் இயேசுவை அறிவோம் நீங்கள் யார் என்று சொல்லி அவைகள் அவர்களை எதிர்த்தபடியால் அவர்கள் காயப்பட்டவர்களும் நிர்வாணிகளுமாக ஓடிப்போனார்கள். உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார் என காண்கிறோம். கர்த்தருடைய நாமத்தை சொல்ல துணிந்தவர்கள் பொல்லாத ஆவிகளினாலே அலைக்கழிக்கப்பட்டார்கள்.

இப்படி வீணாய் பின்பற்றப்படுகிற மனுஷர்களின் பாரம்பரியங்கள் ஒன்றுக்கும் உதவாது. "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீக்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்று" நம்முடைய ஆண்டவர் ஜனங்களுக்கு



போதிக்கும்போது சொன்னார் (மத்.15:9). உலக வழிபாடுகள் வீணானவைகளாகவே இருக்கிறது. அவைகள் எப்படி வந்தது? அதை ஏற்படுத்தியது யார்? அதனுடைய துவக்க காலம் என்ன? இப்படி பல கேள்விகளைக் கேட்காமல். தன் கண்கள் போனபடியெல்லாம், தங்களுடைய கால்கள் போனபடியெல்லாம் கடவுளை காணமுற்படுகிறார்கள். இயற்கைகள் ஆண்டவருடைய அதிசயமான கிரியைகளாக இருக்கிறது. அவைகள் ஒவ்வொரு நாளும் அவருடைய வல்லமையுள்ள கரத்தை அறிவித்துக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உற்றுநோக்காமல். மனுஷர்களின் பாரம்பரிய போதனைகளுக்கு ஒரு கூட்டம் திரும்புகிறது. "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்." (ரோம.1:25). சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. இந்த சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி தொழுதுகொண்டுவருகிறார்கள்.

இஸ்ரவேல் மக்களை மோசே வழிநடத்திக்கொண்டு வந்தபோது சற்று அவர் கர்த்தரை கண்டு வர தாமதித்தபோது ஜனங்கள் ஆரோனை நோக்கி அந்த மோசேக்கு என்னவானதோ, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டாக்கும் என்று சொல்லி தங்களுடைய காதணிகளையும் மூக்குத்திகளையும் கொண்டுவந்து ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து எடுத்து அவைகளை தொழுதுகொண்டு இதுவே எங்ளை எகிப்திலிருந்து வழிநடத்திக்கொண்டு வந்த தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதை கண்நோக்கிய கர்த்தர் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லி மோசேயை துரிதமாக அனுப்பிவைத்தார். அவன் வந்து அதை எடுத்து அக்கினியில் சுட்டெரித்து அதின் சாம்பலை தண்ணீரில் கலக்கி அதை அவர்களுக்கு குடிக்கக் கொடுத்தான். அவைகள் வீணானவைகள் என்பதை அவர்களுக்கு தெரிவிக்கவே இவ்விதமாக செய்தான். "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" என காண்கிறோம் (ரோம.1:25).

ஆகையால் இப்படிப்பட்டவர்களை தேவன் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அன்பு சகோதரனே, சகோதரியே, நீ எப்படி தேவனை ஆராதித்துக்கொண்டு வருகின்றாய்? உலக வழிபாடுகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல். வேதாகமத்தின்படி தேவனை தேடு, அவரை தொழுதுகொள்.

**கேள்வி நேரம்**

**தேவதூதனை தொழுதுகொள்ளலாமா?**

அநேக இடங்களில் தேவதூதர்களைப்போல உருவங்களை வைத்திருக்கிறார்கள். சிலர் அப்படிப்பட்டவைகளை கும்பிடுகிறார்கள். கேட்டால் அவர்கள் தேவனுக்கு வேலைசெய்யும் பணிவிடையாட்கள். ஆகையால், அவர்களை கும்பிடுவதால் தவறில்லை எனக் கருதுகிறார்கள். ஒரு தேவதூதனை வணங்கும்படி யோவான் அவனுடைய காலுக்கு விழும்போது; நடந்த காரியத்தை அவர் வெளிப்படுத்தின புத்தகத்தில் எழுதியிருக்கிறார்; "அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன், அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள், இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்" (வெளி.19:10).

தேவனைத் தவிர உலகத்தில் யாரையும் தொழுதுகொள்ளக்கூடாது என்பதை நாம் இந்த வசனத்திலிருந்து அறிந்துகொள்கிறோம். நீங்கள் யாரை தொழுதுகொண்டு வருகிறீர்கள். உலக வழிபாடுகளுக்கு தப்பிக்கொள்ள கர்த்தருடைய வேதத்திற்கு திரும்புங்கள். நித்தியமானவரை தொழுதுகொண்டு நித்திய நித்தியமான வாழ்க்கையை அவருடைய சமுகத்தில் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய வழிபாடுகள் தேவ சித்தத்தின்படியாக இருக்கட்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 10.யார் நீதிமான்
## Who Is Just

**உ**லகத்தில் தங்களை நீதிமான்களாக காண்பித்துக் கொள்ளுகிறவர்களை நீங்கள் அறிவீர்கள். உண்மையிலே யார் நீதிமான் என்று பார்க்கும்போது; இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களே நீதிமான்கள். என அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும் கடிதத்தில் நாம் காண்கிறோம். "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோம.3:24). மற்றபடி நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என காண்கிறோம். உலகத்தில் உள்ள யாவரும் பாவத்தின் கீழ்அடைக்கப்பட்டனர். ஆகையால் ஆதாம் முதல் மோசே வரை பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆட்கொண்டது என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஒரு மனிதன் கர்த்தரை அறிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யும்போது அப்படிப்பட்ட



மனிதனை கர்த்தர் பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கிறார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? லோத்து என்ற மனிதனை அந்தவிதமாக விடுவித்தார்; அவன் "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என பேதுரு நமக்கு எடுத்துரைக்கிறார் (2பேது.2:7-9).

சோதோம் கோமோரா ஜனங்கள் தேவனுக்கு விரோதமான பாவத்தில் ஈடுபட்டனர். அவனிடத்தில் வந்த தேவதூதர்களை அறியும்படி அவர்களை எங்களிடம் அனுப்பும் என்று லோத்தின் கதவை தட்டினர். இதை கேட்ட லோத்து இந்த அக்கிரமத்தை செய்யவேண்டாம் புருஷனை அறியாத இரண்டு குமாரத்திகள் என்னிடத்தில் இருக்கிறார்கள் அவர்களை உங்களிடத்திற்கு அனுப்புகிறேன். என்னிடத்தில் வந்த அந்த மனுஷர்களுக்கு ஒன்றும் செய்யவேண்டாம் என்றான். தன்னுடைய குடும்பத்திற்கு அநீதி ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஆனால் என்வீட்டிற்கு வந்தவர்களுக்கு எந்த விதத்திலும் அநியாயம் நடக்க அனுமதிக்க மாட்டேன் என்ற தீர்மானத்தோடு இந்த வார்த்தைகளைச் சொன்னான். பொதுவாக ஜனங்கள் மற்றவர்களுக்கு என்ன நடந்தால் என்ன? நம் குடும்பத்தாருக்கு ஒன்றும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் லோத்து அந்த விதமாக நினைக்கவில்லை. தம்மிடம் வந்தோரை காப்பாற்றும்படியாக, புருஷனை அறியாத தன்னுடைய பிள்ளைகளை அந்த கொடூரமான ஜனங்களுக்கு கொடுக்கவும் அவன் யோசிக்கவில்லை. நீங்களாக இருந்தால் அந்த இடத்தில் என்ன செய்திருப்பீர்கள் என்பதை சற்றே யோசிக்கும்படி உங்களை கேட்கிறேன். என் அன்பு வாசகரே, அந்த அளவு சோதோமின் ஜனங்கள் மிகவும் மோசமாக இருந்தார்கள். அப்படிப்பட்ட ஜனங்களுக்குள்ளே வாழ்ந்தவன் நீதிமானாகிய லோத்து. அவனை அந்த அக்கிரமங்கள் மிகுந்த ஜனங்களிலிருந்து இரட்சித்து, கர்த்தர் அந்த பட்டணங்களை கந்தகத்தினால் அழித்துப்போட்டார். இன்று வரை அது ஒன்றும் விளையாத பூமியாகவே இருக்கிறது. அன்று லோத்தை இரட்சித்த கர்த்தர் இன்று ஆண்டவர் இயேசுவின் மூலமாக தமக்கும் தம்முடைய வல்லமையுள்ள வசனங்களுக்கும் கீழ்ப்படிவோரை இரட்சிக்கிறார். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்ற நம்பிக்கையை நமக்கு ஏற்படுத்துகிறார் பவுல் (ரோம.5:9).

ஒரு நீதிமான் எப்படியிருக்கவேண்டும்? வெள்ளை ஆடைகளை உடுத்தி விட்டால் அவர் பரிசுத்தமானவர் என்றல்ல. உள்ளமும் அவ்விதமாகவே இருக்கவேண்டும். இதை பரிசுத்தப்படுத்த வல்லமையுள்ளது கர்த்தருடைய வசனமே. கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு நபர் தன்னை பரிசுத்தப்படுத்த முடியாது. இதைக்குறித்து நாம் எசேக்கியேல் புத்தகத்தில் வாசிக்கலாம்; "ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் தூரஸ்திரீயோடே சேராமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலுமிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக்கொடுத்து, தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து, வட்டிக்குக் கொடாமலும் பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே.18:5-9).

இப்படிப்பட்ட மனிதர் எங்கே இருக்கிறார்கள் என்று நினைக்கத்தோன்றும். ஆகையினாலே வேதாகமம் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர் களானார்கள் என்று சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்களை இரட்சிக்க தேவனுடைய குமாரனாகிய இயேசு வெளிப்பட்டார். ஆக ஒருவன் நீதிமானாயிருந்து நியாயத்தை செய்யும்போது அவன்மீது கர்த்தர் கண்ணோக்கமாயிருப்பார். நம்முடைய முற்பிதாக்களின் காலத்தில் நோவா அந்தவிதமாக இருந்தபோது அவனை கண்ணோக்கிப்பார்த்தார். "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்" (ஆதி.6:9). ஆனால் அநேகருடைய பதில் இந்த மக்கள் மத்தியில் ஒரு நீதிமானாக வாழவேமுடியாது என்பதுவே. பாருங்கள் மனிதர்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்த காலத்தில் நோவா நீதிமானாகவும் உத்தமனாகவும் இருந்தான். தேவனோ மனிதர்களைப் பார்த்து மிகவும் வேதனை கொண்டார். கர்த்தர் மனிதனை உண்டாக்கியதற்காக மனஸ்தாபப்பட்டார் என்றெல்லாம் அறிகிறோம். அவர் மனஸ்தாபப்படுகிற அளவுக்கு அவ்வளவு மோசமாக ஜனங்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கும் கூட அநேக மோசமான காரியங்களை நாம் பார்க்கும்போது மனவேதனை அடைகிறோம். தேவன் ஏன் இன்னும் பொறுமையாயிருக்கிறார். இவர்களையெல்லாம் அழித்துப்போட்டால் நலமாக இருக்கும் என்று எண்ணிவிடுகிறோம். நமக்கே



சிலவேளைகளில் சகிக்கமுடியாதிருக்கும்போது, அந்நாட்களில் ஆபிரகாம் எப்படி சகித்துக்கொண்டு தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றியிருப்பார் என்பதை எண்ணிப்பாருங்கள். அவனைப்போல நாமும் இருக்க முடியும் என்பதற்கு நோவா அடையாளமாக இருக்கிறார். அதைப்போல தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் என்று வாசிக்கக்கேட்டோம். யோபு என்ற தாசனை அறிவீர்கள். அவன் சொல்லும்போது; "என் மனம் யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக" என்கிறார் (யோபு 31:9,10). இப்படி சவால் விடும் தேவனுடைய தாசர்கள் நீதிமான்களாக இப்பூவில் வாழ்ந்து மரித்தார்கள். இன்றைக்கு நம்மால் இப்படி சவால் விடமுடியுமா? நம்முடைய மனச்சாட்சிக்கு தெரியும் நாம் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று. யோபு இரட்டத்தனையான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டார் என்றால் அவர் இத்தனை பாடுகளின் மத்தியிலும் தேவனை தூஷிக்கவில்லை.

தன்னுடைய நம்பிக்கையில் தளர்ந்துபோகவும் இல்லை. தேவனுடைய வார்த்தைகளை கேட்கும்போது தன்னுடைய வாயைப் பொத்திக்கொண்டு அவைகளைக் கேட்டார். நம்மில் எத்தனைபேர் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும்போது முழுவதுமாக அவைகளுக்கு செவிகொடுக்கிறோம். சிலர் அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றார்போல இருந்தால் இன்னும் கொஞ்சம் கேட்போம் என்பார்கள் இல்லாவிடில், தங்களுடைய சிந்தையை வேறே பக்கம் திருப்பிவிடுவார்கள். அன்பானவர்களே, நம்முடைய முற்பிதாக்களின் சரித்திரத்தை சற்று வாசித்து அவர்களுடைய நற்காரியங்களை எடுத்துக்கொண்டு நீங்களும் அவைகளின்படி நடக்க முற்படுங்கள். அப்பொழுது அவர்களை இரட்சித்த கர்த்தர் உங்களையும் இரட்சிப்பார்.

அதைப்போல ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய நியாயங்களைக் கைக்கொண்டு கர்த்தருடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடந்தார். ஆகையால் அவர் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார். அவரைப்போல ஜீவனம்பண்ணி தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இன்று நீங்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்பீர்கள்

என்றால் பாவத்திற்கு விலகி உங்களை நீதிமான்களாக மாற்றும் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து அவருடைய நீதி நியாயங்களைக் கைக்கொள்ளுங்கள். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" என கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது (எசே.18:20). பாவிகளின் மத்தியில் வாழ்ந்த லோத்தை கர்த்தர் இரட்சித்தார் என நாம் தியானித்தோம். அதைப்போல பாவிகளின் மத்தியில் பாவமில்லாதவராக இவ்வுலகத்திலே வாழ்ந்து சிலுவையில் தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள்.

பாவம் பல வழிகளில் வருகிறது. இதை ஒருவன் மேற்கொள்ள அவன் கர்த்தருடைய வசனங்களுக்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணிக்கவேண்டும். பாவத்தினால் அவனுடைய சரீரமட்டுமல்ல அவனுடைய ஆத்துமா நிரந்தர அழிவைநோக்கி செல்கிறது. பாதாளத்திற்கு இறங்குகிறவன் இனி ஏறிவரான் என காண்கிறோம். பாதாளம் அப்படிப்பட்டவர்களை விழுங்கிவிடுகிறது. ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே இதோ ஒரு அருமையான தருணம். இந்த பூமியில் நீ ஒரு நீதிமானாக வாழ்ந்து மரிக்கவேண்டும். பாவத்தோடு மரிப்பாயானால் பாவிகளுக்காகவும், பாவத்தை தூண்டுபவனுக்காகவும் நியமிக்கப்பட்ட இடமாகிய நித்திய அழிவை அடைவாய். மனிதன் தேவசாயலில் படைக்கப்பட்டான். தேவனோடு என்றென்றுமாக வாழும்படியாக படைக்கப்பட்டான். ஆகையால் அவனை படைத்த கர்த்தர் அவன் இழந்ததை மீட்டுத்தரும்படியாக தம்முடைய குமாரனையே இவ்வுலகிற்கு அனுப்பினார்.

அவருடைய வசனத்திற்கு நீ கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு இயேசுவின் இரத்தினாலே கழுவப்படு அப்பொழுது உன்னை அவர் நீதிமானாக மாற்றுவார். பின்பு கர்த்தருடைய சபையில் அவரால் நீ சேர்க்கப்படுவாய். உன்னுடைய நாமத்தை அவருடைய ஜீவபுத்தகத்தில் அவர் எழுதுவார். அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய். இன்றே இந்த காரியங்களை செய்ய உன்னை முழுவதுமாக அவருக்கு ஒப்புக்கொடு. உன்னை நீயே நீதிமான் என்று நினைத்துக்கொண்டு மோசம்போகாமலிருக்க கர்த்தருடைய வசனத்தோடு உன்னை ஒப்பிட்டுப்பார். அது உன்னுடைய பாவத்தையும் உன்னுடைய அக்கிரமத்தையும் உன் கண்முன்னே வந்து நிறுத்தும். வேதமே வெளிச்சம் என காண்கிறோம். இருளில் உள்ள ஸ்தலத்தில்



வாழும் நீ வெளிச்சத்திலே வெளிச்சம் காண வேதத்தை நேசி அதைப் பற்றிக்கொள். அது உன்னை நீதிமானாக மாற்றும்.

**கேள்வி நேரம்**

**நீதிமானுக்கு ஒரு கேடும் வராதா?**

நீதிமானுக்கு பல சோதனைகள் வரும். ஆனால் அந்த சோதனைகள் எல்லாவற்றிலிருந்தும் கர்த்தர் அவனைக் காப்பார். "நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; துன்மார்க்கரோ தீமையினால் நிறையப்படுவார்கள்" என நீதி.12:21-ல் படிக்கிறோம். நீதிமானாக வாழ்வது மிகவும் கடினம் என்று சொல்லி அநேகர் துன்மார்க்கத்தை தெரிந்துகொள்கின்றனர். துன்மார்க்கத்தின் முடிவு அழிவு என்பதை மறந்துபோகவேண்டாம். நீதிமான்களோ தங்களுடைய மரணத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள். கர்த்தர் அவர்களை எழுப்ப வல்லவராயிருக்கிறார். ஆகையால் நீதிமானுக்கு ஒரு கேடும் வராது என்பதை அறிந்துகொள்ளுங்கள். நீதிமான்களைக்குறித்து நீதிமொழிகள் புத்தகத்தில் நாம் அதிகமாக படிக்கிறோம்.

நீதிமான்களின் ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார். நீதிமான் தனக்குத் திருப்தியாகப் புசிக்கிறான். நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான். நீதிமான் தன் அயலானைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன். நீதிமான்களுடைய நினைவுகள் நியாயமானவைகள். நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம். நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான். நீதிமானுடைய வாய் ஜீவஊற்று. நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும் என்றெல்லாம் படிக்கிறோம். ஆகையால் நீதிமானுக்கு ஒரு கேடும் வராது. அவன் நீதியாய் நடக்கிறான். ஆகையால் நீதியுள்ள கர்த்தர் அப்படிப்பட்டவர்களுக்கு இரக்கம் செய்வார். உங்களுக்கும் கர்த்தர் இரக்கம் செய்ய நீங்களும் ஒரு நீதிமானாக இருக்க முற்படுங்கள்.

## 11. உங்களில் இருக்கிறவர் பெரியவர்
## The One Who Is In You Is Greater

**ஒ**ருவன் தேவனுடைய மனுஷனாக இருக்கும்போது அவனில் தேவன் வாசமாயிருப்பார். "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" என்று நாம் திருமறையில் படிக்கிறோம் (1யோவா.4:15). இயேசுவை அறிக்கைபண்ணாத அநேகர் வஞ்சகர்கள் தோன்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் தேவன் வாசமாயிரார். இயேசுவை தம்முடைய சொந்த இரட்சகராகவும்,

ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு அவருடைய வசனங்களுக்கு எவர்கள் செவிகொடுக்கிறார்களோ, அவர்களுக்கு பிதாவாகிய தேவன் செவிகொடுக்கிறார். ஏனெனில் இயேசுவை பிதாவாகிய தேவன் இவ்வுலகத்தின் இரட்சகராக தெரிந்துகொண்டுள்ளார். ஆகையால் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று உரைத்திருக்கிறார். மேலும் இயேசுவானவர் சொல்லும்போது; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்றார் (யோவா.14:23). உங்களோடு, தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசுவும் மற்றும் பரிசுத்த ஆவியானவரும் வாசம்பண்ணுகிறார்களா? அவர்கள் நம்மோடு வாசம்பண்ணினால் எத்தனை ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்! அவர் நம்மில் வாசம்பண்ண நாம் செய்யவேண்டுவதென்ன? கிறிஸ்துவின் வசனத்தை ஏற்று அதைக் கைக்கொள்ளும்போது; இயேசுவை அனுப்பிய தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார். அவர்கள் நம்மோடு வந்து வாசம்பண்ணுவார்கள்.

உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என காண்கிறோம். அநேகர் உலகத்தை நேசிக்கவும் உலகத்தாரோடு சதா உறவுகொள்ளவும் விரும்பி உல்லாசமாக இருக்கின்றனர். இந்த வாழ்வு நிலையானதா? கொஞ்சகால வாழ்க்கைக்காக இவைகளுக்கு அடிமைப்பட்டு சிற்றின்பங்களில் விழுகிறார்கள். நாளடைவில் நோய்கள் அப்படிப்பட்டவர்களை ஆட்கொள்வதால் தங்களுடைய வாழ்க்கையில் நீடித்த நாட்கள் இல்லாமல் பாதிவயதிலே பாவத்தினால் மாண்டுபோகிறார்கள். இது எத்தனை வேதனையான காரியமாக இருக்கிறது. மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு, குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல் நலத்திற்கு தீங்கானது என்ற வாசகங்களெல்லாம் அரசு வெளியிட்டிருந்தும் அதைப் படித்துக்கொண்டே தங்களை கெடுத்துக்கொள்ளுகிற அநேக மக்களை நாம் அநுதின ஜீவியத்தில் காணமுடிகிறது.

இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை நமக்கு தேவையா? நம்மை உண்டாக்கிய தேவன் நம்மோடு வாழுகிறார் என்றால் அது நம்முடைய வாழ்க்கையை வழப்படுத்துமல்லவா, நம்மிலும் பெரியவர், நம்மை சிருஷ்டித்த தேவன் நம்மோடு வாழ அவருடைய வசனங்களுக்கு செவிகொடுங்கள். சிலர் தங்களோடு வாழும் தேவனை அறியாது, சிற்றின்பங்களுக்கு இடங்கொடுத்து வீழ்ந்துபோய்விடுகிறார்கள். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.3:16). தேவனுடைய ஆலயம் எப்படியிருக்கவேண்டும்?



அது தேவன் தங்குமிடமல்லவா, அதை பரிசுத்தப்படுத்தவேண்டியது நமது கடமையல்லவா, இதை அநேகர் நினைக்காமல் தங்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஒரு புறஜாதிபெண் தேவனுடைய மகிமையைக் கேள்விப்பட்டு விசுவாசித்ததை நாம் வேதத்தில் படிக்கிறோம். இஸ்ரவேலர்கள் எரிகோ பட்டணத்தை பிடிக்கும் முன்பு அங்கே ஒரு வேசி குடியிருந்தாள் அவள் பரலோகத்தின் தேவனை விசுவாசித்தாள். அவள் இந்த தேவனைக்குறித்து கேள்விப்பட்டபோது "எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடையதைரியமும் அற்றுப்போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர்" என்று வேவுகாரரைப்பார்த்து சொன்னாள் (யோசு.2:11). புறஜாதி மக்கள்கூட வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனுடைய மாபெரிய அற்புதங்களைக் குறித்து கேள்விப்பட்டு விசுவாசமுள்ளவர்களாக மாற்றப்படுவதை நாம் காண்கிறோம். தேவனுடைய ஜனங்களாகவும், இயேசுவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பெற்றுக்கொண்ட ஜனங்களாகவும் இருக்கிறவர்கள் தங்களுடைய சரீரத்தை தேவனுடைய ஆலயமாக பாதுகாக்கவேண்டுமல்லவா? அந்த சரீரத்தோடு பாவக்காரியங்களில் ஈடுபடுவோமானால் நம்மோடிருக்கும் கர்த்தருக்கு மகிமை குறைச்சலை ஏற்படுத்துகிறோம் அல்லவா?

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் முப்பத்து மூன்றரை வருடம் மனிதனோடு மனிதனாக வாழ்ந்தார். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். பிதாவினுடைய அன்பை வெளிப்படுத்தினார். அவர் தம்முடைய சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்தாரா? அதை வேசியின் சரீரமாக மாற்றினாரா? இல்லையே. அவர் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு மூத்த குமாரனாயிருக்கிறார். நாமெல்லாரும் இளைய குமாரர்களாயிருக்கிறோம். அவரைப்போல நாமும் இவ்வுலகத்தில் நம்முடைய சரீரத்தை பாதுகாத்து தேவனுடைய ஆலயமாகவும், அவரைத்துதிக்கும் பாத்திரமாகவும் வைக்கவேண்டியது நமது கடமையல்லவா?

சாமுவேல் என்ற தேவனுடைய மனுஷன் தேவனுடைய சந்நிதியில் வளர்க்கப்பட்டு தேவனுக்கு ஏற்ற மகனாக வாழ்ந்தான். தேவன் கூப்பிடும்போது சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான். அவர் சொல்லக்கூடிய வார்த்தைகளைக் கேட்டு அதை அப்படியே ஜனங்களுக்கு அறிவித்தான். ஒரு உன்னதமான தீர்க்கதரிசியாக இருந்தான். ஆகையால் உங்களில் இருக்கும் அந்த தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள். உங்கள்

மூலமாக தேவனை அறியாத ஜனங்கள் தேவனை அறிந்துகொள்ள அவருடைய அன்பை காண்பியுங்கள். உங்களைக் கொண்டு தேவன் பெரியகாரியங்களை செய்ய உங்களை முழுவதுமாக ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர் உங்களில் பெரியவராயிருந்து, பெரியகாரியங்களைச் செய்வார்.

**உலகத்திலிருக்கிறவன் பிசாசு:** "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" என காண்கிறோம் (1யோவா.4:4). நம்மில் இருக்கிற பெரியவரை அநேகர் மறந்து உலகத்திலிருக்கிற பிசாசுக்கு அடிபணிந்துபோய்விடுகிறார்கள். பொல்லாத பிசாசு கண்களின் இச்சையையும், மாம்சத்தின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையையும் அவர்களிலே விதைத்துவிடுகிறான். எப்படி ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் நல்ல பயிர்களை பயிர் செய்திருக்கும்போது, களைகள் முளைக்கின்றதோ, அதைப்போல பிசாசு தேவனுடைய ஜனங்கள் மத்தியில் களைகளை விதைக்கிறான். அந்தக்களைகளில் சில மேற்கூறியவைகள். "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" (1யோவா.3:12).

காயீனுக்குள்ளாக பொறாமை உண்டானது. இப்படிப்பட்ட சிந்தனைகளை விதைக்கிறவன் சத்துரு. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் உலகத்தின் பிசாசுக்கும் அவனுடைய செயல்பாடுகளுக்கும் நீங்கள் விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என வாசிக்கிறோம் (1யோவா.3:8).

இந்த உலகத்தில் பாவத்தின் கீழ் அநேகர் அடிமைப்பட்டுக்கிடக்கின்றனர். இவர்களை மீட்கவே தேவகுமாரன் வெளிப்பட்டார். இவரை விசுவாசியாதவர்கள் இன்னும் பாவத்திலே கிடக்கிறார்கள். ஆகையால் பாவம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. இப்படிப்பட்டவர்கள் பிசாசினாலுண்டாயிருக்கிறார்கள். பிசாசினுடைய செயல்பாடுகள் இவர்களிடம் காணப்படுகிறது. பாவத்திற்கு அதிபதியாக இருந்த பிசாசை தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் ஜெயித்தார். "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும்



உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராகினார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" என்று எபி.2:14,15 வசனங்களில் படிக்கிறோம். இப்படி அவர் சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்து நம்மை மீட்டுள்ளார். மீட்கப்பட்ட நாம் பிசாசின் காரியங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என்று பேதுரு நமக்கு நினைப்பூட்டி எச்சரிக்கிறார் (1பேது.5:8). டிஸ்கவரி சேனலில் பார்க்கிறோம் சிங்கம் எவ்விதமாக வேட்டையாடுகிறது என்று அதைப்போல பிசாசு எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் விழித்திராத பொழுது நம்மை ஏமாற்றி வஞ்சித்துவிடுவான்.

நம்முடைய பெலவீனங்களுக்கு ஏற்றார்போல பிசாசு காரியங்களை நடப்பிப்பான். யூதாஸ் என்ற சீஷனுக்குள்ளாக பண ஆசை இருந்தது அதை வைத்து பிசாசு அவனை தந்திரமாக தன்வசமாக்கிக்கொண்டான். அந்த ஆசையில் யூதாஸ் இழுப்புண்டுபோனான். ஏனெனில் "பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" என படிக்கிறோம் (லூக்.22:3). அவனுக்குள் சாத்தான் புகுந்தான் என்றால் அவன் சாத்தானுக்கு இடமளித்தான் என காண்கிறோம். அவன் இடம் கொடாமல் அவனுக்குள் சாத்தான் புக முடியாது. அவனுக்குள்ளாக முன்னமே பண ஆசை இருந்தது என பார்த்தோம். அன்பானவர்களே, நமக்குள்ளாக இருக்கும் பெலவீனங்களை பயன்படுத்தி பிசாசு தந்திரமாக நம்மை வஞ்சிக்கிறான். இதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, உங்களில் இருக்கிற பிதாவாகிய தேவன் பெரியவர். அவருக்கு நீங்கள் முதலிடம் கொடுங்கள். அவர் உங்களை வழிநடத்தும்படியாக அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்குச் செவிகொடுங்கள். அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவரின் சத்தம் கேட்டு அவர் மூலமாக பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் உலகத்தில் பெரியவராயிருக்கலாம் அல்லது ஒரு சிறியவராயிருக்கலாம். ஆனால் நீங்கள் விசுவாசித்து கர்த்தரை ஏற்றுக்கொள்ளும்போது உங்கள் மூலம் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்கிறார். உலகத்தில் இருப்பவனிலும்

உங்களில் இருக்கிற பெரியவரை நீங்கள் கனம்பண்ணும்போது நீங்கள் எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்குமா?**

ஆம், "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4). உலகத்தை பலர் ஜெயித்துவிட்டதாக சொல்லுகிறார்கள். உலகத்தை ஜெயிப்பது அவ்வளவு சுலபமல்ல, ஒருவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து மறுபடியும் பிறக்கும்போது அவனால் இந்த உலகத்தையும், உலகத்திலிருந்து எழும்பக்கூடிய காரியங்களையும் ஜெயிக்கமுடியும். தேவனால் பிறக்காத ஒரு மனிதனால் இந்த உலகத்தை ஜெயிக்கமுடியாது. அதுவும் விசுவாசமில்லாமல் ஒருவனாலும் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. எல்லாவற்றிற்கும் விசுவாசமே மூலகாரணமாயிருக்கிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என காண்கிறோம்.

நம்முடைய முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே இராஜ்யங்களை ஜெயித்தார்கள். வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். ஆக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு தேவனுக்கு ஏற்றகாரியங்களில் ஈடுபடவேண்டுமென காண்கிறோம். உலகத்தில் உயர் பதவியில் இருக்கிறவர்களுடைய குடும்பத்தில் பிறந்தவராயிருக்கலாம், அல்லது இராஜவம்சத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம் எப்படிப்பட்டவராயிருந்தாலும். அவர் தேவனால் மறுபடியும் பிறக்கவேண்டும். இல்லையேல் அவர் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமுடியாது. இந்த உலகத்தையும் ஜெயிக்க முடியாது. நீங்கள் உலகத்தில் மறுபடியும் பிறக்க கர்த்தருடைய வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 12. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்
## Beware of Covetousness

**ம**ண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை இவைகள் எல்லா மனிதர்களுக்குள் இருக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் இவைகளை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்" (லூக்.12:15). பணம் இருந்தால் போதும் என்று வாழக்கூடிய



கோடிக்கணக்கான ஜனங்களை இப்பூவியில் காண்கிறோம். பணத்தினால் எதையும் வாங்கிவிடலாம் என்பார்கள். பணத்தினால் ஜீவனை வாங்கிவிட முடியுமா? அதை அவர்கள் சிந்திப்பதில்லை. அன்பானவர்களே, பொருள் வீட்டில் இருக்கலாம். அது நம்முடைய தேவைக்கு உதவுகிறதாயிருக்கிறது. அதின்மீது நம்முடைய ஆசை இருக்கக்கூடாது. பொருள் வீட்டில் இல்லையென்றால் அது வீடாக இருக்காது. வந்து பார்க்கிறவர்கள் இது என்ன வீடா என்று கேட்டுவிடுவார்கள். நீதிமொழிகளில் வாசிக்கிறோம்; "அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும்" (நீதி.24:4).

பொருள்கள் அறைகளை அழகு படுத்தக்கூடியவைகள். அவைகள் அவசியம் அறைகளில் இருக்கவேண்டும். அதையே நாம் இச்சித்து அதன் மீது நம்முடைய முழுகவனத்தையும் செலுத்துவோமேயானால் அது தவறாயிருக்கும். ஒரு ஐசுவரியவானைப் பற்றி வேதத்தில் படிக்கிறோம்; அவன், "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:19,20). இவன் தனக்காகவே பொருள்களை சேகரித்து வைத்து தன் ஆத்துமாவோடே சொல்லிக்கொண்டான். இவனுடைய முழு நம்பிக்கை பொருள்களின் மீது இருந்தது. அதுவே தனக்கு ஜீவன் என்று எண்ணிக்கொண்டிருந்தான். அவனோ தான் ஒரு மதிகேடன் என்பதை அறியாதவனாயிருந்தபடியால் அவனுக்கு தேவன் அவனுடைய மதியீனத்தை உணர்த்தினார். இப்படி தங்களுடைய மதியீனத்தினால் கெட்டுப்போகிற அநேகரை நாம் பார்க்கிறோம்.

அதைப்போலவே பொய் சொல்லி பொருள் சம்பாதிப்பதும் இருக்கிறது. "பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்" என சாலொமோன் தம்முடைய நீதி.21:6-ல் குறிப்பிட்டிருக்கிறார். எப்படியாவது சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்றுதான் அநேகர் நினைக்கிறார்கள். அது உண்மையாக சம்பாதிக்கவேண்டும் என்று விரும்புகிறதில்லை. ஆகையால் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி சம்பாத்தியம் செய்கிறார்கள். அவர்களுடைய வருமானம் சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசத்தைப்போலவே இருக்கிறது. அவைகள் வந்தபடியே போய்விடுகிறது. அவர்களும் அந்தப்படியே போய்விடுகிறார்கள். நியாயமாய் சம்பாதிக்கிற வருமானமோ நிலைத்திருக்கும். ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன?

"நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" என்று எபி.13;5-ல் படிக்கிறோம். தேவன் யாவருக்கும் போதுமானவராயிருக்கிறார். அவரவருக்கு ஏற்றபடியை அவர் அனுதினமும் கொடுத்து போஷிக்கிறார். இயேசுவானவர் அப்போஸ்தலர்களோடிருக்கும்போது அவர்கள் எதைக்குறித்தும் கவலைப்பட்டார்களா? அவர்கள் ஒன்றைக்குறித்தும் கவலைப்படவில்லை. அவர்கள் அனுதினமும் போஷிக்கப்பட்டார்கள், அதுவும் அற்புதவிதமாக. அந்தப்படியாக கர்த்தர் நம்மோடிருக்கும்போது அவர் நம்மை போஷிக்க வல்லவராயிருக்கிறார்.

இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசித்தால் தேவன் உங்களை போஷிப்பதை அறிவீர்கள். இஸ்ரவேலரை நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் தேவதூதர்கள் சாப்பிடும் மன்னாவினாலே போஷித்தார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. இல்லாதவைகளில் இருந்தது இருக்கிறவைகளை உண்டாக்குகிறவர் நம்முடைய தேவன்.

மேலும், நிலையான பொருளைக் கொடுக்கிறவர் கர்த்தர். வேதம் சொல்லுகிறது; "ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு" (நீதி.8:18). உலகத்தில் வீணானவைகளை நாடி அநேகர் வீணாய்போய்விடுகிறார்கள். கர்த்தர் தம்மை தேடுகிறவர்களுக்கும், தம்மைநோக்கி வருகிறவர்களுக்கும் நிலையான பொருளை கொடுக்கிறார். நாம் கண்களினால் பார்க்கிற எல்லாமே ஒரு நாளில் அழிந்துபோகும். ஆனால் கர்த்தர் கொடுக்கும் பொருள் அழியாதது. "பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது" என்கிறார் (நீதி.8:19).

பொன்னையும் தங்கத்தையும் விரும்பாதவர்கள் யாரும் இருக்கமுடியாது அந்த அளவு அவைகளை நேசிக்கிறார்கள். ஆனால் அவைகளைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்கிறார். தேவனால் கிடைக்கக்கூடிய பலனைப் பெற்றுக்கொண்ட அநேக தேவ மக்களை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அவரால் கிடைத்த பலனாலே யாக்கோபின் மந்தையின் ஆடுகள் அதிகமான குட்டிகளைப்போட்டது. இதினால் லாபான்: கர்த்தர் யாக்கோபுடனே இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டான். அதைப்போல ஈசாக்கோடு தேவன் இருக்கிறார் என்பதை கேராரூர் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். "என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்



(நீதி.8:20,21). அந்தப்படியாக ஈசாக்கு கேராரூரில் விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான் என காண்கிறோம். கர்த்தரை நம்பி வேலை செய்யும்போது அவர் நியாயப்பாதைகளுக்குள் நம்மை வழிநடத்தி பரிபூரணமான ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். அன்பானவர்களே, கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு நிலையான பொருளைக்கொடுக்க வல்லவராயிருக்கிறார்.

**பிறனுடைய பொருளை இச்சியாதே:** நிலையான பொருளை கர்த்தர் கொடுக்கும்போது நாம் ஏன் பிறனுடைய பொருளை இச்சிக்கவேண்டும். கர்த்தர் தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு இதைக் கட்டளையாக கொடுத்திருந்தார். முற்பிதாக்களின் காலத்தில் இஸ்ரவேலருக்கு பத்து கட்டளை கொடுக்கும்போது அதில் ஒரு கட்டளையாக இதைக் கொடுத்தார். "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும் அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்" (யாத்.20:17). இக்கட்டளையை கைக்கொள்ளாமல் இச்சித்தவர்கள் நாளடைவில் அழிக்கப்பட்டார்கள். இச்சை பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும்போது மரணத்தை பிறப்பிக்கும் என்ற வசனத்தின்படி நடந்தது. நமக்கு வேண்டியவற்றை தேவன் நமக்கு கொடுத்திருக்கும்போது நாம் ஏன் பிறனுக்குள்ள ஒன்றை இச்சிக்கவேண்டும். இதை ஒருவர் சிந்திப்பாரேயென்றால் அவர்கள் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்கமாட்டார்கள். பிறனுக்குள்ள ஒன்றை நாம் இச்சித்து எடுத்துக்கொள்ளும்போது அதை இழந்தவன் பாதிக்கப்படுகிறான். ஒன்று அதை அவன் நம்பியிருப்பான் அல்லது அது அவனைவிட்டு பறிபோகும்போது அவனுடைய மனநிலை பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகிறது. அப்படி பாதிக்கப்படும்போது அவனுடைய ஆத்துமா கர்த்தரை நோக்கி முறையிடும். அப்பொழுது கர்த்தர் அதற்கு நியாயம் செய்யாமலிருப்பாரா? என்பதை சற்றே நிதானித்துப்பாருங்கள்.

ஆபிரகாம் என்ற தேவ மனிதன் இருந்தார்; அவரோ பிறனுக்குள்ள ஒன்றையும் இச்சிக்கவில்லை என வேதம் அவரைக்குறித்து சாட்சிகொடுக்கிறது. "ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று,

வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" என்றார் (ஆதி.14:22,23). இந்த ஆபிரகாமைப் பற்றி வேதாகமத்தில் துவக்க புத்தகத்தில் படிக்கிறோம். அக்காலத்திலே அவர் பிறனுடைய பொருளை இச்சிக்காதவராயிருந்திருக்கிறார். அப்பொழுது பத்துகட்டளைகள் கொடுக்கப்படவில்லை. கட்டளைகள் இல்லாத காலத்திலே தேவனை நோக்கி அவரிடம் தன்னுடைய தேவைகளை கேட்டு பெற்றுக்கொண்டவராயிருந்திருக்கிறார். அவர் காலத்திலும் சரி, இன்றும் சரி, தேவனை நோக்கி கேட்கிறவர்களுக்கு அவர் கொடுக்கிறவராயிருக்கிறார். பிறனுடையதை எடுத்து அல்ல. அவன் ஜீவியகாலமெல்லாம் அநுபவிக்கக்கூடிய பொருளை அவனுக்கு தனிப்பட்ட விதத்தில் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் அன்பானவர்களே, பிறனுடைய பொருளைக்குறித்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். அது பொருளாயிருந்தாலும், வேலைக்காரர் களாயிருந்தாலும் மற்றென்றாக இருந்தாலும் அது பிறனுடையது அவனுக்கே அது சொந்தம் என்பதை மறவாதிருங்கள்.

இஸ்ரவேலர் தோற்றுப்போவதற்கு ஆகானின் பாவம் ஒரு காரணமாயிருந்தது. இஸ்ரவேலருக்குள்ளே இவ்விதமான மனிதர் இருக்கக்கூடாது. ஆனாலும் ஒருவன் இருந்தான் அதனால் இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தில் தோற்றுப்போனார்கள். ஆயி என்றால் அசிங்கம். அந்த அசிங்கமான பட்டணத்தில் தோற்றுப்போனார்கள். தோற்றுப்போன காரணத்தை அறியும்படி சீட்டுப்போட்டார்கள். அப்பொழுது "ஆகான் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக; மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன்" என்றான் (யோசு.7:20). இவனுடைய இச்சை முழு பாளையத்தையும் பாதித்தது. சபையில் ஒருவர் தவறு செய்வாரேயென்றால் அந்த முழு சபைக்கும் கெட்டபெயரை உண்டாக்குகிறது. இதை இச்சிக்கும் நபர் அதாவது தவறு செய்யும் நபர் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆகையால் தனக்கானவைகளையல்ல பிறனுக்கானவைகளை நாடுவானாக என்ற வசனத்தின்படி பிறனுடைய நன்மைகளை நாடவேண்டும். யார் எப்படி போனால் என்ன என் தேவைகள் சந்திக்கப்படவேண்டும் என்று நினைப்பவர்கள். இறுதியில் கர்த்தரால் தண்டிக்கப்படுவார்கள். தேவன் பாவம் செய்தவர்களை தண்டியாமல் விடார் என காண்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, நீ பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிரு. தேவன் ஒவ்வொருவருக்கும் தேவையானதற்கு தக்கதாக கொடுத்திருக்கிறார். இவ்வளவு பெரிய பூமியில் ஒரு சிறுஇடத்தில் குடியிருந்து கொண்டு வருகிறோம் என்பதை அறிந்துகொள். இதில் மனிதன்



நடக்கவேண்டிய வழியை வேதாகமம் நமக்கு போதிக்கிறது. உலகத்திலுள்ளதெல்லாம் எனக்குத்தான் என்று எண்ணாதே, உனக்குள்ளதை பற்றிக்கொள். பிறனுடையதை இச்சியாதே. உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். அப்பொழுது நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லிய கர்த்தர் உம்மோடிருந்து உன்னை வழிநடத்துவார்.

**கேள்வி நேரம்**

**இல்லாமற்போகும் பொருள் மீது நமது கவனத்தை செலுத்தும்போது அதனுடைய முடிவு என்ன?**

அநேகர் இன்று இருந்து நாளைக்கு இல்லாமற்போகும் பொருள் மீது தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி ஏமாற்றப்படுகிறார்கள். வேதம் இப்படியாக சொல்லுகிறது; "இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோகும்" என்கிறது (நீதி.23:5).பிரசங்கி மாயை மாயை எல்லாம் மாயை என்கிறான். நம்முடைய ஆண்டவர் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? என்கிறார் இப்படி ஒரு காட்டுப்புல்லுக்கு விதவிதமான வகையில் உடுத்துவிக்கும்போது தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நமக்கு தேவன் செய்யாமலிருப்பாரா? அதிகமான நன்மைகளை செய்வார் அல்லவா! அப்படியிருக்கும்போது நாம் ஏன் இல்லாமற்போகும் நிலையில்லாத பொருள்களின் மீது நம்முடைய கவனத்தை செலுத்தி ஏமாற்றமடைய வேண்டும். தேவன் நம்முடைய தேவைகளை அறிகிறார். தாய் தன் பிள்ளைக்கு இறங்காமல் இருப்பாளோ, நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்குவேண்டியவற்றை கொடுத்திருக்கிறார். அவைகளை அநுபவித்து, பிறனுடைய பொருளைப்பற்றிய விஷயத்தில் கவனமாயிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 13. முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை
## The Lord`s Church In The First Century

முதல் நூற்றாண்டு சபை இயேசுவின் இரண்டாம் வருகை வரையுள்ள கர்த்தருடைய சபைகளுக்கு மாதிரியாயிருக்கிறது. உலகமெங்கும் முதல் நூற்றாண்டு திட்டத்தின்படியே சபைகள் ஆரம்பிக்கப்படுகிறது. முதல் நூற்றாண்டு சபையை மாதிரியாக எடுத்துக்கொள்ளாத சபை கர்த்தருடைய

சபையாக இருக்காது. அது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபையாகத்தானிருக்கும். முதல் நூற்றாண்டு சபையானது; "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணிதலிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள்" (அப்.2:42). ஆண்டவர் இயேசு பரமேறிசென்றவுடன் அப்போஸ்தலர்கள் எங்கும் திரிந்து கர்த்தருடைய கட்டளையின்படி சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்கிற வேளையில் ஈடுபட்டனர். பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டை ஆவியானவருடைய உதவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள். அதில் கிறிஸ்துவின் உபதேசத்தை முழுவதுமாக வெளிப்படுத்தினார்கள். அப்போஸ்தலர்கள் தங்களுடைய சொந்த உபதேசத்தை சொல்லவில்லை. எப்படி இயேசுவானவர் தேவனுடைய வார்த்தைகளையே பேசினாரோ, அதைப்போல அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய சமுகத்தில் கற்றுக் கொண்டதை போதித்தனர், அதை எழுதினர். இந்த உபதேசத்தையே முதல் நூற்றாண்டு சபையார் கைக்கொண்டனர்.

**முதலாவது** முதல் நூற்றாண்டு சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தனர்; "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷர்களாயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). இந்த வசனத்தின்படி அவர்கள் இயேசுவினுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தனர். 2. அந்நியோந்நியத்திலும் நிலைத்திருந்தனர்; "விசுவாசிகளாக திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" என அப்.4;32-ல் காண்கிறோம். 3. அப்பம் பிட்குதலில் நிலைத்திருந்தனர்; "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7).

ஒவ்வொரு வாரமும் முதல் நாளில் அதாவது ஞாயிற்று கிழமையில் கூடிவந்து அப்பம் பிட்டு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர்ந்தனர். 4. அந்தப்படியாக ஜெபம்பண்ணுதலிலும் நிலைத்திருந்தார்கள்; "ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்" என்கிறார் அப்.பவுல் (அப்.16:13). முதல் நூற்றாண்டு சீஷர்கள் இந்த நான்கு காரியங்களில் நிலைத்திருந்திருக்கிறார்கள். இவைகள் நமக்கு ஆதார வசனங்களாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் சீஷர்களாயிருப்



போமானால் இந்த நான்கு காரியங்களையும் நாமும் நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். இயேசு சொல்கிறார்; "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்றார் (யோவா.15:10).

**இரண்டாவது** காரியம். "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப்.2:44). முதல் நூற்றாண்டு சபையார் ஒருமித்திருந்தார்கள். ஒருமித்திருக்கும்போது பல ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். ஆனால் அநேக சமயங்களில் சபைகளில் ஒருமனம் ஏற்படுவது இல்லை. ஆதி சபையார் "ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11;26). கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் விட்டுவிடாமல் ஒரு வருடமாக சபையோடு ஐக்கியப்பட்டவர்களாக கூடிவந்தபடியாலே அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் கிடைத்தது. சபைக்கே போகாமல் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழாமல் ஒருவர் எப்படி கிறிஸ்தவராயிருக்க முடியும்? ஆனால் இன்று அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் முதல் நூற்றாண்டு சபையார் கைக்கொண்ட காரியங்களில் கடுகளவும் கைக்கொள்ளாதிருக்கிறார்கள்.

மேலும், அவர்கள் ஒருமித்திருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக; "நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தருடைய பாதத்திலே வைத்தார்கள்" (அப்.4:34). இந்த ஐக்கியம் கர்த்தருடைய ஜெபத்தை நிறைவேற்றுவதாக இருந்தது. "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார் (யோவா.17:21).

**மூன்றாவது** பகிர்ந்துகொடுத்தார்கள். "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்" (அப்.2:45). இப்படிப்பட்ட எண்ணம் யாருக்கு வரும்? கர்த்தருடைய சீஷர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் இருக்கவேண்டும். தனக்கு தனக்கு என்று வாழ்ந்த ஐசுவரியவான் நிலைமையை நீங்கள் அறிவீர்கள். அவன் பாதாளத்திலே வேதனைப்பட்டான்.

நம்முடைய தேவைகளுக்கு அதிகமானவற்றை மற்றவர்களுக்கு கொடுத்து கர்த்தருடைய ஊழியம் வளர்ந்துபெருக பாடுபடவேண்டும். செய்வீர்களா? ஆண்டவர் இயேசு பகிர்ந்து கொடுக்கும்படி சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த சம்பவத்தை நீங்கள் அறிவீர்களா? "அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார்" (மாற்.6:41).

விசுவாசிகள் சகலத்தையும் பொதுவாக அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். அவர்கள் பங்கிடுவதிலும் பகிர்ந்துகொடுப்பதிலும் பாரபட்சம் காட்டாமல் நடந்திருக்கிறார்கள். "அப்போஸ்தருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (அப்.4:35). அப்படியானால் அவர்கள் எந்தவிதமாக பகிர்ந்தளித்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் கொடுக்கக் கடவன் என்ற வசனத்தின்படி பகிர்ந்தளித்தார்கள்.

**நான்காவது** கபடமில்லாத இருதயத்தோடிருந்தார்கள். "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி" என வாசிக்கிறோம் (அப்.2;46). கள்ளங்கபடம் இல்லாத இடம், தேவனுடைய பிள்ளைகள் வாழும் இடம். இதை முதல் நூற்றாண்டு சீஷர்கள் மத்தியில் காணமுடிந்தது. இப்படிப்பட்ட இருதயத்தோடு சபைகள் காணப்படவேண்டும். கபடத்தோடு இருக்கும்போது ஒருவரையொருவர் பார்த்து ஸ்தோத்திரம் சொல்லமுடியாது. ஏனெனில் அவர்களுடைய குரோதம் வெளிப்படும். அப்படிப்பட்ட இடத்தில் கிறிஸ்துவின் அன்பு எப்படி வெளிப்படும்? லீதியாள் என்ற பெண் பவுலுடைய வார்த்தைகளைகேட்டு; "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள், எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:15). இப்படி முதல் நூற்றாண்டு சபையார் அன்புடன் வீட்டிலே ஏற்றுக்கொண்டு உபசரித்தார்கள். இந்த அன்பு கபடமில்லாத அன்பாக இருந்தது. அதைப்போல கபடமற்ற உத்தமனைக்குறித்து படிக்கிறோம். "இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்" (யோவா.1:47). இவன் இஸ்ரவேலனாயிருந்தும் கபடற்றவனாயிருந்திருக்கிறான். இன்றைக்கு



தேவனை அறியாத அநேகர் கூட கபடமற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தேவனையும், ஆண்டவர் இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் அறிந்த ஒருவர் கபடமற்றவராயிருப்பது எத்தனை அவசியமான காரியம். முதல் நூற்றாண்டு சீஷர்களைப்போல மாறுங்கள்.

**ஐந்தாவது** ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டுவந்தார்" என காண்கிறோம் (அப்.2;47). எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் தேவனை துதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அப்போஸ்தலர்களை அடித்து சிறைச்சாலையில் போட்டார்கள்; "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" (அப்.16:25). தேவனை துதிப்பதும் அவருடைய நாமத்தை கீர்த்தனம் பண்ணுவதும் எத்தனை நன்மையுள்ளதாயிருக்கிறது. மேலும், நாம் சாட்சியுள்ள மக்களாக வாழவேண்டுமானால் ஜனங்களிடத்தில் தயவு பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதே நம்முடைய வார்த்தைகளை அவர்கள் மதித்து அவைகளை கேட்பார்கள். இல்லையென்றால் ஊருக்கு உபதேசம் செய்கிறவர்களாயிருப்போம்.

அப்போஸ்தலர்கள் மூலமாக கர்த்தர் செய்கிற காரியங்களைக் கண்டவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆகையால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் அப்போஸ்தலர்களை சிலவேளைகளில் தண்டிக்கமுடியாமற்போனது. இதை நாம் அப்.4:21-ல் படிக்கிறோம். "நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால், ஜனங்களுக்குப் பயந்து அவர்களைத் தண்டிக்க வகையொன்றுங்காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்". இந்த இடத்தில் அப்போஸ்தலர்களுக்கு ஜனங்களுடைய தயவு கிடைத்தபடியால் இம்மார்க்கத்திற்கு எதிராக செயல்படக்கூடியவர்களால் ஒன்றும் செய்யமுடியாமற்போனது.

அன்பானவர்களே, முதல் நூற்றாண்டு சபையாரைப்போல நீ கர்த்தரை தொழுதுகொண்டு வருகின்றாயா? அவர்களைப்போல அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து கர்த்தருடைய சபையில் தேவனை ஆராதித்து வருகின்றாயா? அவர்களைப்போல ஐக்கியத்தில் நிலைத்திருக்கின்றாயா? அவர்களைப்போல ஒருமனப்பட்ட இருதயத்தோடும், கபடமில்லாமல் சகோதர, சகோதரிகளோடு சபையில் தேவனை துதித்துக்கொண்டு வருகின்றாயா? அப்படியில்லையென்றால் இன்றே உன்னை சரிசெய்துகொள். முதல்

நூற்றாண்டு சபையார் நம்மெல்லாருக்கும் மாதிரியான சபையாக இருக்கிறது. அந்தப்படியாக நிலைத்திருப்பவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். நீ அவருடைய சபையில் நிலைத்திருந்து கர்த்தருக்கு ஏற்ற கனிகளை கொடுப்பாயானால், கர்த்தருடைய வருகையில் நீ அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய நித்தியமாக அவரோடு என்றென்றும் ஜீவிப்பாய்.

**கேள்வி நேரம்**

**முதல் நூற்றாண்டில் சிதறிப்போனவர்கள் என்ன செய்தார்கள்?**

மந்தை சிதறிப்போனால் ஓனாய்களுக்கு நல்ல வேட்டை. ஆனால் இங்கு சிதறிப்போன கிறிஸ்தவர்கள் கர்த்தர் கொடுத்த தலையாய பணியை நிறைவேற்றினார்கள். "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப்.8:4). இது அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை என்று நினைத்துவிடாதீர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருடைய திருச்சித்தத்தை நிறைவேற்றவேண்டும். அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எப்படி சாட்சியுள்ள மக்களாக உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு மாதிரியாக கர்த்தருடைய கட்டளையில் நிலைத்திருந்தார்களோ அந்தப்படியாக நாமும் நிலைத்திருக்கவேண்டும்.

எருசலேம் துவங்கி சகல தேசத்திலும் கர்த்தருடைய சபை வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் முதல் நூற்றாண்டில் எருசலேமில் துவங்கப்பட்ட சபை எல்லா இடங்களிலும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றியது. ஆங்காங்கே சபைகளை ஏற்படுத்தி மூப்பர்களையும் ஏற்படுத்தியது. எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலத்தில் இருக்கிறோம் என்ற கர்த்தருடைய வசனத்தின்படி சுயாதீன சபைகளை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில் இருக்கிற நாமும் அவைகளை மாதிரியாக கொண்டு செயல்படவேண்டும். கர்த்தருடைய சபையோடு சேர்ந்து ஊழியம் செய்யுங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் முயற்சியையும் ஆசீர்வதிப்பாராக!

## 14. அழியாத அன்பு
## Undying Love

**அ**ன்பு நிலையானது. அந்த அன்பில் நீங்கள் நிலைத்திருக்கின்றீர்களா? அந்த அன்பு ஒழியாதது, அழியாதது. இதைக்குறித்து பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும்



ஒழிந்துபோம்" (1கொரி.13:8). ஒழிந்துபோகக்கூடிய சிலவற்றைப்பிடித்துக் கொண்டு அநேகர் அதை முக்கியப்படுத்துகின்றனர். தேவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனோடு எப்படி உறவாடி வந்தார் என்பதை நாம் வேத வசனங்கள் மூலமாக அறிகிறோம். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக வெளிப்பட்டிருக்கிறார். இவர் அன்பு நிறைந்தவராயிருக்கிறார். பூரணமான இவருடைய வருகையால் குறைவானவைகள் ஒழிந்துபோயின என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். பழைய ஏற்பாடு நிழலாக இருந்தது. நிஜம் வந்தவுடன் நிழலை நாம் நோக்கவேண்டிய அவசியமில்லை. நிஜத்தை நோக்கிப்பார்த்து நாம் இரட்சிக்கப்படவும் அந்த அன்பில் நிலைத்திருக்கவும் வேண்டும். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (யோவா.3:16).

தேவனுடைய அன்பு கிரியைகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தம்முடைய குமாரனை நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு செலுத்தியிருக்கிறார். பாவத்தின் ஆசையினால் விழுந்துபோன மனிதனை மீட்டு தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக பாவத்திற்கு பலியாக இயேசுவை ஒப்புக்கொடுத்தார். அவர் தாமே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமாகின்றோம். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து அவரை வெளிப்படுத்தினார். தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே தேவனுடைய குமாரனும் அன்புநிறைந்தவராயிருக்கிறார்.

இயேசுவும் தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருந்தார். லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் என காண்கிறோம். ஆனால் லாசரு மரித்தபோது அவர் அந்த மரண சடங்குகளில் கலந்துகொள்ளும்படியாகவும், துக்கம் விசாரிக்கும்படியாகவும் கடந்து செல்லவில்லை. மரண செய்தி அறிந்து நான்கு நாட்களுக்குப்பின்பு சென்றார். ஏன் இப்படிச் சென்றார் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. அங்கு தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக நான்கு நாட்களுக்குப்பின் சென்றார். சில வேத ஆராய்ச்சியாளர்கள். யூத மக்கள் மரித்த சரீரத்தினுடைய ஆவி மூன்று நாட்களுக்கு பூமியில் இருக்கும் என்ற நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர். ஆகையால் இயேசு நான்காம் நாள் சென்று லாசருவை எழுப்பினார். இரண்டாம் நாளோ மூன்றாம் நாளோ சென்று எழுப்பியிருந்தால் நம்ப மாட்டார்கள் ஆகையால் நான்காம் நாள் சென்றார் என்று கருத்து சொல்லுகிறார்கள். நான்கு நாட்களுக்குப் பின் லாசருவின் வீட்டிற்கு வரும்போது சிலர்; "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்

என்றார்கள்! அவர்களில் சிலர்; குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்" (யோவா.11:36,37). ஒருவர் மீது அன்பு செலுத்திவிட்டு பின்பு அவர்களை கண்டுகொள்ளாமல் இருந்தால் உலகம் நம்மை தூற்றிவிடும். அந்தப்படியாக இயேசுவை சொல்ல ஆரம்பித்தார்கள். அவர் அவனில் அன்பாயிருந்தார் என்பதை ஜனங்கள் கண்டு கொள்ளும்படியாகவும், தம்மை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்ற வசனத்தை உறுதிப்படுத்தும்படியாகவும், தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் அவனை உயிருடன் எழுப்பினார். பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். அவரில் அன்பாயிருக்கிறவர்கள் நிச்சயமாக அவரோடு உயிரோடு எழுப்பப்படுவார்கள். கர்த்தருக்குள் மரித்தவர்கள் அவருடைய வருகையிலே நித்தியத்திற்கு அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

**இரண்டாவது** அன்பு சகலத்தையும் சகிக்கும் என காண்கிறோம். நான் அன்பாயிருக்கிறேன் என்று சொல்வார்கள் ஆனால் அவர்களிடம் சகிப்பு தன்மை இருக்காது, விசுவாசமிருக்காது, ஏன் நம்பிக்கையும் இருக்காது. பின்பு எப்படி அவர்கள் நாங்கள் அன்பாயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். வசனம் சொல்லுகிறது; அன்பு "சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1கொரி.13;7). அன்பிற்கு இத்தனை குணங்கள் இருக்கிறது. மூன்றே எழுத்தில் அமையப்பெற்ற அன்பு பூரணமுள்ளது. இயேசுவின் நாமத்தின் நிமித்தமாக அப்போஸ்தலர்கள் எல்லாவற்றையும் சகித்தார்கள்.

"அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப்பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5:40-42). அந்நாட்களில் இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்தால் அவர்களுக்கு மரணதண்டனையும் கிடைக்கும். அப்படிப்பட்ட கட்டளையிருந்தபோதும் அவருடைய அன்பின் நிமித்தமாக என்ன அடிவாங்கினாலும் சகித்துக்கொண்டு அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோஷமாக சுவிசேஷ வசனத்தை அறிவித்து கிறிஸ்துவின் கட்டளைகளை



நிறைவேற்றினார்கள். இன்று இப்படிப்பட்ட சுவிசேஷகர்களைப் பார்க்கமுடிவதில்லை. வீட்டிற்குள்ளே உட்கார்ந்துகொண்டு நாங்கள் அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று சொல்லும் வாய்வீச்சு சுவிசேஷகர்களைத்தான் பார்க்கமுடிகிறது. கர்த்தருக்காக எதையும் சகிக்கக்கூடிய ஆதி அப்போஸ்தலர்களைப்போன்றவர்களை நாம் பார்க்கமுடியவில்லை. அப்படிப்பட்டவர்கள் எழும்பி சுவிசேஷவசனத்தை பயமின்றி அறிவிக்கவேண்டும் அதற்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

நம்மை தெரிந்துகொண்ட தேவன் நம்மோடிருக்கும்போது நாம் அச்சப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தர் அப்போஸ்தலர்களைக் கொண்டு அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்தார். நான் சதாகாலங்களிலும் உங்களோடு இருக்கிறேன் என்று சொல்லி அவர்களை உலகமெங்கும் அனுப்பினார். அவர்கள் அவருடைய நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்து கிரியைகளை நடப்பித்தனர். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் தூக்கி மீதியானியரிடம் விற்றுப்போட்டனர் அவன் சோர்ந்துபோகவில்லை. "தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்" (அப்.7:10).

யோசேப்பு கர்த்தர் தன்னை கைவிட்டு விட்டாரே என்று நினைத்து அவன் துக்கமுகமாய் இருக்கவில்லை. எங்கே சென்றாலும் கர்த்தர் தன்னோடு இருப்பதை உணர்ந்துகொண்டான். அன்பு நம்மை நேசிக்கிறபடியால், எல்லாவிதமான உபத்திரவங்களிலும் நாமும் காப்பாற்றப்படுகிறோம். அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு எகிப்தின் அதிபதியானான். இது எதினால் வந்தது? அவன் உபத்திரவங்களை சகித்தான், விசுவாசித்தான், நம்பினான். அன்பின் தேவன் அவனுடைய எல்லாவிதமான உபத்திரவங்களிலும் அவனை விடுவித்தார். அவனோடு கர்த்தர் இருந்தபடியால் அவனை சேர்ந்தவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதை அவனோடிருந்தவர்கள் கண்டு ஆச்சரியப் பட்டனர். அன்பு நண்பரே, உன்னோடு தேவன் இருக்கும்போது நீ ஆசீர்வாதமுள்ள மகனாக, மகளாக இருப்பாய். நீ அன்பை பற்றிக்கொண்டிரு.

**மூன்றாவது** அன்பு அழியாதது. அன்பை ஒழிந்துவிட பிசாசும் அவனுடைய கூட்டாளிகளும் முயற்சித்து வருகிறார்கள். ஆகையால் தேவனால் உண்டாக்கப்பட்ட அனைத்திற்கும் எதிராக இருந்து ஆதிமுதலாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறான். இவனோடு எதிர்த்துப்போரிட்டிக் கொண்டிருக்கிறார்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். இவர்கள் அன்பை

ஆயுதமாக தரித்தவர்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (எபே.6:24). சிலர் கர்த்தர் கொடுத்தால் நல்லவர். கொடாவிட்டால் அவரை நாம் எப்படி நம்புவது என்று சொல்லி விசுவாசத்தில் ஆட்டம் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். கிறிஸ்துவினிடத்தில் அன்புகூருகிற நாம் அழியாத அன்பு செலுத்தவேண்டும். அவர் நம்முடைய பாவத்தை முற்றிலுமாக கழுவியவர். பாதிமட்டுமல்ல முழுவதுமாக கழுவப்பட்டோம். இப்படி கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்ட நாம் அவரை முழுவதுமாக நம்பி அன்பு கூரவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்பொழுது அவருடைய கிருபை நம்மோடிருக்கும். பவுலோடு கர்த்தருடைய கிருபை இருந்தது. அவர் மூன்று முறையும் தன்னுடைய காரியத்திற்காக கர்த்தரை நோக்கி மன்றாடும்போது; அவருக்கு கிடைத்த பதில்; "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்கிறார் (2கொரி.12:8,9). உங்களுடைய நம்பிக்கை கிறிஸ்துவின் மீது எப்படிப்பட்டதாயிருக்கிறது? கர்த்தருடைய அன்பினால் அவருடைய ஊழியமே உயிர் மூச்சாகக்கொண்டவர் பவுல். எத்தனை பாடுகள், எத்தனை பிரச்சனைகள், இவையெல்லாவற்றினின்றும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரிப்பவன் யார்? என்று கேள்வி எழுப்புகிறார். அந்த அளவு கர்த்தர் மீது அன்புகொண்டவராயிருந்தார். நீங்களும் அந்தவிதமாக அன்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? அப்படி அன்பு செலுத்தும்போது அவருடைய கிருபை உங்களைத் தாங்கும்.

பேதுரு ஒருமுறை "இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்" (யோவா.21;20-22). பேதுருவைப் பற்றி கர்த்தர் சில காரியங்களைச் சொன்னவுடனே இயேசுவுக்கு அன்பாயிருந்த யோவானுடைய காரியத்தைக்குறித்து பேதுரு இயேசுவிடம் கேட்க ஆரம்பித்தான். அவருடைய அன்பு அழியாத அன்பாயிருந்தபடியால் இப்படிக்கேட்டான். அதற்கு கர்த்தர் நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன, நீ என்னைப்



பின்பற்றிவா என்றார். இதனால் அந்த சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று என காண்கிறோம். ஆனாலும், இயேசு அவன் மரிப்பதில்லை என்று சொல்லாமல் நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார். ஆண்டவருடைய அன்பு நிலையானது என்பதை இது காட்டுகிறது.

**கேள்வி நேரம்**

**இயேசுவின் இரக்கத்தைபெற நாம் தேவனுடைய அன்பிலே நம்மை காத்துக்கொள்ளவேண்டுமா?**

ஆம், ஞானஸ்நானம் பெற்றுவிட்டால்போதும் நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் இனி எனக்கு கவலையில்லை. நான் எப்படிவேண்டுமானாலும் ஜீவிப்பேன் என்று அநேகர் நினைத்துக்கொண்டு காலங்களை விரையம் செய்கின்றனர். காலங்கள் கர்த்தருடைய கரங்களில் இருக்கிறது. ஆகையால், "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக் கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்" என யூதா குறிப்பிடுகிறார் (யூதா21). முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். முடிவு பரியந்தம் நிலைத்திராமல் பாதியிலே பின்வாங்கிப்போன ஒரு சிலரைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். அதில் தேமா என்று சொல்லக்கூடிய ஒருவன். இவ்வுலகத்தின் மீது ஆசைவைத்து பின்னிட்டுப்போனான்.

உங்களுக்கு வரும் பாடுகள், போராட்டங்கள் இவைகளில் நிலைத்திருந்து தேவனுடைய அன்பை நினைத்து அவைகளில் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு நியாயாதிபதியாக வரப்போகும் இயேசுவினிடத்தில் இரக்கத்தைபெற காத்திருக்கவேண்டும். இயேசு இவ்வுலகத்தில் முதலாவது நம்முடைய பாவத்தைப்போக்கும் பலியாக வெளிப்பட்டார். இனிவரும்போது அவர் நியாயாதிபதியாக வெளிப்படுவார். அவருடைய நியாயத்தீர்ப்பிலே உங்களுக்கு இரக்கம் கிடைக்க தேவனுடைய அன்பிலே உங்களை காத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 15. ஒருவரும் கெட்டுப்போகா விரும்பாமல்...
## Not Willing Any One To Perish...

**ப**ரிசுத்த வேதம் சொல்லுகிறது "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). கர்த்தருடைய வருகை தாமதமாவதற்கு காரணம் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று

தாமதிக்கிறார். அவருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று நாம் நினைக்கவேண்டும். ஒரு வீட்டில் உள்ள நபர்கள் வேறுஇடத்திற்கு குடிபெயர்வார்களானால் ஒரு நபரை மட்டும் விட்டு விட்டு மற்றவர்கள் சென்று விடுவார்களா? அந்த நபரையும் அழைத்துக்கொண்டு போவார்கள் அல்லவா? அதைப்போல இவ்வுலகத்தில் உள்ள ஒருவரையும் பிதாவாகிய தேவன் இழக்க விரும்பவில்லை எல்லோரும் காப்பாற்றப்படவேண்டுமென விரும்புகிறார். ஆகையால் கர்த்தருடைய வருகை தாமதிக்கிறது. இதை பயன்படுத்தி மனந்திரும்பாதவர்கள் உடனே கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து மனந்திரும்வேண்டியது அவசியமாயிருக்கிறது. இன்னும் அநேகர் மனந்திரும்பவில்லை அவருடைய வருகை சமீபத்தில் இருக்காது என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவருடைய வருகை சடுதியில் இருக்கலாம். ஆகையால் இனியும் காலம் கடத்தாது உங்களுடைய பாவமன்னிப்புக்காக மனந்திரும்புங்கள்.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1:1,2). நம்முடைய பிதாக்களோடு தேவன் பேசும்போது தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசிவந்தார். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மோடு பேசிவருகிறார். ஆகையால் ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுங்கள். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இன்றைக்கு நாம் பாவமன்னிப்பை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் அவர் சிந்திய இரத்தத்தின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளுகிறோம். இரத்தம் சிந்துதலில்லாமல் மனிதனுக்கு பாவமன்னிப்பு இல்லை. நம்முடைய பாவத்தைபோக்கும் பலியாக இயேசு சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். ஆகையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நோவா காலத்தில் தேவன் நோவாவைக் கொண்டு அவனுடைய குடும்பத்தை இரட்சித்தார். "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார்" என பேதுரு சொல்லுகிறார் (2பேது.2:5). இக் கடைசிநாட்களில் தேவன் இயேசுவைக்கொண்டு நம்மை இரட்சிக்கும்படியாக திட்டம் கொண்டுள்ளார். ஆகையால் மனந்திரும்புங்கள்.



இவ்வுலகில் ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல.

மேலும் பேதுரு சொல்லும்போது; "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்"(2பேது.2:8,9). நாமும் கூட இவ்வுலகத்தில் இருக்கிற அக்கிரமகிரியைகளைக் கண்டு நாள்தோறும் வாதிக்கப்படுகிறோம். அதைப்போல லோத்தும் சோதோம் கோமோரா ஜனங்கள் மத்தியில் வாதிக்கப்பட்டார். அவர்களுடைய அக்கிரமம் தேவசமுகத்தை எட்டினது. ஆகையால் அந்தப்பட்டணங்களில் உள்ள லோத்தையும் அவனுடைய குடும்பத்தாரையும் காப்பாற்றும்படியாக தேவதூதர்களை அனுப்பி அவர்களை இரட்சித்தார். அதைப்போல தேவபக்தியுள்ளவர்களை இக்காலகட்டத்திலும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். மனந்திரும்பாமல் இருக்கும் அக்கிரமக்காரரையோ தேவன் அவியாத அக்கினியில் பங்கடையும்படியாக ஒப்புக்கொடுப்பார். ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவா.4:9).

தேவன் முதலாவது நம்மீது அன்பு செலுத்தி தம்முடைய குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்து நாம் பிழைக்கும்படி செய்தார். இது எப்பேர்பட்ட அன்பு. தம்முடைய குமாரனுடைய ஜீவனையே கொடுத்தார். இதைக்காட்டிலும் மேலான அன்பு ஒன்றுமில்லை. "அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்" (1யோவா.5:20). தகப்பனை அறியாத பிள்ளைகளாக நாம் இருந்தோம். அப்படிப்பட்ட நிலையில் நமக்கு சத்தியமுள்ள தேவனை வெளிப்படுத்தியவர், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. நாம் இப்பொழுது அவரை அறிந்து அவருடைய குமாரனுக்குள்ளாக இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நமது இரட்சகரும் நித்தியஜீவனுமாயிருக்கிறார். "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில்

நிலைத்திருக்கிறார்" (1யோவா.4;16). இயற்கையாகவே நாம் தேவனை விசுவாசிக்கவில்லை. தேவன் தம்முடைய குமாரனை நமக்காக கொடுத்ததினாலே நாம் விசுவாசிக்கிறோம். அதினாலே நாம் தேவனில் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். அவருடைய குமாரனிடத்திலும் அன்புள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எப்பொழுதும் அன்புள்ளவராகவே இருக்கிறார். அன்புள்ள எவனையும் அவர் நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்களோடு அவர் வாசம் பண்ணுகிறார். நீங்கள் தேவனிடத்தில் அன்புள்ளர்வகளாக இருக்கின்றீர்களா? அப்படி இல்லையென்றால் அவரில் அன்புகூருங்கள். எல்லாம் ஒழிந்துபோகும் ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது. அந்த அன்பை பற்றிக் கொள்ளும்போது நாமும் ஒழியாமலிருப்போம்.

ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய விருப்பமல்லவா ஆகையால் தீமையினின்று அவர்களை இரட்சிக்கிறார். "கர்த்தரோ, உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்"என தெசலோனிக்கேயர் புத்தகத்தில் படிக்கிறோம் (2தெச.3:3). தீமை நமக்கு வந்துவிட்டால் உற்ற நண்பனும் ஓடிவிடுவான். உறவினர்களும் கண்டுகொள்ளமாட்டார்கள். அவனுக்கு வந்தது நமக்கும் வந்துவிடும் என்று விலகிபோய்விடுவார்கள். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காக எல்லாவிதமான தீமையினின்றும் நம்மைக் காக்கவல்லவராயிருக்கிறார். ஆகையால் அவருடைய அன்பு மேலானது என காண்கிறோம். இந்த அன்பை அறிந்து விசுவாசியுங்கள். கடும்நோய்க்கு உட்பட்டுவிட்டால் எந்த மருத்துவரும் கைவிட்டுவிடுவார்கள். ஆனால் பரம வைத்தியர் ஒருபோதும் கைவிடார். அதிலிருந்து அவர் சுகப்படுத்துகிறார். அப்படிப்பட்ட கர்த்தரை நாம் தெய்வமாக கொண்டிருக்கிறோம்.

மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்" என்று பவுல் எழுதுகிறார் (2தெச.3:4). தேவன் எதிர்பார்க்கிற காரியங்களை நாம் செய்யவேண்டும். அப்பொழுது அவர் நம்மை இரட்சிக்கமுடியும். பாவத்திலே நிலைத்திருக்கும் ஒருவனை அவர் இரட்சிக்கமுடியாது அவன் மனந்திரும்பி பாவத்தை விட்டுவிடும்போது கர்த்தரால் காப்பாற்றப்படுகிறான்.

"கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக" (2தெச.3:5). இன்றைக்கு அநேகர் தங்களுடைய நாட்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பொறுமையை



இழந்து பலவிதமான உபாய தந்திரங்களாலே மாட்டிக்கொள்ளுகிறார்கள். சிலர் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். உங்களுடைய இருதயம் தேவனுடைய அன்புக்கு நேராக வழிநடத்தப்படும்போது நீங்கள் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்படும். கர்த்தர் ஒருவரையும் வஞ்சிக்கிறவர் அல்ல. மனிதன் பல வழிகளில் வஞ்சிக்கப்படுகிறான். மற்றவர்களையும் வஞ்சிக்கிறான். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் நாம் கெட்டுப்போகாமல் அவருடைய அன்பில் ஊன்ற கட்டப்படவேண்டுமென விரும்புகிறார். ஆகையால் கர்த்தர் அவருடைய அன்புக்கு நேராக நம்மை வழிநடத்துகிறார். மேலும் கிறிஸ்துவின் பொறுமையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவர் வையப்படும்போது பயமுறுத்தாலும் பாடுபடும்போது ஒருவரையும் துன்புறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். வாய்திறவாத ஆட்டைப்போல இருந்தார். அவருடைய சத்தம் வீதிகளில் கேட்கப்படவில்லை. அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்று சொல்லி அவரை இகழ்ந்தார்கள். அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக ஒருவார்த்தையும் சொல்லவில்லை. மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியில்லையென்றார்கள். இத்தனை வார்த்தைகளையும் அவர் பொறுமையோடிருந்து சகித்தார்.

நாம் ஒவ்வொருமுறையும் நமக்கு பாடுகள் வரும்போது கிறிஸ்துவையே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் பவுல் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக என்று எழுதுகிறார். இப்படி தங்களை நடத்தும்படியாக ஒப்புக்கொடுக்காத அநேகர் தங்களுடைய சிந்தையில் வீணராய் போய்விடுகிறார்கள். உலகத்தில் வரும் பாடுகளையும் பிரச்சனைகளையும் தங்களால் மேற்கொள்ள முடியாமற்போய்விடுகிறார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. நீ தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆகையால் தேவன் உன்னை அதிகமாக நேசிக்கிறார். மற்றவர்கள் நீ எப்பொழுது கெட்டுப்போவாய் என எதிர்பார்த்து காத்திருப்பார்கள். மனிதனுக்குள்ளாக பொறாமை குடிகொண்டிருக்கும்போது இதை எதிர்பார்த்து காத்திருப்பான். ஆனால் தேவன் நீ மனந்திரும்பி இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் மரணத்தை சந்திக்கவேண்டும். மனிதன் தேவனோடு என்றென்றுமாக வாழும்படியாக படைக்கப்பட்டவன். உனக்காக மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவரைப்போல நீயும்

அவரோடு வீற்றிருந்து நித்தியத்தில் நித்திய மகிழ்ச்சியை கண்டடைய உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடு. நீ நம்புகிற அல்லது உயிருக்கு உயிராக நேசிக்கிற நண்பனோ உறவினர்களோ உன்னை ஒரு நாள் கைவிடுவார்கள் என்பதை நீ மறந்துபோகாதே! ஆனால் என்றும் உன்னை கைவிடாது நேசிக்கும் கர்த்தர் உன்னுடைய மனந்திரும்புதலை எதிர்நோக்கியிருக்கிறார். இன்றே உன்னை முழுவதுமாக கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடு.

**கேள்வி நேரம்**

**சத்தியத்தை நாம் விசுவாசிக்கும்போது தேவனால் தெரிந்துகொள்ளப் படுவோமா?**

ஆம், தேவன் சத்தியபரர் சத்தியத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவரையும் அவர் நேசிக்கிறார். "சத்தியதையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் ஆண்டவர் இயேசு. சத்தியத்தை ஒருவர் அறியாதிருக்கும்போது விடுதலையடைய முடியாது. உண்மையாய் நடக்கிறவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள். அப்படிப்பட்டவர்களை அவர் தெரிந்துகொண்டு அவர்களிடத்திலே அநேக பொறுப்புகளை கொடுக்கிறார். பவுல் தெசலோனிகேயர் சபையாருக்கு எழுதும்போது; "கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளியாயிருக்கிறோம்" என்கிறார் (2தெச.2:13). நாம் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிக்கப்படுகிறோம். இன்றைக்கு அநேகர் நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்களா? என்று இயேசுவை நோக்கி வந்தவர்களைப் பார்த்து கேட்கிறார்கள். அவர்கள் இன்னும் பரிசுத்தமாக்கப்படவில்லை, சத்தியத்தை அறியவில்லை, அவர்கள் எப்படி ஆவியில் பரிசுத்தமடைய முடியும். கர்த்தருயை சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படாதவன் ஆவியில் பரிசுத்தமாக்கப்படமுடியாது.

அதைப்போல சத்தியத்தை விசுவாசியாமல் இரட்சிக்கப்படமுடியாது. நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட இக்காரியங்களை உங்களுடைய வாழ்க்கையில் செயல்படுத்துங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" 1 தீமோ. 2:4**



## 16. ஒரு சந்ததி அவரை சேவிக்கும்
## A Posterity Shall Serve Him

**அ**ந்த சந்ததி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயிருக்கிறது. அந்த சந்ததியில் நீங்கள் உங்களை இணைத்துக்கொண்டீர்களா? அந்த சந்ததியைக்குறித்து சங்கீதத்தில் வாசிக்கிறோம். "ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்" (சங்.22:30). உலகத்திலே எத்தனையோ சந்ததிகளை நாம் காண்கிறோம். எல்லோரும் ஏதோ ஒன்றை தெரிந்துகொண்டு வழிவழியாக ஆராதித்துக்கொண்டும், அவைகளை நமஸ்கரித்துக்கொண்டும் வருகிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக சொல்லுகிறார்கள். பூமியில் கால் மிதிக்கும் இடமெல்லாம் கடவுள் இருப்பதாகவும். கடவுள் தூணிலும் துரும்பிலும் இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இப்படியாக அநேக மார்க்கங்களை நாம் இப்பூமியில் காண்கிறோம். இப்படி எண்ணிலடங்கா பிரிவினைகளுக்கு மத்தில் ஒரு சந்ததி அவரைச் சேவித்துக்கொண்டு வருகிறது அந்த சந்ததியைக்குறித்து பரிசுத்த வேதாகமம் சாட்சியிடுகிறது அதை குறித்து இன்றைய நாளில் நாம் தியானிப்போம்.

முதலாவது பிதாக்களின் காலத்தில் அந்த சந்ததியைக்குறித்து படிக்கிறோம். "ஆபிரகாம் பெயர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்திலே தொழுதுகொண்டான்" (ஆதி.21:33). இந்த ஆபிரகாம் தேராகுடைய மகன். தேராகு ஒரு விக்கிரக ஆராதனைக்காரன். ஆபிரகாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டபடியால் அவன் இனம் ஜனம் தேசம் எல்லாவற்றையும் விட்டு தேவன் காண்பிக்கும் தேசத்திற்கு சென்று அங்கே சதாகாலமுமுள்ள தேவனை தொழுதுகொண்டான். சிலர் வெளியூர் சென்று விட்டால் தேவனை மறந்துவிடுவார்கள், சபையை மறந்துவிடுவார்கள்.

ஆபிரகாம் அப்படியல்ல தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியில் இருந்தபடியால் எங்கு கடந்துசென்றாலும் அங்கே ஒரு பலிபீடத்தை கட்டி கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டான். இவனுக்குப்பின்பாக வந்த இவனுடைய மகன் ஈசாக்கு அந்தப்படியாகவே தொழுதுகொண்டான். தகப்பனுடைய வழியை தெரிந்துகொண்டான். புதிய ஒரு இடத்திற்கு வந்தவுடன் "அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப்போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள்" என காண்கிறோம் (ஆதி.26:25). இவனுடைய மகன் யாக்கோபு பற்றி படிக்கிறோம்; "அங்கே

அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்" (ஆதி.35:7). ஓடிப்போகக்கூடிய இடத்திலே கூட கர்த்தரை தொழுதுகொண்டு அந்த இடத்திற்கு ஏல்பெத்தேல் என்று பெயரிட்டிருக்கிறான். ஒருவேளை அவனுடைய மனது எப்படியிருந்திருக்கும். என் சகோதரன் என்னை வெறுக்கிறானே, இந்த தேவன் அதைக்கேட்கவில்லையே என்ற கவலை அவனுக்குள் இருந்திருக்குமா? எது எப்படியிருந்தபோதும் அவன் தன் தேவனை மறக்காமல் அங்கு கர்த்தரை தொழுதுகொண்டான். பின் சந்ததியை அங்கு வரவழைத்து தன் சந்ததியாரோடு தேவனை ஆராதித்தான் என்றெல்லாம் பார்க்கிறோம்.

இப்படியாக அவர்களுடைய சந்ததி தொடர்ந்தது யாக்கோபு இஸ்ரவேல் என்று தேவனால் அழைக்கப்பட்டான். திரளான ஜனங்களை உடையவனாக இருந்து ஆசீர்வதிக்கப்பட்டான். இந்த "இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவன் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது" என 1இராஜா.6:1,2 வசனங்களில் படிக்கிறோம்.

ஆதிகாலங்களில் பலிபீடங்களைக் கட்டி தொழுதுகொண்டு வந்தார்கள். சாலொமோடைய நாட்களில் ஆலய வழிபாடு துவங்கினது. அதைக் கட்டும்படியாக சாலொமோனுடைய தகப்பன் தாவீது விரும்பினான் ஆனால் அவனை கட்டும்படியாக தேவன் அனுமதிக்கவில்லை. அவனுடைய கர்ப்பப்பிறப்பான சாலொமோன் அந்த ஆலயத்தை கர்த்தருக்காக எருசலேமில் கட்டினான். முதலாவது ஆராதனை அங்கு நடைபெற்றபோது கட்டிட பிரதிஷ்டையின்போது தேவ சமூகம் அந்த ஆலயத்தை நிரப்பிற்று அதை அப்பொழுது இருந்த ஜனங்கள் கண்டார்கள். "அப்பொழுது சாலொமோன்: கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன்னே இஸ்ரவேல் சபையாரெல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராய்த் தன் கைகளைவிரித்து; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்" என்று விண்ணப்பம்பண்ணினான் (1இரா.8:22,23).

இந்த சந்ததி இயேசுவின் பிறப்பிற்கு முன்னும் பின்னும் தொடர்ந்ததை நாம் காண்கிறோம். "கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில்



சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்" என்று லூக்.2:24-ல் வாசிக்கிறோம். தேவனை தொழுதுகொண்டு வந்த சந்ததியில் இயேசு பிறந்தார். ஆகையால் அவர்கள் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டபடி புறாக்குஞ்சுகளை பலிசெலுத்தும்படி எருசலேம் தேவாயலயத்திற்கு வந்தார்கள். ஆண்டவர் இயேசுவும் வளர்ந்து முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய திருச்சித்தத்தை செய்யும்படியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது பிசாசு அவரை சோதித்தான். "இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத்.4:10).

சாத்தானுடைய ஆசைக்கு கர்த்தர் இணங்கவில்லை. அவனோடு வசனத்தை சொல்லி போராடி ஜெயித்தார். அவர் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியில் இருந்தார். அவரும் ஒரு சந்ததியை ஏற்படுத்தினார் அது ஆவிக்குரிய சந்ததி. அந்த சந்ததியார்; "வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயசே வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார்" (யோவா.20:19). இவர்கள் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு சபையாக கூடி தேவனை தொழுதுகொண்டார்கள். யூதர்களுக்கு பயந்ததினாலே கதவுகளை பூட்டி ஆராதித்தார்கள். அந்நாட்களில் இயேசுவை கிறிஸ்துவென்றும், அவருடைய சீஷர்களென்றும் சொன்னால் இயேசுவைப்போல அவர்களையும் சிலுவையில் அறைந்துவிடுவார்கள். ஆகையால் யூதர்களுக்கு பயந்தார்கள். ஆனாலும் அவர்கள் தேவனை ஞாயிற்றுகிழமை கூடி ஆராதித்து இருக்கிறார்கள் என்று காண்கிறோம்.

இங்கே நாம் கவனிக்க வேண்டும் பலிபீடங்களைக் கட்டி தொழுதுகொண்டு வந்த காலம் சென்று ஆலய வழிபாடு வந்தது, பின்பு ஆலய வழிபாடு சென்று வீடுகளிலே தேவனை தொழுது கொள்ளும் பழக்கம் வந்தது இது எப்படி வந்தது என்று நாம் பார்த்தோம். ஆண்டவர் இயேசு கிணற்றண்டையிலே கானானிய ஸ்திரீயிடம் பேசும்போது; "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும்மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது" என்றார் (யோவா.4:21). அந்தப்படியாக எங்கும் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலத்தில் நாம் இருக்கிறோம். நாம் ஆண்டவருடைய சந்ததியில் இருப்போமென்றால் நம்முடைய தொழுகையானது வேதவசனங்களின்படி ஆவிக்குரியதாக இருக்கவேண்டும்.

அதுவும் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாரோடு இருக்கவேண்டும். அந்த தொழுகையை தேவன் ஏற்றுக்கொள்ளுவார். இல்லையேல் நம்முடைய தொழுகை வீணானதாயிருக்கும்.

"ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" என்பதை பவுல் நமக்கு தெளிவுபடுத்துகிறார் (கலா.3:16). இந்த சந்ததியில் இருப்பவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டுவருகிறார்கள். இதை சார்ந்த அநேக சந்ததிகள் இருக்கிறது. அவைகளெல்லாம் ஒன்றைப் பற்றிக்கொண்டு ஒன்றை விட்டுவிடும் மார்க்கத்தாராயிருக்கிறார்கள். கொசு இல்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் சந்ததிகளாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்ததிகளை தேவன் அங்கிகரிக்கவில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே ஜனங்களை இரட்சிக்கும்படியாக தேவன் திட்டம் கொண்டார் அந்த திட்டத்திற்கு இசைவாக கீழ்ப்படிவோரை அவர் இரட்சித்து தம்முடைய ஜீவபுத்தகத்தில் அவர்களுடைய நாமங்களை எழுதுகிறார் என அறிகிறோம். ஒருவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஒரே ஆவியினாலே தாகம் தீர்க்கப்படுகிறான். ஒரே இரத்தத்தினாலே கழுவப்படுகிறான். ஆகையால் "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம் பண்ணராயிருக்கிறார்" (ரோம.10:12).

தேவன் ஒரே சந்ததிக்குள் இருக்கிறவர்களை கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக இணைத்திருக்கிறார். அவர்கள் ஒரே சரீரமாயிருக்கிறார்கள். அதிலே மேலானவன் கீழானவன் என்ற வித்தியாசமே இல்லை. அவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துவானவர் தலையாயிருக்கிறார். இந்த சரீரமாகிய சபையை கிறிஸ்து இராஜாதி ராஜாவாக வீற்றிருந்து ஆளுகைசெய்கிறார். முடிவிலே இந்த ராஜ்யத்தை பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுப்பார்.

அதுவரை அவர் ஆளுகை செய்துகொண்டு தம்மூலமாக தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்காகப் பரிந்துபேசுகிறார். அவர் பிரதான ஆசாரியராகவும், பாவமில்லாத பிரதான ஆசாரியராகவும் மனிதனுக்கும் தேவனுக்கும் நடுவாக இருந்து பேசுகிறார். இவரே இறுதியான பிரதான ஆசாரியர் மாறிப்போகாத ஆசாரியத்துவத்தை பெற்றிருக்கிறார். ஆகையினாலே வானத்திலும் பூமியிலும் இவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது எனக்



காண்கிறோம். "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோம.10:13). மற்றபடி கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார் என காண்கிறோம். ஆகையால் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தரில் நிலைத்திருந்து அந்த சந்ததியாரோடு தேவனை தொழுதுகொள். அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய். உன்னுடைய வேண்டுதலையும் தேவன் ஏற்றுக்கொண்டு உன்னை ஆசீர்வதிப்பார். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவா.4:23).

**கேள்வி நேரம்**

**நீங்கள் யாரை சேவிப்பீர்கள்?**

ஒரு சந்ததி அவரைசேவிக்கும் என்று நாம் தியானித்தோம். அந்த சந்ததியில் இருந்துகொண்டு நீங்கள் கர்த்தரை சேவிக்கிறீர்களா? அல்லது உங்களுடைய பாரம்பரியத்தின்படியாக ஆராதித்துவரும் தெய்வங்களை ஆராதனை செய்கிறீர்களா? இஸ்ரவேலர் பல வருடங்களாக கர்த்தரை சேவித்தவர்கள். அவர்களுக்குள் சிலர் பொல்லதவர்களோடு ஐக்கியங்கொண்டு வீணானவைகளை வழிபட ஆரம்பித்தனர். ஆகையால் யோசுவா என்ற தேவனுடைய தாசன் அவர்களை நோக்கி: "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக்குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசு.24:15).

இன்றைக்கும் அநேகர் அந்தந்த தேசத்திற்கு சென்றுவிட்டால் அவர்களோடு சேர்ந்து அவர்களுடைய தேவர்களை வழிபடவும் அவர்களோடு ஐக்கியம் கொள்ளவும் மேலும், பெண் கொடுக்கவும் பெண் எடுக்கவும் செய்து எல்லாம் ஒன்றுதான் எல்லா ஆறுகளும் கடலிலே போய் கலப்பதைப்போல, எல்லாம் ஒரே இடத்திற்கு போகுமென்று பழமொழிகளை சொல்லி தாங்கள் போகும் வழி சரியானதுதான் என்று சொல்லிவிடுவார்கள். இப்படித்தான் இஸ்ரவேலர் எமோரியரின் தேவர்களை சேவிக்கவும் நரகலான விக்கிரங்களுக்கு தங்களுடைய பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணவும் செய்தார்கள். இந்த அருவருப்புகளை கர்த்தர் வெறுத்தார். ஆகையால் யோசுவா

நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான். அன்பானவர்களே, நீங்கள் யாரை சேவிக்கிறீர்கள்? யாரை சேவிக்கப்போகிறீர்கள்? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 17. நாம் நடக்கவேண்டிய விதம்
## The Way that We Should Walk

**நா**ம் எப்படிவேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் யாரைப்பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்கள் அநேகர். நாம் இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் நடக்கவேண்டும் என பரிசுத்தவேதாகமம் போதிக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ளது. சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" என்கிறான் (சங்.65:11). எத்தனையோ வருடங்களை இந்தப்பூமி பார்த்துக் கொண்டிருக்கிறது. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் வருஷங்களையும் காலங்களையும் திட்டம்பண்ணுகிறார். ஒவ்வொரு வருஷத்தையும் அவர் நன்மையால் முடிசூட்டுகிறார். ஒவ்வொருவரும் வருடத்தின் துவக்கத்தில் விழித்திருந்து அந்தவருடத் துவக்கத்தை காண ஆவலாயிருக்கின்றனர். இந்த வருடமாவது நமக்கு எந்தவிதமான கஷ்டங்களும் வராமல் இருக்கவேண்டும். இந்த வருடத்தில் இன்னின்னதை செய்யவேண்டும் என திட்டமிடுகின்றனர்.

மனிதர்களை உண்டாக்கிய தேவன் அவர்களுக்கு புதிய வருடங்களை கட்டளையிடுகிறார். அவருடைய பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. கர்த்தருடைய வழி சுத்தமானதாகவும், தூய்மையானதாகவும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறதாகவும் இருக்கிறது. ஆகையால் வருடத்தின் துவக்கத்தில் நீங்கள் நடக்கவேண்டிய விதத்தை குறித்து வேதாகமம் பலவசனங்கள் மூலமாக பேசுகிறது.

கொலோ.3:24-ம் வசனம் "எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" என்று சொல்வதை நாம் வாசிக்கிறோம். நன்மைசெய்து, நன்மைசெய்து கெட்டபெயர்தான் வருகிறது என்று சொல்லி நன்மைசெய்வதை நாம் நிறுத்திவிடலாமா? நாம் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்யவேண்டும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாமே தேவனுடைய சித்தத்தை ஒவ்வொரு



நாளும் செய்து நிறைவேற்றுகிறது. இவைகளை நீங்கள் நோக்கிப்பார்த்ததுண்டா? மனிதனும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டான். தேவனுடைய குமாரன் இப்பூமியில் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். அதைப்போல ஒவ்வொருவரும் எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும்.

பிலி.4:4-ம் வசனத்தில் "கர்த்தருக்குள் எப்பொழும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என பவுல் சொல்வதை வாசிக்கிறோம். எங்கே சந்தோஷமாயிருப்பது. அடிபட்ட காலிலே அடிபட்டுக்கொண்டே இருக்கிறதே என்று சலித்துக்கொள்ளுகிறார்கள். அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்கு வெளியே இருந்தால் சந்தோஷம் உங்களுக்கு தூரமாயிருக்கும். பவுல் எழுதும்போது கர்த்தருக்குள் என்று எழுதுகிறார்.

கர்த்தருக்குள் வருவதற்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அப்படிச் செய்தால்தான் நீங்கள் கர்த்தருக்குள் வரமுடியும். எல்லோரும் கர்த்தருக்குள் இருப்பவர்களல்ல. நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் அங்கமாக்கப்படும்போது நீங்கள் கர்த்தருடையவர்கள். அப்பொழுது கர்த்தருக்குள் இருப்பீர்கள். கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொண்டு நடப்பீர்கள். ஆகையால் பொல்லாப்பு உங்களுக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. நீங்கள் எது வந்தபோதும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கமுடியும். என் தேவன் எனக்காக யுத்தம் செய்வார் என்று அமைதலோடே இருந்து கர்த்தர் செய்யும் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்.

அப்.பவுல் எபே.5:16-ம் வசனத்தில் "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" என்கிறார். நாட்கள் உருண்டோடுகிறது. இப்பொழுது இரண்டாயிரத்துக்குப்பின் உள்ள காலத்தில் வாழ்ந்துகொண்டுஇருக்கிறோம். இக்காலங்கள் போனவிதம் தெரியவில்லை. மனிதனுடைய நாட்கள் புல்லின் பூவைப்போல கடந்துபோகிறது. ஆகையால் இந்நாட்களை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வழி என்ன? இருக்கிற நாட்களை நலமானவைகளாக ஏற்றுக்கொண்டு அவைகளில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும். நாளை என்பது நம்முடையது அல்ல. ஒரு நாள் பிறப்பதை நீ அறியாயே என வேதம் சொல்லுகிறது. ஆகையால் இன்றே இரட்சணிய நாள். இன்றே மனந்திரும்பி தேவனுக்கு ஏற்றவைகளைச் செய்ய பிரயாசம் எடுத்து காலத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கலா.6:2-ம் வசனத்தில் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்கிறார். ஆம், நாம் பிரமாணத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்புடையவர்களாய் நடந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பது. ஒருவகையான ஊழியம். அதைப்போல பிறருடைய கஷ்டங்களை பகிர்ந்துகொண்டு அவர்களோடு ஒத்துழைப்பது மற்றொருவகையான ஊழியம். எந்த ஒரு ஊழியமும் கர்த்தருடைய பார்வையில் குறைவானது அல்ல. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும்போது கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இவைகளில் தேர்ச்சியடைந்திருந்தனர். பவுலுக்கு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் மிகவும் உதவியாயிருந்தார்கள். இப்படிச்செய்யும்போது கர்த்தருடைய பணி தடையில்லாமல் நடைபெறும். உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. உலகம் உலகத்தை சிநேகிக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பது புதிய உற்சாகத்தை ஏற்படுத்தும்.

2கொ.6:17-ம் வசனத்தில் "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்". கிறிஸ்தவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாயிருக்கிறான். இதை முதலாவது ஒரு கிறிஸ்தவன் புரிந்துகொண்டு, பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து, அசுத்தமானவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருக்கவேண்டும். இவ்வசனத்தை மீறி அநேகர் பாவத்திற்குள் மூழ்கிவிடுகின்றனர். ஆகையால் பலவிதமான சூழ்நிலைக்குள்ளாக தள்ளப்படுகிறார்கள்.

1கொ.10:33-ம் வசனம் "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும் தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்". எந்த ஒரு மனிதனுக்கும் நாம் இடையூராக ஜீவிக்கக்கூடாது. அவனவன் செய்கிற காரியத்திற்கு ஏற்ற பலனை தேவனால் பெற்றுக்கொள்ளுவான். உலகத்தில் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு மனுஷனுக்கும் நாம் இடறலற்றவர்களாகவே இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் சுயாதீனமுள்ளவர் களாயிருக்கிறோம். யாரும் யாருக்கும் அடிமைகளல்ல. நாம் யாவரும் தேவனுடைய கரங்களில் உண்டாக்கப்பட்டவர்கள். மற்றவர்களுடைய காரியங்களுக்கு நாம் உதவியாயிருக்கவேண்டும், உபத்திரவ மாயிருக்கக்கூடாது. அதைபோல தேவனுடைய சபைகளுக்கு இடையூராக இருக்கக்கூடாது. பவுல் சபைகளை துன்பப்படுத்தினான். அப்பொழுது கர்த்தர் அவனை சந்தித்து நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார். அவன்



மனமாற்றப்பட்டு கர்த்தருக்கு ஏற்றமனிதனாக அவருடைய ஊழியத்தை கட்டுகிறவனாக மாறினான். நீங்களும் யாவருக்கும் இடறலற்றவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள்.

ரோ.12:10-ம் வசனம் "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" என படிக்கிறோம். சகோதரசிநேகம் என்பது அது அற்புதமானது. சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையானது என தாவீது பாடுகிறார். அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும். தேவன் அவர்களுடைய வேண்டுதலைகேட்பார். அதைப்போல ஒருவரையொருவர் கனம்பண்ணுகிறதிலும் முந்திக்கொள்ளவேண்டுமென பார்க்கிறோம். சபைக்கு வருகிறவர்கள் அவர் முதலாவது நமக்கு ஸ்தோத்திரம் பண்ணட்டும் பின்பு நாம் பண்ணுவோம் என்று அநேகர் நினைப்பதுண்டு. ஆனால் வசனம் இவைகளில் நாம் முந்திக்கொள்ளவேண்டுமென போதிக்கிறது. ஒருவரையொருவர் பார்க்கும்போது எவர்கள் கனம்பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுகிறார்களோ அவர்களே இந்தவசனத்தை நிறைவேற்று கிறார்கள்.

அப்.20:7-ம் வசனம் "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என ஒரு எச்சரிப்பை கொடுக்கிறது. கர்த்தருடைய சபையை கவனிக்கிற மூப்பர்கள் மிகவும் எச்சரிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். கடலுக்குள் மூழ்கி முத்து எடுக்கிறார்கள். அதை எடுத்தவர்கள் அதனை எவ்விதமாக பாதுகாப்பார்கள். தேவன் பிசாசின் கொடிய கோரப்பற்களிலிருந்து தமது மந்தையை தமது இரத்தத்தை சிந்தி சம்பாதித்து இருக்கிறார். அப்படி சம்பாதிக்கப்பட்ட சபை காக்கப்படவேண்டுமல்லவா?

யோவா.15:4-ம் வசனம் "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்". ஒவ்வொரு ஆண்டும் நாம் அவருக்கு ஏற்றகனிகளைக் கொடுக்கும்படியாக தேவன் விரும்புகிறார். அந்த கனிகள்: ஆவிக்குரிய கனிகள்; அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்ட கனிகள் நம்மில் நிறைந்து காணப்படவேண்டும். அதற்கு ஒரே வழி நாம் கர்த்தரில் நிலைத்திருக்கவேண்டும். எப்படி திராட்சை செடியில்

நிலைத்திருக்கும் கொடிகள் அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கிறதோ, அதைப்போல நாம் கர்த்தரிலும் அவருடைய உபதேசத்திலும் நிலைத்திருக்கும்போது அவருக்கேற்ற கனிகளைக் கொடுப்போம்.

லூக்.10:20-ம் வசனம் "ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" என்றார். இன்றைக்கு உங்களுக்கு சந்தோஷம் எந்த வகையில் வருகிறது. சிலர் கர்த்தருடைய நாமத்தினாலே அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் எங்களாலே பிசாசுகள் பயந்து ஓடுகின்றன என்று தங்களைக்குறித்து பெருமையாக சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் வசனம் உங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று சொல்லுகிறது. ஏனெனில் உம்முடைய நாமத்தினாலே நாங்கள் பிசாசுகளை துரத்தினோம் அல்லவா அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தோம் அல்லவா என்பார்கள்; அவர்களைப் பார்த்து அக்கிரம செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று கர்த்தர் அந்நாட்களிலே சொல்லுவார்.

மாற்.14:38-ம் வசனம் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்". சோதனைகளை சகிக்கிறவன் பாக்கியவான் என காண்கிறோம். பிசாசு இயேசுவையே சோதித்தான். ஆகையால் மனிதர்களாகிய நாம் அவனுக்கு முன்பாக எம்மாத்திரம் நம்மையும் பலவிதமான இச்சைகளாலே சோதிப்பான் மற்றும் பல விதமான கஷ்டங்களை உண்டுபண்ணுவான். ஆகையால் நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழிந்திருந்து ஜெபிக்கவேண்டும். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என காண்கிறோம். ஜெபத்திற்கு வல்லமையுண்டு கர்த்தர் ஜெபத்தை கேட்கிறார்.

கடைசியாக மத்.7:15-ம் வசனம் "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப்போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்கிறது. இன்றைய நாட்களில் கள்ளத் தீர்க்கதரிசிகள் பெருகி விட்டார்கள். பிசாசு ஒருவகையில் அப்படிப்பட்டவர்களை எடுத்து பயன்படுத்திவருகிறான். ஆகையால் அவைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். நாம் இச்செய்தியில் 12 வசனங்களை படித்தோம். இவை பன்னிரெண்டு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இவ்வருடத்தில் பன்னிரெண்டு மாதங்களுக்கு ஒவ்வொன்றாய் தியானித்து அதன்படி நடக்க உங்களை ஒப்புக்கொடுங்கள்.



**கேள்வி நேரம்**

**நாம் ஏன் அவருடைய வழிகளில் நடத்தப்படுகிறோம்?**

நிலையான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளும்படியாகவும், அவருக்குப்பிரியமானதை செய்யும்படியாகவும் நடத்தப்படுகிறோம். தாவீது சொல்கிறார்; "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என்கிறார் (சங்.73:24). ஆகையால் நம்மை அவருடைய வழியில் வேதவசனத்தின் மூலம் நடத்துகிறார். இந்த வழியில் நடக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 18. உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்

## Establish Your Heart

நம்முடைய இருதயம் சிலவேளைகளில் சோர்ந்துபோகிறது. சோர்ந்துபோவதால் பலவிதமான வேலைகள் பாதிக்கப்படுகின்றது. நம்மை சந்திக்க வருகிறவர்களிடம் முகம்கொடுத்து சரியாக பதில் சொல்லாமல், பார்த்துக்கொள்ளலாம் அல்லது மற்றொருநாள் பார்க்கலாம் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிடுகிறோம். இவைகளுக்கு நம்முடைய சோர்வு மிகப்பெரிய காரணமாயிருக்கிறது. யாக்கோபு சொல்லுகிறார்; "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக்.5:8). இருதயத்தை ஸ்திரப்படுத்துவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. "எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்" என்று மத்.19:15-ல் வாசிக்கிறோம்.

பொல்லாதவைகளின் பிறப்பிடமாக இருதயமானது இருக்கிறது. இதை முதலாவது சரிசெய்யும்போது எல்லாமே சரியாகிவிடும். இதை சரிசெய்வது ஒரு வைத்தியனாலோ அல்லது ஒரு விஞ்ஞானியாலோ முடியாது. பரிசுத்த வேதவசனமே அவைகளை சரிசெய்யமுடியும். இருதயங்களை அறிகிறவர் பரமவைத்தியர் நம்முடைய பிதாவாகிய தேவன். அவர் ஒருவரே இருதயங்களை அறியக்கூடியவர். மற்றொருவராலும் இருதயங்களை அறியமுடியாது. எரேமியா என்ற தீர்க்கன் சொல்லும்போது; "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளது மாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" என்று கேள்வி எழுப்புகிறார் (எரே,17:9). சரீரத்தில் உள்ள மற்ற அவயவங்களைப் பார்க்கிலும் இது மகா

கேடுள்ளது என காண்கிறோம். ஒரு மனிதன் தவறுசெய்ய முதலாவது தன்னுடைய இருதயத்திலே திட்டமிடுகிறான், பின்பு அதை நிறைவேற்றுகிறான். இதை ஒவ்வொரு நாளிதழிலும் படிக்கின்றோம்.

புதிய ஏற்பாட்டுகாலத்தில் முதல் நூற்றாண்டு சபையில் இருந்த அனனியா, சப்பீராளைக்குறித்து பார்க்கும்போது; பேதுரு அனனியாவைநோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்க வில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்க வில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்" (அப்.5;3,4). இந்த அனனியா கர்த்தருடைய போதனைகளை நன்கு அறிந்தவன். ஆனாலும் அவனுடைய இருதயம் அவனை வஞ்சித்தது. அவனுடைய இருதயத்தை சாத்தான் பொய்யினால் நிரப்பினான். நிலத்தில் விற்ற ஒரு பங்கை வஞ்சித்து வைத்து தன் மனைவி அறிய பொய்சொன்னான். அவன் இப்படி பொய் சொன்னதற்கு காரணம் என்னவாயிருக்கும்? அவன் ஒருவேளை அப்போஸ்தலர்களை நம்பாமல் தனக்காக ஒரு பங்கை எடுத்துவைத்திருக்கக்கூடும் அல்லது எல்லாமே செலவு செய்து விட்டால் இந்த பணத்தை வைத்து ஜீவியம் செய்யலாம் என்று எண்ணியிருக்கக்கூடும்.

பொய் சொல்லுகிறவர்கள் ஒரு நோக்கத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த நோக்கம் பிசாசு கொடுக்கும் ஆலோசனையாக இருக்கிறது. இருதயம் சிலவேளைகளில் அவிசுவாச எண்ணங்களை பிறப்பிக்கும். அப்படிசெய்யும்போது மற்ற அவயவங்களும் தேவனுக்கு விரோதமாக செய்யத்தூண்டப்படும். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, உங்களுடைய இருதயம் எப்படிப்பட்டவைகளை சிந்தித்துக் கொண்டிருக்கிறது. முதல் நூற்றாண்டு சபையில் வாழ்ந்த இந்த அனனியா சப்பிராள் பொல்லாத சிந்தனைகளுக்கு நேரே இழுப்புண்டு பொய்சொன்னார்கள். அவர்களுடைய இருதயம் அவர்களை மோசம் போக்கியது. ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வஞ்சிக்கப்பட்டு மோசம்போகாதிருக்க உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்.

ஒரு மனிதனுடைய இருதயத்தின் நினைவு எப்படிப்பட்டதாயிருக்கிறது? நித்தமும் பொல்லாததாயிருக்கிறது என காண்கிறோம். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம்



பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி.6;5,6). மனிதனை பூமியில் உண்டாக்கின கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அந்த அளவு மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது. இப்பொழுதும் அவைகளை நாம் காணமுடிகிறது. ஒரு தோட்டக்காரன் நல்ல தரமுள்ள விதைகளை விதைத்திருக்கும்போது அது வளர்ந்து கனிகொடுக்கும் சமயத்தில் ஆகாத கனிகளை கொடுத்தால் அந்த தோட்டக்காரனின் மனம் எந்த அளவு வேதனை கொள்ளும். அதைப்போல தேவன் மனிதனை மிகவும் நேர்த்தியாக உண்டாக்கினார். அவனுக்கு தமது ஜீவசுவாசத்தை நாசியில் ஊதினார். அவன் ஜீவஆத்துமாவானான். இப்பேர்பட்ட மனிதன். அனைத்து ஜீவராசிகளிலும் விசேஷித்த விதமாக உண்டாக்கப்பட்டவன் அவனுடைய நினைவுகள் நித்தமும் பொல்லாதவைகளாக இருந்தால் உண்டாக்கினவர் எவ்வளவு வேதனை கொள்ளுவார் என்பதை எண்ணிப்பாருங்கள். பூமியில் மனிதர்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள், பொல்லாதவர்களுடைய கூட்டம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் நம்முடைய இருதயத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு கர்த்தருடைய சித்தம் செய்ய முற்படவேண்டும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என மத்.5:8-ல் மலைப்பிரசங்கத்தில் கர்த்தர் சொல்லியிருக்கிறார். நம்முடைய இருதயத்தில் நாம் சுத்தமுள்ளவர்களாக இருக்கும்போது பாக்கியவான்களாக இருப்போம்.

அங்கே அசுத்தத்திற்கு இடமில்லை. யோபு என்ற தாசனைக்குறித்து வேதகமம் இப்படியாக சொல்லுகிறது; அவன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவன் குமாரர், அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம்பண்ணும்படி அழைப்பார்கள். "விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு; ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிளெல்லாம் செய்துவருவான்" (யோபு.1:5).

தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுடைய பிள்ளைகள் எப்படியிருப்பார்கள் அவர்களும் அவனைப்போலவே இருப்பார்கள் என்று தான் நாம் நினைப்போம். ஆனால் இங்கு யோபு தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு

விலகுகிறவனாயிருந்தாலும், அவனுடைய பிள்ளைகள் ஒருவேளை தேவனை தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இவ்விதமான பெற்றோர்களை பார்த்திருக்கிறீர்களா? தங்களுடைய பிள்ளைகள் பாவம் செய்திருந்தாலும் அவன் ஒன்றும் அப்படிசெய்திருக்கமாட்டான் என்று ஆணித்தரமாக சொல்லுவார்கள். அப்படிப்பட்ட பெற்றோர்களையே நாம் காண்கிறோம். இருதயமானது பொல்லாதவைகளை உருவாக்கும் பிறப்பிடமாக இருக்கிறது என்பதை மறந்துபோகக்கூடாது. ஆகையால் யோபு தன்னுடைய பிள்ளைகள் தேவனை தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவன் அவ்வப்போது அவர்களை பரிசுத்தப்படுத்திக்கொண்டு வந்தான். நீங்களும் உங்களுடைய பிள்ளைகளை யோபுவைப்போல பாதுகாக்கவேண்டிய கடமையுள்ளவர் களாயிருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகவேண்டாம். பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து எனவேதம் நமக்குபோதிக்கிறது. ஆகையால் அவர்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள். பொல்லாத இருதயத்தை மாற்றிப்போடுங்கள்.

மூன்றாவது நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தவேண்டும். தாவீது சொல்லுகிறார்; "என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்" (சங்.57:7). எந்த ஒருவேலைக்கும் ஆயத்தம் மிக முக்கியமானது. ஆயத்தமில்லாதவேலை அது சரிவர நிலைப்படாது என காண்கிறோம். ஒரு வேலையை சிறப்பாக செய்ய ஆயத்தம் அவசியம். தேவனை ஆராதிக்கும்படியாக இருக்கிறவர்கள் முந்தினநாளே ஆயத்தப்படுகிறார்கள். அப்படிச்செய்யும்போது அவர்கள் சிறப்பாக தேவனை ஆராதிக்கமுடியும். தாவீது என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது என்கிறார். அவர் எப்பொழுதும் தேவனை துதிக்க தன் இருதயத்தை ஆயத்தமாக வைத்திருந்தார்.

மேலும், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்" என்கிறார் (சங்.31:24). காத்திருப்பது இருதயத்தை இளைக்கப்பண்ணும். ஆனால் தாவீது கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள் என்கிறார். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குப் போய் சேர நாற்பது வருடங்கள் ஆனது அதுவரை அவர்கள் காத்திருந்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கை பெற நூறு வயதுவரை காத்திருந்தான். அதைப்போல அநேகர் தேவனுடைய வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை பெற காத்திருந்தனர். மேலும் அவர்கள் திடமனதாயிருந்தனர். அதாவது நம்பிக்கையோடிருந்தனர். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன்



அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் என்ற வசனத்தின்படி திடமனதுடனே காத்திருந்தனர். அப்படிப்பட்டவர்களை தேவன் ஸ்திரப்படுத்துகிறார்.

மேலும், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என எபி.12:14-ல் வாசிக்கிறோம். சமாதானமாயிருக்கும் படியே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இயேசுவும் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்றார். இந்த சமாதானத்தை எந்த அளவு நாம் கைக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம்? வசனம் யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள் என போதிக்கிறது. இதை நம்முடைய வாழ்க்கையில் கைக்கொள்ளாவிட்டால் நம்முடைய இருதயம் பொல்லப்பானவைகளை சிந்திக்கும் அதை செயல்படுத்த தூண்டும். சமாதானமில்லாமலும், பரிசுத்தமில்லாமலும் கர்த்தரை ஒருவரும் தரிசிக்கமுடியாது என காண்கிறோம். தேவன் பரிசுத்தர் அவரைப்போல எல்லோரும் பரிசுத்தமாகவேண்டும் என்பதுவே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள். **பரிசுத்தம் நம்மை பரலோகம் கொண்டு சேர்க்கும். அசுத்தம் நம்மை அழிவுக்கு கொண்டுபோய் சேர்க்கும்.** நீங்கள் எதை நாடப்போகிறீர்கள்? பரிசுத்தத்தையா அல்லது அசுத்தத்தையா, இன்றே தீர்மானம் செய்யுங்கள். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல என காண்கிறோம்.

நாம் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். ஆகையால் உங்கள் இருதயத்தை பரிசுத்த சிந்தைக்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். உங்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள். இழிவான இச்சைகளுக்கு இடங்கொடாமல், பரிசுத்தமான வசனங்களை உங்களுடைய இருதயங்களில் எழுதுங்கள். வானமும் பூமியும் அதில் உள்ள யாவும் ஒருநாளில் அழிந்துபோகும். ஆனால் கர்த்தருடைய வசனங்களோ ஒருக்காலும் ஒழிந்துபோகாது என வேதத்தில் வாசிக்கிறோம். இச்செய்தியில் நாம் தியானித்தபடி உங்களுடைய இருதயத்தை பொல்லாத சிந்தனைகளுக்கு இடங்கொடாதிருங்கள். உங்களுடைய இருதயத்தின் நினைவுகள் பரிசுத்த முள்ளவைகளாக இருக்கட்டும். உங்களுடைய இருதயத்தில் ஆயத்தமாக இருந்துகொண்டு கர்த்தரை துதியுங்கள்.

**"ஞானிகளின் உதடுகள் அறிவை இறைக்கும்;**
**மூடரின் இருதயமோ அப்படியல்ல" ( நீதி. 15:7 )**

**கேள்வி நேரம்**

**மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்கு செம்மையானவைகளா?**

ஆம், "மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்கு செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்" (நீதி.21:2). தலையிலுள்ள முடியை எண்ணிவைத்திருக்கிறவருக்கு இருதயத்தை நிறுத்துப்பார்ப்பது பெரியகாரியமல்ல. கர்த்தர் ஒவ்வொருவருடைய வழியையும் அறிகிறார். மனிதர்கள் தங்களுக்கு செம்மையாக தோன்றுகிற வழிகளில் சென்று வீணாய்போகிறார்கள். உங்களுடைய இருதயம் சரியாயிருக்கும்போது உங்களுடைய வழியும் சரியாய் இருக்கும். மனிதன் முகத்தைப் பார்ப்பான் ஆனால் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்ற வசனத்தின்படி கர்த்தர் இருதங்களை ஆராய்ந்து அறிகிறார். உங்களுடைய வழியை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து உங்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது.

## 19. மீதியான இஸ்ரவேலர்
## The Remnant of Israel

இஸ்ரவேலர் மிகுந்த ஜனமாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். எகிப்து ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போகாதபடிக்கும் நாம் அவர்களைக்குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும் என்று சொல்லி அவர்களை சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கினார்கள் என்பதை நாம் யாத்திராகம புத்தகத்தில் படிக்கிறோம்.

அந்த அளவு இஸ்ரவேலர் பெருகினார்கள். இவ்வளவு பெருகினாலும் தேவன் இஸ்ரவேலில் மீதியான ஜனங்களையே அதிகமாக நேசித்தார். அதற்கு காரணம் என்னவென்றால்; "உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன் அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள். இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய்பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவது மில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள்" (செப்.3:12,13). இந்த



மீதியான இஸ்ரவேலரிடமிருந்து நாம் ஐந்து காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

**1. கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள்.** உலகமும் உலகப்பொருள்களுமே எங்கள் நம்பிக்கை என்று வாழ்ந்து கொண்டிருக்கிற கோடிக்கணக்கான ஜனங்கள் மத்தியில் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருந்தவர்கள் மீதியான இஸ்ரவேலர்கள். இன்றைக்கு சபைக்கு அநேகர் வரவில்லையென்றால் இருக்கிறவர்களிலும் சிலர் நின்றுவிடுவார்கள். அதில் மீதமானவர்கள் இருப்பார்கள் அப்படிப்பட்டவர்கள் மீதியானவர்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பவர்கள். "கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று எரேமியா புத்தகத்தில் படிக்கிறோம் (எரே.17:7). உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் யாரை நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்? மனுஷனை நம்பி மோசம்போனவர்கள் இவ்வுலகத்தில் எண்ணிலடங்காதவர்கள். அதில் நீங்களும் ஒருவராயிருக்கலாம். தாவீது தமது சங்கீத புத்தகத்தில் "நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" என்கிறார் (சங்.91:2).

இவரைப்போல உங்களுடைய தேவனை முழு நம்பிக்கையாக கொண்டிருக்கிறீர்களா? ஒருமுறை இஸ்ரவேல் ஜனங்களே பயந்துகொண்டிருந்தபோது; தாவீது கோலியாத் என்ற பெலிஸ்தனை நோக்கி: "நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றார் (1சாமு.17:45). கர்த்தருடைய நாமத்தினாலே சென்ற தாவீது அந்த பெலிஸ்தனை ஒரு கவண் கல்லினாலே விழச்செய்தார். கர்த்தருடைய நாமமே தாவீதுக்கு வெற்றியை தேடித்தந்தது. உங்களுடைய நம்பிக்கையும் கர்த்தருடைய நாமத்தில் இருக்குமானால் நீங்களும் வெற்றியடைவீர்கள்.

**2. இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்யவில்லை.** அநியாயக்காரர்கள் பெருகிக்கொண்டு போகிற காலத்தில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்யாமல் கர்த்தருக்குப் பயந்துநடந்தார்கள். நீங்கள் யாருக்காவது அநியாயஞ்செய்ததுண்டா? ஆண்டவர் இயேசுவைப் பற்றி வேதத்தில் படிக்கிறோம், மயிர்கத்திரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல அவர் வாய்திறவாதிருந்தார். அவர் ஒருவருக்கும்

அநியாயஞ்செய்யவில்லை. எங்கும் எப்பொழுதும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் என காண்கிறோம்.

நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாய் இருக்கிறார். ஆகையால் ஒருவருக்கும் அநியாயஞ்செய்யாமல் நன்மைசெய்ய நாடுங்கள். "சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்" என ரோம.2:8-ல் வாசிக்கிறோம். நீங்கள் சத்தியத்தை நேசிக்கும் மக்களாக இருப்பீர்களென்றால், அநியாயத்துக்கு விலகி உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**3. அவர்கள் பொய் பேசுவதுமில்லை.** பொய்யர் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கிறார்கள். ஆனால் இஸ்ரவேலிலே மீதியானவர்கள் பொய் பேசாதிருந்தார்கள். பொய்பேசுகிறவர்களை தேவன் தண்டியாமல் விடார் என காண்கிறோம். "பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்; உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்" என்றார் தாவீது (சங்.119:163). அருவருக்கக்கூடிய பொருளைப்போல தாவீது பொய்யை அருவருத்திருக்கிறார். அதேவேளையில் வேதத்தை நேசித்திருக்கிறார். உங்களுடைய அருவருப்பு எது? உங்களுடைய நேசம் எது? தாவீதைப்போல பொய்யை அருவருத்து அதை உங்களை விட்டு விலக்கிப்போடுங்கள். தேவன் கொடுத்த வேதத்தை அநுதினமும் நேசித்து அதை பற்றிக்கொண்டிருங்கள். சிலர் தேவனுக்காகத்தான் இந்த பொய்யை சொன்னோம் என்பார்கள். அப்படிப்பட்டவர்கள் கவனிக்கவேண்டும். இதுகுறித்து பவுல் சொல்லும்போது; "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே" என்கிறார் (1கொரி.15:15).

தேவனுக்காக நாம் பொய்சொல்லவேண்டிய அவசியமில்லை. தேவன் அதை ஏற்றுக்கொள்ளார். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் அதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என வேதத்தில் படிக்கிறோம். ஆகையால் மீதியான இஸ்ரவேலரைப்போல நாமும் கொஞ்ச ஜனங்களாக இருந்தாலும் தேவனுக்காக வைராக்கியமுள்ளவர்களாகவும் அவருடைய நாமத்தில் நம்பிக்கையுள்ளவர் களாகவும், பொய்யை பகைக்கிறவர்களாகவும் இருந்து கொண்டு சாட்சியுள்ள மக்களாக ஜீவிக்கவேண்டும்.



**4. வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை.** ஆம், அவர்கள் ஒருவரையும் வஞ்சிக்கவில்லை. பிசாசு ஏவாளை வஞ்சத்தபடியால் பாவம் உள்ளே பிரவேசித்தது. வஞ்சிக்கிறவர்கள் பிசாசின் மக்களாக இருக்கிறார்கள். இஸ்ரவேலில் மீதியானவர்கள் மற்றவர்களை வஞ்சிக்காதவர்களாயிருந்தார்கள். உலக மக்கள் ஒவ்வொரு நாளும் பலரால் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள் என்று பல செய்திதாள்கள் வாயிலாக அறிகிறோம். வஞ்சிக்கிறவர்கள் பரலோகபாக்கியத்தை சென்றடைய மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் பிசாசுக்காகவும் அவன் தூதனுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இடத்தில் பங்கடைவார்கள். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். வஞ்சகநாவு இல்லாதவர்கள் சுத்தமானவர்களாக இருக்கிறார்கள். "இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்" என்று வெளி.14:5-ல் படிக்கிறோம். நீங்கள் கர்த்தருக்காக வாழும் ஜனங்களாக இருப்பீர்கள் என்றால்; இஸ்ரவேலிலே மீதியான ஜனத்தைப்போல வஞ்சகநாவு இல்லாதவர்களாக இப்பூமியில் வாழவேண்டும். கர்த்தர் ஒருவரையும் அவர் ஏமாற்றுகிறவர் அல்ல.

அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் என வேதம் அவரைக்குறித்து சொல்லுகிறது. நீங்கள் கர்த்தருடையவர்களாயிருப்பீர் களானால் நீங்களும் அவ்விதமாகவே இருக்கவேண்டும். தேவன் அதையே எதிர்பார்க்கிறார். கோணலும் மாறுபாடுமான ஜனத்தின் மத்தியில் நீங்கள் குற்றமற்றவர்களாக ஜீவிக்கவேண்டும். உலக மக்களைப்பார்த்து நீங்கள் ஏமாந்துபோகாதிருங்கள். உலகம் உலகத்தை சிநேகிக்கும். நீங்கள் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தையும் நம்பி பற்றிக்கொண்டிருங்கள். ஏற்றகாலத்தில் தேவனால் நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்.

**5. அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப்படுத்துக்கொள்வார்கள்.** எப்பொழுது பார்த்தாலும் ஓயாத சண்டைகளும், இழப்பீடுகளும், பொருட்சேதங்களும் இருந்த நாட்கள் சென்று மிகவும் அமைதியான சூழ்நிலைக்கு இஸ்ரவேலர் கொண்டு செல்லப்பட்டார்கள். சமாதானக் கர்த்தருக்கு நேராக வழிநடத்தப்பட்டார்கள். "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" என்று சொல்லிய ஏசாயா தீர்க்கனுடைய வாய்மொழியின்படியே அவர்களுக்கு இருந்த சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போனது (ஏசா.35:10). நாம் கவனிக்க வேண்டிய ஒரு

பகுதியிருக்கிறது. அது என்னவென்றால்; கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்ற ஒரு வார்த்தையை பார்க்கிறோம்.

ஆம், அன்பானவர்களே, இஸ்ரவேலிலே மீதியானவர்கள் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள். அவர்கள் வேறொங்கும் செல்லாமல் திரும்பி ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு போனார்கள். எல்லாவற்றையும் இழந்து, உடமைகளை இழந்து, உறவை இழந்து, பசியோடும் பட்டினியோடும் அண்டை நாடுகளுக்கு தஞ்சம்புகக்கூடியவர்களுக்கு இப்படிப்பட்ட ஆனந்த களிப்பு உண்டாகுமா? எங்கள் தேவன் எங்கே எங்களை கைவிட்டார். இதோ நாங்கள் அகதிகளாக மற்றநாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளோம் என்று ஓலமிடுவார்கள். ஆனால் இஸ்ரவேலிலோ மீதியானவர்கள் என்ன வந்தாலும் கர்த்தருடைய நாமத்தில் நம்பிக்கையாக இருந்தவர்கள். ஆகையால் எங்கள் தேவன் எங்களோடே இருக்கிறார். இம்மட்டும் எங்களை காத்த தேவன் இனிமேலும் காக்க வல்லவராயிருக்கிறார் என்று சொல்லி; அவர்கள் மீண்டும் சீயோனுக்கு சென்றார்கள். பழையதை மறக்கவில்லை. சிலருக்கு இழப்பீடு வந்தவுடன் பழைய நிலையை மறந்துவிடுவார்கள். இவர்களோ சீயோனுக்கு சென்று நித்திய மகிழ்ச்சியை பெற்றுக்கொண்டார்கள். தேவன் அவர்களுக்கு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தார். பயப்படுத்துவாரில்லாமல் சந்தோஷமாயிருந்தார்கள்.

ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள்; "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்றார் (மத்.10:28). இந்த நம்பிக்கை எப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருக்கும்? கர்த்தருக்காக காத்திருக்கும் மீதியான ஜனங்கள் மத்தியில் இருக்கும். மனிதனால் சரீரத்தை மாத்திரமே கொல்ல முடியும். ஆனால் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவர் தேவன் ஒருவரே அவருக்கே பயப்படுங்கள் என்கிறார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, இஸ்ரவேலில் மீதியானவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள், அவர்கள் அநியாயஞ்செய்யவில்லை, பொய்பேசவில்லை, வஞ்சக நாவு அவர்களுடைய வாயில் கண்டுபிடிக்கப்படவில்லை, மேலும் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொண்டார்கள். அவர்களை அழைத்த தேவன் அவர்களோடு இருந்து அவர்களை காத்தார்.

நீங்கள் ஒருவேளை இந்த மீதியான ஜனங்களைப்போல இருக்கலாம். கவலைப்படாதிருங்கள், அவர்களுக்கு இருந்த நம்பிக்கை உங்களிடமும் இருக்கட்டும். இயேசுவின் இரண்டாம் வருகையில் அவரோடு



எடுத்துக்கொள்ளப்பட்டு நித்தியமானவரை நித்திய நித்தியமாக தரிசித்து அவரோடு என்றென்றும் இருக்கும் பாக்கியத்தை பெறுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**மீதியான இஸ்ரவேலுக்கு கர்த்தருடைய வாக்குதத்தம் என்ன?**

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார் (எரே.15:11). வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அந்தப்படியாக இஸ்ரவேலுக்கு சகாயஞ்செய்தார். அதைப்போல உங்களுக்கும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். **அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம் நித்திய ஜீவனை கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.** யாருக்கு? முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவர்களுக்கு, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு, இந்த வாக்குத்தத்தத்தை செய்திருக்கிறார். இஸ்ரவேலிலே மீதியானவர்கள். மிகவும் பொறுமையுடனிருந்து சீயோனுக்கு வந்தார்கள். சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போனது. மேலும் நெருக்கத்தின் காலத்தில் அவர்களுக்காக சத்துருவுக்கு எதிர்ப்பட்டு அவர்களுக்காக யுத்தம் செய்தார்.

ஆம், அன்பானவர்களே, உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் வாக்குமாறாதவராயிருக்கிறார். ஆகையால் சோர்ந்துபோகாமல் அவருக்காக காத்திருங்கள். மீதியான இஸ்ரவேலரோடு இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார். அவர்களைப்போல ஐந்து காரியங்களிலும் நிலைத்திருங்கள். உங்களுக்காக ஜெபம் பண்ணுகிறோம்.

## 20. கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார்

## The Lord Builds the House

"**க**ர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா" என சங்கீதத்தில் வாசிக்கிறோம் (சங்.127:1). ஆம், கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார். அநேக வீடுகள் பிரிந்து இருக்கிறது. காரணம் என்ன? தேவனுடைய சித்தத்தின்படி அவர்கள் இணைக்கப்படவில்லை. தேவனுடைய சித்தத்தை புரிந்து அவர்கள் தேவனால் இணைக்கப்பட்டிருப்பார்களேயானால் அவர்களுடைய வீடு கட்டப்படும். அதை கட்டுகிறவர் கர்த்தராக இருக்கிறார்.

அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் வீடு வாசல்களை ஏற்படுத்திவைக்கிறார். "தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்; துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்" (சங்.68:6). வீடுகட்டுவது என்பது சாதாரண விஷம் அல்ல. வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தை முடித்துப்பார் என்று சொல்வார்கள். அதில் அவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது. கர்த்தரை நம்பிக்கையாக கொண்டிருப்பவர்களுக்கு தேவன் வீடுவாசல்களை ஏற்படுத்திக் கொடுக்கிறார். இஸ்ரவேலர்கள் கானானை சுதந்தரித்துக்கொள்ளும்போது, கட்டாத வீடுகளிலும், நடாத திராட்சத் தோட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள். அவர்களை 40 வருஷகாலமாக வழிநடத்திக்கொண்டுவந்த தேவன் இதைச் செய்தார். மேலும் அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராதபடி பாதுகாத்தார். "எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.91:9,10). இஸ்ரவேலை வனாந்தரத்தில் வழி நடத்திக்கொண்டுவந்த தேவன் அவர்களுக்கு ஒரு குறைவுமின்றி வழிநடத்திக்கொண்டு வந்தார். அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை, அவர்களுடைய வஸ்திரம் பழையதாய் போகவில்லை. அவர்களுக்கு எந்தவிதமான வியாதிகள் வந்ததாக நாம் காணவில்லை. தாகத்தை தீர்க்க தண்ணீரும், பசியைபோக்க மன்னாவினாலும் அவர்களை திருப்தியாக போஷித்து வழிடந்திக்கொண்டு வந்தார்.

இன்றைக்கு திருமணத்தை முடிக்கிறார்கள், வீட்டைக்கட்டுகிறார்கள், ஆனால் நோயினால் மிகவும் வேதனை அடைகிறார்கள். ஆனால், நோயற்ற வாழ்க்கை வாழ்கிறவர்கள் கொஞ்சப் பேர்களே, 50 வயதிற்குமேல் அநேகர் நோயினால் தாக்கப்படுகிறார்கள். வனாந்தரத்தில் வழிநடத்தப்பட்டவர்கள் ஆறு லட்சத்திற்கும்மேலானவர்கள் அவர்களுக்கு பகலில் மேகமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் தேவன் முன்னே சென்றார். அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை தாபரமாககொள்ளும்போது பொல்லாப்பு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழியை கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டுமானால் நீங்கள் வீட்டைக்கட்டும் கர்த்தருக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

ஒரு குடும்பம் சிறப்பாக கட்டப்பட அதற்கு உறுதுணையாக இருப்பது பெண்களே. ஆகையாலே "தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு



உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). அந்தப்படியாக ஆதாமுக்கு ஏற்றதுணையாக ஏவாளை கொடுத்தார். அவள் அவனுக்கு ஏற்றதுணையாக இருந்து செயல்பட்டாள். அவர்களுடைய குடும்பம் கட்டப்பட்டது. ஏவாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு காயின் என்று பெயரிட்டார்கள். இந்த முதலாவது வீட்டைக் கர்த்தர் கட்டினார். அநேக குடும்பங்கள் தொடர்ந்து ஏற்ற துணையாக இருக்கக்கூடிய பெண்களைக் கொண்டு கட்டப்பட்டு வருகிறது இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? குடும்பத்திற்கு தலைவனாக கணவன் இருந்தபோதிலும் குடும்பத்தை கட்டுகிற விஷயத்தில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" என நீதிமொழிகளில் வாசிக்கிறோம் (நீதி.14;1). தலைவன் எவ்வளவு பெரிய வேலையில் இருக்கட்டும், அவன் கைநிறைய சம்பாத்தியம் செய்யட்டும். அவன் வீட்டிற்கு வரும்வேளையில் அவனை புன் சிரிப்போடு வரவேற்கும் பெண்கள் இருப்பார்களேயானால் அவனுக்கு சந்தோஷம் ஏற்பட்டு அந்த வீடு கர்த்தருடைய ஆசீர்வாத்தைக் காணும். ஒருவேளை கணவன் வரும்வேளையில் அவள் தன்சேலையை வறிந்து கட்டிக்கொண்டு, தட்டு முட்டுகளை உருட்டிக்கொண்டு வந்த கணவனை வரவேற்காமல் அவனுக்கு ஒரு டம்ளர் தண்ணீர்கூட கொடாமல் தடதடவென்று வீட்டுவேலைகளை கவனித்துக்கொண்டிருப்பாளேயானால் அந்த வீட்டில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்குமா என்பதை எண்ணிப்பாருங்கள். வீட்டைக் கட்டுகிற விஷயத்தில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. அவர்களாலே வீட்டைக் கட்டவும் முடியும் அவர்களாலே அந்த வீட்டை இடிக்கவும் முடியும் என வேதம் நமக்குப்போதிக்கிறது. இதில் புத்தியுள்ள ஸ்திரீயின் பங்கையும் புத்தியில்லாத ஸ்திரீயின்பங்கையும் காண்கிறோம்.

சூனேமியாள் என்ற ஒரு பெண் கர்த்தருடைய தீர்க்கதரிசியை எவ்வளவு மதித்து இருக்கிறாள் என்பதை நாம் 2இரா.4:10-வது வசனத்தில் படித்துத்தெரிந்துகொள்ளுகிறோம். அவள் தன் கணவனிடம்; "நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்". நம்மில் எத்தனைபேர் இவ்விதமாக தேவனுடைய மனிதர்களை மதித்து அவர்களுக்கு வேண்டியவற்றை ஆயத்தம் செய்துவைக்கிறோம். இதை சூனேமியாள் ஒரு புத்தியுள்ள ஸ்திரீ. தன் வீட்டின்மேல் உள்ள இடத்தில் ஒரு அறையை உண்டுபண்ண தன் கணவனிடத்தில் அனுமதிபெற்று தங்களிடம்

வந்த தேவமனிதனை தங்கவைத்தாள். கர்த்தர் கொடுத்த வீட்டில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

அந்த வீட்டில் ஒரு பகுதியை ஆண்டவருடைய பணிக்கென கொடுக்க முன்வருகின்றீர்களா? இன்றைக்கு அநேக வீடுகளில் சபை ஆராதனை நடக்கிறது. அதற்கு காரணம் என்ன? சபைக்கு இடம் இல்லை ஆகையால் வீடுகளில் கூடி தேவனை ஆராதனை செய்கிறார்கள். குறிப்பாக இந்த ஆராதனைக்காக இடம் கொடுக்கிறவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களே! அன்பானவர்களே, புறஜாதிகளுடைய வீட்டைப்பாருங்கள். சாமி ரூம் என்று ஒரு அறையை ஒதுக்கிவைத்துவிடுவார்கள். அந்த அறைக்குள் குளிக்காமல் போகமாட்டார்கள். அதில் அநேக விக்கிரக படங்களை மாட்டிவைத்து பூஜைசெய்வார்கள். தேவனை அறியாத அல்லது கர்த்தரை அறியாத அந்த ஜனங்கள் மத்தியில் இருக்கக்கூடிய விசுவாசம் கூட நம்மில் இல்லாவிட்டால் நாம் அவர்களிலும் மோசமானவர்களாகிவிடுவோம். வீட்டைக்கட்டுகிறவர் கர்த்தர் ஆகையால், தேவனுக்கு முதலிடம் கொடுப்போம்.

கர்த்தர் வீட்டைக் கட்டுகிறவர் மாத்திரமல்ல, அந்த சந்ததிகளை ஆசீர்வதிக்கிறவரும்கூட. "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதி.18:19). கர்த்தர் ஆபிரகாமின் மீது அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். ஆகையால் அவன் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறான். அவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கட்டளையிட்டு சொன்னது நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்பதே.

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்கு வீடுகளை கட்டிவைத்திருக்கிறீர்கள், பலவிதமான பொருள்களை சவதரித்து வைத்திருக்கிறீர்கள், நிலங்களை சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள். ஆனால், ஆபிரகாமைப்போல உங்களுடைய பிள்ளைகளுக்கு நீதி நியாயங்களை செய்யவும் கர்த்தருடைய வழியைக் காத்துநடக்கவும் போதனை கொடுத்திருக்கிறீர்களா? நாங்கள் எல்லாம் செய்தோம் ஆனால் கர்த்தருடைய போதனையை மட்டும் கொடுக்க தவறிவிட்டோம் என்பீர்கள். ஆம், இன்றைக்கு அநேக குடும்பங்கள் நல்ல கல்வியை பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்கள், நல்ல வசதி வாய்புகளை ஏற்படுத்திக்கொடுக்கிறார்கள். கொடுக்கவேண்டிய நல்ல போதனைகளை கொடுக்க மறந்துவிடுகிறார்கள். அன்பானவர்களே, நீங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குடும்பத்தின் சந்ததியில் இருந்து



ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் வேதத்திற்கு உங்களுடைய கவனத்தை செலுத்துங்கள். அதற்கு கீழ்ப்படியுங்கள், அப்பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

"நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான்; பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும்" என நீதிமொழிகள் புத்தகத்தில் படிக்கிறோம் (நீதி.13:22). பிள்ளைகளுக்கு பெற்றோர்களே பொருள்களை சேர்த்துவைக்கவேண்டும். ஆகையால் நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு நல்ல குடும்பமாக இருப்பீர்களானால் உங்களுடைய சந்ததிகளுக்கு சுதந்தரம் வைத்துப்போவீர்கள். இந்த சுதந்தரம் அவர்கள் கர்த்தரை அறிந்துகொண்டு வளர்ந்துபெருக பயனுள்ளவைகளாக இருக்கும். சில இடங்களில் இந்த சுதந்தரம் சண்டையைக் கொண்டு வந்துவிடுகிறது, அவர்களுக்குள் பிரிவினையைக் கொண்டுவந்துவிடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதிருக்க வேதத்தின் ஆலோசனைக்கு திரும்புங்கள். "கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும் அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது" (சங்.33:12).

உலகத்தில் அநேக ஜாதிகள் இருக்கிறது. இதில் கர்த்தரை தங்களுக்கு தெய்வமாகக்கொண்ட ஜாதி ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கிறது. அவர் எந்த ஜாதியை சுதந்தரமாகத் தெரிந்துகொண்டுள்ளாரோ அந்த ஜாதி பாக்கியமுள்ளதாயிருக்கிறது. அவர் இஸ்ரவேலை தெரிந்துகொண்டார். அது ஆபிரகாமுடைய சந்ததியாயிருக்கிறது. அதில் ஆண்டவர் இயேசு வந்தார். அந்த சந்ததி பரிசுத்தமுள்ளதாயிருக்கிறது.

அதிலுள்ளவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை என வேதம் சொல்லுகிறது. அந்த ஜாதியில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் எத்தனையோ ஜாதிகள் பிரிவினைகள் இருந்தாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி மட்டுமே இரட்சிக்கப்படும். அந்த சந்ததியைக்குறித்து வேதாகமம் நமக்குப்போதிக்கிறது. அது பரிசுத்த சந்ததியாயிருக்கிறது. ஒரே சபையாக இருக்கிறது, ஒரே சரீரமாயிருக்கிறது, ஒரே ஆவியாயிருக்கிறது, ஒரே மந்தையாயிருக்கிறது, கர்த்தருடைய வீடாயிருக்கிறது. அந்த வீட்டில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார். அதை தமக்கென்று கட்டுகிறார். அதில் அசுத்தர்கள் இருப்பதில்லை. அது நித்தியநித்தியமாக நிலைத்திருக்கும். அதை ஒருவரும் அசைக்கமுடியாது. அது அழிவில்லாதது.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பர்களே, கர்த்தர் வீட்டைக் கட்டுகிறவர். அவருடைய ஆலோசனையின்படி வீடு கட்டப்படவேண்டும். "நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்" (சங்.118:15). நீங்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட வீடாயிருப்பீர்களானால் உங்களுடைய வீட்டில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டாகும். கர்த்தரின் வலதுகரம் உங்களோடிருந்து பராக்கிரமஞ்செய்யும். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் கர்த்தரை நம்பி பெரிய காரியங்களைச் செய்வீர்கள்.

**கேள்வி நேரம்**

**தேவனுடைய ஆலோசனையின்படி அஸ்திபாரம் போடப்பட்ட வீடு எப்படியிருக்கும்?**

"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருகிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (லூக்.6:46-490). இந்த உவமையின் கருத்தை புரிந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆண்டவருடைய ஆலோசனைப்படி உங்களுடைய இல்லங்களை கட்ட முற்படுங்கள். அப்பொழுது உங்களுடைய வீட்டிற்கு வரவிருக்கும் ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள். தொடர்ந்து கர்த்தருடைய ஆசீர்வாதமான கரம் உங்களோடு என்றும் இருக்க நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 21. கர்த்தரை நம்பு
## Trust In The Lord

**த**ம்மால் உண்டாக்கப்பட்ட ஜனங்கள் அவரை மறந்து அந்நிய தேவர்களை நாடிமோசம் போவதைக் கண்ட கர்த்தர்; தம்முடைய தாசர்களின் மூலமாக பேசினார். "இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு; அவரே அவர்களுக்குத்



துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்" என்றார் (சங்.115:9). தாவீது கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்த ஒரு அரசன். தேவன் செய்த அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்களாலே பார்த்தவர்கள் இஸ்ரவேலர். "இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைகளின் கோவில்களைப் பட்சிக்கும்" என்று ஓசியா தீர்க்கன் மூலம் எச்சரித்தார் (ஓசி.8:14). கர்த்தர் செய்த காரியங்களை எப்படி மறப்பது? இஸ்ரவேலோ தன்னை உண்டாக்கின தேவனை மறந்து கோவில்களை கட்ட ஆரம்பித்தான். இன்றைக்கும் சிலர் கர்த்தரை மறந்து வீணானவைகளுக்கு ஆராதனை செய்யும்படியாக துணிவாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு எண்ணமாயிருக்கும்? இஸ்ரவேலை அழைத்த தேவன் அவர்களை பலமுறை மன்னித்துக்கொண்டே வந்திருக்கிறதை நாம் காணமுடிகிறது. அவர்கள் தங்களுடைய பொல்லாத வழிகளை விட்டு திரும்பும்போது அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகிறார். "இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை" என்றார் (எரே.4:1). இதை அறிந்த இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களை அகற்றிவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது; "இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது" என்றார் (ரோம.11:26,27). தன்னுடைய பிள்ளைக்கு தாய் நல்ல வஸ்திரம் தரித்து அவனை அனுப்பும்போது சந்தோஷப்படுகிறாள். அவன் வெளியே சென்று விட்டு வீடு திரும்பும்போது அழுக்கு வஸ்திரம் தரித்தவனைப்போல வரும்போது அவனை பார்த்து திட்டுகிறாள். பின்பு அதை தோய்த்து வெளுத்து மீண்டும் உடுத்துவிக்கிறாள். அதைப்போல தேவன் இஸ்ரவேலர் பாவத்தில் விழுந்து வரும்போது அந்த பாவத்தை மன்னித்து அவர்களை கழுவி மீண்டும் ஏற்றுக்கொள்ளுகிறார். தம்முடைய குமாரனைக்கொண்டு; இதற்கு நிரந்தரமான ஒரு தீர்வை ஏற்படுத்தினார். அதையே மேற்கண்ட வசனத்தில் தியானித்தோம்.

ஆரோன் குடும்பத்தார்களுக்கும் அவரை நம்பும்படியாக கர்த்தருடைய வசனம் சொல்லப்பட்டது; "ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள்;

அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்" (சங்.115:10). ஆரோன் குடும்பத்தார்கள் தேவனுக்கு அடுத்த பணியில் பயன்படுத்தப்பட்டவர்கள். நாம் சிலர் சொல்ல கேள்விப்படுகிறோம். வாத்தியார் மகன் மக்கு, போலீஸ்காரர் மகன் குற்றவாளி, டாக்டர் மகன் நோயாளி, போதகர் மகன் போக்கிரி என்பதைப்போல போய்விடக்கூடாது என்பதற்காக, ஆரோன் குடும்பத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது. "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" என காண்கிறோம் (மல்.2:7). தேவன் ஆசாரியர்களை மேன்மையாக வைத்திருந்தார். அநேகர் பலிசெலுத்தும்படியாக அவர்களிடம் வருவார்கள். ஆகையால் அவர்களை கர்த்தரின் தூதனுக்கு சமமாக வைத்திருந்தார். இன்றைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் தேவனால் மேன்மைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகாயிருக்கிறது என வேதம் அவர்களை வர்ணிக்கிறது. இப்படிப்பட்ட மேன்மையான பணியில் இருக்கிறவர்கள் அதற்கு பாத்திரவான்களாக இருக்கவேண்டுமல்லவா? ஆனால் ஆரோனின் பிள்ளைகள் அவ்விதமாக இல்லை.

"ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்" (லேவி.10:1,2). கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறது. ஆகையால் அதை மிகுந்த கவனத்தோடு செய்யவேண்டும். அவர்களோ அதை அசட்டை செய்தபடியால் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டுபோனார்கள். நீங்கள் ஒரு ஊழியராக இருப்பீர்களானால் உங்களுடைய ஊழியம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் எந்த அளவு வேதத்தை நேசிக்கிறீர்கள்? உங்களுடைய பிள்ளைகளுக்கு கர்த்தரைக்குறித்த பயம் இருக்கிறதா? மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததைப்போல கிறிஸ்துவும் இருந்தார். "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" (எபி.3:6).



தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட மோசே மற்றும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர்களாயிருந்திருக்கிறார்கள். கர்த்தருடைய குடும்பத்தில் பணியாற்றுகிற ஒவ்வொருவரும் இவ்விதமாக உண்மையாய் இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் உண்மையுள்ளவர்களை அதிகம் நேசிக்கிறார். கர்த்தரை நம்பி கர்த்தருடைய வேலையைச் செய்யுங்கள். தேவன் தம்முடைய விருப்பத்தையும் செயல்களையும் உங்களில் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். அவருடைய சித்தத்தை அறிந்துகொண்டு அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். ஒருவன் கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யும்போது அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார் என்று கர்த்தரே சொல்லியிருக்கிறார்.

மூன்றாவதாக "கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்" (சங்.115:11). யாரெல்லாம் கர்த்தருக்கு பயப்படுகிறார்களோ அவர்களுக்கு கர்த்தர் துணையும் கேடகமுமாயிருக்கிறார். பேதுரு தமது பிரசங்கத்தில் "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்கிறார். அவருக்குப் பயந்தவர்களுக்கு குறைவில்லை. அவர்களுக்கு அவருடைய வல்லமையுள்ள கரம் பாதுகாப்பாயிருக்கும். தாவீது நம்பிக்கை; "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" என்கிறார் (சங்.27:4).

ஒரு அரசனாக இருந்து அவருடைய நம்பிக்கை கர்த்தரை சார்ந்திருந்தது. எதை தேவனிடத்தில் கேட்டாரோ அதையே அவர் நாடக்கூடியவரா யிருந்திருக்கிறார். அவருடைய முழுகவனமும் அவருடைய ஆலயத்தில் இருந்தது என காண்கிறோம். கொஞ்சம் வசதிவாய்புகள் வந்துவிட்டால் கர்த்தரை மறந்துவிடுவார்கள். எனக்கு இருக்கிற வேலையில் வேதத்தை புரட்டிப்பார்க்கவே நேரம் இல்லை என்பார்கள். வேலை முடிந்து சாப்பிட்டு தூங்குவதற்கே நேரம் போதவில்லை எங்கே வேதஆராய்ச்சி வகுப்புக்குப்போவது, வேதத்தை எடுத்துப்படிப்பது அதையெல்லாம் வீட்டில் சும்மா இருக்கிறவர்கள் தான் செய்யமுடியும் என்று சொல்லிவிடுவார்கள். அன்பானவர்களே, தாவீது ஒரு அரசன் அவனுக்கு எவ்வளவு வேலை இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். பல நாடுகளையும்

தேசங்களையும் ஆண்டுவந்த தாவீது கர்த்தரையே தஞ்சமாக கொண்டிருந்தார். அவர் எழுதிய பாடலையும் அதன் கருத்துக்களையும் நம்மால் ஆராய்ந்து முடியாது, அந்த அளவு தேவனை ருசித்து, பலபாடுகளை அனுபவித்து எழுதியிருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பலவிதமான போராட்டங்கள் இருந்தது. அவர் ஒருமுறை கப்பற்பயணத்தில் இருந்தபோது; "நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்" என்கிறார் (2கொரி.1:9). அப்படிப்பட்ட மரணத்திலிருந்தும் கர்த்தர் அவர்களை விடுவித்தார். அவர்களுடைய நம்பிக்கை தேவன்மேல் இருந்தது. இன்றைக்கு உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? யார் மீது உங்களுடைய நம்பிக்கையை வைத்திருக்கிறீர்கள்? வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் மீது உங்களுடைய நம்பிக்கையிருக்குமானால் நீங்கள் அவரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

தேவனுக்குப் பயப்படுகிற பயமானது இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். யோசேப்பை அறியாதவர்கள் இருக்கமுடியாது. அவன் எகிப்திற்கு அடிமையாக கொண்டுபோகப்பட்டான். அவனோடு கர்த்தர் இருந்தபடியால் அவன் எகிப்தில் உயர்த்தப்பட்டான். அவனை எகிப்து தேசத்திலே விலைக்கு வாங்கின பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவன் மீது தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். தான் புசிக்கிற போஜனம்தவிரத் தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும் விசாரியாதிருந்தான்.

இந்த போத்திபாரின் மனைவியோ யோசேப்பின் மீது கண்போட்டு அவனை விரும்பினாள். அவனோ தேவனுக்கு பயந்தபடியால்; "இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கிவைக்கவில்லை இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம்செய்வது எப்படி என்றான்" (ஆதி.39:9).

அக்காலங்களில் அரண்மனைவாசிகள் உல்லாசமாக இருக்கக்கூடிய காலம். அக்காலத்திலே தேவனுக்குப் பயப்படுகிற ஒரு அருமையான தேவனுடைய மனுஷன் இருந்திருக்கிறான் என்றால் அது நமக்கு ஆச்சரியமாக



இருக்கிறது. அவன் எவ்வளவாய் தேவனுக்கு பயந்து பாவத்தை விட்டு விலகியிருப்பான் என்று பாருங்கள். பெரிய பெரிய மனிதர்கள் கூட தேவன் பாரார் என்று சொல்லி துணிவாய் பாவம் செய்துவிடுகிறார்கள். இந்த யோசேப்போ தேவனுக்கு பயப்படுகிற மனுஷனாக இருந்தான். ஆகையால் அவனோடு கர்த்தர் இருந்தார். இவன் எகிப்திலே அடிமையாக விற்கப்பட்டும் கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தான். அவனுடைய அடிமைத்தனவாழ்வை நினைத்து அவன் கலங்கவில்லை. நித்தியமான தேவன் தன்னோடிருப்பதை உணர்ந்தான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, இஸ்ரவேல் குடும்பத்தாருக்கும், ஆரோன் குடும்பத்தாருக்கும், கர்த்தருக்குப் பயப்படுகிற யாவருக்கும் கர்த்தரை நம்பு என்ற வார்த்தை சொல்லப்பட்டதை இச்செய்தியில் தியானித்தோம். கர்த்தரை நம்புகிறவர்கள் கணக்கில்லாமல் ஆசீர்வதிக்கப் படுவார்கள். உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் கர்த்தரை நம்பும்போது அவருடைய அதிசயங்களையும் அற்புதங்களையும் காண்பீர்கள். மேலும், நீங்கள் நடக்கவேண்டிய வழியை வேதாகமத்தின் துணைகொண்டு அறியமுடியும்.

### கேள்வி நேரம்

**கர்த்தருக்குப் பயப்படுகிற யாவரையும் ஆசீர்வதிப்பாரா?**

ஆம், "கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார். கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்" (சங்.115:12,13). ஒரு ராஜா மனது வைத்தால் அந்த நாடு நலம்பெறும். உலகத்தையே தம்முடைய உள்ளங்கையில் வைத்திருக்கும் கர்த்தர் நம்மை நினைத்தால் நாம் நலமுடன் வாழமுடியும். அவர் நல்ல தேவன் நன்மை செய்கிற தேவன். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆகையால் தேவன் உங்களை நினைத்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதித்தார், அப்படியே ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதித்தார், அந்தப்படியாக கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரைம் சிறியோரையும் அவர் ஆசீர்வதிக்கிறார். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகவேண்டுமென்பதுவே. அதைச் செய்வீர்களா? அப்படிச்செய்யும்போது யோசேப்போடு இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார். தீமை உங்களை அனுகாது. உங்களுக்கா ஜெபிக்கிறோம்.

# 22. இரட்சிப்பின் வசனம்
## The Word of Salvation

இந்த இரட்சிப்பின் வசனம் முதலாவது இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. இயேசு பன்னிருவரையும் அனுப்புகையில்; "அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்; நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" என்றார் (மத்.10:5,6). முதலாவது தாம் தெரிந்துகொண்ட ஜனத்தை இரட்சிகும்படியாக தேவன் தீர்மானித்திருந்த திட்டத்தின்படியே இயேசுவை அனுப்பினார். தேவன் ஆபிரகாமுக்கு செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். அவன் மூலமமாக தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியை ஆசீர்வதிக்க சித்தமானார். வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ! ஆகையால், ஆண்டவர் இயேசு கானானிய ஸ்திரீயினிடத்தில் பேசும்போது; "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல வென்றார்" (மத்.15:24). எனவே தம்முடைய சீஷர்களை ஆண்டவர் இயேசு அனுப்பும்போது அவர்களை இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பினார். இந்த இரட்சிப்பின் வசனத்தை சீஷர்கள் இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். சிலர் ஏற்றுக்கொண்டார்கள் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏற்றுக்கொள்ளாதவர்களுடைய வீடுகளில் உங்களுடைய தூசியை உதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் என்றார். அந்தப்படியாக சீஷர்கள் முதலாவது இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

பேதுரு பேசும்போது; "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" என்றார்



(அப்.2:22,23). இரட்சிப்பின் வசனத்தை கொண்டுவந்த இயேசுவை அந்த யூதஜனங்கள் ஏற்றுக்கொள்ளாமல் அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தார்கள். எத்தனையோ முறை அவர்களை சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தார். அவர்களோ அவரைப் புறம்பாக்கிப்போட்டார்கள்.

மேலும், பேதுருவும் யோவானும்; "அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் எனறான்" (அப்.3:26). அவர்களோ அதை அறியாது இயேசுவை சிலுவையில் ஆணியடித்துக்கொலைசெய்யும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களை ஆசீர்வதிக்கும்படி அனுப்பின தேவனுடைய குமாரனை குற்றவாளியாக்கினார்கள்.

மேலும், "அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், சினங்கொண்டு, அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால், மறுநாள் வரைக்கும் காவலில் வைத்தார்கள்" (அப்.4:2,3). உயிர்த்தெழுதலை விசுவாசிக்கும் கூட்டமும் அதை விசுவாசிக்காத கூட்டமும் இருந்தது. ஆகையால் இந்த உபதேசத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் அவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். மேலும், அவர்கள் உபதேசிக்கக்கூடாது என்று சொல்லி அவர்களை காவலில் வைத்தார்கள். ஆனால் வசனத்தைகேட்டு விசுவாசித்தவர்களின் தொகை ஐயாயிரமாயிருந்தது எனக்காண்கிறோம். இயேசுவின் நிமித்தமாக அப்போஸ்தலர்கள் பலபாடுகளை அனுபவித்தார்கள். மேலும், அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிக்கக்கூடாதே என்றார்கள்.

பவுல் ஒருமுறை பேசும்போது; "யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப்பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்" (அப்.13:45). தேவன் இஸ்ரவேலிலே இரக்கங்கொண்டு அவர்களை இரட்சிக்கும்படியாக அநேகரை அனுப்பிக்கொண்டிருந்தும் அவர்களோ செவிட்டு விரியனைப்போல கேளாதவர்களாயிருந்தனர். ஆகையால் பவுலும்

பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத்தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்றார்கள் (அப்.13:46). இப்படியாக புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் கொண்டுசெல்லப்பட்டது. மேலும், "யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13:50).

ஏற்றுக்கொள்ளாதவர்களுடைய வீட்டிலும் பட்டணத்தின் எல்லைகளிலும் தூஷியை உதறிப்போடுங்கள் என்று சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே பின்பு அவர்கள் புறஜாதியார் நாடுகளில் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியாக சென்றார்கள். புறஜாதி மக்கள் கர்த்தருடைய வசனத்தை ஆவலோடு கேட்டு இரட்சிப்பின் வசனத்திற்கு செவிகொடுத்தார்கள். அநேக குடும்பங்கள் மனந்திரும்பின, குடும்பம் குடும்பமாக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து திருமுழுக்கு பெற்று கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

இரட்சிப்பின் வசனம் புறஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய பிரதான கட்டளையில் நாம் படிக்கிறோம். "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் (மாற்.16:15). முதலாவது இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்ட இரட்சிப்பின் வசனம் பின்பு கர்த்தரால் உலகமெங்கும் சொல்லும்படியாக கட்டளையிடப்பட்டது. அந்தப்படியாக அப்போஸ்தலர்களால் உலகமெங்கும் சுவிசேஷம் எடுத்துச்செல்லப்பட்டது. எடுத்துக்காட்டாக தோமா என்று சொல்லக்கூடிய ஒருவர் இயேசுவின் சீடர்களில் ஒருவராயிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கு வந்திருக்கிறார். குறிப்பாக தமிழகத்தில் செயின் தாமஸ் மவுண்ட் என்று சொல்லக்கூடிய இடத்திற்கு வந்து சுவிசேஷம் அறிவித்துள்ளார் என்பதற்கான சான்றுகள் இருக்கிறதை நாம் அறிகிறோம்.

இப்படியாக புறஜாதி நாடுகளுக்கும் கர்த்தருடைய வசனம் இரட்சிப்பின் வசனம் எடுத்துச்செல்லப்பட்டதை அறிகிறோம். அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்.13;47). அப்போஸ்தலர்கள் தங்களுடைய விருப்பத்தின்படி



செய்யவில்லை. கர்த்தருடைய கட்டளையின்படியே உலக நாடுகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்று பிரகடனப்படுத்தினார்கள்.

புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறதை புறஜாதியார் கேட்டு, சந்தோஷமாக அதை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிந்தனர். "புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" என காண்கிறோம் (அப்.13:48). எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஆனால் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே அதை விசுவாசித்து பற்றிக்கொண்டார்கள் என காண்கிறோம். மற்றவர்கள் மதக்கண்ணோட்டத்தில் அதை பார்த்திருக்கக்கூடும், சிலர் உறவைப்பார்த்திருக்கக்கூடும், இப்படி அநேகர் அதை ஏற்றுக்கொள்ள தயங்கியிருப்பார்கள். இதையெல்லாம் மீறி அப்போஸ்தலர்களால் சொல்லப்பட்ட வசனத்தை ஏற்று கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

பேதுரு புறஜாதியினிடத்தில் அனுப்பப்பட்டான். அதற்கு முன்பாகவே அவன் தரிசனத்தில் உணர்த்தப்பட்டான். வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்" இப்படி தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில் இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக் கொண்டு வாசற்படியிலே வந்து நின்றார்கள். அப்பொழுது ஆவியானவர் இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்குஞ்சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்றார்.

"மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன்உறவின்முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காக காத்திருந்தான்" (அப்.10:24). இப்படியாக புறஜாதிகளிலிருந்து அவன் கர்த்தரை விசுவாசித்து பற்றிக்கொண்டு குடும்பத்துடன் கர்த்தருடைய சபையில் இணைக்கப்பட்டான். கவனித்தீர்களா,

அவன் தன்னுடைய உறவினர்கள் மற்றும் விசேஷித்த சிநேகிதர்கள் அனைவரையும் அழைத்து பேதுருவின் பிரசங்கத்தை கேட்கவைத்தான். இன்றைக்கு நான் மட்டும் இரட்சிக்கப்பட்டு விட்டால் போதாது என் குடும்பமும் இரட்சிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். மேலும் பேதுரு சொல்லுகிறார்; "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றான்" (அப்.10:35).

நீங்கள் தேவனுக்கு உகந்தவர்களாக மாற விருப்பமா? இன்றே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் அங்கமாகுங்கள். ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட்டால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டு. இன்றே பாவ உலகில் பரிசுத்த இரட்சிப்பின் வசனத்திற்கு செவிகொடுத்து கீழ்ப்படியுங்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, கிறிஸ்துவின் வசனத்திற்கும் எனக்கும் என்ன? என்று நினையாதே அவர் யூதகோத்திரத்தில் தோன்றினாலும் புறஜாதிகளாகிய நமக்கும் இரட்சிப்பின் வசனத்தை அனுப்பிஇருக்கிறார். அவ்வசனத்தை ஏற்று அதற்கு கீழ்ப்படியும்போது எல்லையில்லா சந்தோஷத்தையும் சமாதானத்தையும் இப்பூமியில் நீ பெற்று நித்தியமான சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பாய். ஆகையால் காலம் தாழ்த்தாமல் இன்றே அதற்கு உன்னை ஒப்புக்கொடு.

**கேள்வி நேரம்**

**யூதேயாவில் உள்ள எருசலேம் சபையார் புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை குறித்து சந்தோஷம் அடைந்தார்களா?**

ஆம், சுவிசேஷம் உலகமெங்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்பது நம்முடைய ஆண்டவரின் கட்டளை. இதை சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள். இதில் பேதுருவினால் அநேகர் குணமாக்கப்பட்டதை யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டபோது; விருத்தசேதனமுள்ளவர்கள் அவனை நோக்கி: விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய் அவர்களோடே போஜனம் பண்ணினீர் என்று வாக்குவாதம் பண்ணினார்கள். அவன் விவரித்துச் சொன்னதை அவர்கள் கேட்டபொழுது; "அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (அப்.11:18). இந்த சந்தோஷத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" யோசு.24:15**



## 23. கர்த்தரைச் சார்ந்துகொண்ட யூதபுத்திரர்
## The Children of Judah Relied On the Lord God

**சா**லொமோனுக்குப் பின்பு ராஜ்யபாரம் இரண்டாக பிரிந்து அதில் யூத ராஜ்யத்திற்கு சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம் ராஜாவானான். இஸ்ரவேலின் ராஜ்யத்திற்கு யெரொபெயாம் ராஜாவானான். இவர்கள் இருவருக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இதில் யூத புத்திரர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டார்கள். அப்பொழுது அபியா யூதாவின்மேல் ராஜாவாக இருந்தான். "அபியா தெரிந்துகொள்ளப்பட்ட நாலுலட்சம்பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணினான்; யெரொபெயாம் தெரிந்துகொள்ளப்பட்ட எட்டுலட்சம்பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான்" (2நாளா.13:3). யூதாவின் மக்கள் 4லட்சம், இஸ்ரவேலிலோ 8லட்சம் டபுலாக இருக்கிறது. இதைக்கண்டு யூதாவின் ராஜா சோர்ந்துபோகவில்லை. அவன் கர்த்தரை நம்பினபடியால் அவர்களுக்கு ஒரு போதனையை கொடுக்க ஆரம்பித்தான். தாவீது சவுலின் மீது கைபோட யோசித்தான். ஏனென்றால் அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற ஒரே காரணத்திற்காக சவுலின்மீது கைபோட தயங்கினான். அதைப்போல இஸ்ரவேலும் தேவனுடைய ஜனங்களே அவர்கள் பிரிந்துபோய்விட்டார்கள் என்ற ஒரே காரணத்தை மனதில் கொண்டு, யூதாவின் ராஜாவாகிய அபியா அவர்களுக்கு ஒரு போதனையை கொடுத்தான்.

அப்போதனை யென்னவென்றால்; "எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று; யெரொபெயாமே, எல்லா இஸ்ரவேலரே, கேளுங்கள். இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?...இதோ, தேவன் எங்கள் சேனாதிபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான்" (2நாளா.13:12-14).

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு நல்ல ஆலோசனையை அபியா ராஜா இஸ்ரவேலுக்கும் அதின் ராஜாவுக்கும் கொடுத்தான். ஆண்டவர் இயேசு நமக்கு இவ்விதமே கற்றுக்கொடுத்திருக்கிறார். உனக்கு ஒருவன் எதிராக செயல்பட்டால் அவன் தனித்திருக்கும்போது அவனுக்கு அவன் குற்றத்தை உணர்த்து, அவன்

மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் அவனை நீ ஆதாயம் செய்துகொள்வாய் என்று அந்த விதமாக இந்த அபியா செய்தான். அவர்களோ யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள் யெரொபெயாம் 18 வருட அனுபவமுள்ளவன் அவர்களுக்குப் பின்னாக வரத்தக்கதாக ஒரு பதிவிடையைச் சுற்றிப்போகப்பண்ணினான்; அப்படியே அவர்கள் யூதாவுக்கு முன் இருந்தார்கள்; அந்தப் பதிவிடை அவர்களுக்குப்பின் இருந்தது. இதை அறிந்த "யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறதைக் கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள். யூதா மனுஷர் ஆர்ப்பரித்தார்கள்; யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியஅடித்தார். இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தேவன் அவர்களை இவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்" (2நாளா.13:14-16). யூதா ஜனங்கள் கொஞ்சப்பேராக இருந்தாலும் அவர்கள் யுத்தத்தில் தேவனை நோக்கி கூப்பிட்டார்கள் என்று பார்க்கிறோம். இவர்களுடைய ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் இவர்களுக்காக யுத்தம் செய்தார். கொஞ்சப்பேராக இருந்த யூதாவுக்கு முன்பாக இஸ்ரவேலர் முறிந்தோடிப்போனார்கள்.

யுத்தம் கர்த்தருடையதாக இருந்தது. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் இந்தவிதமாக முறிந்தோடிப்போவார்கள். ஆண்டவர் இயேசு சொல்லும்போது; உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். ஆகையால் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தலையிலே விழாது என்றார். தேவன், அந்த அளவு தம்மை நேசிக்கிறவர்கள் மீது கரிசனையுள்ளவராயிருக்கிறார்.

யூதா ஜனங்கள் கர்த்தருடைய கற்பனையின்படி நடக்கிறவர்களாக இருந்தார்கள். இஸ்ரவேலோ யுத்தத்திற்கு எத்தனித்தார்கள் கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப்போட்டார்கள். அபியாவின் ஆலோசனைக்கு செவிகொடாமற்போனார்கள். தேவனுடைய வார்த்தைகளை புறக்கனிக்கிறவர்களை தேவனும் புறக்கணித்துப்போடுவார். ஆகையால், "அபியாவும் அவனுடைய ஜனங்களும் அவர்களில் மகா சங்காரம்பண்ணினார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்துலட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள்" (2நாளா.13:17).

இந்த ஐந்துலட்சம்பேரும் அபியாவின் வார்த்தைக்கு செவிகொடுத்திருப்பார்களேயானால் இவர்கள் மரணத்தை சந்தித்திருக்க



மாட்டார்கள். அநேகர் தங்களுடைய சிந்தனைகளினாலே வீணராய் போய்விடுகிறார்கள். தேவன் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களோடு இருக்கிறார். அவர்கள் செய்வதை வாய்க்கப் பண்ணுகிறார். இன்றைக்கு கர்த்தருடைய நாமத்தை மட்டும் தரித்துக்கொண்டு அநேகர் இஸ்ரவேல் மக்களைப்போல பிரிந்துபோய் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட சபையை அடையாளம் கண்டுகொண்டு மனந்திரும்பவேண்டும். இல்லையேல் இஸ்ரவேல் மக்களைப்போல அழிந்துபோவார்கள். தேவன் தமது சித்தத்தை தாம் தெரிந்துகொண்டு ஜனங்கள் மத்தியில் நிறைவேற்றுகிறார். ஆபிரகாம் என்ற தேவமனிதனை தெரிந்துகொண்டு அவனுடைய சந்ததியில் கிறிஸ்துவை பிறக்கச்செய்தார். அவரே நம்மை நித்தியமானவருக்கு நேரே வழிநடத்தக்கூடயவராயிருக்கிறார். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரான் என்றார். ஆம், அன்பானவர்களே இயேசுவை அல்லாமல் நாம் பிதாவை சந்திக்கமுடியாது. பிதாவானவர் இயேசுவை உலகத்தில் தெரிந்துகொண்டு, பூர்வ உலகத்தையும் இரட்சிக்க திட்டம்கொண்டார்.

இந்த யூதா ஜனங்கள் இஸ்ரவேலை மேற்கொண்டதற்கான காரணம்; அவர்கள் தேவனை நோக்கி ஜெபித்தார்கள் என்று தியானித்தோம். மேலும், "அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொண்டதினால் மேற்கொண்டார்கள். அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான்" (2நாளா.13:18,19). யூதா ஜனங்கள் கர்த்தரை நோக்கி ஜெபித்ததைப்போல அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டார்கள். சார்ந்துகொள்ளுவது என்பது அவரோடு ஒருமித்திருப்பது. அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்வது தங்களுடைய சுய எண்ணத்தை தூக்கிபோட்டுவிட்டு கர்த்தருடைய ஆலோசனையின்படி நடப்பது. அநேகர் கர்த்தரை சார்ந்துகொள்ளாமல் தங்களுடைய சுயஎண்ணத்தில் இருந்துகொண்டு கெட்டுப்போகிறதை நாம் காண்கிறோம்.

பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு நம்மை மோசம்போக்கிவிடுவான் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ள வேண்டும். யூதாவும் இஸ்ரவேலும் கர்த்தருடைய ஜனங்கள்தான் இதில் யூதாவில் இருக்கிறவர்களாக இருந்தாலும் இஸ்ரவேலில் இருக்கிறவர்களாக இருந்தாலும் நாம் கர்த்தரைத்தானே ஆராதித்து வருகிறோம் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால் இந்த இரு கூட்டத்தாரில் கர்த்தர்

தெரிந்துகொண்ட கூட்டம் எது? எந்த கூட்டஜனங்கள் கர்த்தருடைய சித்தத்தை செய்தார்கள் என்று நாம் பார்க்கும்போது யூதாவின் ஜனங்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார்கள். அதை தேவன் தெரிந்துகொண்டார். ஏனெனில் அவர்கள் தாவீதின் வழியில் வந்தவர்கள். இஸ்ரவேலில் யெரொபெயாமோ தன்இச்சையில் வந்தவன். தேவனுடைய வார்த்தைகளை புறம்பாக்கிப்போட்டவன். அவனை அநேகர் சார்ந்திருந்தபோதும் இறுதியில் அவர்களை யுத்தத்தில் அழிந்துபோகும்படியாக கர்த்தர் ஒப்புக்கொடுத்தார் என காண்கிறோம்.

அவனுடைய முடிவை நாம் பார்க்கும்போது; "அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ளமாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைந்தான்" (2நாளா.13:20). கர்த்தர் ஒருவனை அடிக்கிறார் என்றால் அவன் எந்த அளவு தேவனுக்கு விரோதமாக செயல்பட்டிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் அடித்த நபர்களை ஒருசில இடங்களில் மட்டுமே நாம் வேதத்தில் படிக்கிறோம். அதில் யெரொபெயாமும் ஒருவன். தேவனுக்கு விரோதமாக செயலில் ஒருவன் ஈடுபடும்போது அல்லது மேட்டிமை கொள்ளும்போது தேவனால் அவன் அடிக்கப்படுகிறான். தேவன் அடித்தால் அவருடைய அடி எப்படியிருக்கும் மீண்டும் எழாதபடி அடிப்பார். அவருடைய அடி மரண அடியாயிருக்கும். அந்தப்படியாக யெரொபெயாமை கர்த்தர் அடித்ததினால் அவன் மரணமடைந்தான்.

புதிய ஏற்பாட்டில் இப்படி அடிபட்ட ஏரோதைப்பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். இவனும் கர்த்தரால் அடிக்கப்பட்டு மரணமடைந்தான். "குறித்தநாளிலே ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுபுழுத்து இறந்தான்" (அப்.12:21-23). பின்பு என்ன நடந்தது, தேவவசனம் வளர்ந்து பெருகிற்று என்று வாசிக்கிறோம். அப்படியானால் இவன் இருக்கும் வரை வசனத்திற்கு தடையாக இருந்திருக்கிறான். இவனுடைய மரணத்திற்கு பின்பு தேவனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று. எவன் ஒருவன் கர்த்தருடைய பணிக்கு தடையாயிருப்பானோ அவனை கர்த்தர், காலம் வரும்போது அடித்துபோடுகிறார்.

இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, கர்த்தரை சார்ந்துகொண்ட யூதா புத்திரரைக்குறித்து இன்றைய நாள் செய்திவேளையில்



தியானித்தோம். தேவன் அவர்களோடு இருந்து யுத்தம் பண்ணினார். தங்களிலிருந்து பிரிந்துபோன இஸ்ரவேலுக்கு நல்ல பாடம் புகட்டினார். ஆகையால் தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றம்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர் என்பதை புரிந்துகொண்டு தேவனுடைய ஜனங்களோடு தேவனை ஆராதிக்க முயற்சியுங்கள். மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரிய சபைகளை விட்டு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் புதிய யுகத்தில், புதிய ஏற்பாட்டு காலத்தில் துவங்கப்பட்ட கர்த்தருடைய சபையை அடையாளம் கண்டு கொண்டு அதில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள் அந்த சபையை கர்த்தர் பரலோகத்தில் உள்ள பிதாவிடம் ஒப்புக்கொடுக்க அதாவது அந்த ராஜ்யமாகிய சபையை ஒப்புக்கொடுக்க இதோ, சீக்கிரம் வருகிறேன் என்கிறார். அவருடைய வருகைக்குள்ளாக நீங்கள் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் நம்பிக்கை எல்லாம் வீணாய்போய்விடும்.

**கேள்வி நேரம்**

**யூதா ஜனங்களில் இறுதியாக வந்த இராஜா இயேசுவா?**

ஆம், இயேசு இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். "பிலாத்து அவரை நோக்கி: நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). இயேசு பரலோகராஜ்யத்தின் ராஜாவாக இன்றும் வீற்றிருக்கிறார். அவர் கர்த்தருடைய சபையில் தலைவராயிருக்கிறார். அவரை தேவன் தெரிந்துகொண்டார். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தார். ஆகையால் இவருக்குச் செவிகொடுக்க வேண்டும். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.

நீங்கள் சத்தியத்தை அறியக்கூடிய ஜனங்களாக இருப்பீர்கள் என்றால் இவருக்குச் செவிகொடுத்து இவர் ஏற்படுத்தின மந்தையில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் என்ற வசனத்தின்படி இன்று ஒரே மந்தை இருக்கிறது. ஒரே மேய்ப்பனாகிய இயேசு இருக்கிறார். இவரே உலகத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாவத்தைப்போக்கும் தேவ ஆட்டுக்குட்டி. இவருடைய இரத்தம் சிந்துதலினாலே பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. ஆகையால் அன்பானவர்களே, ஆண்டவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து உங்களுடைய பாவங்கள்போக கழுவப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 24. பாக்கியவான்கள்
## Blessed

"உம்மிலே பெலன்கொள்ளுகிறமனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்" என சங்.84:5-ல் வாசிக்கிறோம். ஆம், தேவனில் பெலன்கொள்ளும்போது நாம் பாக்கியவான்களாவோம். சுயபெலத்தை நம்பி ஏமாற்றம் அடைந்தோர் ஏராளம். தேவன் ஒருவனைப் பெலப்படுத்தவேண்டும் அல்லது அவருடைய வசனம் ஒருவனைப் பெலப்படுத்தவேண்டும் அப்பொழுது மெய்யான பெலத்தை மனிதன் பெற்றுக்கொள்ளுவான். சிலர் பொதுவாக எப்படியிருக்கிறீர்கள் என்று கேட்டால் ஏதோ இருக்கிறோம் என்பார்கள், இன்னும் சிலர் இருக்கிறோம் என்பார்கள். தேவனுடைய மனுஷனைக்கேட்டால் கர்த்தருடைய கிருபையால் அல்லது அவருடைய பெலத்தால் சுகமாக இருக்கிறோம் என்பான். உண்மையிலே ஒருவனை பெலப்படுத்துவது கர்த்தருடைய வசனம். தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம். அதைப்போல கர்த்தருடைய வசனம் விடாய்த்த ஆத்துமாவுக்கு இருக்கும்.

கிதியோன் மீதியானியரின் கைக்குத் தப்பிவிக்கிறதற்காக கோதுமையை ஆலைக்குச் சமீபமாய் அதைப்போரடித்தான். "கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி; பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப்பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்" (நியா.6:12-14).

இந்த கிதியோனைப்போல சில வேளைகளில் நாம் தேவன் நம்மை கைவிட்டாரோ என்று நினைக்கின்றோம். தேவன் தெரிந்துகொண்டவர்களை ஒருபோதும் கைவிடார். உலர்ந்த எலும்புகளுக்கு உயிர்கொடுக்கும் தேவன் நம்தேவன் என்பதை மறந்துபோகாதிருங்கள். சோர்ந்துபோய் கோதுமையை போரடித்துக்கொண்டிருந்த கிதியோனை கர்த்தர் சந்தித்து உனக்கு இருக்கிற இந்தப்பலத்தோடே போ என்றார். போனவன் வெற்றியடைந்தானா? ஆம்,



தண்ணீரை நக்கிக்குடித்த முந்நூறுபேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார் கர்த்தர், அந்தப்படியாக கிதியோன் மீதியானியரை மேற்கொண்டான். பெலனற்றுப்போன கிதியோன் கர்த்தருடைய வாத்தையைக்கேட்டு பெலன்கொண்டான்.

அதைப்போல அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்; "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றார் (1தீமோ.1:12). பவுல் சவுலாக இருந்த நாட்களிலே கர்த்தருடைய மார்க்கத்திற்கு விரோதமாக அநேகரை கட்டி சிறைச்சாலையில் போட்டு உபத்திரவப்படுத்தினவன். அவனை கர்த்தர் சந்தித்து தம்முடைய ஊழியத்தில் வல்லமையுள்ள ஒரு அப்போஸ்தலனாக எடுத்து பயன்படுத்தினார். பவுல் சுய ஞானத்தினாலோ அல்லது அவருடைய பெலத்தினாலோ இந்த ஊழியத்திற்கு வரவில்லை. அவரை பலப்படுத்திய கர்த்தரைக்குறித்து சொல்லுகிறார். 'என்னை உண்மையுள்ளவனென் றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினார்' என்கிறார்.

அன்பானவர்களே, கர்த்தர் உண்மையுள்ளவர். ஆகையால் அவர் உண்மையுள்ளவர்களை அவருடைய ஊழியத்திற்காக தெரிந்துகொள்ளுகிறார். நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களானால் உங்களையும் தேவன் பலப்படுத்தி அவருடைய ஊழியத்திற்கு தெரிந்துகொள்ளுவார். ஆரோனைப்போல அழைக்கப்படாவிட்டால் ஒருவனும் இந்த கனமான ஊழியத்தை செய்யமுடியாது என காண்கிறோம்.

தாவீது இப்படியாக சொல்லுகிறார்; "எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" (சங்.90:10). மனிதன் தன்னுடைய பெலத்தைவைத்து நான் அதைச்செய்வேன் இதைச்செய்வேன் என்பான். அவனுடைய வயது அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய பெலன் குறைந்து போவதையும் அவனுடைய நினைவாற்றல் குறைந்துபோவதையும் அவனால் அறியமுடியும். இதையே தாவீது எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் சிலர் எண்பது வருஷம் உயிரோடிருக்கிறார்கள். தாவீதின் நாட்களிலே இதை சொல்லி இருக்கிறார் என்றால் நாம் வாழும் இந்நாட்களில் சொல்லவேண்டிய அவசியமில்லை அவ்வளவு குறைவாகவே மனிதன் தன்னுடைய பெலத்தை இழந்து சீக்கிரமே மரணத்தை சந்திக்கிறான்.

ஒருவேளை சிலர் அதிக நாட்கள் வாழுகிறார்கள் அவர்களுடைய நிலமை வருத்தமும் சஞ்சலமுமே எனக்காண்கிறோம். அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. பக்கத்தில் இருக்கும் ஒரு பொருளை எடுக்கமுடியாது யாருடைய உதவியையாவது நாடவேண்டி இருக்கும். இது அவர்களுடைய வாழ்க்கையில் சஞ்சலத்தைக் கொண்டுவரும். ஆனால் தேவனுடைய பெலத்தினால் உன் ஆயுசுசின் வருஷங்கள் கூடுமானால், நீ பாக்கியவானாயிருப்பாய்.

யோபு சொல்லுகிறார்; "பெலத்தைப் பார்த்தால், அவரே பெலத்தவர்; நியாயத்தைப் பார்த்தால், என் பட்சத்தில் சாட்சி சொல்லுறவன் யார்? என்கிறார் (யோபு 9:19). தேவனுக்கு நிகராக யார் நிலைநிற்கமுடியும். அவர் ஞானத்தில் சிறந்தவர் பெலத்தில் பெரியவர். அவருக்கு முன்னும் பின்னும் யாரும் நிற்கமுடியாது. அவர் அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர் என்றெல்லாம் பார்க்கிறோம். இந்த வசனத்தை சொல்லும் யோபு; ஒரு நீதிமான், சன்மார்க்கன், தேவனால் நற்சாட்சி பெற்றவன். அவனைப்போல ஒருவனும் பூமியில் இல்லை. அவனைப்போல தேவனுடைய பெலத்தில் நம்பிக்கை கொள்ளும்போது, நாமும் பெலனடைவோம்.

மேலும், அவரில் பெலன்கொள்ளுகிறமனுஷன் பாக்கியவனாயிருப்பது போல, தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள் என காண்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் அவருடைய செவ்வையான வழிகளைக் கொண்டிருந்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களில் தாவீதும் ஒருவர். அவர் சொல்லும்போது; "தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்" (சங்.18:30). கரடு முரடான பாதைகளில் நடந்து தங்களுடைய வழி செம்மையாயிருக்கிறது என்கிறவர்களை நாம் அறிகிறோம். திருப்தியாக சாப்பிடாமல் திருப்தியாக இருக்கிறோம் என்று மற்றவர்களுக்காக சொல்லும் கூட்டத்தை காண்கிறோம். ஆனால் தாவீது கர்த்தருடைய வழிகளை ருசித்தவர். தேவன் அவருக்கு கேடகமாயிருந்தார்.

ஆகையால் அவரால் இவைகளை விவரித்துச் சொல்லமுடிகிறது. இளம் வயதில் ஆடுகளின் பின்னே சென்ற தாவீதை தேவன் அரசனாக்கினார். வாய்பேசாத ஆடுகளை வழிநடத்திய அந்த மனிதன் வாய்பேசும் தேவனுடைய ஜனங்களை சிறப்பாக 40 வருஷம் ஆண்டு தேவனுடைய ஆலோசனையின்படி அவர்களை வழிநடத்தினான். அவனுடைய நாட்களில் அவன் சவதரித்துவைத்த பொருட்களுக்கு மதிப்பே இல்லை கணக்கில்லாத பொருட்களை கர்த்தருடைய பணிக்காக சம்பாதித்துவைத்தான். அவன்



சொல்லுகிறான் தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது அவரை நம்புகிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். நீங்கள் அந்த தேவனை நம்புகிறீர்களா? அப்படி நம்புவீர்களானால் நீங்கள் செவ்வையான வழியை தெரிந்துகொண்டீர்கள். நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள்.

தாவீதுக்கு பின்பு வந்த அரசன் அவனுடைய மகன் சாலொமோன்; அவன் சொல்லுகிறான், "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி.16:25). யார் சொன்னாலும் சரியாய் இருக்காது நான் சொன்னால் சரியாய் இருக்கும் என்று அநேகர் சொல்வதைக்கேட்டிருப்பீர்கள். சிலர் மனிதர்களை தூக்கி வைத்து, தூக்கிவைத்து அவர் சொன்னால் சரியாய் இருக்கும் அவர்சொல்வதைக் கேட்போம் என்பார்கள். மேற்கண்ட வசனத்தை சொன்னவர் மகா ஞானவான். நன்கு அனுபவித்தவர். அவரைப்போல ஒருவரும் சாப்பிட்டிருக்க முடியாது, அவரைப்போல ஒருவரும் உடுத்தியிருக்க முடியாது, அவரைப்போல அரண்மனை வாழ்க்கையை அனுபவித்திருக்க முடியாது. அநேக நீதிமொழிகளை எழுதியவர். அவர் சொல்லுகிறார் மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள். ஆம், அந்த வழிகள் அவர்களுக்கு மிகவும் செம்மையாகத் தோன்றும் ஆனால் அதின் முடிவு மிகவும் முக்கியம். மரணத்திற்கு கொண்டுசெல்லும் வழியாக அது இருக்கிறது. பரவாயில்லை கொஞ்சநாட்களாவது நன்றாக இருக்கிறோமே கடைசியில் எது எப்படிபோனால் என்ன என்பார்கள்.

அன்பானவர்களே, எல்லாரும் சாகத்தானே போகிறோம். ஆகையால் நமக்கு இருக்கும் இந்த பிள்ளை இருந்து என்ன பயன் இன்றைக்கு கொன்றுபோடுவோம் என்று பெற்றொர்கள் குழந்தைகளை கொன்றுபோடுகிறார்களா? நாம் சிந்திக்கவேண்டும். மனிதர்களுடைய அறிவு குறைவுள்ளது. தேவன் சிறப்பான வழியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அவ்வழி செவ்வையான வழியாக இருக்கிறது. அதைக் கண்டுகொள்ளுகிறவர்கள் சிலராகவே இருக்கிறார்கள். அதில் நீங்களும் ஒருவராக இருந்து அந்தவழியாக செல்ல முற்படுங்கள் அப்பொழுது பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

மேலும் சொல்லுகிறார்; "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதி.3:5,6). கெட்டுப்போன பிறகு அநேகருக்கு புத்திவருகிறது அல்லது புத்திதெளிவாகிறது. ஐயோ நான் அதை இப்படி

செய்திருந்தால் நன்றாயிருக்கும் என்பார்கள். இதையே வேதம் உன் சுயபுத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு என போதிக்கிறது. சுய புத்திவேண்டும் அல்லது சொல்வார் புத்திவேண்டும் என்பார்கள். இரண்டுமே வேண்டாம் வேதத்திற்கு செவிகொடுத்து முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருங்கள். கர்த்தர் காரியங்களை வாய்க்கச்செய்வார். அதுமட்டுமல்ல உன் வழிகளெல்லாம் அவரை நினைக்கும்போது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். தவறான பாதைகளில் நீங்கள் சென்றாலும் உங்களை சரியான பாதைக்கு கொண்டுவருவார். ஆகையால் தான் அநேக பாவிகள் கர்த்தருடைய மார்க்கத்தில் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என காண்கிறோம். ஏசாயா இப்படியாக சொல்லுகிறார்; "நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்" (ஏசா.26:7). நீதிமான் நீதியின்பாதையில் நடக்கிறான். அவனுடைய பாதை செம்மையாகவே இருக்கிறது. ஆனாலும் மகா நீதிபரராகிய கர்த்தர் அந்த நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறார் என்றால் அந்த நீதிமானுடைய வழியும் செம்மையாயிராதபடியால் அதை செம்மைப் படுத்துகிறார். தேவனுக்கு முன்பாக ஒருவனும் நீதிமான்கள் அல்ல. அவருடைய பார்வை மிகவும் சுத்தமுள்ளதாயிருக்கிறது என காண்கிறோம். நீங்கள் பாக்கியவான்களாக இருக்க கர்த்தரில் பெலன் கொள்ளுங்கள், உங்களுடைய இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**கேள்வி நேரம்**

**நாம் பாக்கியவான்களாக இருக்க நாம் யாருடைய மாதிரியை பின்தொடரவேண்டும்?**

அநேக மாதிரிகளை நாம் வேதத்தின் மூலமாக அறிகிறோம். நமக்கு பிரதான மாதிரியாக கொடுக்கப்பட்டவர் அன்பின் ஆண்டவர் இயேசு. அவரை அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு அடையாளப்படுத்துகிறார். "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்றார் (1பேது.2:21). எத்தனையோ தீர்க்கதரிசிகளைக் கொண்டு வழிநடத்திவந்த தேவன் கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக வெளிப்பட்டார். இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டும் உலகங்களை உண்டாக்கினார் என்றெல்லாம் வாசிக்கிறோம்.



ஆண்டவர் தேவனில் பெலன்கொண்டவர். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரியத்திற்காகவும் தேவனை நோக்கி ஜெபித்தார். சுயமாக அவர் ஒன்றையும் செய்யவில்லை. அதைப்போல அவருடைய வழிகள் செவ்வையானவைகளாகவே இருந்தது. ஆகையால் அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்துவரும்படி நமக்கு மாதிரியை பின்வைத்துப் போயிருக்கிறார். அதைதொடருங்கள். ஜெபிக்கிறோம்.

## 25. தேற்றரவாளன்

## The Helper

ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை திக்கற்றவர்களாக விடாமல் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்றார் (யோவா.16:7). தேற்றரவாளன் கர்த்தருடைய பிள்ளைகளை தேற்றுகிறார். இயேசு சீஷர்களை விட்டு பிதாவினிடத்தில் செல்லும்வேளை வந்தது அந்த வேளையில் சீஷர்கள் கலக்கமடைந்தார்கள். தேவனுடைய சித்தம் முழுவதும் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2தீமோ.1:7). இதோ ஓநாய்களுக்குள்ளே உங்களை அனுப்புகிறேன் என்று அப்போஸ்தலர்களைப்பார்த்து சொன்னார். ஆனாலும் அவர்களோடு இருந்த தேற்றரவாளன் அவர்கள் உபத்திரவப்படும்போது அவரால் தேற்றப்பட்டார்கள். அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என குறிப்பிடுகிறார்.

தேவனுடைய மக்களுக்கு இந்த சரீரத்தைக்குறித்து பயமில்லை. ஏனெனில், அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இந்த சரீரத்தை அவர்கள் கொன்றுபோட்டாலும் தேவன் மகிமையுள்ள சரீரமாக அவருடைய வருகையிலே மாற்றுவார். ஆகையால் சரீரத்தை கொள்ளுகிறவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றார். அந்தப்படியாக ஸ்தேவான் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது; தேவனை அறிந்த ஜனங்களாலே கல்லால் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். அவன் அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று

தொழுதுகொண்டான். அவன் அவர்களுக்கு பயப்படவில்லை ஏனெனில் அவன் பயத்தின் ஆவியைப்பெறாமல் அன்பும் பலமும் தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றதினால் அவர்கள் தன்னைக் கல்லால் அடிப்பதற்கு பயப்படாமல் கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்துக்கொண்டிருந்தான். அன்பானவர்களே, கர்த்தர் அவருடைய பிள்ளைகளை தேற்றும்படியாக தேற்றரவாளனை அனுப்பினார். அவர் சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தினார் எனகாண்கிறோம். பவுல் சொல்லும்போது; "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்கிறார் (பிலி.4:13). முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வார்த்தையால் பெலப்பட்டார்கள். பயமின்றி கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்தார்கள். பேதுரு யோவான் போன்றோர் எல்லாம் தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள். மேலும் அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினாலே சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுபோனார்கள் என்றெல்லாம் பார்க்கிறோம். ஆம், அன்பானவர்களே தேற்றரவாளன் அவர்களை அவ்வப்போது தேற்றி கர்த்தருடைய நாமம் மகிமைப்பட அவர்களை பெலப்படுத்தினார்.

நியாயாதிபதிகளின் காலத்தில் வாழ்ந்த சிம்சோன் என்ற மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவனை பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்து இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். "அவன் லேகிவரைக்கும் வந்துசேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள்; அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று" (நியா.15:14). இங்கே சிம்சோன் கர்த்தருடைய ஆவியானவரின் பெலத்தைப் பெற்றுக்கொண்டான்.

அதைப்போல தேவன் நமக்கு அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்ன வசனத்தை படித்தோம். ஆம், தேற்றரவாளன் அன்புள்ளவர் அந்த அன்பை நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். அவர் அப்போஸ்தலர்களைக் கொண்டு சொல்லும்போது; "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே



ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" என்கிறார் (1பேது.1:22). ஊக்கமான அன்பு செலுத்தும்படியாக ஆவியானவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். அன்பு திரளான பாவங்களை மூடும். ஆகையால் சகோதர சிநேகத்தில் நிலைத்திருந்து ஆவிக்குரியவர்களாகிய நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, மாயமற்ற சகோதரசிநேகமுள்ளவர்களாக சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும். இந்த விதமான அன்பு நம்மை கர்த்தருக்குள் நிலைக்கவும் அவருக்கேற்ற கனிகளைக் கொடுக்கவும் நம்மை தகுதிப்படுத்தும். பிரிவினைகளை தகர்த்தப்போடும், கர்த்தருடைய சபை வளர்ச்சியடைவதற்கு இவைகள் உதவியாயிருக்கும். கண்ட சகோதரனிடத்தில் நாம் அன்பு கூராவிட்டால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவோம் என வேதம் போதிக்கிறது. நாம் தேற்றரவாளனை உடையவர்களாக இருப்போமானால் அந்த சத்திய ஆவியானவர் அவருடைய பணி வளர்ச்சியடைவதற்காக காரியங்களை நம்மிலே செய்வார். மேலும், "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" என எழுதுகிறார் (1பேது.4:8). அவர் முதலாவது என்னில் அன்பாயிருக்கட்டும் பின்பு நாம் அவரில் அன்பாயிருக்கிறேன் என்று நாம் வாக்குவாதம் பண்ணமுடியாது. நாம் அன்பிலே நிலைத்திருக்கும்படியாக ஆவியானவரால் உற்சாகப்படுத்தப்படுகிறோம். நமக்கு எல்லாதவிதத்திலும் உதவியாக கொடுக்கப்பட்ட ஆவியானவரை எந்த விஷயத்தில் துக்கப்படுத்தாது நடந்துகொள்ளவேண்டும்.

அன்பு அதிகரிப்பதினால் உண்டாகும் வார்த்தைகளை கவனியுங்கள். "நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும், அப்படிச்செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்" என்கிறார் பவுல் (பிலே.9). உரிமையோடு கேட்க அதிகாரம் உண்டு. ஆனாலும், அன்பினிமித்தம் ஒநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறதை நாம் காண்கிறோம். அவன் ஏதாவது உமக்கு கொடுக்கவேண்டுமானலும் அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் என்று எழுதுகிறார். பிறருடைய கஷ்டங்களில் பங்குகொள்வதே அன்பு. தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்த்து நம்முடைய பாவங்களை மன்னிக்கவில்லை. முதலாவது அவர் நம்மில் தம்முடைய சொந்த குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்து அன்புகூர்ந்தார். இப்படிப்பட்ட அன்பு நம்மிலேயும் உருவாகவேண்டும்.

அடுத்தபடியாக தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என வாசித்தோம். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதும் தெளிவானவர்களாகவே

இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு தேவன் அந்தவிதமான ஆவியையே கொடுத்திருக்கிறார். அநேகர் தாங்கள் செய்வது இன்னதென்றும் தாங்கள் சொல்வது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல்; "ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் (1கொரி.9:26,27). ஒரு நபரை சந்தித்து நீ எதற்காக கிறிஸ்தவனாய் இருக்கிறாய் என்று கேட்கும்போது; அவன் கிறிஸ்தவனாக மாறியதற்கு ஒரு சிறப்பான பதிலை சொல்லவேண்டும். அதை விட்டு எல்லாரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள் நானும் சென்று ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டேன் என்னை அவர்கள் சபையிலே சேர்த்துக்கொண்டார்கள். நான் சபைக்குப்போகிறேன் என்று ஒருவன் சொன்னால் இது சரியாகிவிடுமா? எனக்காக என்னுடைய பாவத்திற்காக ஒருவர் பலியாகி இருக்கிறார். நான் மரிக்கவேண்டிய இடத்தில் எனக்காக ஒருவர் மரித்திருக்கிறார். அவரை, தேவன் பலி ஆடாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உலகத்தில் இல்லை என்ற இச்செய்தியை அறிந்துகொண்டேன்; மேலும் "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரான்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரை விட்டால் வேறுவழியில்லை என்பதை நன்கு அறிந்துகொண்டேன் என்று ஒருவர் சொல்வாரேயானால் அது ஒரு சிறப்பான பதிலாக இருக்கும்.

அன்பானவர்களே, நீங்கள் எப்படி ஒரு கிறிஸ்தவராக மாறினீர்கள்? சத்தியத்தை நேசித்து அதற்கு கீழ்ப்படிந்து நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்களானால் அது சரியாக இருக்கும், இல்லையேல் உங்களுடைய ஒப்புக்கொடுத்தலை மறு ஆய்வுசெய்யுங்கள்.

ஏனெனில்; "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1பேது.4:7). நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்பதற்கு ஆவியானவர் உதவியாயிருக்கிறார். அவர் நம்முடைய தேற்றரவாளன். எனவே அப்போஸ்தலர்களைக்கொண்டு எழுதும்போது தெளிந்து புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் என்று எழுதுகிறார். இன்றைக்கு அநேகர் ஜெபத்தை அலட்சியப்படுத்துகின்றனர். ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்தி ஜெபிக்கவேண்டும்.



ஒரு அதிகாரியை பார்க்கப்போகிறோம் எவ்வளவு ஆயத்தத்தோடு செல்லுகிறோம். சாதாரண அதிகாரியைப் பார்க்க இவ்வளவு ஆயத்தமாக செல்லும்போது பரலோகத்தில் இருக்கிற பிதாவோடு பேசும்போது எவ்வளவு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் நமக்கு அருமையான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை, நாம் நமக்குள் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. அப்பொழுது நாம் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம குமாரனுக்கு எழுதும்போது; "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்று எழுதுகிறார் (1தீமோ.1:14). நமக்கு உதவியாக கொடுக்கப்பட்ட தேற்றரவாளன் அதாவது பரிசுத்த ஆவியானவர், கர்த்தருடைய வசனங்களை நமக்குள் வைத்து பாதுகாக்க உதவியாயிருப்பார். அவரைக்கொண்டு அவைகளை பாதுகாக்கவேண்டும். நீங்கள் எப்படி உங்களை காத்துக்கொண்டு வருகிறீர்கள். உங்களுடைய சுயமுயற்சியினால் கிறிஸ்தவத்தில் நிலைத்திருக்க முடியாது. உங்களை தேற்றும்படியாகவும், உங்களுக்கு பலத்தைக் கொடுக்கும்படியாகவும், அன்பும் தெளிந்த புத்தியையும் கொடுக்கும்படியாகவும் வந்த தேற்றரவாளனோடு சேர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.

### கேள்விநேரம்

**அப்போஸ்தலருக்கு ஆவியானவர் கொடுக்கப்படும்போது, நீங்கள் பெலனடைவீர்கள் என்று சொல்லப்பட்டதா?**

ஆம், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8). ஆண்டவர் கட்டளையிட்டபடியாக அப்போஸ்தலர்கள் பெந்தேகொஸ்தே என்னும் நாளில் மேல் வீட்டில் தங்கியிருந்தனர் அப்பொழுது அவருடைய வாக்குத்தத்தத்தின்படியான அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. இப்படியாக அவர்கள் பெலனடைந்து உலகமெங்கும் சாட்சிகளாக கொண்டு சென்று கர்த்தருடைய ராஜ்யத்தின் பணியில் பயன்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வரங்கள் எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவன் தம்முடைய ராஜ்யத்தில் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்துகிறார் என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ள வேண்டும். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும்

மேய்ப்பர்களா? அவரவருக்கு தேவனால் அளிக்கப்படும் வரம் உண்டு. எல்லாமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக கொடுக்கப்பட்டது. அதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு தேவனுடைய பண்ணையில் செயல்படவேண்டும். இன்று தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்த நாம் ஆவிக்குரிய வசனங்களுக்கு செவிகொடுத்து, ஆவியானவருடைய உதவியோடு தேவனை ஆராதிக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் முற்படவேண்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 26. தேவனுடைய வலதுபாரிசத்தில்

## At God`s Right Hand

**ஆ**ண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை முடித்து அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்வேளை வந்தது அப்பொழுது அவருடைய சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரம்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

"அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" (1பேது.3:22). எல்லாவற்றிகும் மேலாக பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார். அவர் தம்மைத்தாமே தாழ்த்தினபடியால் எல்லாவற்றிக்கும்மேலாக அவரை உயர்த்தினார்.

தேவனிடத்தில் இருக்கிற தேவதூதர்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். ஆகையால் அவர் தம்முடைய சீஷனாகிய பேதுருவிடம் பேசும்போது; "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? என்றார்"



(மத்.26:53). பிதாவாகிய தேவன் குமாரனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுகிறார். அவர் ஜெபிக்கும்போதும் ஜனங்கள் மத்தியில் அற்புதங்களை செய்யும்போதும் பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாகவே செய்தார். மேலும், "தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது; தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்" (எபி.1:6). ஆகையால் தேவதூதர்கள் இயேசுவின் வார்த்தையின் கீழாக இருந்தார்கள். அவர்களுடைய முழுஅதிகாரமும் இயேசுவினிடத்தில் இருந்தது. இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுத்திருந்தார் என அறிகிறோம். "இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்" என எபிரெயர் 1:4-ம் வசனத்தில் படிக்கிறோம். வானத்திலும் பூமியிலும் அவர் உயர்த்தப்பட்டார். ஒவ்வொரு தேவதூதனுக்கும் வல்லமைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. காபிரியேல், மிகாவேல் போன்ற தேவதூதர்களைப் பற்றி படிக்கிறோம். இந்த தூதர்களுக்கு மேலான வல்லமையும் அதிகாரமும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

அதைப்போல பூமியிலே அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பிரதான கட்டளை கொடுக்கும்போது; "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்.28:18). இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார். ஏனெனில்; "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர் களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோம.13:1).

சகல அதிகாரத்திற்கும் காரணமானவர் பிதாவாகிய தேவன். அவருக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பூமியிலே கர்த்தருடைய பிள்ளைகள் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக பாருங்கள் இயேசுவும் இராயனுக்குரியதை இராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள், வரி கொடுப்பது நியாயம் என்றார். அவரும் ஒரு வெள்ளிப்பணத்தை வரியாக செலுத்தினார் என பார்க்கிறோம். நான் தேவனுடைய பிள்ளை, இவர்களுக்கு எதற்கு நான் வரிகொடுக்கவேண்டும் என்று ஒரு அதிகாரத்தை எதிர்த்து நிற்க முடியாது. ஏனெனில் அது தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நியர்களும், புறஜாதிகளும் நாட்டை ஆட்சிசெய்தாலும், தேவனுடைய மனுஷன் அந்த அந்நியர்களுக்கும் புறஜாதிகளுக்கும் கீழ்ப்படிந்திருக்க போதிக்கப்படுகிறான்.

மேலும் "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்" (மத்.9:6). அவன் எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டு மனுஷகுமாரனுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தவரை மகிமைப்படுத்தினார்கள். இந்த விதமான அதிகாரம் கொடுக்கப்படாமல் ஒரு மனுஷனுடைய பாவங்களை மன்னிக்க முடியுமா? கர்த்தராகிய இயேசு அதை ஜனங்கள் மத்தியில் நிருபித்துக்காட்டினார். சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. கடலையும் காற்றையும் அதடிட்னார் அங்கே அமைதல் உண்டாயிற்று. இன்றைக்கு உலகமே தங்களுடைய கையில் இருப்பது போல அநேகர் நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த காற்றும் கடலும் கீழ்ப்படியுமா? என்பதை சிந்தித்துப்பாருங்கள். அவர் சொல்ல அப்படியே நடந்தது. இயேசுவின் நாட்களில் ஆண்டவருடைய அற்புதங்களை கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர். அநேகர் இயேசுவிடம் வந்து எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர் என்று கேட்டார்கள். நானும் உங்களிடத்தில் சில கேள்விகளைக் கேட்கிறேன் யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ அல்லது மனுஷரால் உண்டாயிற்றோ என்றார்.

அவர்கள் பதில் சொல்ல தயங்கினார்கள் நானும் உங்களுக்கு சொல்லேன் என்றார். இத்தனை அற்புதங்களையும் கண்ட ஜனங்களில் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்றோர் அவருடைய உபதேசத்தில் குற்றம் கண்டுபிடிக்கும்படியாக முயற்சித்தனர். விசுவாசித்த ஜனங்களில் அநேகர் இந்த அதிகாரத்தை கொடுத்த தேவனுக்கு நன்றி சொலுத்தினர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அவருக்கு வல்லமைகளும் கீழ்ப்பட்டிருக்கிறது. ஒரு முறை யவீரு வீட்டிற்கு போகையில் "பன்னிரெண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள வளாயிருந்து தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அப்பொழுது இயேசு; என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது; பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும் ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள். அதற்கு இயேசு என்னிலிருந்து வல்லமை



புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்" (லூக்.8:43-46). ஒருவராலும் சுகமாக்கக் கூடாதிருந்த பெரும்பாடுள்ள ஸ்திரீயை இயேசுவின் வல்லமையுள்ள வஸ்திரம் சுகமாக்கியது.

மரியாள் ஒரு முறை எலிசபெத்வீட்டிற்கு சென்றிருந்தபோது; "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள். அப்பொழுது மரியாள்; என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது" என்றாள் (லூக்.1:43-49). இந்த மரியாள் கர்த்தராகிய இயேசுவானவரை சுமந்து பெற்றெடுக்கும் பாக்கியத்தை பெற்றவள். இவள் உலகத்தில் உள்ள அனைத்து பெண்களிலும் தானே ஒரு சிறந்த பெண் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளவில்லை. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்றாள். ஆம், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற கர்த்தர் வல்லமையுடையவர் இக்காரியத்தை செய்தார்.

எலிசபெத்தைக்குறித்து தேவதூதன் சொல்லும்போது; உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். ஆம் அன்பானவர்களே, தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை. "அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற் கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும்,

அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளைவளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" (லூக்.1:72-80). வல்லமையுள்ள தேவன் இயேசுவுக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானனை தெரிந்துகொண்டார். வெட்டுக்கிளியும் காட்டுத்தேனையும் புசித்துக்கொண்டு மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருந்தான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பான வாசகர்களே, ஆண்டவர் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதை நாம் இச்செய்தியின் மூலமாக தியானித்தோம். இந்த அதிகாரமுடையவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது நீங்களும் உங்களுடைய குடும்பமும் அவருக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டியது எத்தனை அவசியமான காரியம். அவருக்கு கீழ்ப்படிவோரை கர்த்தர் ஆசீர்வதித்து அவருடைய சித்தத்தை அவர்கள் மூலம் நிறைவேற்றிவருகிறார்.

அப்படியாக முதல் நூற்றாண்டில் அநேகர் பிற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இதில் இணைக்கப்பட்டனர். உலக அதிகாரங்கள் ஒரு காரியத்தை பிரகடனப்படுத்தும்போது அதை நாம் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதைப்போல அண்டசராசரங்களையும் ஆண்டு அவர்களை போஷிக்கும் கர்த்தருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்கும் உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு அவர் பிதாவினிடம் அதிகாரம் பெற்றதைப்போல அவர்களுக்கும் அதிகாரம் கொடுப்பாரா?**

ஆம், அவர் பெற்றுத்தருவதாக சொல்லியிருக்கிறார். யாருக்கென்றால்; "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகளின்மேல் அதிகாரம் கொடுப்பேன்" (வெளி.2:26). ஆண்டவருடைய கிரியைகளை பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கிறோம். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். நாமும்



அதைபோல நன்மைசெய்கிறதிலே சோர்ந்துபோகாமல் நன்மைசெய்யும்போது அவருடைய கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாய் இருப்போம். ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாய் தானதர்மம் செய்ய மறவாதிருப்போம். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யோவன்னாள், சூசன்னாள், மார்த்தாள், மரியாள், தெற்காள் என்று சொல்லப்படும் தபித்தாள் போன்றோர் அநேக நன்மைகளை கர்த்தராகிய இயேசுவின் நிமித்தமாக செய்து நற்சாட்சி பெற்றார்கள். அதைப்போல நீங்களும் செய்வீர்களானால் இயேசுவானவர் பிதாவினிடம் அதிகாரத்தை பெற்றதைப்போல நமக்கும் அதிகாரத்தைக் கொடுப்பார். இன்றே உங்களை சகல அதிகாரம் படைத்த ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 27. பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது

## Sin Shall Not Have Dominion Over You

**பா**வம் ஒரு பெரிய பிரச்சனையாக மனிதனுக்கு இருக்கிறது. இந்த பாவத்தை மேற்கொள்ள அவன் என்ன செய்யவேண்டும்? இதைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது? பாவத்தைக்குறித்து பலர் பலவிதமாக போதிக்கின்றனர். பரிசுத்த வேதாகமம் "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என போதிக்கிறது (ரோம.6:14). கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவினாலே உண்டாயின. இந்த கிருபைக்கு நீங்கள் கீழ்ப்பட்டிருப்பீர்களானால் பாவம் உங்களை மேற்கொள்ளாது. இன்றைக்கு அநேகர் கிருபையின் சத்தியத்தை அறியாமல் நியாயப்பிரமாணத்தின்படி தேடுகிறபடியால் அதை அடையாமல் இருக்கிறார்கள். பரிசுத்த வேதாகமம் மூன்று காலங்களைக்குறித்து பேசுகிறது. மூன்று காலங்களுக்கும் உரிய போதனைகள் அடங்கிய வேதாகமமாக இருக்கிறது. இதில் முற்பிதாக்களின் காலம், மோசேயின் காலம், கிறிஸ்துவின் காலம் என மூன்று காலங்களை நாம் காணலாம். இதில் நாம் இப்போது கிறிஸ்துவின் காலத்தில் அதாவது, கிருபையின் சத்தியத்தின் கீழ் இருக்கிறோம். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் "பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என தெளிவாக எழுதுகிறார் (ரோம.6:18).

பாவத்தில் இருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தின் கீழ் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம். கிறிஸ்துவையும் அவருடைய கிருபையுள்ள

வசனங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளும்போது நம்மை அடிமைப்படுத்தியிருந்த பாவத்தினின்று அதாவது நியாயப்பிரமாணத்தின்று விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானோம். நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் நம்மை மேற்கொள்ளாது. நீங்கள் கிருபைக்கு கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா? அல்லது உங்களை அடிமைப்படுத்தும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிறீர்களா? நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் என்பதை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என நம்புகிறோம். நிறைவானது என்று சொல்லும்போது தேவனால் அங்கிகரிக்கப்பட்டது. தேவன் இயேசுவை முன்குறித்தார். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவன் அவர் அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். அவரை ஏற்றுக்கொள்ளாதவன் அவர் அனுப்பினவரையும் ஏற்றுக் கொள்ளாதிருக்கிறான்.

இயேசு சொல்கிறார்; "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்றார் (யோவா.8:12). இயேசு வந்ததின் நோக்கமே இருளிலே இருக்கும் ஜனங்கள் வெளிச்சத்தைக் காணவும், ஜீவஒளியை அடையவும், பாவத்திலிருந்து ஜனங்களுக்கு விடுதலை கொடுக்கவுமே வந்தார். அவரை பின்பற்றுகிறவர்கள் ஜீவஒளியை அடைகிறார்கள். "மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" (ரோம.8:10). சிலருடைய வாழ்க்கையில் பாவம் குடிகொண்டிருக்க காரணம், அவர்களுடைய சரீரம் பாவத்தினிமித்தம் சாகவில்லை என்றே சொல்லவேண்டும். கிறிஸ்து நம்மிலே வரும்போது பாவத்திற்கு இடமில்லை.

பாவசரீரம் செத்துவிடுகிறது. எதிலே என்று நீங்கள் கேட்கலாம்; ஞானஸ்நானத்திலே அவரோடே அடக்கம்பண்ணப்படுகிறோம். அப்பொழுது பாவசரீரம் அடக்கம்செய்யப்படுகிறது, நீதிக்குரிய சரீரம் எழுந்திருக்கிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லம் புதிதாயின என்ற வசனத்தின்படி புது சிருஷ்டியாயிருக்கிறான்.

ஏனெனில், இயேசு பாவத்தை சிலுவையில் ஜெயித்தார். அதாவது, பாவத்தைக் கொண்டுவரும் பிசாசை இயேசுவானவர் ஜெயித்தார். அவரைப்பின்பற்றுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவ்விதமாக பாவத்தை ஜெயிக்க முடியும். இயேசுவை பிசாசு சோதித்த வேளையில்; என்னைப் பணிந்துகொள் என்றான்; "அப்பொழுது இயேசு; அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே



ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத்.4:10). கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் இவ்விதமாக பாவத்தை ஜெயிக்க முடியும். இதற்கு முன் மாதிரியாக நம் ஆண்டவர் இயேசுவானவர் இருக்கிறார். அவரால் ஜெயிக்க முடியும், நம்மால் ஒன்றும் முடியாது என்பார்கள்.

நீங்கள் புதிய ஏற்பாட்டு சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து வாழ்வீர்களானால் நிச்சயமாக பாவம் உங்களை மேற்கொள்ளாது. உங்களை தொடுவதற்கும் பாவத்திற்கு அதிகாரம் இல்லை. ஏனெனில் உங்களுடைய முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்று கர்த்தராகிய இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் கிருபைக்கும், கிருபையுள்ள வசனங்களுக்கும் உங்களை ஒப்புக்கொடுத்து வாழுங்கள்.

**பாவம் சிலரைமேற்கொள்கிறது அதற்கு காரணம் என்ன என்று அநேகர் கேட்கின்றனர்.** பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வதுபோல, சிலர் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டு பிசாசின் மக்களாகவே வாழ்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சாபத்தின் பிள்ளைகள் என்று வேதம் சொல்லுகிறது. "விபசாரமயக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" (2பேது.2:14). இப்படிப்பட்டவர்களாலே சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்களை தேவன் தண்டியாமல் விடார். ஏனெனில்; "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து" என வாசிக்கிறோம் (2பேது.2:4).

தேவதூதர்களையே அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி வைத்திருக்கும்போது தம்முடைய சாயலில் உண்டாகக்கப்பட்ட மனுஷன் பாவம் செய்யும்போது அவனை விட்டுவிடுவாரா? அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என 1யோவா.3:8-ல் காண்கிறோம். கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறவன் பாவம் செய்ய மாட்டான் ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் இருக்கும் ஆகையால் அவன் பாவம் செய்யமாட்டான். ஆனால் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டவர்கள், பாவத்திற்கு அடிமையானவர்கள் பிசாசின் மக்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பிசாசு தன் வசனப்படுத்திக்கொண்டு அவர்கள் மூலமாக கிரியை செய்வான்.

ஆகையால் அப்படிப்பட்டவர்கள் பிசாசினாலுண்டானவர்களாயிருக்கிறார்கள். பாவத்திற்கு அடிமையானவர்கள் தங்களுடைய இச்சைகள் நிறைவேறாத சமயங்களில், பாவமில்லாதவர்களையும் பாவத்திற்கு அடிமைப்படுத்தும்படியாக வஞ்சகமான காரியங்களை ஏற்படுத்துவார்கள். இதனால் கிருபைக்கு கீழ்ப்படிந்தவர்கள் இப்படிப்பட்டவர்களைக்குறித்த விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பிசாசானவன் கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள்ளே அனுப்புவான். ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, உங்களை பாவம் மேற்கொள்ளாமல் பாதுகாத்துக்கொள்ள உங்களை கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள். முதல் நூற்றாண்டு சீஷர்கள் இந்த வசனத்திற்கு தங்களை முழுவதுமாக அற்பணித்து ஊழியம் செய்தனர். அப்படியிருந்தவர்களில் சிலர் பிசாசினாலும், பிசாசினுடைய உபதேசத்தினாலும் இழுக்கப்பட்டு மேன்மையான ஆசீர்வாதங்களை இழந்தனர். அதுபோல நீங்களும் போய்விடாதிருங்கள்.

**ஏன் பாவத்திற்கு விலகவேண்டும்?** பாவம் ஆதிமுதலாக மனிதனை பின்தொடர்கிறது. தேவனால் உண்டாக்கப்பட்ட மனிதனை வஞ்சிக்கிறது. பாவம் மனிதனுடைய வாழ்வில் மரணத்தைக் கொண்டுவருகிறது. ஆகையால் இப்படிப்பட்ட பாவத்தை மனிதன் விட்டு விலகி தேவனுடைய கிருபைக்குள்ளாக தன்னை பாதுகாத்துக்கொள்ள அழைக்கப்படுகிறான். இவ்வுலகத்தில் வாழ்ந்து நம்முடைய பாவத்திற்காக மரித்து உயிர்த்த இயேசுவானவர் பாவத்துக்கு விலகினவராயிருந்தார். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரைப்போல தன்னை பாவத்துக்கு விலக்கி பாதுகாத்துக்கொள்கிறான். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" என பேதுரு சொல்கிறார் (1பேது.2:22). உலகத்திலே எத்தனையோ மகான்கள் வாழ்ந்தார்கள் என சரித்திரம் சொல்லுகிறது அது உண்மையாகவும் இருக்கிறது. ஆனால் பாவம் இல்லாமல் வாழ்ந்தார்களா? என்றால் இல்லை. பாவத்தோடு வாழ்ந்து பாவத்தோடு மரித்தார்கள். ஆனால் ஆண்டவர் இயேசு பரலோகத்தின் பிதாவின் சித்தம் செய்கிறவராக பாவத்திற்கு விலகினவராக இருந்தார்.

அவருடைய வாயிலே ஜனங்கள் குற்றம் காணும்படியாக முயற்சித்தார்கள் அது கூடாமற்போயிற்று. வாய் சுத்தம் வேண்டும், கை சுத்தம் வேண்டுமென்பார்கள் ஆனால், ஒன்றுமே சுத்தமாக இருக்காது. உலகத்திலே ஒரு நபரையும் நம்மால் காட்டமுடியாது. ஏனெனில் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என திருமறை நமக்குப் போதிக்கிறது. வேதம் சொல்லுகிறபடி பாவம் இல்லாத நபர் உலகத்தில் ஒருவரும் இல்லை. இப்படி



இருள் நிறைந்த உலகத்தில் பாவமில்லாமல், முப்பத்து மூன்றரை வருடங்கள் வாழ்ந்து, சிலுவையில் பாவத்தை ஜெயித்த ஆண்டவர் இயேசுவைப் பற்றி உலகத்தில் அறியாதவர் எவரும் இருக்கமுடியாது.

அவரைப்பின்பற்றுகிற அல்லது அவருடைய நாமத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிற ஒருவனும் பாவம் செய்யான் என்று வேதம் சொல்லுகிறது. "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்" (1யோவா.3:9). பரிசுத்த வேதம் பாவ மனிதனைக்குறித்தும் பாவத்திலிருந்து விடுபட்ட மனுஷனைக்குறித்தும் பேசுகிறது. இதனாலே பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம்.

ஒருவன் தேவனால் பிறந்து அதாவது இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டு, விசுவாசித்து, தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டவன் தேவனால் பிறந்தவன். இப்படிப்பட்டவன் பாவம் செய்யமாட்டான். ஏனென்றால் விலையேறப்பெற்ற தேவனுடைய வசனமாகிய விதை அவனுடைய இருதயத்திற்குள் இருக்கிறபடியால் அவன் பாவம் செய்யமாட்டான் என்று வேதம் அவனைக்குறித்து சாட்சிகொடுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சாட்சி இருக்கிறபடியால் ஒரு கிறிஸ்தவன் பாவத்திற்கு விலகவேண்டும். பாவம் அவனை மேற்கொள்ள இடங்கொடாதிருக்க வேண்டும்.

மேலும், அவனுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் நித்தியமானதாக இருக்கிறபடியால் அவன் பாவத்திற்கு விலகவேண்டும். "இப்பொழுது நீங்கள் பாவத்தின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்" (ரோம.6:22). உலகத்திலே பணம் இருந்தால் எதையும் விலைகொடுத்து வாங்கிவிடலாம் என்பார்கள். ஆனால் இது பரலோகத்தில் செல்லாது. நித்தியஜீவனை யாரும் விலைகொடுத்து வாங்கிவிட முடியாது. பாவத்தோடு பரலோகம் செல்லவும் முடியாது. பாவத்திற்கு விலகினவர்களும், தேவனுடைய சித்தத்தின்படி வாழுகிறவர்களும் பரலோக பாக்கியத்தை பெறுவார்கள். நீங்களும் இந்த பாக்கியத்தை பெற தேவ வசனத்திற்கு செவிகாடுங்கள்.

**"கர்த்தாவே, உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது; கர்த்தாவே, உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்"**
**சங். 135:13**

**கேள்வி நேரம்**

**தேவனால் பிறந்தவன் தன்னை என்ன செய்துகொள்ளுகிறான்?**

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1யோவா.5:18). ஒரு விவசாயி தன்னுடைய விவசாயத்தை பாதுகாக்கும்படியாக வேலியடைக்கிறான். ஆகையால் அவனுடைய விவசாயம் பாதுகாக்கப்படுகிறது. அதைப்போல தேவனுடைய வசனங்களுக்கு கீழ்ப்படிந்து, தேவனால் பிறந்த ஒரு கிறிஸ்தவன், பாவம் செய்யாதிருக்க தேவனுடைய வசனத்தைக் கொண்டு தன்னை பாதுகாத்துக்கொள்ளுகிறான்.

அவனுடைய எதிராளியாகிய பிசாசு அவனைத் தொடமுடியாது போய்விடுகிறான். நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் பாவஞ்செய்யமாட்டீர்கள் என்று வேதம் உங்களைக்குறித்து சாட்சிகொடுக்கிறது. மேலும், நீங்கள் உங்களை காத்துக்கொள்ளுகிறபடியால் உங்களை பொல்லாங்கன் தொடமுடியாது எனவும் சொல்லுகிறது. இவ்வசனத்தின்படியாக உங்களை காத்துக்கொண்டு தேவ சித்தம் செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 28. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
## The Resurrection of Christ

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.** லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளிடத்தில் இயேசுவானவர் பேசிக்கொண்டிருக்கும்போது "அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்" (யோவா.11:25,26). நம்மில் எத்தனைபேர் இந்தவிதமான நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். அநேகர் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கின்றனர்.

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோர் அவருக்குள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். எனவே இயேசுவானவர் மார்த்தாளிடத்தில் சொல்லும்போது என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் மேலும் உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார்.



உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற சிலரைக்குறித்து நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். "என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள், பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" (அப்.23:8). இந்த சதுசேயர்களைப்போல உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற அநேகரை நாம் காண்கிறோம்.

மரணத்திற்கு பின்பு ஒன்றுமில்லை என்று சொல்லுகிறவர்கள் துணிந்து பல பாவங்களில் ஈடுபடுகின்றனர். இருக்கும் வரை வாழ்ந்து அனுபவிக்க மனிதன் படைக்கப்பட்டான் என்று சொல்லி இவ்வுலகத்தில் தகாத விதமாக வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் கோடிக்கணக்கானோர். மரணம் எல்லோருக்குமே சம்பவிக்கும். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மண்ணுக்கே திரும்புவான். ஆனால் ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்புகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து சொல்லும்போது; "புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்" அதைப்போல "மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும் அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்" என்கிறார் (1கொரி.15:36,37, மற்றும் 42).

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.** ஆண்டவர் சீஷர்களுக்கு முன்னமே உயிர்த்தெழுதலைக்குறித்து சொல்லியிருந்தார். ஆனால் அவர்களோ அதை மறந்துபோனார்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இயேசுவின் மரணத்திற்கு பின்பு அவர் கல்லறையில் வைக்கப்பட்டபின்பு கந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் எடுத்துக்கொண்டு வாரத்தின் முதல் நாளில் கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். நடந்தது என்ன? "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவி லிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள்" என்று தேவதூதர்கள் சொன்னார்கள் (லூக்.24:6,7).

சிலவேளைகளில் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருக்கும் நமக்கு தேவனுடைய வார்த்தைகள் மேலும் நம்பிக்கையை கொடுத்து நம்மை

உற்சாகப்படுத்துகிறது. முதல் நூற்றாண்டு சீஷர்கள் மிகவும் துக்கத்தோடு இருக்கக்கூடிய அந்த நாட்களில் தேவதூதர்கள் சொன்ன வார்த்தை அவர்களை உற்சாகப்படுத்தியது. அவர்களுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை அந்த அளவு சந்தோஷமுள்ளவர்களாக, இச்செய்தியை உடனே அறிவிக்கவேண்டும் என்று தீவிரமாக அந்த இடத்தை விட்டு கடந்துசென்றனர்.

இதில் மகதலேனா மரியாள் மற்ற மரியாளுடைய பங்கு அதிகமாயிருந்து. "அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:8). இவ்வசனத்தில் மகா சந்தோஷத்தோடு என்று வாசிக்கிறோம். சத்தியம் தள்ளுபடியாகிவிட்டது என்று எண்ணிக்கொண்டிருந்த ஜனங்கள் மத்தியில் இயேசுவின் உயிர்த்தெழுதல் சீஷர்களுக்கு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

"வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாமலும், இயேசு தேவனுடைய குமாரன் என்பதை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்த யூதர்கள் மத்தியில் இயேசுவின் உயிர்த்தெழுதலும் அவர் வாரத்தின் முதல் நாளில் சீஷர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து அவர்களை சந்தித்ததும் சீஷர்களுக்கு சந்தோஷத்தை கொடுத்தது. அவரில் அவர்கள் விசுவாசம் கொள்ளவும் மேலும் தேவனுடைய சத்தியத்தில் நிலைத்திருக்கவும், இந்த சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் சென்று சொல்லவும் அவர்களுக்கு ஊக்கமளித்தது.

இயேசுவானவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும் அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். இதனால் அவர்கள் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமாக இருந்து முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபையை கட்டினர். இன்று கர்த்தருடைய சபையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு நம்பிக்கையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது. நீங்கள் இந்தவிதமான நம்பிக்கையுடையவராயிருக்கிறீர்களா?



**அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்.** முதல் நூற்றாண்டில் உலகத்திற்கு இரட்சிப்பின் வசனம் கொடுக்கப்பட்டது. சத்தியத்தை அறியாதவர்கள் அதைப் பார்த்தார்கள், கேட்டார்கள். ஆனாலும் அவரை அறியாமல் சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். பிதாவாகிய தேவன் கர்த்தராகிய இயேசுவை உயிர்ப்பித்தார். இதை அப்போஸ்தலர்கள் எருசலேம் துவங்கி சகல நாடுகளுக்கும் சென்று இந்த சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது" என காண்கிறோம் (அப்.4:33). அவர்கள் மிகுந்த பக்திவைராக்கியத்தோடும் வல்லமையோடும் கர்த்தருடைய வசனத்தை சொல்லும்படியாக துணிந்து செயல்பட்டனர். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தனர். பேதுரு பிரசங்கிக்கும்போது; "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்றான் (அப்.3:15). அந்நாட்களில் கிறிஸ்துவைக்குறித்து யாராவது பிரசங்கித்தால் அவர்களுக்கும் மரண தண்டனை கொடுக்கப்படும் அல்லது சிறைச்சாலையில் போட்டு துன்புறுத்துவார்கள். இதையெல்லாம் அறிந்தும் அப்போஸ்தலர்கள் அவர்களுடைய பயமுறுத்தலுக்கு பயப்படாமல் சுவிசேஷவசனத்தை எங்கும் திரிந்து பிரசங்கித்தனர்.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கிக்கும்போது; "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" என்ற உன்னதமான செய்தியை கொரிந்திய சபையாருக்கு எழுதியனுப்பிய கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.15:14-17). இப்படியாக அப்போஸ்தலர்கள் பலமாய் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து சாட்சிகொடுத்தார்கள்.

**கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்தெழுதலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது எத்தனை ஆசீர்வாதமான காரியம்.** நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படியில்லையென்றால் இன்றே கிறிஸ்தவராக மாற முயற்சியுங்கள். கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததைப்போல

அவரைப்பின்பற்றுகிற கிறிஸ்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22). ஆதாமுக்குள் பாவத்தில் எல்லாரும் மரிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்திலே எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். இந்த உண்மையை நீங்கள் அறிவீர்களா? இந்த உயிர்த்தெழுதலை பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கிறார். அவரைக் கொண்டு உலகத்தை இரட்சிக்கும்படியாக தேவன் திட்டம்கொண்டார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர் களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோம.6:3-5). நீங்கள் இந்தவிதமாக வேதாகமம் சொல்லுகிறபடி ஞானஸ்நானம் பெற்று உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவர் களாயிருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே உங்களுடைய ஞானஸ்நானத்தைக்குறித்து மறு ஆய்வு செய்யுங்கள். ஒரே ஞானஸ்நானம் அது கர்த்தருடைய சபையில், வேதவசனங்களின் அடிப்படையில் அதற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானம் உங்களை பாவத்திலிருந்து இரட்சித்து கர்த்தருடைய சபையில் சேர்க்கும்.

மேலும், "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" 1கொரி.15:49மற்றும் 52 வசனங்கள். மறுரூபம் என்று சொல்லும்போது ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். உலகம் உண்டானது முதல் தேவனுடைய வசனங்களின்படி வாழ்ந்தவர்கள் தேவன் ஏற்படுத்தியிருக்கும் பரலோக பாக்கியத்தை அடைவார்கள். இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சம்பவிக்கும். இந்த உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். அந்த பாக்கியவான்களுடைய பட்டியலில் நீங்களும் இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் உங்களையும் அந்தப்பட்டியலில் இணைத்துக்கொள்ள கர்த்தருடைய வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.



**கேள்வி நேரம்**

**அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிக்குமா?**

இன்றைக்கு அநேகர் அழிந்துபோகிற காரியங்களுக்கு முக்கியதுவம் கொடுத்து பெரிய ஆசீர்வாதங்களை இழக்கின்றனர். "சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதுமில்லை" என அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக எழுதியிருக்கிறார் (1கொரி.15:50). உலகம் உலகம் என்று சதா உலகத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அன்பானவர்களே, உலகம் உலகத்தை சிநேகிக்கும். ஆனால் உலகத்திலிருந்து நம்மை பிரித்தெடுக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. அவருடைய வசனங்களுக்கு செவி கொடுத்து, மாம்ச இச்சையிலிருந்து விடுபடுங்கள். தேவன் நமக்குக்கொடுத்த ஆவி மட்டுமே, தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்பும். மற்றவைகள் எல்லாம் உலகத்தில் உண்டானவைகள் இவைகள் உலகத்திலே அழிந்துபோகும். ஆகையால் அழிந்துபோகும் காரியங்களில் உங்களுடைய கவனத்தை செலுத்தாமல் நித்திய ஜீவன் வரை நிலைத்திருக்கும் கர்த்தருடைய வசனத்திற்கு உங்களுடைய செவியைசாய்த்து, நித்திய வாழ்வை சம்பாதித்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து வெளிவரும் வானொலி செய்தியின் சத்தியங்களை வாசித்துப் பயன்பெறுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 29. தேவனாலே பிறந்தவர்கள்

## Children Who is Born of God

**ம**னிதன் தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படி தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன் பாவத்தின் வஞ்சனையினால் தேவ சமுகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். அவனை மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. அவரையும் அவருடைய உபதேசங்களையும் ஒருவன் ஏற்றுக்கொள்ளும்போது மீண்டும் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்படுகிறான். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:12). ஒரு ராஜாவின் வீட்டில் பிள்ளையாக பிறப்பது என்பது பெரும் பாக்கியம். அதைப்போல தேவனுடைய பிள்ளையாக பிறக்கவேண்டுமானால் பரலோகத்திலிருந்து பாவ உலகில் மானிடனாக வந்து பிறந்த ஆண்டவர் இயேசுவையும், அவருடைய உபதேசங்களையும், விசுவாசித்து, கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம்

பெற்றுக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்படுகிறோம். இதற்கு விசுவாசம் அடித்தளமாக அமைகிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

சிலர் விசுவாசிப்பார்கள் ஆனால் ஏற்றுக்கொள்ள தயங்குவார்கள். பிசாசுகளும் தேவனை விசுவாசித்து நடுங்குகின்றன. அதைப்போல ஒரு மனிதன் இருப்பானேயானால் அவனுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். விசுவாசத்தை கிரியைகளினால் காண்பிக்கவேண்டும். "தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது" என்று 1யோவா.4:2-ல் வாசிக்கிறோம். அறிக்கை மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒரு பிள்ளையைப் பார்த்து நீ யாருடைய மகன் அல்லது யாருடைய மகள் என்று கேட்கும்போது அந்தப்பிள்ளை தயக்கமின்றி தான் இன்னாருடைய மகன் அல்லது மகள் என்று சொல்வதை கேட்கிறோம். அதைப்போல நம்முடைய பரலோகத்தின் பிதாவையும் அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவையும் அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல எனக் காண்கிறோம். மனிதர்கள் முன்பாக அறிக்கை பண்ணுகிறவர்களை தேவன் பரலோகத்தில் உள்ள தூதர்களுக்கு முன்பாக அறிக்கை பண்ணுவார். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்கிறார் பவுல் (கலா.3:26,27).

நாம் விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்படுகிறோம். உலகத்தில் ஒரு தகப்பனுக்கு பிள்ளையாக பிறக்கிறவன் அவனுடைய சுதந்தரவாளியாக இருக்கிறான். தேவனுக்கு பிள்ளையாக பிறப்பது என்பது விசுவாசத்தினாலே வரக்கூடியதாக இருக்கிறது. அதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் இருக்கிறது. இது வெறும் தண்ணீரில் இறங்கி எழுந்திருப்பதல்ல. ஒவ்வொருநாளும் தண்ணீரில் ஸ்நானம் பண்ணுகிறோம். அது நம்முடைய பாவத்தைப்போக்குமா? அது மாம்ச அழுக்கை நீக்குபவையாக இருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் வைக்கப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அநேகர் ஞானஸ்நானம் பெறுகின்றனர். அது உலக பாரம்பரியமான ஒன்றாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய உபதேச சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று பெறும் ஞானஸ்நானம் அவர்களை இரட்சிக்கும். அப்படிப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார்.



பிறப்பு என்பது மாம்ச சம்பந்தமாக இரத்தத்தினாலும் மாம்சத்தினாலும் பிறப்பதாக இருக்கிறது. தேவனுக்கு பிள்ளையாக பிறப்பது என்பது இதற்கு அப்பாற்பட்ட செயலாக இருக்கிறது. இது குறித்து நிக்கொதேமு என்றவன் இயேசுவினிடத்தில் வந்து; "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக; ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.3:4,5). பிறப்பு என்றவுடன் அநேகருடைய எண்ணத்தில் உதிப்பது மாம்ச சம்பந்தமான பிறப்பே என எண்ணுகின்றனர். இங்கு இயேசுவானவர் ஜலத்தினாலும் என்று சொல்வது ஞானஸ்நானத்தை குறிக்கிறது. அவரை விசுவாசித்து கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கும் செயலைக்குறிக்கிறது. ஆவியினாலும் என்று சொல்லும்போது அவன் புதிதாய் பிறந்த குழந்தையைப்போல புதிதான ஆவியுள்ளவனாக, கலங்கமில்லா ஞானப்பாலாகிய வசனப்பாலின்மேல் வாஞ்சையுள்ளவனாக, பாவமறியாதவனாக, பரிசுத்தவானாக இருக்கவேண்டும். இது ஆவிக்குரிய பிறப்பை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பிறந்தவர்கள், "இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" என்று யோவான் 1:13-ல் வாசிக்கிறோம். உங்களுடைய பிறப்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது. நீங்கள் தேவனால் பிறந்தவர்களாயிருக்கிறீர்களா? அல்லது பாரம்பரியமான கிறிஸ்தவ குடும்பத்தில் மாம்ச சம்பந்தமாக பிறந்து கொண்டு நானும் ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் என்று சொல்லிக்கொண்டு வருகின்றீர்களா? உங்களுடைய பிறப்பைக்குறித்து மறு ஆய்வுசெய்யுங்கள். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் உங்களுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று வேதத்தில் வாசிக்கிறபடி உங்களுடைய விசுவாசத்தினாலே வல்லமையுள்ள வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுத்து தேவனுடைய பிள்ளைகளாகமாறுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரம் 13,14 ங்காம் வசனத்தில் "மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான் ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்றான். ஆம், தேவனுடைய பிள்ளைகள் இயேசுவின்

இரத்தத்தினாலே பாவமற கழுவப்படுகிறார்கள். இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்ற வசனத்தின்படி கழுவப்படுகிறார்கள். இப்படி கழுவப்பட்டவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிறார்கள்.

இயேசுவின் நாட்களில் வியாதியஸ்தர்கள், தங்களுடையவர்களை இழந்தவர்கள், வருத்தப்படுகிறவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் அதிகமாக இயேசுவை நோக்கி வந்தார்கள். பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமுள்ளவர்களுக்கல்ல என்று இயேசுவானவரே சொல்லியிருக்கிறார். ஆனால் பலர் எங்களுக்கு என்ன குறை இருக்கிறது. நாங்கள் ஒரு குறையுமின்றி வாழ்கிறோம் என்று சொல்லிக்கொண்டு உலக சம்பத்துக்களையே நாடிப்போகிற கோடிக்கணக்கான ஜனங்களை பார்க்கிறோம். இயேசுவின் நாட்களில் குறைவுள்ளோர் கர்த்தரிடம் வந்ததைப்போல இந்நாட்களிலும் கஷ்டத்திலும் பாடுகளிலும் உபத்திரவங்களிலும் கடன்பிரச்சனையில் மாட்டிக்கொண்டோர்களும், உலகத்தை வெறுத்து மரணத்தை நோக்கி போகிறவர்களும் இயேசுவின் சத்தம்கேட்டு அவரைநோக்கி வருகிறார்கள். அதையே வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் வாசிக்கிறோம். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். மேலும் இவர்கள் இயேசுவின் இரத்தத்தினாலே தங்களுடைய பாவங்களை வெளுத்து தோய்த்தவர்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நீங்கள் கடந்துவந்து இருக்கிறீர்களா?

இப்படிப்பட்டவர்களுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன? என்பதைக்குறித்து பார்ப்போம். உலக ராஜாக்களுக்கு பிள்ளையாக பிறந்தால் அவனுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன என்பதை அறிவீர்கள். உலகத்தையும் சர்வத்தையும் உண்டாக்கின தேவனுக்கு பிள்ளையாக பிறக்கும்போது அதைக்காட்டிலும் அதிகமான ஆசீர்வாதம் இருக்குமல்லவா? ஆம், அவர்கள் கர்த்தரோடே என்றென்றுமாய் இருக்கும் பாக்கியத்தை பெறுவார்கள். "உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச.4:17). இராஜ அரண்மனையில் ராஜாவோடு இளவரசன் இருப்பானேயானால் அவனுக்கு எத்தனை ஆசீர்வாதம் இருக்கும்.

அதற்கும் மேலாக கர்த்தரோடிருக்கும் ஜனங்களுக்கு இருக்கும். அவர்கள் பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள



ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்று காண்கிறோம். மேலும் பவுல் கொலேசெய சபையாருக்கு எழுதும்போது; "நீங்கள் கர்த்தராகிய இயேசுவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து..." என கொலோ.3:23 -ல் வாசிக்கிறோம். சுதந்தரமாகிய பலன் ஒவ்வொருவருக்கும் வைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் பவுல் சொல்லும்போது "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்கிறார் (2தீமோ.4:8). தேவனுடைய பிள்ளைகளாக மாறும் ஆசீர்வாதம் யாவருக்கும் உரியது. யாவரும் அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக மாறலாம். இந்த உலகத்திலே வரும் உபத்திரவங்களிலிருந்து அவன் வெற்றியடைந்து ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழவேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி.21:7). கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை. அநேகர் வழியருகே விதைக்கப்பட்ட நிலத்தைப்போலவும், முற்களுக்குள் விதைக்கப்பட்ட விதையைப்போலவும், கற்பாறையில் விதைக்கப்பட்ட விதையைப்போலவும் பலன்கொடாதிருக்கிறார்கள்.

தேவன் யாவருக்கும் போதுமான தேவனாயிருக்கிறார். அவர் பட்சபாதம் செய்கிறவரல்ல, யாவரையும் அவர் நேசிக்கிறார். நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். கர்த்தருடைய வசனத்தைப் பற்றிக்கொண்டு யாரெல்லாம் இந்த உலகத்தில் ஜெயங்கொள்ளுகிறார்களோ, அவர்களுக்கு நீதியின் கிரீடம் வைத்திருக்கிறார். அவர்கள் அதை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தேவனாக அவர் இருக்கிறார். அவர்கள் அவருடைய குமாரனாயிருப்பார்கள். ஆண்டவர் இயேசு இவ்வுலகத்தில் பிசாசையும் அவனுடைய காரியங்களையும் ஜெயித்ததைப்போல, யாரெல்லாம் உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் ஜெயிக்கிறார்களோ, அவர்கள் தேவனுடைய குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் இருப்பார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, நீங்கள் தேவனால் பிறந்தவராக இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இன்றே அவருடைய பிள்ளைகளாக மாற முற்படுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**தேவனால் பிறந்தவர்கள் பாவம் செய்யமாட்டார்களா?**

ஆம், தேவனால் பிறந்தவர்கள் பாவம் செய்யமாட்டார்கள். ஏனெனில் அவருடைய வித்தாகிய வசனம் அவர்களில் தரித்திருக்கிறது. அவருடைய வசனம் அவர்களை காக்கிறது. பாவத்திற்கு விலகும்படி அவ்வசனங்கள் அவர்களை எச்சரிக்கிறது. தேவ ஆவியானவர் பாவத்திற்கு இடங்கொடார். ஆகையால், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1யோவா.5:18). யோசேப்பு என்ற தேவனுடைய மனுஷன் தன்னை பாதுகாத்துக்கொண்டான். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி? என்ற ஒரு கேள்வியை எழுப்பினான்.

ஆனால் யூதாஸ் என்பவனோ, தனக்குள்ளே பிசாசு உட்புகுந்தபடியாலே இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி வகைதேடினான். தான் யார், எப்படி தெரிந்துகொள்ளப்பட்டோம் என்பதை மறந்து முப்பது வெள்ளிக்காசுக்கு உடன்பட்டு இயேசுவை முத்தத்தினாலே காட்டிக்கொடுத்தான். இதிலிருந்து தேவனாலே பிறந்தவர்கள் தங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ளுகிறார்கள் என்பதையும், பிசாசின் பிடியிலிருக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை எப்படி இழக்கிறார்கள் என்பதையும் அறிகிறோம். நீங்கள் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 30. ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்
## Exhort One Another

ஒருவருக்கொருவர் ஏன், எதற்கு, எப்படி புத்திசொல்லவேண்டும் என்ற காரியங்களைக்குறித்து இச்செய்திவேளையிலே தியானிக்கவுள்ளோம். **முதலாவது ஏன் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** கர்த்தருடைய வேதத்தில் படிக்கிறோம் "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்" (எபி.3:13). ஒருவனாகிலும் கெட்டுப்போவதை தேவன் விரும்பவில்லை. ஆகையால் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு நாம் புத்திசொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். பாவத்தின் விளைவால் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்கள் பாவத்தின் வஞ்சனையினால் ஏமாற்றப்பட்டார்கள். அதைப்போல மீண்டும் வஞ்சிக்கப்பட்டு போகாதிருக்க ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியது அவசியம்.



"மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம்பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி" (நீதி.15;5). இன்றைக்கு அநேகர் புத்திமதிகளை ஏற்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மூடர்கள் என காண்கிறோம்.

ஆனால் புத்திமதிகளை ஏற்று கவனித்து நடக்கிற மனுஷனோ விவேகி என பார்க்கிறோம். நீங்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் மக்களாக இருக்கிறீர்களா? அல்லது சொல்லுகிறவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கட்டுமென, செவிட்டு விரியனைப்போல உங்களுடைய காதுகளை அடைத்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்பானவர்களே, புத்திமதிகளை உங்களுடைய நன்மைக்காகவே சொல்லுவார்கள். சிம்சோன் என்ற ஒரு மனிதன் பழையஏற்பாட்டு காலத்திலே வாழ்ந்ததாக நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். "அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்" (நியா.14:3). இன்றைக்கு இருக்கிற அநேக வாலிப பிள்ளைகள் செய்யக்கூடிய அதே தவறை அவனும் செய்தான். அவனுடைய நிலைமை என்னவானது? பெலிஸ்த ஜனங்களோடேகூட மரித்துப்போனான். தன்னுடைய தாய் தகப்பனுடைய புத்திமதியை அசட்டைபண்ணினான். நீங்கள் ஒருவேளை உங்களுடைய தகப்பனுடைய ஆலோசனையையும், தாயுடைய ஆலோசனையும் தள்ளி உங்களுடைய கண்களுக்குப்பிரியமானவைகளை செய்வீர்களானால், ஒருவேளை உங்களுடைய முடிவும் இப்படியே போய்விடும்.

"முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து; ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம்பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம்பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்" (நீதி.5:11-14). கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்று சொல்லுவார்கள். நாம் நலமுடன் இருக்கிற காலங்களில் நலமானவைகளை சிந்திக்கவேண்டும், புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இவைகளையெல்லாம் ஏற்று செயல்படுத்த வேண்டிய நாட்களில் செய்யாமல் காலம் கடந்து இவைகளைக்குறித்து

புலம்புவோமேயானால் என்ன பயன்? ஆகையால் புத்திமதிகளை ஏற்று கர்த்தருக்குப்பிரியமாய் வாழவும் வேதாகமத்தின் ஆலோசனைகளை தள்ளாமல் அவைகளை ஏற்று அதன்படி வாழவும் பிரயாசப்படுங்கள்.

**இரண்டாவது எதற்காக ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** வேதம் சொல்லுகிறது; "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர் களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி.10:24-27). சிலருடைய வேண்டுதல் நாம் நல்லாயிருந்தால்போதும் என்று வேண்டிக்கொள்வார்கள். இது தன்னலத்தை குறிக்கிறது. மற்றவர்களுடைய எந்தக்காரியத்திலும் கலந்துகொள்ளாதிருப்பார்கள். அப்படியிருக்கக்கூடாது, சபை கூடிவரும்போது நாம் நற்கிரியைகளுக்கு ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கவேண்டும். அதை கவனிப்பதற்கு போதகர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரே சரீரத்தில் இருக்கும் அவயவங்களாக நாம் இருக்கிறபடியால் சரீரத்தில் உள்ள மற்ற அவயவங்களையும் பார்க்கவேண்டும். ஆகையால் நாம் புத்திசொல்லும் படியாக ஏவப்படுகிறோம்.

மேலும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பும் ஒருவன் பாவம் செய்வானேயானால் அவன் பாவத்தினிமித்தம் செலுத்த வேறொருபலி இல்லை என்பதை அவனுக்கு உணர்த்தவேண்டும். ஆகையால் அவன் பாவம் செய்யாமல் பாதுகாத்துக்கொள்ளும்படியாக அவனுக்கு புத்திமதிகளைச் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த புத்திமதியானவார்த்தைகளை தள்ளி மேலும் அவன் பாவம் செய்வானேயானால் அவன் தேவனுடைய கோபாக்கினையின் பாத்திரமாயிருப்பான். அப்படிப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ளமுடியாது. ஆகையால் "புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டு விடாதே; அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்" என நீதி.4:13-ல் வாசிக்கிறோம். புத்திமதிகளை அலட்சியம் செய்தவர்கள் பாதாளத்திலே வேதனைப்படுவார்கள். அவ்விதமாக வேதனைப்படக்கூடிய ஐசுவரியவானைப்பற்றி படிக்கிறோம். அவன் நாவறண்டு ஆபிரகாமைநோக்கி கதறினான். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும்.



அப்படியானால் அந்த நரகத்தின் வேதனை எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

ஆலோசனை ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். எனக்கு ஒருவரும் ஆலோசனை சொல்லவேண்டிய அவசியமில்லை என்று சொல்லுகிறவர்களே, கவனியுங்கள். நீங்கள் ஒன்றாம் வகுப்பு படிக்கவில்லையா? நீங்கள் படிக்காமலே பாஸ்பண்ணிவிட்டீர்களா? யாரோ ஒருவர் உங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆகையால் இந்த அளவு நீங்கள் வளர்ச்சியடைந்து நல்லநிலைமையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகாதிருங்கள். அநேகருடைய பயிற்சியினால் நீங்கள் ஒரு நல்ல நிலைமையை வந்தடைய முடியும். "ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்" என திருமறையில் படிக்கிறோம் (நீதி.15:22). அநேக ஆலோசனைக்காரர்களால் பட்டணம் நிறைவான ஆசீர்வாதங்களை பெறுகிறது. ஒரு நாடு நல்ல முன்னேற்றமடைவதற்கு காரணம் அங்குள்ள ஆலோசனைக்குழுவின் சிறப்பான திட்டங்கள். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் வேதாகமத்தின் ஆலோசனைக்கும், நீங்கள் கூடிவருகிற சபையின் அங்கத்தினருடைய ஆலோசனைக்கும் செவிகொடுப்பாயானால் உங்களுடைய எண்ணங்கள் உறுதிப்படும்.

**மூன்றாவதாக எப்படி ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும்?** புத்திசொல்வதில் பல வழிகள் உண்டு. ஆனால் வேதாகமம் சொல்லுகிற ஆலோசனையைப் பார்ப்போம். "ஆகையால், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது.5:6-9).

எப்படி புத்திசொல்வது என்பது, மண்பாணையை எடுத்து மெதுவாக அங்கே வை என்பதைப்போன்றது. இன்னும் சொல்லப்போனால் ஒரு நேயாளிக்கு சொல்லும் ஆலோசனையைப்போன்றது. மிக கோபமாக சொல்லிவிடக்கூடாது. மிக கோபமாக செயல்பட்டுவிடவும்கூடாது. அப்படிசெய்வோமானால் அவர்கள் அந்த புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாமல் போவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். ஆகையால் அப்போஸ்தலனாகிய பேதுரு

தமது நிருபத்தில் முதலாம் அதிகாரத்தில் மிக தெளிவான புத்திமதிகளை கொடுக்கிறார். ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். ஒவ்வொன்றிருக்கும் ஒவ்வொரு காலமுண்டு. இதை அநேகர் மறந்துவிடுகின்றனர். உடனே எல்லாம் நடைபெறவேண்டும் அப்படியானால் நம்புவார்கள். இல்லையென்றால் விசுவாசத்தில் தளர்ந்துபோய்விடுவார்கள்.

வாழ்க்கையில் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு நாம் முதலாவது தெளிவானவர்களாக தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் தெளிவானவர்களாக இல்லையென்றால்; "புத்தியுள்ள மறு உத்தரவு சொல்லத்தகும் ஏழுபேரைப்பார்க்கிலும் சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன்" என வேதம் நீதி.26:16-ல் சொல்லுகிறபடி, நீங்கள் ஒரு சோம்பேறியாகவும் தனக்குத் தானே ஞானயாகவும் இருப்பீர்கள் மற்றவர்களுடைய புத்திமதியான வார்த்தைகளை அசட்டைசெய்வீர்கள்.

"புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்; கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்" (நீதி.10:17). நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள்? வேதாகமம் ஜீவவழியைக்குறித்து போதிக்கிறது. இயேசு சொல்கிறார் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். அவருடைய வழி ஜீவவழியாகவும் சத்தியமாகவும் இருக்கிறது. இன்றைக்கு அநேகர் தாங்கள் போகும்வழி செம்மையான வழியா என்பதை உறுதிசெய்யாமல் அவ்வழியே சென்று கொண்டிருக்கின்றனர். முடிவிலே ஐயோ! தவறான வழி வந்துவிட்டோமே என்று எண்ணும்போதும் தாங்கள் வந்த வழியின் தூரத்தையும் காலத்தையும் நேரத்தையும் எண்ணிப்பார்க்கும்போதும் அவர்களுக்கு அது வியப்பாக இருக்கும். நம்பிக்கையற்ற சூழ்நிலையை உருவாக்கும். ஆகையால், வேதாகமம் சொல்லுகிறபடி ஒருவரையொருவர் கவனித்து ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நீங்கள் மோசம்போகாதிருக்க வேதாகமத்தில் சொல்லப்பட்ட புத்திமதியான வசனங்களை காத்துக்கொண்டு ஜீவவழியே செல்லுங்கள். உங்கள் எதிராளியாகிய பிசாசு ஒரு சிங்கத்தைப்போல உங்களை வேட்டையாட வகைதேடி சுற்றித்திரிகிறான் என்று வசனம் நமக்கு ஒரு எச்சரிப்பை கொடுத்திருக்கிறது. ஆகையால் அவனால் நீங்கள் வஞ்சிக்கப்பட்டுபோய் விடாதிருக்க புத்திமதியாக வேதாகமத்தின் வசனங்களுக்குச் செவிகொடுங்கள். இச்செய்தியின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள்



கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோம். மேலும் வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்ள எங்களோடு தொடர்புகொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**புத்தியை சம்பாதிக்கிற மனுஷன் பாக்கியவானா?**

ஆம், உலகத்தில் எதை எதையோ சம்பாதிக்கிறார்கள். ஆனால் சம்பாதிக்கவேண்டிய புத்தியை சம்பாதிக்காமற்போய்விடுகிறார்கள். வேதம் சொல்லுகிறது; "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" (நீதி.3:13). நீங்கள் உங்களுக்கு என்னத்தை சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள்? உலக சம்பத்துக்களையா? உங்களுக்கு வேண்டியவைகளை தேவன் ஆதியிலே கொடுத்துவிட்டார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர் உங்களுக்கு கொடுத்தவற்றை நீங்கள் பூமியில் இருக்கும்வரை அவைகளை அனுபவிக்க முடியும். அதை நிரந்தரமாக உங்களுடையதாக்கிக்கொள்ளவோ, அல்லது அவைகளை நீங்கள் வேறுபகுதிக்கு எடுத்துக்கொண்டு போகவோ முடியாது என்பதை அறிவீர்களா? இப்படியிருக்கிறபடியால் நீங்கள் செய்யவேண்டியது என்ன? தேவனுடைய கற்பனைகளுக்கு பயந்து, அவரை நீங்கள் ஸ்தோத்திரித்து, கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக வாழ்ந்து வேதாகமத்தின் புத்திமதியான வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அதை நீங்கள் கைக்கொண்டும், உங்களுடைய பிள்ளைகளுக்கு அவைகளைக்குறித்து கருத்தாய் போதித்தும், அவர்கள் நடக்கவேண்டிய வழியில் அவர்களை நடத்தி உங்களுடைய குடும்பத்தை கொண்டுபோவீர்களானால் நீங்கள் எந்நாளும் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக இருப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 31. அசுத்தமானதைத் தொடாதிருங்கள்
## Don`t Touch What is Unclean

**அ**சுத்தத்தை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் அசுத்தமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பார்கள். இதை நம்முடைய வாழ்க்கையில் அநுதின ஜீவியத்தில் காணலாம். அசுத்தம் என்று சொல்லும்போது பொதுவாக ஜனங்கள் நினைப்பது கழிவுநீர் அல்லது துர்நாற்றம் போன்றவைகள். இதுவும் அசுத்தம் தான் ஆனாலும் இதைக்காட்டிலும் அசுத்தமான காரியங்கள் இருக்கிறது அதைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று நாம் தியானிக்கலாம். "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (2கொரி.6:17). இங்கே பவுல் எவர்கள் நடுவிலிருந்து பிரிந்துபோய்

அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்கிறார்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. ஏன் அப்படிச்சொல்லுகிறார். அதற்கு நிச்சயமான காரணம் இருக்கும். அது என்னவென்றால்; "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" என்கிறார் (2கொரி.6:14).

நீங்கள் எங்காவது எருமையையும் ஆட்டுக்குட்டியையும் ஒன்றாக சேர்த்து உழவு செய்கிறதைப் பார்த்து இருக்கிறீர்களா? அப்படிச் செய்யமாட்டார்கள். அது ஒவ்வாது அதைப்போல நீதியையும் அநீதியையும் சம்பந்தப்படுத்தக்கூடாது. அப்படி சம்பந்தப்படுத்தினால் அது இணையாது. அது சரியானதும் அல்ல. ஒரு விசுவாசியோடு மற்றொரு விசுவாசிதான் சம்பந்தம் கொள்ளவேண்டும். தேவனை அறியாத அல்லது விக்கிரக ஆராதனை செய்துகொண்டு வருகின்ற ஒருவனோடு மெய்யான தேவனை தொழுதுகொண்டு வருகிற ஒருவன் ஐக்கியம் கொள்ளக்கூடாது. இதையே இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். ஆகையால் அசுத்தமானதை தொடாதிருங்கள் என்கிறார். அசுத்தமானதை நாம் தொட்டால் அது நாம் செல்லுமிடமெங்கும் எப்படி துர்நாற்றத்தை வீசச்செய்யுமோ அதைப்போல நம்முடைய வாழ்க்கை துர்நாற்றம் வீசும் வாழ்க்கையாக போய்விடும். இருள் இருக்கிற இடத்தில் ஒளி வந்தவுடன் இருள் நீங்கிப்போய்விடுகிறது. ஆகையால் ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லை. தேவனுடைய பிள்ளைக்கும் பிசாசின் மக்களுக்கும் ஐக்கியம் இல்லை. நாம் ஐக்கியத்தை ஏற்படுத்தவும் கூடாது.

"நான் பரித்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என 1பேது.1:16-ல் வாசிக்கிறோம். தேவன் எப்படியிருக்கிறரோ அப்படியே நாமும் இருக்கவேண்டும். ஏனெனில், நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டுள்ளோம். அந்த சாயலை நாம் இழந்துவிடாதிருக்க அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நாமும் பரிசுத்தப்படவேண்டும். நம்முடைய செயல் சிந்தை எல்லாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமானவர்களோடு சேர்ந்து நாமும் அசுத்தமாகிப்போய்விடாதிருக்க போதிக்கப்படுகிறோம். மேலும் ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை என பார்த்தோம்.

ஆம், இதைக்குறித்து யோவான் குறிப்பிடுகையில்; "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது, அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" (யோவா.1:4,5). இயேசுவானவர் இருளிலே இருக்கிற ஜனங்களுக்கு ஒளியாக வந்தார். ஆனால் அந்த ஜனங்களோ அவரை அறிந்துகொள்ளவில்லை. இன்றும்கூட அநேகர் இருளிலே மூழ்கிப்போய் இருக்கிறார்கள். நீங்கள் அந்த ஆண்டவர் இயேசுவை



அறிந்திருக்கிறீர்களா? அல்லது இயேசுவை அறிந்திருக்கிற குடும்பத்தில் பிறந்தும் அவருடைய அன்பையும் அவர் வந்ததின்நோக்கத்தையும் அறியாதிருக்கிறீர்களா? "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (1சாமு.2:12). ஏலி ஒரு ஆசாரியன் ஆனால் அவனுடைய பிள்ளைகளோ கர்த்தரை அறியாத பேலியாளின் மக்களாக இருந்தார்கள்.

இன்றைக்கும் அநேக குடும்பங்களில் இவ்விதமான பிள்ளைகளைப் பார்க்கமுடிகிறது. ஆகையால் இவ்விதமான மக்கள் தேவனை அறியாத மக்களோடு, அசுத்தமானவர்களோடு ஐக்கியம் கொள்ளுகிறார்கள். இதை வேதம் அனுமதிப்பதில்லை. "கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" (2கொரி.6:15). கிறிஸ்துவானவர் உலகத்தின் பாவத்தைப்போக்க மனுஷகுமாரனாக அவதரித்தார். அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராக எங்கும் நன்மைசெய்கிறவராக சுற்றித்திரிந்தார் எனக் காண்கிறோம். ஆனால் பிசாசு கொல்லவும் அழிக்கவும் வருகின்றான். பிசாசையும் கிறிஸ்துவையும் இணைக்கமுடியுமா? ஆகையால் தேவனை அறியாதவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடாது. ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடாது என்றால் அவர்களோடு பேசக்கூடாது, பழகக்கூடாது ஒரே இடத்தில் வேலைபார்க்கக்கூடாது என்று அர்த்தமல்ல, திருமண காரிங்களில் குறிப்பாக ஈடுபடக்கூடாது என்று வேதம் போதிக்கிறது.

நெகேமியா என்ற தேவனுடைய மனுஷன் தங்களுக்குள் இருக்கிற ஜனங்களை திடசாட்சியாக கடிந்துகொண்ட ஒரு சம்பவத்தை நாம் நெகே.13:25-ம் வசனத்தில் படிக்கிறோம். "அவர்களையும் நான் கடிந்துகொண்டு, அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப் பிய்த்து: நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்ளை தேவன்மேல் ஆணையிடப்பண்ணி" இருக்கிறதை நாம் இவ்வசனத்தில் படித்து தெரிந்துகொள்கிறோம். இந்த விதமான வைராக்கியம் இருக்கவேண்டும். இதுவிஷயமாக ஊழியர் கடிந்துகொண்டு போதித்தால் உங்களுக்கு கோபம் வந்துவிடுகிறது என்பர். இங்கே நெகேமியா அவர்களுடைய மயிரைப்பிய்த்து சிலரை அடித்து என காண்கிறோம். இப்படிசெய்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

அன்பானவர்களே உங்களுடைய நன்மைகளுக்காகவே இப்படிச்செய்கின்றனர். சிலர் சொல்வது அவர்கள் நம்மோடு பலவருடங்களாக

ஒரே ஊரில் இருக்கிறார்கள் உறவு முறை வைத்து பழகிவிட்டோம் நாம் எப்படி அவர்களை திடீர் என்று ஒதுக்குவது, இப்படி நினைத்துக்கொண்டு வேதத்தை புறம்பாக்கிப்போட்டு ஐக்கியம் கொள்ளுகிறார்கள். இவைகள் வேதாகமத்திற்கு விரோதமான ஆலோசனையாக இருக்கிறது.

"தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" என்று பவுல் நமக்கு தெளிவாக எடுத்துச்சொல்கிறார் (2கொரி.6:16). நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கும்போது அதை ஒரு விக்கிரக கோவிலாக மாற்றலாமா? நம்முடைய வீட்டிற்குள் அசுத்தமானதை போட்டு வைப்போமா? அது நம்முடைய வீட்டையே நாறிக்கெட்டுப்போகப் பண்ணுமல்லவா? அப்படியிருக்க தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது, சம்பந்தமில்லாத ஒன்றை சம்பந்தப்படுத்துவோமானால் தேவனுக்கு சத்துருக்களாவோம். ஒரு முறை தேவனுடைய பெட்டியை பிடித்து அஸ்தோத் ஊரார் அதை தாகோன் கோவிலிலே போய் வைத்தார்கள். நடந்தது என்ன, "அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது; அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்தினார்கள். அவர்கள் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற் படியின்மேல் உடைபட்டுக்கிடந்தது; தாகோனுக்கு உடல்மாத்திரம் மீதியாயிருந்தது" (1சாமு.5;3,4).

இச்சம்பவம் அவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தாகோன் எம்மாத்திரம் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு தேவனுடைய பெட்டியை வழிவிட்டனுப்பினர். அன்பானவர்களே, விக்கிரகங்களும் தேவனுக்கும் சம்பந்தமில்லை. அதைபோல தேவனுடைய பிள்ளைகளுக்கும் விக்கிரகாராதனை செய்கிறவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை அறிந்துகொண்டு அசுத்தமானதை தொடாதிருங்கள்.

ஒரு கிறிஸ்தவனை பார்த்து வேதாகமம் தேவனுடைய ஆலயம் என்று அழைக்கிறது. ஆதியிலே இஸ்ரவேலின் நடுவே உலாவிக்கொண்டு வந்த தேவன் இந்நாட்களில் நம்மோடு வாசம் செய்கிற தேவனாயிருக்கிறார். எங்கே என் நாமத்திலே இரண்டு மூன்றுபேர் கூடுவீர்களோ அவர்கள் மத்தியிலே



இருக்கிறேன் என்று சொன்ன கர்த்தருடைய நாமத்தில் வாழுகிறவர்களாகவும் கூடுகிறவர்களாகவும் இருக்கிறோம். நாம் தேவனுடைய ஆலயம் என்றால்; கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே" (1கொரி.6:15) என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். கிறிஸ்துவானவர் எனக்குள் வாழும்போது அவருக்குப்பிரியமானதையே நான் செய்யவேண்டும் என்ற ஒரு தீர்மானம் நமக்குள் ஏற்படவேண்டும். ஒரு சிறப்பான நிர்வாக அரைக்குள்ளே அசுத்ததை யாராவது கொண்டுபோவார்களா? என்பதை எண்ணிப்பாருங்கள். நாம் கிறிஸ்துவின் சரீரமாகவும் அவருடைய எலும்புக்கும் சரீரத்திற்கும் உரியவர்களாக இருக்கும்போது நம்முடைய சரீரத்தை வேசியின் சரீரமாக மாற்றலாமா? எப்பொழுது மாற்றுகிறோம் என்றால். தேவனுடைய உபதேசவசனங்களை தள்ளிவிட்டு வீணானவைகளுக்குச் செவிகொடுத்து அப்படிப்பட்டவைகளோடு ஐக்கியம் கொள்ளும்போது தேவனுக்கு துக்கத்தை வருவிக்கிறோம். கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர் களாயிருப்போம். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" என வேதம் கேள்வி எழுப்புகிறது (1கொரி.6:19).

பரிசுத்த ஆவியானவர் தங்கும் இடத்தை எந்த அளவு பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். நாமே நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. கிறிஸ்துவானவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை பாவத்திலிருந்து மீண்டுள்ளார். முன்னே பாவத்துக்கு அடிமைகளாயிருந்த நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிருக்கிறோம். ஆகையால் தேவனுடைய ஆலயமாகிய உங்களுடைய சரீரத்தில் அசுத்தத்திற்கு இடமளிக்காதிருங்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் தேவனால் உண்டானவர்கள். ஆகையால் தேவனுடைய மக்களோடு ஐக்கியம் கொள்ளுங்கள். உங்களுடைய ஆவி ஆத்தும சரீரம் குற்றப்படாது காக்கப்படவேண்டும். ஏனென்றால்; தேவன் உங்களோடு ஜீவிக்கிறார். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. உங்களுடைய ஐக்கியம் எப்படியோ அப்படியே உங்களுடைய ஜீவியம் இருக்கும். சாலொமோன் ராஜா மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன். ஆனால் அவனுடைய பின்னிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அதற்கு காரணம் என்ன என்பதை அறிவீர்களா? அவன் அந்நிய பெண்களை திருமணம் செய்து கொண்டபடியினால் அவனுடைய

இருதயத்தை இளைக்கப்பண்ணினார்கள். அன்பானவர்களே, நீங்கள் உங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். பரிசுத்தத்தை வாஞ்சியுங்கள்.

**கேள்வி நேரம்**

**அசுத்தத்தை நாம் தொடாதிருக்கும்போது நமக்கு வரும் ஆசீர்வாதம் என்ன?**

தேவனோடு என்றென்றுமாய் வாழுவோம். ஆகையால், தேவனை அறியாத அசுத்தமான ஜனங்களாகிய பேலியாளின் மக்களை நாம் தொடாதிருந்து, அப்படிப்பட்டவர்களை விட்டுவிலகும்போதும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்லும் வசனம் என்னவென்றால்; "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2கொரி.6:18). என்னால் உலகத்தையும் உலக சிநேகத்தையும் உலக ஐக்கியத்தையும் விட முடியாது என்று சொல்லுவீர்களானால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கமுடியாது. தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாயிருக்க அசுத்தமானதை தொடாதிருங்கள். அப்படியென்றால் தேவனை அறியாத மக்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள். தேவனுடைய ஜனங்களோடு ஐக்கியம் கொண்டு ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாயிருந்து விசுவாச சந்ததியை பெற்று, கிறிஸ்து ஏற்படுத்தின அவருடைய குடும்பத்தில் இருந்துகொண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள். இந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாக உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 32. உலகமோ அவரை அறியவில்லை

## The World Did Not Know Him

**எ**வரை என்று கேட்கிறீர்களா? **உலகத்தில் பாவிகளை இரட்சிக்கவந்த ஆண்டவர் இயேசுவை உலகம் அறியவில்லை.** "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" (யோவா.1:10). நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற உலகத்தில் அவர் இருந்தார். He was in the world. ஆனால் அப்பொழுது இருந்த உலக மக்கள் அவரை அறியவில்லை. இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட யோவான் அவரைக்குறித்து; "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29). அவனுடைய சீஷர்கள் அதைக்கேட்டு அவருக்குப்பின் சென்றனர். ஆனால், உலகமக்கள் உலகத்தின்



பாவத்தை போக்கும்படியாக அனுப்பப்பட்ட இயேசுவை அறியாதுபோனார்கள். மனிதனுடைய பாவத்தைபோக்க ஆடு பலியிடப்பட்டு வந்தது. நிரந்தரமாக மனிதனுடைய பாவத்தைபோக்க தம்முடைய குமாரனையே தேவன் பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ஆகையால் யோவான் அவரைக்குறித்து சொல்லும்போது; இதோ, உலகத்தின் பாவத்தைபோக்கும் தேவ ஆட்டுக்குட்டி என்றான். "பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு; நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவா.1:45). இவர் தீர்க்கதரிசனத்தில் பேசப்பட்டுள்ளார். நியாயப்பிரமாணத்திலே மோசே போன்றோர் இவரைக்குறித்து பேசியுள்ளனர். இவைகளை வாசித்து அறிந்த பிலிப்பு நாத்தான்வேலிடத்தில் அந்த இயேசுவை நாங்கள் கண்டோம் என்றான். அநேகர் அவரை கண்களிலிருந்தும் காணாதுபோய்விட்டார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, அவரைக்குறித்து நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14). எத்தனையோ தீர்க்கதரிசிகளை பார்த்திருக்கிறார்கள். ஆனால் பிதாவுக்கு ஏற்றவராகிய அவருடைய மகிமையை அவர்களுக்குள்ளே அவர் வாசம்பண்ணும்போது யோவானைப்போன்றவர்கள் கண்டார்கள். சத்தியம் சத்தியம் என்று கேள்விப்படுகிறோம் அல்லவா? அந்த சத்தியம் எப்படியிருக்கும் என்று யாராவது பார்த்ததுண்டா? அந்த சத்தியம் அதாவது வார்த்தை மாம்சமாகி இந்த உலகத்திற்கு கடந்துவந்தார். அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இருந்தார். உலக மக்கள் சில கஷ்டங்கள் வந்தவுடன் அந்த கடவுளுக்கும் இந்தவிதமான பாடுகள் கஷ்டங்கள் வந்தால்தானே தெரியும் என்பார்கள். மனிதனுக்கு வரக்கூடிய அத்தனை பாடுகளையும் ஆண்டவர் இயேசு மாம்சத்தில் வந்து சிலுவை வரை அவைகளை அனுபவித்தார். இது உலகமறிந்த உண்மையாக இருக்கிறது. வேதாகமும் அதற்கு சாட்சியிடுகிறது. "காணதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்" (யோவா.9:39).

ஆம் பரிசேயர், வேதபாரகர், போன்றோர் அவருடைய உபதேசத்தில் குற்றம்கண்டுபிடிக்கும்படியாக வகைதேடினார்கள். ஆனால் நியாயப்

பிரமாணத்தில் மோசேயும் தீர்க்கதரிசிகளும் சொன்னவரை குறித்து சிந்திக்காமல் அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டவர்களைப்போல அவரை காணாது போனார்கள். ஆகையால் ஆண்டவர் சொல்லும்போது காண்கிறவர்கள் குருடரானார்கள், காணாத குருடரைப்போலஉள்ளவர்கள் கண்டுகொண்டார்கள் என்றார். நீங்கள் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்த்தால் நீங்களும் அவரைக் கண்டுகொள்ளலாம்.

**உலகம் அவர்மூலமாய் உண்டாயிற்று என்று வாசித்தோம்.** The world was made through Him. ஆம், நாம் காண்கிற யாவும் அவர் மூலமாகவே உண்டாயின. இதை நீங்கள் நம்புகின்றீர்களா? உலகம் பலவகையில் உண்டானதாக அறிவியல் சொல்லுகிறது. ஆனால் வேதாகமம் இயேசுவினால் உண்டாயின என போதிக்கிறது. மேலும் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:13). அவர் மூலமாகவே உண்டானதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பது இன்றைய மானிடர்களின் கேள்வி. அவரால் உண்டாக்கப்பட்ட நம்மையும் அவரால் உண்டாக்கப்பட்ட இயற்கைகளும் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்படும்போது அது அவரால் உண்டாக்கப்பட்டதற்கான ஆதாரமாக இருக்கிறது. இதைக்காட்டிலும் வேறு என்னவேண்டும்? "பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்று பார்வையடைந்த குருடன் அவரை அறியாத மக்களைப் பார்த்து சொன்னான் (யோவா.9:32,33). ஆண்டவர் இயேசு தான் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை ஜனங்கள் அறியவேண்டுமென்று சொல்லி அற்புதங்களை செய்தார். அப்படிப்பட்ட அற்புதங்களைப் பார்த்த ஜனங்களில் சிலர் அவரை விசுவாசிக்காமல் பொறாமையினாலும் தங்களுடைய பாரம்பரிய கட்டுகளினாலும் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தனர்.

அநேகர் பார்த்துக்கொண்டிருந்தவேளையில்; மரித்து நான்கு நாட்களான லாசரு கல்லறையைவிட்டு வெளியே வந்தான். எப்படி? "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க்கூப்பிட்டார்" (யோவா.11;43). மரித்தோர் ஆண்டவருடைய சத்தம் கேட்டு உயிரோடு எழுப்பப்பட்டிருக்கும்போது; அவரால் மனிதன் உண்டாக்கப்பட்டான் என்பதற்கு இதற்கு மேல் என்ன சான்று வேண்டும். உலகத்திலே எத்தனையோ அற்புதங்களை செய்கிறோம், மாயவித்தைகளை செய்கிறோம் என்கிறவர்கள் இதை செய்திருக்கிறார்களா? மரித்த ஒரு மனிதனை உயிரோடு எழுப்பியிருக்கிறார்களா? நாம் எந்த ஒரு செய்தி தாளிலும் வாசித்தது இல்லை. பரிசுத்த வேதாகமம் லாசருவை இயேசு



உயிரோடு எழுப்பினார் என்று எழுதியிருக்கிறது. அப்பொழுது இருந்த உலகம் அதை கண்கூடாக பார்த்தது அவர்களும் அவைகளுக்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். மேலும், ஆண்டவர் ஒருமுறை; சீஷர்களை அனுப்பும்போது, "அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூாரம் தண்டுவலித்துப் போனபொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்" என்று யோவா.6:19-ல் படிக்கிறோம்.

உலகத்தில் சிகரங்களில் ஏறும் வீரர்களையும், பலவிதமான வித்தைகளை செய்யும் வீரர்களையும், நெருப்பில் நடக்கும் மனிதர்களையும் பார்க்கிறோம் ஆனால் தண்ணீரில் நடக்கும் மனிதர்களை பார்த்திருக்கிறீர்களா? அது ஒருவராலும் கூடாது ஏனெனில் எல்லாவற்றிலும் மனிதர்களை ஏமாற்றி வித்தைகளை செய்து நெருப்பில் நடந்துவிடலாம் ஆனால் தண்ணீரில் நடக்கமுடியாது. இயேசுவானவர் கடலில் நடந்து தம்முடைய சீஷர்களிடம் சென்றார் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர்களுடைய விசுவாசம் இன்னும் அதிகரிப்பதற்கு அச்சம்பவம் உதவியாயிருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அவருக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரால் நாம் காண்கிற அனைத்தும் உண்டாக்கப்பட்டது. இதை நீங்கள் விசுவாசிக்கும்போது இயேசுவினால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இயேசுவை அப்பொழுது இருந்த உலகம் அறியவில்லை என வாசித்தோம். இன்றும் கூட அநேகர் இயேசுவை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். ஏன் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட யோவான்ஸ்நானகனும் இப்படியே சொல்லுகிறான்; "நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்" என்று சொன்னான் (யோவா.1:33,34). யோவான்ஸ்நானகனுடைய சாட்சியை பார்த்தீர்களா? இவ்வளவு பெரிய சாட்சி இருக்கும்போது நீங்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு என்ன தயக்கம். உலகத்தைப் பார்க்கிறீர்களா? உலகம் உலகத்தை சிநேகிக்கும். உலகம் உங்களை பாவத்திலிருந்து விடுவிக்காது. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கிறது. உலகத்தை வெறுத்து ஜீவனைப் பற்றிக்கொள்ளுங்கள்.

நாத்தான்வேல் என்ற மனுஷன் பிலிப்புவைப்பார்த்து; "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்கு பிலிப்பு வந்துபார் என்றான்" (யோவா1:46). நாசரேத்திலே இயேசுவானர் வளர்க்கப்பட்டார். அந்த ஊரைப் பார்த்தான். இன்றைக்கும் சிலர் கடவுள் என்றால் அவர் சந்திரனில் பிறந்திருக்கவேண்டும். சற்று வித்தியாசமான தோற்றத்தை உடையவராக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆகையினாலே காணாதவைகளில் துணிவாய் நுழைந்து மோசம்போகின்றனர்.

அன்பானவர்களே, இதே கண்ணோட்டத்தோடே நாத்தான்வேல் பிலிப்புவைப்பார்த்து கேட்டான். யூதேயாவிலே ஆயிரங்களுக்குள்ளே சிறிதான பெத்லகேமிலே இயேசு பிறந்தார் என திருமறை போதிக்கிறது. மனிதனை மண்ணினாலே உண்டாக்கியவருக்கு இடம் ஒரு பெரிய காரியமல்ல. உலகத்திலே அடிமட்டத்தில் இருக்கிறவர்களையும் கர்த்தர் நேசிக்கிறார் என்பதற்கு அடையாளமாக சிறிதான ஒரு இடத்தை கர்த்தர் தேர்ந்தெடுத்தார். கல்விமான்களையும் ஞானிகளையும் வெட்கப்படுத்தும்படியாக படிப்பறிவு இல்லாதவர்களை தெரிந்துகொண்டார் இதை நீங்கள் அறிவீர்களா? ஆண்டவருடைய அற்புதங்களையும், அவருடைய அன்பின் ஆழங்களையும் வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்துகொள்ளுங்கள்.

ஆகையாலே பிலிப்பு நாத்தான்வேலை கண்டு வந்து பார் என்றான். நீங்கள் அவரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ள சபை கூட்டங்களுக்குச் செல்லுங்கள். வேதாகமத்தை அநுதினமும் வாசியுங்கள். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் என்று" யோவான் 17:3-ல் வாசிக்கிறோம். அந்த மெய்த்தேவனை அறிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் இந்த உலகத்தில் இருந்ததற்கு அடையாளமாக எதை கொண்டுபோகப்போகிறீர்கள். அடையாளமாக எதை விட்டுவிட்டுப் போகப்போகிறீர்கள். நீங்கள் ஒன்றையும் இந்த பூமியிலிருந்து எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் உண்மையான மெய்த்தேவனை அறிந்தவர்களாக போகமுடியும். அதை நீங்கள் முதலாவது செய்யுங்கள். மேலும் அவரால் அனுப்பப்பட்ட இயேசுகிறிஸ்துவையும் அறிந்துகொள்ளுங்கள். அப்பொழுது நித்திய ஜீவனாகிய வாழ்வை அவர் மூலமாகப் பெற்றுக்கொள்வீர்கள். இயேசுவானவர் சமாரிய பெண்ணிடம் பேசும்போது; "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது



கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்" (யோவா.4:22,24).

இன்றைக்கு அறியாததை தொழுதுகொண்டு வரும் உலகத்தில் நீங்கள் வாழ்ந்துகொண்டு வருகிறீர்கள். உலக இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. அந்த யூதகோத்திரத்தில் இயேசு பிறந்தார். அவர் உலகத்தில் இருந்தார் உலகம் அவர்மூலமாய் உண்டாயிற்று உலகமோ அவரை அறியவில்லை. ஆனால் நீங்கள் இச்செய்தியின்மூலமாக அவரையும் அவர் அனுப்பினவரையும் அறிந்துகொண்டீர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொண்டு இரட்சிக்கப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**உங்களுக்காக இயேசு எப்படி ஜெபித்தார் என்பதை நீங்கள் அறிவீர்களா?**

"நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள். நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்" (யோவா.17:25,26). உலகம் இயேசுவையும் பரலோக பிதாவையும் அறியவில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அறிந்துகொண்டார்கள். ஆனால் உலகத்தில் ஒருவனும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல.

ஆகையால் பிதாவாகிய தேவனையும் அவருடைய அன்பையும் குமாரனாகிய இயேசு இவ்வுலகிற்கு அறிவித்தார். இன்னமும் அறிவித்துக் கொண்டே இருக்கிறார், தாம் தெரிந்துகொண்டவர்களைக்கொண்டு. அதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் இரட்சிக்கப்படவேண்டும். வீணானவைகளை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். அவரை அறிந்துகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 33. நன்மைசெய்தவர்கள் மற்றும் தீமைசெய்தவர்கள்

## Those Who Have Done Good and Those Who Have Done Evil

**உ**லகத்தில் இரண்டு விதமான கூட்டத்தாரை நாம் காண்கிறோம். ஒன்று நன்மைசெய்கிறவர்கள் மற்றொன்று தீமைசெய்கிறவர்கள். இவ்விருவருடைய நிலைமையைக்குறித்து வேதாகமத்தில் படிக்கின்றோம். **முதலாவது நன்மைசெய்கிறவர்களைக்குறித்து தியானிக்கலாம்.** "நன்மைசெய்தவர்கள்

ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா.5:29). இந்த உலகத்தில் வாழ்கின்ற காலத்தில் ஒவ்வொருவருக்கும் பலமணிநேரங்கள் கொடுக்கப்படுகிறது. இந்த நேரங்களை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்துகிறவர்களையும் தீமையான காரியங்களுக்குத் தங்களுடைய நேரத்தை பயன்படுத்துகிறவர்களையும் இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டு வாழ்க்கையை தூங்கிக் கழிக்கிறவர்களையும் பார்க்கிறோம். உலகத்தில் அநேக கல்லறைகளை நாம் காண்கிறோம். அவர்கள் தங்களுடைய இளைப்பாறுதலுக்குச் சென்று இளைப்பாறுகிறார்கள். இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் எழுப்பப்படுவார்கள். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பார்கள். நீங்கள் இந்த உலகத்தில் நன்மைசெய்வீர்களானால் அந்த பாக்கியத்திற்கு தகுதியானவராயிருப்பீர்கள்.

இயேசு சொல்கிறார்; "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" என்கிறார் (மத்.5:44).

நம்மில் எத்தனைபேர் சத்துருக்களைச் சிநேகிக்கிறோம். சிலவேளைகளில் நம்மை சிநேகிக்கிறவர்களையே சத்துருக்களாக எண்ணுகிறோம் அல்லவா? இவற்றையெல்லாம் மாற்றிப்போட்டு நம்மை பகைக்கிறவர்களுக்காகவும், நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும் என இயேசுவானவர் நமக்கு போதிக்கிறார். இவைகளின்படி நாம் நடக்கும்போது நன்மைசெய்கிறவகளாயிருப்போம்.

நாம் கர்த்தர் நிமித்தமாக நன்மைசெய்ய வேண்டும். "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்" என்கிறார் (மாற்.8:35). உலகத்தில் வாழ்கின்ற யாவரும் ஒரு சாண் வயிற்றுக்காகவும் இந்த ஜீவன் காப்பாற்றப்படவும் வாழ்கின்றனர். அந்த ஜீவன் இரட்சிக்கப்படவேண்டுமானால் நாம் செய்யவேண்டியது என்ன? சுவிசேஷம் அதாவது இயேசுவின் பாடுகள் மரணம் இவைகளினிமித்தமாக ஜீவனை இழந்துபோவோமானால் நம்முடைய ஜீவனை தப்புவித்துக்கொள்ளுவோம். ஆயிரம்பொய்யைச் சொல்லியாவது நாம் வாழ்க்கையில் முன்னேறவேண்டுமென்று அநேகர் விரும்புகின்றனர். அப்படி



முன்னேற்றமடைந்து என்ன செய்யப்போகிறோம் என்று அவர்கள் சிந்திப்பதில்லை. ஜீவன் தப்ப ஜீவனுள்ளவரின் வார்த்தைக்குச் செவிகொடுங்கள்.

"ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (யாக்.4:17). பாவம் செய்தால்தான் பாவம் என்று அநேகர் நினைக்கின்றனர். ஆனால் நன்மைசெய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போனால் அதுவும் பாவமாயிருக்கிறது. உலகத்திலே நமக்கு நன்மைசெய்யக்கூடிய நேரம் கிடைக்கிறது, நன்மைசெய்யக்கூடிய திராணியிருக்கிறது அப்படியிருந்தும் நன்மைசெய்யாதிருப்போமாகில் பாவம் செய்கிறவர்களாயிருப்போம் என்பதை அறிவீர்களா? ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக்குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்.

ஒரு சிநேகிதனைக்குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறோம். "உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்; சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக; என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப்படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிற தினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்.11:5-8).

ஆண்டவர் சொல்லும் இந்த சம்பவத்தில் அவன் வருந்திக்கேட்கிறதினி மித்தமாவது அவன் இறங்கிக் கொடுப்பான். அதைப்போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள். "நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" என பவுல் நமக்கு எடுத்துரைக்கிறார் (கலா.6:9). நன்மைசெய்து நன்மைசெய்து என்ன கிடைக்கிறது? நமக்கு கெட்டபெயர்தான் வருகிறது என்று சொல்லி அநேகர் நன்மைசெய்வதை நிறுத்திக் கொள்ளுகின்றனர். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றையும் பாருங்கள் அவைகள் தாங்கள் உண்டாக்கப்பட்டபடி அதனதன் வேலையை சரியாய் செய்துகொண்டிருக்கிறது.

அதைப்போல நாமும் நன்மைசெய்யும்படியாக கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்து நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்வோம். நன்மைசெய்கிறதினிமித்தமாக பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் நாம் செய்கிற நன்மைகளை இயேசுவின் நிமித்தமாகவும் அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் தொடர்ந்துசெய்து தேவனுடைய திருசித்தத்திற்கு நம்மை அர்ப்பணிப்போம். உங்களுடைய நன்மை எக்காரணத்தைக் கொண்டும் தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். நாம் ஏற்றகாலத்தில் அறுப்போம் என்ற நம்பிக்கையோடு நன்மைசெய்யுங்கள்.

**இரண்டாவது தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என வாசிக்கக்கேட்டோம்.** ஆம், நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி போவார்கள். தீமைசெய்தவர்கள் ஆக்கினை அடையும்படி போவார்கள். வேதம் சொல்லுகிறது; "நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது" (நீதி.17:13). சிலருக்கு தீமைசெய்யாவிடில் தூக்கம் வராது. அவர்கள் கவனிக்கவேண்டும். உங்களுடைய வீட்டைவிட்டுத் தீமை நீங்காது. மேலும் "தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்" (நீதி.24:9). தீமை செய்தால்தான் பாவம் என்று அல்ல, தீயநோக்கம் கூட பாவமாக இருக்கிறது. அது பாவம் செய்வதற்கு போடப்படும் அஸ்திபாரமாக இருக்கிறது. ஆகையால் தீமையான என்னத்தையும் நோக்கத்தையும் சிந்தனையையும் உங்களைவிட்டு அகற்றிப்போடுங்கள். கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள்.

"கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாக கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதை 2தீமோ.4:14-ல் வாசிக்கிறோம். பவுல் பதிலுக்கு பதிற்செய்யவில்லை கர்த்தர் அவன் செய்கைக்குப் பதிலளிப்பாராக என்றார். இன்றைக்கு நாம் பழிக்கு பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடமளிக்கவேண்டும். தீமைசெய்தவர்களுக்கு நாம் நன்மைசெய்யபோதிக்கப்படுகிறோம்.

பவுலைப்போல, தன் சகோதரர்களுக்கு நன்மைசெய்த யோசேப்பை குறித்து படிக்கிறோம்; "நீங்கள் எனக்கு தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான் (ஆதி.50:20). யோசேப்பு இங்கே அவனுடைய சகோதரர்களை பழிவாங்கும் என்னத்தோடு அவர்களை பழிவாங்கியிருப்பானேயானால் அவர்களை



சிறைச்சாலையில் போட்டு மரணபரியந்தமும் அவர்களைத் துன்பப் படுத்தியிருப்பான். அவனுக்கு எகிப்திலே முழுஅதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் அந்தவிதமாக செய்யவில்லை. தனக்கு தீமைசெய்யும்படி எண்ணங்கொண்டிருந்த தன்னுடைய சகோதரர்களை மன்னித்து தேவன் அதை எனக்கு நன்மையாக முடியப்பண்ணினார் என்று எடுத்துக்கொண்டான். தேவன் நமக்கு எதைச் செய்தாலும் அதை நம்முடைய நன்மைக்காவே என்று எண்ணுவோமானால் நாம் தேவனுடைய சித்தங்களை புரிந்துகொள்ள முடியும். அநேக நன்மைகளை இப்பூமியில் பெற்று வாழுவோம். தீமைசெய்யும் படியாக நாம் எத்தணிப்போமானால் அதன்பின் வரும்விபரீதங்களை நாம் சந்திக்கவேண்டியவர்களாவோம்.

மொர்தெகாய் என்ற மனிதனைக்குறித்து நாம் பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் படிக்கிறோம். "ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல்மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது; மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்" (எஸ்த.3:5,6). ஒருவனை பழிவாங்க நினைத்தவன் அவனுடைய ஜனங்களின் மீது கைபோடும்படி வகைதேடினான்.

இதை அறிந்த மொர்தெகாய் எஸ்தருக்கு தகவல் கொடுத்தான் யாவரும் உபவாசித்து இதற்காக ஜெபித்தார்கள். எஸ்தர் துணிந்து ராஜாவுக்கு இதை தெரிவித்தாள். நடந்தது என்ன? "அப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப்போட்டார்கள்; அப்பொழுது ராஜாவின் உக்கிரம் தணிந்தது" (எஸ்த.7:10). படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் என்று சொல்லப்பட்டபடியாக மொர்தெகாய்க்கு அவன் ஆயத்தம்பண்ணின தூக்கு மரத்திலே அவனையே தூக்கிப்போட்டார்கள். தீமைசெய்ய நினைக்கும்போதும், தீமைசெய்ய தூண்டும்போதும் தீமை நம்மைவிட்டு போகாது அது நமக்கே அழிவை ஏற்படுத்தும். அந்தப்படியாக ஆமானுக்கு சம்பவித்தது.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகராகிய உங்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால்; நீங்கள் நன்மைசெய்ய நாடுகிறீர்களா? அல்லது தீமைசெய்ய நாடிக்கொண்டிருக்கிறீர்களா? நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடைவார்கள் என திருமறை நமக்குப்போதிக்கிறது. பின்பு நடக்கப்போவதை யார் பார்த்தது என்று சொல்லாதிருங்கள். வேதாகமம்

அதற்கான விடையை நமக்குக் கொடுக்கிறது. தீமைசெய்தவர்கள் தேவனுடைய பார்வையில் தப்பமுடியாது அவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள கோபாக்கினையின் பாத்திரத்தில் பங்கடைவார்கள்.

நீங்கள் எதைத் தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள். தேவன் நம்மை நித்திய நித்தியமான ஆசீர்வாதத்திற்கு அழைத்திருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல. நாம் நன்மை செய்வதால் அவருக்கு ஒரு ஆதாயமும் இல்லை நாம் தீமை செய்வதால் அவருக்கு ஒரு நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. இந்த இரண்டில் ஒன்றில் நன்மையடையப்போவதும் தீமையடையப்போவதும் நாமே. நம்முடைய நன்மைக்காகவே தேவன் இவைகளை சொல்லுகிறார். சிந்தித்து நல்ல தீர்மானத்தோடு முடிவெடுங்கள்.

**கேள்வி நேரம்**

**நியாயத்தீர்ப்புக்கு பின்பு வலது இடது புறத்தில் நிற்பவர்களின் நிலைமை என்ன?**

"சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள் மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்"... அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் " (மத்.25: 32,33;46). வலது புறத்தில் நிற்பவர்கள் செம்மறியாட்டுக்கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் மேய்ப்பனின் சொற்படி தலையை கீழே போட்டுக்கொண்டு அவன் பின்னே சென்றவர்கள். இடது பக்கத்தில் நிற்பவர்கள் வெள்ளாட்டுக்கூட்டமாக இருக்கிறார்கள் மேய்ப்பர்களுடைய வார்த்தைக்குச் செவி கொடாதவர்கள்.

மேலும் கீழும் பார்த்துக்கொண்டு செல்லக்கூடியவர்கள். இவர்களுக்கு நித்திய ஆக்கினை வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் நித்திய நித்தியமான வேதனையுள்ள இடம் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். நீதிமான்களோ சூரியனைப்போல பிரகாசமாயிருப்பார்கள். இவர்களைப்போல நீங்கள் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது;**
**அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்"**
**சங்.33:20**



## 34. அவமானம்
## Shame

**உ**லகத்தில் எதைவேண்டுமானாலும் தாங்கிக்கொள்ளலாம் ஆனால் அவமானத்தை மாத்திரம் ஒருவர் தாங்கிக்கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம் என்பதை நாம் அறிவோம். உலகத்தை பாவத்திலிருந்து மீட்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு இவ்விதமான அவமானத்தை தாங்கினார். "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12:2). அவருக்கு முன்பாக தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காரக்கூடிய சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, ஆண்டவர் இயேசு அதை அடையவேண்டுமானால் அவருக்கு உலகத்திலே வரக்கூடிய அவமானத்தை எண்ணாமல் அதற்காக போராடவேண்டி இருந்தது.

ஆகையால் ஆண்டவர் இயேசுகிறிஸ்து மரணபரியந்தமும் தனக்கு வந்த அவமானத்தோடு போராடினார். இன்று சிலருக்கு அவமானம் வந்துவிட்டால் தங்களை மாய்த்துக்கொள்ளுகிறார்கள். அல்லது அந்த இடத்தைவிட்டு காலிசெய்து போய்விடுகிறார்கள். ஒருவேளை தமக்கு வந்த அவமானத்தை கர்த்தர் எண்ணியிருப்பாரேயானால் நம்முடைய நிலை என்னவாயிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். நாம் பாவத்திலே இருந்திருப்போம் மரணம் நம்மை ஆண்டுகொண்டிருந்திருக்கும்.

ஆண்டவர் இயேசு சொல்லமுடியாத அளவுக்கு அவமானத்தை சகித்தார். "சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி; யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்" என்று மாற்.15:17-20 வசனங்களில் படிக்கிறோம்.

உன்னதமான தேவனுடைய குமாரனை அவர்கள் அறியாமல் எந்த அளவு கொடுமைப்படுத்த முடியுமோ அந்த அளவு அவரை கொடுமைப்படுத்தி அவமானப்படுத்தினார்கள். இவைகளை சகித்துக்கொண்டு பொறுமையுடனிருந்தார். எதற்காக? தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றும்படியாகவும் உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து

மீட்கும்படியாகவும் அவர் அந்த அவமானத்தை சகித்தார். இன்றைக்கு கிறிஸ்தவர்களாக இருக்கிற நாம் அவருடைய நாமத்தினிமித்தம் வரக்கூடிய அவமானத்தை அந்தவிதமாக சகிக்கிறோமா என்றால் இல்லை. நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கி இருக்கிறார்.

நான் ஏன் ஒருபடி இரங்கவேண்டும். என்னாலேயெல்லாம் அப்படி இறங்கமுடியாது. தேவன் என்னை உயர்வாக வைத்திருக்கிறார் என்று சொல்லி எத்தனைபேர் பாடுகளையும், அவமானத்தையும் சகிக்கமுடியாமல் மேலோட்டமான கிறிஸ்தவர்களாகவே வாழ விரும்புகின்றனர். எனக்கு அன்பானவர்களே, அவரோடு பாடுகளை சகித்தோமானால் அவரோடு ஆளுகையும் செய்வோம் என திருமறைபோதிக்கிறது.

கர்த்தருடைய பாடுகளைப் பார்க்கும்போது உங்களுக்கு வரும் பாடுகள் பெரிதான ஒன்றல்ல. "அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள். அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதினாலே நிறைவேறிற்று" (மாற்.15:27,28). அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, ஆனால் அவர் அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்படும்படியாக கள்ளர்கள் மத்தியில் அவரை சிலுவையில் அறைந்தார்கள். பச்சை மரத்திற்கே இப்படி என்றால் பட்டமரமாகிய நமக்கு எப்படிச்செய்வார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்களுக்கு வரும் பாடுகளைக் குறித்து ஆச்சரியப்படவேண்டாம். அவைகள் எல்லாம் சம்பவிக்கவேண்டியதே. அவைகளை நம் ஆண்டவர் இயேசு சகித்து அவைகளை ஏற்றுக்கொண்டதுபோல நாமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். உலகத்திலே உபத்திரவம் உண்டு ஆனால் திடன்கொள்ளுங்கள் என்கிறார். அவர் உலகத்தை ஜெயித்தார். அதைப்போல நாமும் உலகத்தை ஜெயிக்க கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம்.

அப்போஸ்தலர்களுக்கும் பலவிதமான பாடுகளும் அவமானங்களும் வந்தது அவைகளை ஊழியத்தின் நிமித்தமாக சகித்தார்கள். பவுலை, "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்குவெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்" (அப்.14:19,20). அப்போஸ்தலர்களில் சிலரை மரணபரியந்தமும் துன்பப்படுத்தினார்கள். அதில் அப்போஸ்தலனாகிய பவுலும் ஒருவன். அவர்களுடைய துன்புறுத்துதலுக்கு



அவன் பயப்படாமல் கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கித்தான். அவனை ஆசிய முழுமைக்கும் கர்த்தர் எடுத்து பயன்படுத்தினார். அவருடைய உறுதிமொழி "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்பதாயிருந்தது. அந்த அளவு ஆண்டவருடைய ராஜ்யத்திற்கு அர்பணித்த ஒரு அப்போஸ்தனாக அவர் இருந்தார்.

கர்த்தராகிய இயேசு; "சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என எபிரெய ஆசான் சொல்லுகிறார் (எபி.12:2). சிலுவையைச் சகித்தார் என்று சொல்லும்போது; அவருடைய உன்னதமான சாயலை இங்கே நீங்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8).

ஒரு அலுவலகத்தில் மேனேஜராக வேலைபார்க்கிற ஒருவரைப்பார்த்து நீங்கள் நாளையிலிருந்து வாட்ச்மேன் வேலையை பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள் என்றால் அவர் அந்த வேளையை ஏற்றுக்கொள்ளுவாரா என்பதை எண்ணிப்பாருங்கள். ஒன்று அந்த அலுவலகத்திலிருந்து அவர் இராஜினாமா செய்து கொள்ளுவார். மற்றொன்று என்னை ஏன் அந்தவேளைக்கு தள்ளுகிறீர்கள் என்று போராடுவார். ஆனால் ஆண்டவர் இயேசு தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே தாழ்த்தி அதற்காக தம்மை ஒப்புக்கொடுத்தார். சிலுவையின் மரணபரியந்தமும் தம்மை தாழ்த்தினார். சிலுவை வரை அவரை அவமானப்படுத்தினார்கள். ஒரு மனிதனை ஒரு முறை இரண்டுமுறை அவமானப்படுத்தினாலே அவனால் தாங்கிக்கொள்ளமுடியாமல் ஏதாவது செய்து கொள்ளுவான். ஆண்டவர் சிலுவை வரை அந்த அவமானத்தை தாங்கிக்கொண்டார்.

"அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1பேது.2:23). அநேகர் பாடுபடுகிறார்கள். ஆனால் பதிலுக்கு பதில் செய்துவிடுகிறார்கள். அப்படி நாமே தண்டித்துவிட்டால், நாம் தேவனுடைய பதவியை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று அர்த்தம். இங்கே இயேசுவானவர் ஒருவரையும் பாடுபடும்போது பயமுறுத்தாமல் தம்மை அனுப்பிய பிதாவாகிய

தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். நீங்கள் உங்களுக்கு வரும் பாடுகள் பிரச்சனைகளிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ள உங்கள் தேவனிடத்தில் அவைகளை ஒப்புக்கொடுக்கின்றீர்களா?

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த சவுல் ராஜாவை அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அவன் தனக்கு வந்த தோல்வியை ஏற்றக்கொள்ள மனதில்லாமல் தற்கொலை செய்துகொண்டான். "தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்" (1சாமு.31:4). இந்த சவுலைப்போல அவமானத்தை தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்ளுகிறவர்களைக்குறித்து நாம் அநுதின செய்திதாளில் வாசிக்கிறோம். இதை தேவன் விரும்புகிறதில்லை. அவமானத்தை ஆண்டவர் இயேசுவைப்போல சகித்து தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். உங்களுக்கு வரும் அவமானத்தை சகிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். சகல அவமானத்திலிருந்தும் ஆண்டவர் இயேசுவை விடுவித்து உயர்த்தின கர்த்தராகிய தேவன் உங்களையும் அந்த விதமாக விடுவித்து காப்பார்.

அவமானத்தை சகித்த ஆண்டவர் இயேசு இப்பொழுது; "தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என அறிகிறோம். பேதுரு தமது முதல் பிரசங்கத்தில் இதை தெரிவிக்கிறார்; "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றார்" (அப்.2:36). இயேசுவை சிலுவையில் அறைந்தவுடன் சத்தியம் தள்ளுபடியாகிவிட்டது என்ற எண்ணம் அநேகருக்குள் இருந்தது. அவைகளை உடைத்துப்போடும்படியாக இயேசுவை பிதாவாகிய தேவன் மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். அவர் கல்லறையிலிருந்து எழுந்து நாற்பது நாளளவும் தம்முடைய சீஷர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். இது அத்தேசம் எங்கும் மற்றும் உலக முழுவதும் பரவஆரம்பித்தது. இதையே பேதுரு தைரியத்துடன் பிரசங்கித்தார். அவனைத்தொடர்ந்து அப்போஸ்தலர்களும் சீஷர்களும் கர்த்தராகிய இயேசுவின் உபதேசத்தை ஜனங்களுக்கு போதிக்க ஆரம்பித்தனர். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தனர்.

அப்பொழுது; ஸ்தேவான், "பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும்,



தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான்" என்று அப்.7:55-ல் வாசிக்கிறோம். ஆண்டவர் இயேசு பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறதை ஸ்தேவான் கண்டான் என வசனத்தில் படிக்கிறோம். அன்பானவர்களே, சகல அவமானத்தை சகித்த ஆண்டவர் இயேசுவை தேவன் உயிர்த்தினார். அதைப்போல நீங்களும் நானும் நமக்கு வரக்கூடிய அவமானத்தை சகிப்போமானால் நாமும் இயேசுவினால் உயர்த்தப்படுவோம். கர்த்தர் நம்மை உயர்த்தவல்லவராயிருக்கிறார்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே, உங்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள நித்திய வாழ்வை பெற ஆண்டவர் இயேசுவானவர் சொல்லும் வசனத்தை கவனியுங்கள்; "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்கிறார் (வெளி.3:21). இந்த வாக்குத்தத்தைப் பற்றிக்கொண்டு இந்த உலகத்தில் உங்களுக்கு வரக்கூடிய அவமானத்தை எண்ணாமல் உங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள இந்த சிங்காசனத்தை நினைத்துக்கொண்டு இயேசுவானவர் இந்த உலகத்தில் அவமானத்தை எண்ணாமல் ஜெயித்ததைப்போல நீங்களும் ஜெயிக்க முற்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**நாம் இந்த உலகத்தில் அவமானத்தை மேற்கொள்ள எவரை நினைக்கவேண்டும்?**

ஒவ்வொருவரும் வெற்றியடைய ஒவ்வொரு மாதிரியை வைத்து வெற்றியடைகிறார்கள். நமக்கு மாதிரியாக கொடுக்கப்பட்டவர் நம் ஆண்டவர் இயேசுவானவர். அவரையே நாம் மாதிரியாக கொள்ளவேண்டும். வேறு மாதிரிகளை ஏற்றுக்கொள்ளுவோமானால் நாம் வெற்றியடைய முடியாது. "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என எபிரெய ஆசான் நமக்கு ஒரு நல்ல ஆலோசனை கொடுக்கிறார் (எபி.12:3).

எவரஸ்ட் சிகரத்தில் ஏறவேண்டும் என்ற ஆசையிருக்குமானால் அதில் ஏறி வெற்றிபெற்றவர்களுடைய ஆலோசனையை கேட்பது மிகவும் அவசியம். அது நமக்கு பேருதவியாக இருக்கும். ஆண்டவர் இயேசு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தவர். இவ்விதமான விபரீதங்களை சகித்த

அவரையே நாம் நினைத்துக்கொண்டும், அவருடைய வசனங்களால் நாம் பொறுமையைக் கைக்கொண்டும் இவ்வுலக பாடுகளை சகிக்கும்போது நாம் வெற்றியடைய முடியும். இல்லையேல் ஏதாவது ஒருவகையில் நாம் ஏமாற்றப்பட்டு தேவனுடைய கற்பனைகளுக்கு விரோதமாக சென்றுவிடுவோம். ஆகையால் இயேசுவை நோக்கிப்பாருங்கள்.

## 35. கர்த்தருடைய ஆலயம்
## The House of The Lord

**க**ர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது அரசன் விருப்பம் கொண்டான். ஆனால் அதை கர்த்தராகிய தேவன் விரும்பவில்லை. உன்னுடைய கர்ப்பப்பிறப்பே அதைச் செய்வான் என்றார். தாவீதின் கரம் இரத்தம் சிந்திய கரங்களாக இருந்தபடியால் அவனுக்கு ஆலயத்தை கட்ட கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை. சிலர் கர்த்தருக்காக பல காரியங்களை செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர். அது பிதாவாகிய தேவனுக்கு பிரியமானதா என்பதை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தனக்கு வேண்டியவைகளை செய்துகொள்ளுவதைப்போல தேவனுக்கும் செய்ய முற்படுகிறார்கள். ஆனால் தேவன் இதற்கு அனுமதிகொடுப்பதில்லை. சிலருக்கு கர்த்தர்மேல் உள்ள அன்பினாலும் வாஞ்சையினாலும் தேவனுக்காக நாங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்று சொல்லி, தங்களுடைய இச்சையினால் பொன்னினாலும் வெள்ளியினாலும் ஞாபகார்த்தமாக ஒரு சொரூபத்தை பூமியிலே உள்ளவைகளுக்கு ஒப்பாக உண்டாக்கி வைக்க விரும்புகின்றனர். இப்படிச்செய்வதை தேவன் விரும்புவாரா என்பதைக்குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை.

தேவன் மனிதனுக்காக உண்டாக்கியவைகள் மனிதனுடைய தேவைகளை சந்திக்கிறது. மனிதன் தேவனுக்காக உண்டாக்குபவைகள் தேவனுடைய தேவைகளை சந்திக்காது. அவர் மனிதனுடைய கரங்களில் யாதொன்று தேவையானதுபோல அவர் எதிர்பார்க்கிறவரல்ல. தாவீது தன் தேவனுக்காக ஒரு ஆலயத்தை கட்ட அநேக பொருட்களை சவதரித்து வைத்தான். ஆனால் அவனுடைய கர்ப்பப்பிறப்பான சாலொமோன் அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினான்.

சாலொமோன் தன்னுடைய இஷ்டப்படி ஒரு இடத்தை தெரிந்து கொள்ளாமல் "எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக்



கட்டத்துவக்கினான்" (2நாளா.3:1). இந்த இடத்தை அந்நாட்களிலே தாவீது ஓர்னான் என்னும் ஒரு மனிதனிடம் வாங்கினான். பொதுவாக ஜனங்கள் கோவில் கட்ட இடத்தை தெரிந்துகொள்வது புறம்போக்கு நிலங்களையும், ஒன்றுக்கும் உதவாத நிலங்களையும், ஊருக்கு ஒதுக்குப்புறம் இருக்கும் இடங்களையுமே அதிகமாக தெரிந்துகொள்வார்கள். ஆனால் தாவீது அதை இலவசமாக யாரிடமும் வாங்க வில்லை. அதை விலைகொடுத்து வாங்கினான் என்று பார்க்கிறோம்.

ஒரு ராஜா விலைகொடுத்து வாங்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் கர்த்தருடைய காரியத்தில் யாரிடமும் அநியாயமாக அதைப்பெற்றுக் கொள்ளாமல் மனப்பூர்வமாகவும் விலைக்கிரையமாகவும் அதை கொடுத்த ஓர்னான் என்னும் மனிதனிடமிருந்து பெற்றான். அன்றும், இன்றும் தேவன் யாரிடமும் கட்டாயப்படுத்தி எதையும் எதிர்பார்ப்பதில்லை. சாலொமோன் ராஜா "கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது" (1இரா.6:2). இந்த ஆலயத்தில் என்ன இருந்தது? என்ற கேள்வி அநேகருக்கு எழும்பும். யாதொரு விக்கிரகமும் அங்கே இல்லை. "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஒரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணினபோது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை" என 2நாளா.5:10-ல் காண்கிறோம். சாலொமோன் கட்டின கர்த்தருடைய ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்றைக்கு ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படுமானால் எவ்வளவு செலவு செய்யப்படும், எத்தனை நாள் அதை விழாவாக கொண்டாடுவார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் அன்றையநாட்களில் "ராஜாவாகிய சாலொமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் சகல ஜனங்களும் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள். எட்டாம் நாளை விசேஷத்த ஆசரிப்பு நாளாய்க் கொண்டாடினார்கள்; ஏழுநாள் பலிபீடத்துப் பிரதிஷ்டையையும், ஏழுநாள் பண்டிகையையும் ஆசரித்தார்கள்" (2நாளா.7:5,9). நீங்கள் எப்போதாவது இவ்வளவு திரளான பலிசெலுத்தி ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நிச்சயமாக கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். அதுமாத்திரமல்ல இந்த ஆலயத்தை கட்டி முடிக்க ஏழுவருஷம் சென்றது.

பிரதிஷ்டையின் நாளின்போது சாலொமோனின் விண்ணப்பம் என்னவென்றால்; "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும், உம்முடைய பலத்த

கரத்தினிமித்தமும், ஓங்கிய உம்முடைய புயத்தினிமித்தமும், தூரதேசங்களிலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக நின்று விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல, உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக" என்று விண்ணப்பம்பண்ணினான் (2நாளா.6:32,33). நீங்களும் நானும் விண்ணப்பம்பண்ணியிருந்தால் எப்படி விண்ணப்பம்பண்ணியிருப்போம்?

சாலொமோனோ, ஜீவனுள்ள தேவனை அறியாத ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே தேவனைநோக்கி: இந்த ஆலயத்துக்கு நேராக அவர்கள் நின்று விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்பீராக என்று மன்றாடினான். அது மாத்திரமல்ல; "தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" என்றான் (2நாளா.6:18). ஆம், கர்த்தருக்காக கட்டின ஆலயம் பெரியது என்றோ அல்லது தான் கட்டியபடியால் அது தன்னுடைய ஆலயம் என்றோ அவன் சொல்லிக்கொள்ளும்படியாக விரும்பவில்லை. தேவனை அறியாத புறஜாதியார் அதின்வாயிலாக ஜீவனுள்ள தேவனை அறிந்துகொள்ளவேண்டும் என்பதுவே அவனுடைய விருப்பமாக இருந்தது. அந்த மகத்துவமான தேவனை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக தேவாலயத்தை கட்டினான் எனக்காண்கின்றோம்.

அன்பானவர்களே, தேவன் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். அவர் பூமியிலிருந்து தம்மைநோக்கி கூப்பிடுவோரை கண்ணோக்கிப்பார்க்கிறார். அவரை நோக்கிப்பார்க்க ஒரு இடம் வேண்டும் என்பதற்காகவே சாலொமோன் ஒரு ஆலயத்தை அவருக்குக் கட்டினான். அந்த ஆலயம் கர்த்தர் தங்குவதற்காக அல்ல. ஜனங்கள் பொதுவாக தவறாக புரிந்துகொள்ளுகிறார்கள். ஒரு ஆலயம் என்றால் அங்கேதான் கர்த்தர் இருப்பார் என்று எண்ணுகின்றனர். அப்படியல்ல. ஜீவசுவாசத்தை மனிதனுக்குக் கொடுத்த ஜீவனுள்ள கர்த்தர் அவனுள் வாழ விரும்புகிறார்.

ஆகையால் பவுல் பிரசங்கிக்கும்போது; "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர்



வாசம்பண்ணுகிறதில்லை" என்று பிரசங்கித்தார் (அப்.17:24). வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படி எனக்காக நீங்கள் எப்படிப்பட்டகோவிலைக் கட்டுவீர்கள் என்று கர்த்தர் கேட்கிறார். ஆண்டவருக்காக ஒருவரும் ஒருக்காலும் ஒரு இருப்பிடத்தைக்கட்டமுடியாது.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17). நாம் தேவனுக்கு ஆலயமாக இருக்கும்போது தேவனுக்கு வேறே ஆலயம் தேவையில்லை. நாம் தேவனுடைய ஆலயமாக இருந்தால் எப்படியிருக்கவேண்டும்? நடமாடும் ஆலயமாகவும் எங்கும் எப்போதும் பிதாவாகிய தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாகவும், அவருடைய நாமத்தை அறிவிக்கிறவர்களாகவும், அவருடைய வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாகவும் இருக்வேண்டும்.

இந்த ஆலயத்தை நாம் தவறான இடத்திற்கு கொண்டு சென்றால் நம்மில் வாசமாயிருக்கிற தேவனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருப்போம். ஆலயங்களை தூய்மையாக வைக்க முயற்சிக்கிற நாம் நம்மில் வாசமாயிருக்கும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடுக்கலாமா? நாம் பூமியில் காண்கிற யாவும் அக்கினிக்கு இறையாக வைக்கப்பட்டிருக்கிறது. பூமியின் மீதெங்குமிருக்கிற யாவும் ஒரு நாளில் அழிந்து வெந்து உருகிப்போகும். இப்படி அழிந்துபோகக்கூடிய இடத்திலும், மனிதர்கள் அவருக்காக கட்டிய இடத்திலும் தேவன் இல்லை. அவர் உங்களில் வாசமாயிருக்க விரும்புகிறார். ஆகையால் இயேசு சொல்லும்போது; "நீங்கள் இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20).

சாலொமோன் கட்டின ஆலயம் கர்த்தருடைய ஆலயம், தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்பட்டது. அதைப்போல இன்று கர்த்தடைய நாமத்தினாலே கூடிவரக்கூடிய சபையார், கர்த்தருடைய சபையார் என்றும் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே கூடியவருகிறபடியால் கிறிஸ்துவின் சபையார் என்றும் தான் அழைக்கப்படுகிறார்கள். அப்படியாக கர்த்தருடைய நாமத்தினாலே கூடியவந்த சபையாரைக்குறித்து நாம் ரோமர் 16:16-ம் வசனத்தில் படிக்கிறோம். அவருடைய நாமத்தினாலே கூடி வந்து மற்றொரு நாமத்தினாலே அழைக்கப்படுவது விந்தையாக இருக்கிறது!

பெந்தெகொஸ்தே ஆலயம் அல்லது சபை என்று அழைக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். பெந்தெகொஸ்தே என்பது ஐம்பதாவது நாள் அது ஒரு பண்டிகையைக் குறிக்கிறது. அந்நாளில் சபை துவங்கியதால் அதை வைத்திருப்பதாக சொல்கிறார்கள். அமாவாசை நாளில் பிறந்த குழந்தைக்கு பெயர் வைத்ததுபோல் இருக்கிறது. குழந்தை யாருடையது. அது அமாவாசைக்கு சொந்தமானது அல்ல. பெற்றோருக்கு சொந்தமானது. அதைப்போல கிறிஸ்துவானவர் பிதாவுக்கு சொந்தமானவர். அவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவரை இப்பூமிக்கு அனுப்பியதும் அவரே. அவருடைய நாமத்தினாலே நாம் கூடுகிறோம். அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பெறுகிறோம். அவரே சபையின் தலைவர். அவரே எல்லாருக்காவும் மரித்தவர். அவரை ஏற்றுக்கொண்ட சீஷர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்படியிருக்க அவருக்கும் நமக்கும் சம்பந்தமில்லாத ஒரு நாமத்தினாலே ஆலயம் அல்லது ஏதோ ஒரு சபை என்று அழைக்கப்படுவது சரியல்ல.

முற்பிதாக்களாகிய இஸ்ரவேலர் கர்த்தருடைய சபையார் என்று அழைக்கப்பட்டது போல இன்று நாமே அவருடைய ஆலயமாக இருப்பதால் கிறிஸ்துவின் சபையார் என்று அழைக்கப்படுவது சரியானது. அது வேதாகமத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடாக இருக்கிறது. நீங்கள் இப்படியாக அழைக்கப்பட்டு தேவனுடைய ஆலயமாக அவருடைய நற்செய்தியை அறிவிக்கும் ஆலயமாக, நற்கிரியைகளைச் செய்யும் நடமாடும் ஆலயமாக செயல்படுங்கள். அப்பொழுது நீங்களே மெய்யான தேவனுடைய ஆலயமாக இருப்பீர்கள்.

**கேள்வி நேரம்**

**தேவன் மெய்யாகவே மனிதர்கள் மத்தியில் வாசம் செய்வாரா?**

ஆதிமுதலாக மனிதன் கட்டிடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனக்கும் தேவனுக்கும் ஒரு பெரிய நடுச்சுவரை ஏற்படுத்திவிட்டான். தேவனாகிய கர்த்தர் ஆதாமோடு உறவாடுகிற தேவனாக இருந்தார். இயேசு ஜனங்கள் மத்தியில் ஜீவித்தார். ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்கண்டார்கள். அவர் ஏழ்மையானவர்களோடும், வியாதியினால் புறம்பாக்கப்பட்டவர்களோடும் புசித்து தான் தேவனிடத்திலிருந்து வந்த ஆண்டவர் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். தேவன் மனிதனோடு வாழ்ந்தார், வாழ்கிறார் என்பதை அறிகிறோம். மேலும் வேதம் சொல்கிறது; "பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக்கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும்



அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று வாசிக்கிறோம் (வெளி.21:3). தேவன் மனிதர்களோடு வாசம்செய்யும்போது அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். அவருடைய பிரசன்னம் அவர்களை வழிநடத்தும்.

அவர்களுடைய வாயில் வஞ்சனை இருக்காது, பொல்லாப்பானவை களை விட்டுவிலகி நன்மைசெய்வார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை சமாதானமுள்ளதாக இருக்கும். தேவன் உங்கள் மத்தியில் வாசம் செய்ய உங்களை ஆண்டவருடைய வசனங்களுக்கு ஒப்புக்கொடுங்கள். தேவனோடு வாழும் வாழ்க்கையை பெற்றுக்கொண்டு சந்தோஷமாயிருங்கள். தம்மிடம் வருவோரை ஒருபோதும் புறம்போ தள்ளாதவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. இன்றே கர்த்தருடைய ஜனங்களோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

## 36. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?
## What About Your Life?

**ஜீ**வன் உலகத்தில் உள்ள எல்லாவற்றைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றது. இந்த ஜீவனைக்குறித்து வேதாகமம் இப்படியாக சொல்லுகிறது; "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" (யாக்.4:14). நம்முடைய ஜீவிய நாட்களில் பார்க்கிறோம். கொடி கட்டி பறந்தவர்களுடைய வாழ்க்கை பின்பு சுவடுகள் கூட இல்லாமற்போகிறது. அநேகருடைய வாழ்க்கை இப்படியே போய்விடுகிறது. இதையே வேதம் புகையைப்போலிருக்கிறதே என்று சொல்லுகிறது. ஆகாயத்தில் தோன்றும் புகை சற்றுநேரத்தில் மறைந்துவிடுகிறது. அதைப்போலவே மனிதனுடைய வாழ்க்கையானது இருக்கிறது. எனவே இந்த ஜீவனுள்ள நாட்களை நாம் எப்படி கழிப்பது? என்ற கேள்வி எழும்புகிறது. "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை" (நீதி.12:28). நீங்கள் எந்தப்பாதையை தெரிந்து கொண்டு இருக்கிறீர்கள். ஜீவ பாதையையா? அல்லது மரண பாதையையா? அநேகர் மரணபாதையையே தெரிந்துகொள்ளுகின்றனர். என்றாவது ஒரு நாள் மரிக்கப்போகின்றோம்.

அது எந்த பாதையாக இருந்தால் என்ன? என்று சொல்லி மரணத்தையும் மரணப்பாதையும் அநேகர் தெரிந்துகொள்ளுகின்றனர். மனிதன் வாழ்வதற்காக படைக்கப்பட்டான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். மரணம் பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் நியமிக்கப்பட்ட ஒன்று. ஆகையால்

ஜீவனை தெரிந்துகொள்ளுங்கள். நீதியின் பாதை கர்த்தருடைய வழியாக இருக்கிறது. இங்கே மரணம் இல்லை, வருத்தம் இல்லை, அலறுதல் இல்லை. அவரோடு என்றென்றுமாக ஜீவிக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளோம்.

ஒரு மனுஷன் "இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா? மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை" என்று பிரசங்கி 6:6,7 வசனங்களில் வாசிக்கிறோம். ஆம், மனுஷன்படும் பிரயாசம் எல்லாம் அவனுடைய வாய்க்காகத்தான் ஆனால் அவனுடைய மனதுக்கு மனநிறைவு கிடைப்பதில்லை.

அதைப்போல அநேக நாட்கள் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உண்டு. அப்படி அநேக வருஷம் உயிரோடிருந்து எந்த நன்மையும் அவர்கள் காண்பதில்லை. மனிதன் மண்ணிலிருந்து வந்தான் மண்ணுக்கே திரும்புகிறான். இது எல்லோருக்கும் உள்ள நியதியாகவே இருக்கிறது. இதில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமில்லை என காண்கிறோம். இப்படியிருக்கிறபடியால்; "நிழலைப்போன்ற மாயையான தன் ஜீவகாலத்தைப் போக்கும் மனுஷனுக்கு இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப்பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்குங்காரியம் இன்னதென்று மனுஷக்கு அறிவிப்பவன் யார்?" (பிர.6:12).

இன்றைக்கு சேட்லைட் மூலம் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டு முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் இன்னும் மனுஷன் முன்கூட்டியே அறியபடவேண்டிய காரியம் நிறைய உண்டு, ஆனால் அவைகளை அறிவிக்கிறதற்கு ஆட்கள் இல்லை. அதை எவராலும் அறிவிக்க முடியாது என்பதுவே உண்மை. அதையே வேதம் "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே" என்கிறது (யாக்.4:14). நாளைக்கு மனுஷனுக்கு நடப்பதை இன்றுவரை யாரும் அறிவிக்கமுடியாமல் இருக்கிறார்கள். எதிர்காலத்திலும் அதை யாராலும் அறிவிக்கமுடியாது. ஏனென்றால் அதை தேவன் ஒருவரே அறிவார். சிலகாரியங்களை தேவன் மட்டுமே அறியமுடியும். அது மனிதர்களுக்கு எட்டாத ஒன்றாகவே இருக்கிறது. அது அப்படியே இருப்பது நல்லது என்றே நான் சொல்லுவேன்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அனைத்து காரியங்களையும் செய்துவிடுவதில்லை. அது வளர்ந்து வருவதற்கு பல வருடங்கள்



எடுத்துக்கொள்ளுகிறது. அதைப்போலவே நாம் தேவனுடைய பார்வையில் குழந்தைகளைப்போலவே உள்ளோம். ஒரு குழந்தை தாய்மடியில் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கமுடியுமோ அவ்வளவு பாதுகாப்பாக இருக்கும். அதைபோல நாமும் தேவனுடைய சமுகத்தில் இருக்கும்போது பாதுகாப்பாகவே இருப்போம். வளர்ச்சிக்கு மிஞ்சிப்போவோமானால் அழிவுதான் மிஞ்சும். ஆகையால், "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக்.4:13). நாளைக்கு நடப்பது நமக்கு தெரியாதிருக்கும்போது நம்முடைய கணக்கு எல்லாம் தப்பாகிவிடும். நாளைய தினத்தைக்குறித்து பெருமை கொள்ளாதிருங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் நாங்கள் இன்னின்னதைச்செய்வோம் என்று சொல்லவேண்டும்.

நீங்கள் கர்த்தருடைய வழியில் அதாவது ஜீவவழியில் இருப்பீர்களானால்; "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்" என வேதம் ஆலோசனை கொடுக்கிறது (1பேது.3:10,11). ஜீவனை காணவேண்டும் என்று விரும்புகிறவன் செய்யவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு.

முதலாவது, பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்க வேண்டும். இதையே சங்கீதக்காரன் பாவிகள் வழியில் நில்லாமலும், பரியாசக்காரன் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். நமக்கு நிலையான ஜீவன் வேண்டுமானால் நம்முயை உதடுகளையும் நாவையும் காக்கவேண்டும். அவைகளுக்கு காவல் வைக்கும்படியாக கர்த்தரைநோக்கி மன்றாடவேண்டும்.

மேலும், பொல்லாப்பைவிட்டு விலகி, நன்மைசெய்து சமாதானத்தை தேட வேண்டும் எனக் காண்கிறோம். சமாதான கர்த்தரை பின்பற்றுவோமானால் நமக்கும் சமாதானம் கிடைக்கும். மற்றவர்களுக்கும் சமாதானத்தை உண்டு பண்ணுவோம். இவைகளையெல்லாம் தேடாமல் தன் ஆத்துமாவுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மதிகேடனைப்பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன்; "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே,

உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:19,20).

இன்றைக்கு அநேகர் தங்களுக்காகவே அநேக பொருட்களை சேர்த்துவைத்துக்கொண்டு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். தேவனுடைய உபதேசங்களையும், அவருடைய ஆலோசனைகளையும் தள்ளிவிட்டு, தாங்கள் நிரந்தரமாக இந்தப்பூமியில் இருப்பதைப்போல அநேக பொருட்களை தங்களுக்காகவே குவித்துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்னவாகும்? இந்த ஐசுவரிவானின் நிலைமையைப் போலாகிவிடும். அதில் எந்தவிதமான மாற்றமுமில்லை.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறாய்? நீ ஜீவனுள்ள வாழ்வை காணவேண்டுமென்று விரும்புவாயானால், ஆண்டவர் இயேசுவின் மாதிரியின்படியே நீ நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாமல் வாழ்ந்து உன் ஜீவனை தப்பவைத்துக் கொள்ள உன் ஜீவனுள்ள நாளெல்லாம் ஜீவனுள்ள வசனங்களுக்குச் செவிகொடு. அப்பொழுது உன் வழிகளை கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார். நாளைக்கு நடப்பது நமக்கு தெரியாதிருக்கிறபடியால் நாம் நாளைதினத்தைக் குறித்து பேசும்போதும் திட்டமிடும்போதும் கர்த்தருக்குச்சித்தமானால் என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்த வேண்டும். இது பிதாவாகிய தேவனுக்கு ஏற்ற ஒரு வார்த்தையாக இருக்கிறது. அவரை மகிமைப்படுத்துகிற ஒன்றாக இருக்கிறது.

இதையே யாக்கோபு சொல்லுகிறார்; "ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்கள் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்" (யாக்.4:15). இப்படிச் சொல்லும்போது நாம் செய்ய நினைப்பது கைகூடிவரும். இதை தவிர்த்துவிட்டு, நிச்சயமாக நாளைக்கு அல்லது ஒரு நாள் நான் அதை செய்வேன் என்று சொல்வீர்களேயானால் நீங்கள் தேவனுடைய நியமத்திற்கு எதிராக இருக்கிறீர்கள். ஆதலால் தேவன் உங்களுடைய காரியங்களை வாய்க்கச்செய்யமாட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "நாம் எதையாகிலும் அவருடைய சித்ததின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" என யோவான் சொல்லுகிறார் (1யோவா.5:14). நாம் எதையாகிலும் கேட்பதற்கு முன்னமே அவைகள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றதா என்பதை நாம் முதலாவது எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் எதைக் கேட்டாலும் கர்த்தர் கொடுப்பார் என்று எண்ணிக்கொண்டு தகாத விதமாக முறையிடுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.



ஆகையால் பேதுரு நமக்கு கொடுக்கும் ஆலோசனை என்னவென்றால்; "தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" என்கிறார் (1பேது.4:19). உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். உங்களில் சுயம் ஆள இடமளிக்காதிருங்கள். கிறிஸ்து உங்களை முழுவதுமாக ஆண்டுகொள்ள, கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

நம்முடைய ஆண்டவர்; பிதாவாகிய தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும்போது; "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (லூக்.22:42). ஆண்டவரின் ஜெபத்தை கேட்டீர்களா? உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டதாக இருக்கிறது?

சகல அதிகாரத்தையும் பிதாவின் கரத்தினில் பெற்ற ஆண்டவர், அதை தன்னுடைய நாட்களில் முழுவதுமாக பயன்படுத்தும்படியாக விரும்பாமல் பிதாவின் விருப்பத்திற்கே தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறதை காண்கிறோம். தேவன், சில பாடுகளை நாம் அநுபவிக்கும்படியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவைகளை நாம் அநுபவித்தே ஆகவேண்டும். ஐயோ, என்னால் இதை சகிக்க முடியவில்லையே என்று ஓலமிடுவதைக் காட்டிலும் அதை நான் சகிக்க எனக்குப் பெலத்தைத் தாரும் பிதாவே என்று தேவனை நோக்கி ஜெபிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும்போது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்போம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே! உங்களுடைய ஜீவன் எப்படிப்பட்டது? அந்த ஜீவனை பிதாவாகிய தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்றீர்கள் என்பதை அறிவீர்களா? அந்த ஜீவன் தப்ப, அந்த ஜீவன் காக்கப்பட அவருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள். அப்பொழுது அந்த ஜீவனை பாதுகாத்துக்கொள்வீர்கள். உலகத்தில் உள்ள எல்லாம் அழிந்துபோகும். ஆனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஜீவன் அழிந்துபோகாது. அதை உங்களுக்குக் கொடுத்தவர் அழிவில்லாதவர். அவர் நித்தியமானவர், சர்வ வியாபி, சர்வத்தையும் தன்னில் கொண்டவர். அவருக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

**"கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார்"**
**சங்கீதம் 94:22**

**கேள்வி நேரம்**

**வசனங்கள் ஒருவனை உயிர்ப்பிக்குமா?**

வசனங்கள் வெறும் காகிதத்தில் தானே அச்சிடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது உயிரடைகிறது. எப்படி ஒரு விதை இருக்கிறதோ அதைப்போலவே வசனமும் இருக்கிறது. விதை வெளியிலிருக்கும்போது அது விதையாகவே இருக்கிறது. அதை எடுத்து நிலத்தில் விதைக்கும்போது அது உயிரடைந்து வளர்ந்து மரமாகிறது. வசனமும் மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அதை அவன் பெற்று பெலனடைகிறான். மரணத்திற்கு அவனுடைய கால்களை விலக்கி பாதுகாத்துக்கொள்ளுகிறான். "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவா.6:63).

ஆவிக்குரியவன் இந்த ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான். மற்றவர்கள் இதை அசட்டைபண்ணுவார்கள். இதினால் ஆவிக்குரியவர்கள் இன்னார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நீங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களாக ஆவிக்குரியவர்களாக இருப்பீர்களானால் இவ்வசனங்களுக்குச் செவிகொடுத்து, உங்களை பாவத்திலிருந்து மீட்டு உயிர்ப்பிக்கும் இவ்வசனங்களுக்குச் செவிகொடுத்து உயிரடையுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 37. யோபு பாவஞ்செய்யவில்லை

## Job Did Not Sin

இன்றைக்கு பாவஞ்செய்கிறவர்கள் பலவிதமான காரணத்தைச் சொல்லுகின்றனர். ஆதாமும் ஏவாளும் சர்ப்பம் எங்களை வஞ்சித்தது என்றனர். அதைப்போல ஒவ்வொரு வரும் ஒவ்வொரு காரணத்தை சொல்லி இதனால்தான் நாங்கள் பாவஞ்செய்தோம் என்று சொல்லி பாவத்திற்கு அடிமைகளாக இருக்கின்றனர். யோபு என்ற தேவதாசனைக்குறித்து யோபு புத்தகத்தில் படிக்கின்றோம். அவனுக்கு வந்த இழப்பீடுகளை அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஆனாலும் "இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை" (யோபு1:22). அவன் துக்கநாட்களில் மட்டுமல்ல சந்தோஷத்தின் நாட்களிலும் தேவனைக்குறை சொல்லவில்லை. பொதுவாக சந்தோஷத்தின் நாட்களில் கர்த்தரை மறக்கிற கூட்டத்தைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். யோபு அப்படியல்ல; "அவன் குமாரர் அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே



விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்" (யோபு1:4,5). பொதுவாக தங்கள் பிள்ளைகள் தவறுசெய்திருந்தால் கூட பெற்றோர்களில் சிலர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என் பிள்ளைகள் அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் யோபோ ஒருவேளை தன் பிள்ளைகள் தேவனை தங்களுடைய இருதயத்தில் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களுக்காக தேவனிடத்தில் மன்றாடியிருக்கிறதை பார்க்கிறோம்.

இருதயத்தில் உள்ள காரியத்தை கர்த்தர் ஒருவரே அறிவார். இதை அறிந்த யோபு தன் பிள்ளைகளுக்காக பலிசெலுத்தி வேண்டிக்கொண்டான். சந்தோஷத்தின் நாட்களில் அநேகர் பாவத்தில் ஈடுபடுவார்கள். சந்தோஷம் ஒருவகையில் பாவஞ்செய்யத்தூண்டும். இதிலே அநேகர் விழுந்துபோவதை நாம் காண்கிறோம். யோபு சந்தோஷத்தின் நாட்களிலும் தன் குடும்பத்தை பாவத்துக்கு விலக்கி பாதுகாத்துக்கொண்டான்.

**அதைப்போல துக்கநாட்களிலும் பாவத்திற்கு விலகியிருந்தான்.** ஒன்று சந்தோஷத்தின் நாட்களில் மனிதர்கள் பாவஞ்செய்வார்கள் அல்லது துக்கநாட்களில் பாவஞ்செய்வார்கள். ஏனெனில் துக்கத்தை மறக்கவும், துக்கத்திலிருந்து விடுபடவும் இதைச்செய்கிறோம் என்பார்கள். யோபுவுக்கும் துக்கம் வந்தது; "அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து; நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்" (யோபு 1:20,21). ஏழு குமாரர், மூன்று குமாரத்திகள், ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐந்நூறு ஏர்மாடுகள், ஐந்நூறு கழுதைகள், திரளான பணியாட்களை இழந்த யோபு தன் உதட்டினாலும் பாவஞ்செய்யாமல் இவையெல்லாம் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் திரும்பவும் எடுத்துக்கொண்டார் அவருக்கு ஸ்தோத்திரம் என்று நன்றி சொன்னான். ஒரு சிறு பொருளைக்கூட இழக்க முடியாமல் கஷ்டப்படக்கூடிய நீங்களும் நானும் இந்தவிதமாக சொல்லி பாவத்திற்கு விலகி நம்மை துக்க நாட்களில் காத்துக்கொள்ள முடியுமா? என்றால் சந்தேகமே! ஆனால் யோபு தன்னை

பாதுகாத்துக்கொண்டார். அவர் தேவனை குறைசொல்லவில்லை. அநேகர் வாயிக்கு வந்தபடியெல்லாம் தேவனை தூஷித்து, சபையை விட்டும், வீட்டை விட்டும், நாட்டை விட்டும் போய்விடுவார்கள். அவர்களால் இப்படிப்பட்ட இழப்பீடுகளை தாங்கிக்கொள்ள முடியாது. ஒருவேளை சிலர் தங்களை மாய்த்துக்கொள்ளுவார்கள். யோபுவோ தன் தேவன் மேல் நம்பிக்கையோடிருந்தார். இவையெல்லாம் கொடுத்த தேவன் வல்லவர், அவர் திரும்பகொடுப்பதற்கும் வல்லமையுள்ள தேவன் என்ற ஆழமான நம்பிக்கையை உடையவராயிருந்தார்.

தாவீது என்ற அரசன் தன்னுடைய ராஜ்யத்தின் நாட்களில் ஒரு பெரிய பாவம் செய்தான். அது என்னவென்றால்; "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய்" என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது (2சாமு.12:9). இந்த வார்த்தையின் நிமித்தம் தாவீது மனங்கசந்து அழுதான். ஆனால் யோபு சொல்கிறார்; "என் மனம் யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக"என்கிறார் (யோபு 31:9,10). இப்படியாக தன் கண்களோடே உடன்படிக்கை செய்து தன்னை பாதுகாத்துக்கொண்டவன் யோபு. நீங்கள் உங்களை எப்படி பாதுகாத்துக்கொண்டு வருகிறீர்கள். பாவத்துக்கு விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது யோபுவோடு இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார்.

ஒரு முறை தாவீதை பென்யமீனர் தூஷிக்கும்போது; "செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான். பின்னும் தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து; இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத்தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான்; அவன் தூஷிக்கட்டும் அவன் அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" (2சாமு.16:10-12) ஒரு ராஜா நிந்தையையும்



அவமானத்தையும் எண்ணாமல் தன்னை எப்படித் தேற்றிக்கொண்டு பாவத்திற்கு விலகியிருந்தார் என்று பார்த்தீர்களா? உங்களுக்கு வரும் அவமானங்களிலும் வேதனைகளிலும் உங்கள் நாவினாலும் இருதயத்தினாலும் பாவம் செய்யாது உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களை காண்கிற தேவனாக இருக்கிறார். அவருடைய அனுமதியின்றி ஒன்றும் உங்களுடைய வாழ்க்கையில் நடைபெறாது. தேவன் உங்களை உள்ளங்கைகளில் வரைந்துவைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையோடிருங்கள். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" (எசே.18:20).

யார் பாவஞ்செய்வார்களோ அவர்களே அதற்குரிய தண்டனையை அடைவார்கள். இதிலே தகப்பனும் மகனும் உடன்பட்டவர்கள் அல்ல. அவர்களுடைய ஆத்துமாக்கள் தனித்தனியாகவே இருக்கிறது. அந்தப்படியே அவரவர் தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பார்கள். ஆனால் பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும் என காண்கிறோம். இதிலே யாரும் தப்பிக்கொள்ளமுடியாது. இதை அறிந்த தாவீது தன்னை தூஷிக்கிறவர்கள் தூஷித்தால் தூஷிக்கட்டும் என்று தேவனுடைய சமுகத்தில் பொறுமையுடன் காத்திருந்தார். நீங்களும் பொறுமையுடனிருங்கள்.

யோபு தன்னுடைய வாழ்க்கையில் பாவஞ்செய்யாமல் தன்னை பாதுகாத்துக்கொண்டதைப்போல அவரை குறைசொல்லவுமில்லை என காண்கிறோம். ஏனெனில் யோபு சொல்லுகிறார்; "அவர் அவனோடே வழக்காடச் சித்தமாயிருந்தால், ஆயிரத்தில் ஒன்றுக்காகிலும் அவருக்கு உத்தரவு சொல்லமாட்டானே" என்கிறார் (யோபு 9:3). ஆம், அன்பானவர்களே ஆயிரத்தில் ஒன்றுக்குக்கூட நம்மால் அவருக்கு உத்தரவு சொல்லமுடியாது. ஏனெனில் எல்லாம் அவருடையது அவருக்கு நாம் ஆலோசனை சொல்லவும் முடியாது. அவர் கேட்கும் கேள்விகளுக்கு பதிற்சொல்லவும் முடியாது. நாம் மண்ணாயிருக்கிறோம்.

அவருடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறோம். அவர் சகலத்தையும் அறிகிறார். அவருக்கு முந்தி ஒன்றை சொல்லக்கூடியவன் யார்? சகலத்தையும் தமக்கென்று சிருஷ்டித்தார். ஒரு பிரதானி தேவமனிதனுடைய வாத்தையை தள்ளி "அந்தப் பிரதானி தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: கர்த்தர் வானத்தின் மதகுகளை உண்டாக்கினாலும், இந்த வார்த்தையின்படி நடக்குமா என்று சொல்ல; இவன், இதோ, உன்னுடைய கண்களினாலே அதைக்

காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றானே. அந்தப் பிரகாரமாகத்தானே அவனுக்கு நடந்தது; ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே அவன் செத்துப்போனான்" (2இரா.7:19,20). இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும், ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் நாளை இந்நேரத்திலே சமாரியாவின் ஒலிமுகவாசலிலே விற்கப்படும் என்ற எலிசாவின் வார்த்தைகளைப் புறக்கணித்த இந்த பிரதானி அதே வாசலிலே இதைப் பார்த்து அதை புசிக்காமல் இறந்துபோனான். கர்த்தருடைய வார்த்தையை புறக்கணிக்கிறவர்கள் இந்த பிரதானிக்கு சம்பவித்ததை நினைக்கவேண்டும்.

மேலும், கர்த்தர் யோபுவுடன் பேசும்போது; "சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்திபடிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார்" (யோபு40:2). கர்த்தருடைய அதிசயங்களையும் ஆலோசனைகளையும் அநேகர் புறம்பாக்கிப்போடுகின்றனர். அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் மேகங்களுக்கு கட்டளையிட மழையை வருஷிக்கப்பண்ணும், அவர் பூமியை நோக்கிப் பார்க்க பூமி அதிரும். காற்றும் மழையும் அவர் சொல்படி செயல்படும். அவருக்கு முன்பாக மனிதன் எம்மாத்திரம்? இவைகளையெல்லாம் அறிந்த யோபு தன்னுடைய வாழ்க்கையில் பாவம் செய்யாது தன்னைப் பாதுகாத்துக்கொண்டான்.

இஸ்ரவேலரோ, தேவனுக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்துகொண்டே இருந்தனர். ஆகையால் எரேமியாவைக்கொண்டு அவர்களை எச்சரித்தார். "ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம் செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.3:20). துரோகம் என்ற வார்த்தையை சில இடங்களில் நாம் வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் துரோகியான யூதாஸ்காரியோத்து என படிக்கிறோம். துரோகம் என்பது நம்பிக்கைக்கு விரோதமான செயலாக இருக்கிறது. தேவன் எரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு இப்படிச் சொல்வதற்கு பலகாரணங்கள் இருந்தது அதில் ஒன்று இஸ்ரவேலர் கர்த்தராகிய தேவனை விட்டு விக்கிரகங்களை நாடியபடியால் இவ்விதமாக எச்சரித்தார். இன்றும் அநேகர் இவ்விதமாக செய்யும்போது தேவனுக்கு துரோகம் செய்கிறவர்களாகவும், துரோகிகளாகவும் மாறுகின்றனர். இப்படிப்பட்ட பாவம் உங்களில் இருக்குமானால் இன்றே அவைகளை கைவிட்டு விட்டு யோபுவைப்போல உள்ளத்திலும் இல்லத்திலும் பாவம் வந்து குடிகொள்ளாதபடி கர்த்தருடைய வசனத்தினாலும், உங்களுடைய உறுதியான ஜெபத்தினாலும், தேவனுடைய இரங்கங்களினாலும், உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.



**கேள்வி நேரம்**

**கோபத்தைக் காட்டிலும் பாவம் கொடூரமானதா?**

ஆம், கோபம் கொள்ளுவதால் ஒரு மனிதன் பாதாளத்திற்குச் செல்லமாட்டான். கோபம் ஒருவேளை நியாயமானதாக இருக்கலாம். ஆனால் பாவம் எந்த வகையிலும் நியாயமானது அல்ல. பாவத்திற்கு ஒருவரும் சாக்குப்போக்குச் சொல்லமுடியாது. ஏனெனில்; "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்" என வேதம் எச்சரிக்கிறது (சங்.4:4,4). இதையே அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்று எழுதுகிறார் (எபே.4:26). பாவம் அவ்வளவு மோசமானதாக இருக்கிறது ஆகையால் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பாவத்தை கர்த்தர் வெறுக்கிறார். பாவம் செய்கிறவர்கள் மனந்திரும்பவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். பாவத்தோடு வாழும் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையல்ல.

"பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்கிறார் பிரசங்கி (பிர.8:12). உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. கோபத்தை சூரியன் அஸ்தமிக்கிறதற்குள்ளாக விட்டு விட்டு பாவத்தை உங்களை விட்டு முற்றிலுமாக நீக்கிப்போடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 38. இளவயதும் வாலிபமும் மாயையே

## Childhood and Youth are Vain

**வா**லிப வயது என்பது மிகவும் நல்ல வயது. அதிலே நல்ல முடிவெடுக்கிறவர்கள் மிகவும் சிறப்பான நிலைக்கு கொண்டு செல்லப்படுவார்கள். இந்த வாலிப வயதை அநேக வாலிபர்கள் சரியாக பயன்படுத்துவதில்லை. தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டு அவைகளிலிருந்து விடுபடமுடியாமல் பாவத்தில் வீழ்ந்துபோய்விடுகின்றனர். பரிசுத்த வேதாகமம் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லுகிறது; "வாலிபனே! உன் இளைமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன்

உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" (பிர.11:9). கன்றுக்குட்டிகள் பிறந்தவுடன் சிறிது நேரத்தில் அங்கும் இங்கும் துள்ளிக் குதிக்கும். அதைப் பார்க்கும்போது நமக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். அந்த குட்டிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். அதைப்போல வாலிப பருவம் இருக்கும். ஆகையால் உன் இளைமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட என வேதம் அனுமதி கொடுக்கிறது.

ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி என ஒரு எச்சரிப்பையும் கொடுக்கிறது. இந்த எச்சரிப்பு வாலிபர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள உதவும். பள்ளியிலும், வீட்டிலும், வேலைபார்க்ககூடிய இடங்களிலும் நம்மை சிலர் எச்சரிக்கின்றனர். அது நம்முடைய நன்மைக்காக இருக்கிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ளும்போது பாதுகாக்கப்படுகிறோம். தேவன் உலகத்திலே நாம் நடக்கவேண்டிய வழியை காண்பித்திருக்கிறார். உலகத்திலே நாம் எப்படிவேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் நாம் இப்படித்தான் நடக்கவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். அது நம்முடைய நன்மைக்காவே.

"ஒன்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" என பிரசங்கி 3:1-ல் வாசிக்கிறோம். அந்தப்படியாக வாலிபர்களுக்கும் ஒரு காலமிருக்கிறது. அந்த காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள். "நீ உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள்வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்," அவரை நினை என்று பிரசங்கி 12;1-ல் படிக்கிறோம்.

தேவனை நினைப்பதற்கும் அவருடைய கட்டளைகளின்படி செய்யவும் வாலிப வயது மிகவும் அருமையான வயது. அந்த வயதிலே உன் சிருஷ்டிகரை அதாவது உன்னை உண்டாக்கிய தேவனை நினை. வாலிப வயது சிந்தித்து நல்ல பல தீர்மானங்களை எடுக்கும் வயது. அந்த வயதில் உன்னை உண்டாக்கின தேவனைத் தேடு. அப்பொழுது நீ அவரைக் கண்டுகொள்வாய். உசியா என்ற யூத ராஜாவைக்குறித்து நாம் 2நாளா.26:5-ம் வசனத்தில் படிக்கிறோம்; "தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத்



தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்". எத்தனையோ ராஜாக்கள் எழும்பினார்கள். அவர்களெல்லாம் குறைந்த வருடங்களே ராஜ்யபாரம் பண்ணினார்கள். ஆனால் தன்னுடைய பதினாரு வயதில் சிம்மாசனத்தில் உட்கார்ந்த உசியா 52 வருஷம் ராஜாவாயிருந்தான். இதற்கு காரணம் என்ன? அவன் தேவனைத் தேட மனதாயிருந்தான். ஆகையால் அவனுடைய காரியங்களை கர்த்தர் வாய்க்கச்செய்தார். நாம் முதலாவது தேவனைத்தேடும்போது நம்முடைய காரியங்கள் கர்த்தரால் வாய்க்கும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் மீதியானியரிடம் தூக்கி விற்றுப்போட்டார்கள். அவனோ இளைமையானவன். அவன் தன் தேவனைப் பற்றிக்கொண்டிருந்தபடியால் கர்த்தர் அவனோடே கூட இருந்தார். அவனோடேகூட கர்த்தர் இருந்ததற்குக் காரணம் இருக்கிறது. அவன் பாவத்திற்கு விலகியிருந்தான். பாவத்தை வெறுத்தான். வாலிபத்தில் தன்னைக் காத்துக்கொண்டான். அவனுக்கு ஒரு சோதனைவந்தது; "இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்" (ஆதி.39:9).

இருதயங்களை பார்க்கிற கர்த்தர் யோசேப்பின் இருதயத்தையும் அவன் பாவத்திற்கு விலகி தன்னை வாலிபப் பருவத்தில் காத்துக்கொண்டதையும் அறிந்தார். நீ உன் வாலிபப்பிராயத்தில் இந்த யோசேப்பைப் போலவும், உசியாவைப்போலவும் கர்த்தரைச் சார்ந்து இருப்பாயானால் உன் வாலிபநாட்களில் இவர்களைப்போல உயர்த்தப்படுவாய். தேவன் உன்னை எடுத்து அவருடைய ராஜ்யத்தின் பணியிலும் இன்னும் அவருக்குச் சித்தமானவைகளிலும் உன்னைப் பயன்படுத்துவார்.

**இரண்டாவது** வாலிபப்பிராயம் ஒரு மாயையான காலம். பிரசங்கி சொல்லுகிறார் 11:10-ல் "நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே". வாலிபத்திலே நாம் ஒன்றையும் சாதிக்கவில்லையே என்று வாலிபப்பிராயத்தில் அநேகர் கவலைகொள்ளுகின்றனர். இதனால் அவசரப்பட்டு தீங்கானகாரியங்களில் ஈடுபடுகின்றனர். வாலிபப்பிராயம் தடுமாற்றமான சிலகாரியங்களை கொண்டுவரும். இங்கே முற்பிதாக்களின் வார்த்தைகளைக் கவனிக்கவேண்டும். "என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்திலே அணிந்து, அவைகளை உன்

கழுத்திலே கட்டிக்கொள். நீ நடக்கும்போது அது உனக்கு வழிகாட்டும்; நீ படுக்கும்போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும்" (நீதி.6:20-22). பொதுவாக வாலிபர்கள் தங்கள் பெற்றோருடைய ஆலோசனையை கேட்பதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நீங்க ஒன்னும் எனக்கு ஆலோசனை சொல்லவேண்டாம் எனக்கு எல்லாம் தெரியும் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவார்கள். அன்பான வாலிப தம்பியே, தங்கையே உன் தகப்பனுடைய கட்டளையை காத்து, அதைப்போல உன் தாயின் போதகத்தை கேள். அவர்கள் உனக்கு நல்ல ஆலோசனையைக் கொடுப்பார்கள். உன் நண்பர்களுடைய ஆலோசனையைக் காட்டிலும் அது உனக்கு பிரயோஜனமாயிருக்கும். எந்த ஒரு தகப்பனும் தன் மகன் கெட்டுப்போகட்டும் என்று நினைக்கமாட்டான். அதைப்போல எந்த ஒரு தாயும் தன் மகன் எப்படியோ சீரழிஞ்சுபோகட்டும் என்று நினைக்கமாட்டாள். ஆகையால் அவர்களுக்கு செவிகொடு. தேவன் நீ நன்றாயிருப்பதற்கு உனக்கு ஒரு பெற்றோரைக்கொடுத்திருக்கிறார். அது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. அவர்களுடைய போதகத்தை ஒரு போதும் தள்ளாதே.

என்னுடைய தாயார் எனக்கு சொன்ன காரியம் ஞாபகத்திற்கு வருகிறது. நான் சாப்பிடும்போது இட்லிக்கு அதிகமான சட்டினியை ஊற்றி சாப்பிடுவேன். அப்பொழுது என்னுடைய தாயார் எப்பொழுதும் சட்டினியை தொட்டு சாப்பிட்டு பழகு என்று சொல்வார்கள். அதை சிலவேளைகளில் கைக்கொள்ளுவதில்லை. அதினால் நான் சாப்பிட்டுவிட்டு வயிற்றுபிரச்சனையால் அவதிப்படும்போது அவர்கள் சொன்ன போதனையை நினைத்துப்பார்ப்பேன். இதைப்போல எத்தனையோ நலமான காரியங்களை நமக்கு வாலிபப்பிராயத்தில் ஊட்டி வளர்க்கிறார்கள். ஆனால் அவைகளை நாம் கைக்கொள்ளாதே போவோமானால் அநேக கஷ்டங்களை அநுபவிக்கநேரிடும்.

தன்னுடைய பெற்றோருடைய ஆலோசனையைக் கேட்டு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறவன் ஞானத்தில் பிரியப்படுகிறவனாயிருக்கிறான்; அப்படிப்பட்டவன் "தன் தகப்பனை மகிழப்பண்ணுகிறான், வேசிகளோடே தொந்திப்பானவனோ ஆஸ்தியை அழிக்கிறான்" என நீதி.29:3-ல் வாசிக்கிறோம். நீங்கள் உங்களுடைய தகப்பனை பிரியப்படுத்த அவருக்கு பிரியமானவைகளை செய்யுங்கள். புதிய ஏற்பாட்டில் தனக்கு வரும் பங்கை பிரித்துகேட்டு வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்கு சென்று தன் ஆஸ்திகளை அழிந்துப்போட்ட இளையமகன் கடைசியில் மனங்கசந்து அழுது பரத்துக்குவிரோதமாகவும் உமக்குவிரோதமாகவும் பாவம் செய்தேன் உன்னுடைய மகன் என்று சொல்வதற்கு அருகதையற்றவனாகிவிட்டேன்



என்று சொல்லி தகப்பனிடம் வந்தான். அதைப்போல தகப்பனுடைய ஆலோசனையை தள்ளிப்போடுகிறவன் வேசிகளிடத்தில் தன் ஆஸ்தியை அழித்துப்போடுவான். புத்தியில்லாத ஒரு மூடனைக்குறித்து நாம் நீதி.7:21-27 வசனங்களில் படிக்கிறோம்; "தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப் பண்ணினாள். உடனே அவன் அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத்தீவிரிக்கிறதுபோலும், அவளுக்குப் பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது. ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள். உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே. அவள் அநேகரைக் காயப்படுத்தி, விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக் கொலைசெய்தாள். அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி, அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்".

இந்த வழி போகப்போகிறீர்களா? என் அன்பு தம்பியே, தங்கையே உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும். தேவன் உனக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். இந்த வானமும் பூமியும் நீ வாழும்படியாகவும், அநேக நன்மைகளை நீ கண்டையும் படியாகவும், உன்னுடைய பெற்றோரை மகிழ்விக்கும்படியாகவும், உன்னாலே அநேகர் நன்மைகளை அடையும்படியாகவும் தேவன் உம்மை தெரிந்துகொள்ளும் படியாக இருக்கிறார். நீ அவரையும் அவருடைய கட்டளைகளையும் பற்றிக்கொள்வாயானால் அவர் உன்னுடைய தேவனாக இருந்து உம்மை அற்புதமாக வழிநடத்துவார். மாயையான இந்த இளமையிலும் உன் வாலிபத்திலும் உன் சிருஷ்டிகரை நினை.

அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஊழியத்திலே கண்டுகொண்ட தீமோத்தேயு என்ற வாலிப உத்தம சகோதரனுக்கு எழுதும்போது; "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என ஆலோசனை சொல்லி எழுதுகிறார் (1தீமோ.6:20). ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு ஆலோசனை சொல்லுவதைப்போல எழுதுகிறார். இவனை சுவிசேஷத்தினாலே பவுல் பெற்றெடுத்தார் என்று சொல்லலாம். அதை தீமோத்தேயு அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு உலகத்திலே தோன்றியிருக்கிற கள்ள உபதேசங்களுக்கும்,

வீண்பேச்சுக்கும் தன்னை விலக்கிக் காத்துக்கொண்டான். நீங்களும் உங்களுடைய வாலிபப்பிராயத்திலே உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**வாலிபத்திலே தன்னைப் பாதுகாத்துக்கொண்டு எதை அடையும்படியாக நாடவேண்டும்?**

பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு நல்ல ஆலோசனையைக் கொடுக்கிறார். என்னவென்றால்; "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு" (1தீமோ.6;1). இன்றைய வாலிபர்கள் எதை எதையோ நாடிக்கொண்டும் தேடிக்கொண்டும் இருக்கிறார்கள். மாயையான இந்த வாலிபப்பிராயத்தில் ஜீவிக்கிற நீங்கள் மேற்கண்டவைகளை நாடுங்கள். அது உங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தும். நீதியும் தேவபக்தியும் உங்களிடம் இருந்தால், உங்களோடு தேவன் இருப்பார். அநேகர் உங்களோடு பழகவிரும்புவார்கள். உங்களுடைய நீதியையும் பக்தியையும் பார்த்து உங்கள் மீது நம்பிக்கைவைப்பார்கள். மேலும் விசுவாசமும் அன்பும் பொறுமையும் சாந்தகுணமும் இருக்கும்போது உலக ஆசீர்வாதங்கள் அனைத்தும் உங்களைத்தேடி வரும். அதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

வாழ்க்கையின் அஸ்திபாரமே விசுவாசம் தான், அந்த விசுவாசம் உங்களில் காணப்படும்போது அநேகருக்கு உங்கள் மேல் நம்பிக்கை ஏற்படும். அன்பும், பொறுமையும், தெய்வீக குணங்கள். இவைகளை மனிதர்களிடம் பார்ப்பது அரிதாக இருக்கிறது. அது உங்களிடம் இருக்கும்போது தேவன் உங்களோடு இருக்கிறார் என்று அநேகர் உங்களிடத்தில் ஆலோசனை கேட்க வருவார்கள். எல்லாவற்றிற்கு மேலாக சாந்தகுணத்தை உடையவர்களாக இருக்க முயற்சியுங்கள். அவசர உலகில் அநேகர் மேற்கண்ட காரியங்களை இழந்து விடுகிறார்கள். இவைகள் உங்களிலிருக்கும்போது கர்த்தர் உங்களோடு இருப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 39. உங்களை ஒப்புக்கொடுங்கள்
## Submit Your Selves

**பு**திய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தருக்கும் கர்த்தருடைய ஊழியத்திற்கும் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு சில சகோதரர்களையும் சகோதரிகளையும் இன்றைய நாள் செய்திவேளையிலே தியானிக்கவுள்ளோம். லேவி என்ற மத்தேயு இவன் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தை எழுதியவன்.



இந்த லேவி என்பவன் கர்த்தருடைய ஊழியத்திற்காக தான் தெரிந்துகொள்ளப்பட்டபோது, அதை பெரும்பாக்கியமாக கருதினான். அவன் வரிவசூலிப்பவனாக இருந்தான். இயேசு அவனை அழைக்கும்போது அவன் தனக்குள்ள எல்லாவற்றையும் விட்டு அவருக்குப்பின் சென்றான். இந்த நற்செய்தியின் நிமித்தமாக "அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்" (லூக்.5:29).

இவன் எவ்வளவு சந்தோஷமுள்ளவனாயிருந்தால் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடுசெய்திருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். நம்மில் எத்தனைபேர் கர்த்தருக்கும் கர்த்தருடைய ஊழியத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்தவுடன் இந்தவிதமாக சந்தோஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிறோம்? நம்முடைய வீட்டில் புதிதாக ஒரு குழந்தைபிறந்துவிட்டால் மகிழ்ச்சியில் சாக்லெட் வாங்கிக் கொடுக்கிறோம். நாம் பரீட்சையில் பாஸ் பண்ணிவிட்டால் ஏதோ ஒரு இனிப்பு வாங்கிக்கொடுக்கின்றோம். ஆனால் ஞானஸ்நானம் பெற்றவர்களும், கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களும் இந்த மத்தேயுவைப்போல ஒரு பெரிய விருந்தை ஏற்பாடுசெய்கிறார்களா? செய்வதில்லை. ஒருவேளை அந்த சபையார் இந்த ஏற்பாடுகளை செய்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட விதத்தில் இந்த விதமாக சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வதில்லை.

ஒரு பள்ளியில் ஆசிரியருக்கு பதவி உயர்வு கிடைத்துவிட்டால் அன்று அவர் எல்லா ஆசிரியர்களுக்கும் பிரியாணி வாங்கிகொடுக்கிறார். இதில் ஆசிரியர்களுடைய தகுதிக்கு ஏற்ப சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ளுகிறார்கள். கர்த்தருடைய வேலை உலகத்தில் உள்ள எல்லா வேலைகளைக்காட்டிலும் சிறப்பானது அதற்கு நிகரான வேலை இந்த உலகத்தில் இல்லை என்பதை அறிந்த லேவி என்ற மத்தேயு அவனோடு உள்ள அனைவரையும் அழைத்து ஆண்டவர் இயேசுவுக்கு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினான். இதைப்போல பழைய ஏற்பாட்டு காலத்தில் எலிசா என்பவன் தன் ஏர்மாடுகளை அடித்து விருந்து செய்து எலியாவின் பின்னே ஊழியத்திற்கு சென்றான் என காண்கிறோம்.

மேலும், புதிய ஏற்பாட்டு காலத்தில் குறிப்பாக இயேசுவின் நாட்களில் "ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்" (லூக்.8:3). ஆண்டவர் இயேசு அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்துகொண்டு வந்த நாட்களில் அவருடைய ஊழியத்திற்கு பணம் தேவையாக இருந்திருக்கும்.

அந்த தேவைகளை அவருடைய உபதேசத்தினால் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களில் யோவான்னாள், சூசன்னாள் போன்றவர்கள் அவர்கள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்தார்கள். ஊழியத்திற்கு வேண்டிய பணத்தை ஆண்டவர் இயேசு, தேவனுடைய உபதேசத்தின் மூலமாகவே பெற்றுவந்தார். இன்றைய நாட்களில் ஊழியத்திற்கு பணம் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. அதை யார் கொடுப்பார்? எங்கே கிடைக்கும் என்று அங்கும் இங்கும் அலையும் ஒரு கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில் அந்த ஊழியத்திற்கு தேவையானதை அவரோடு கூட இருந்த சீஷர்களும் சீஷிகளும் கொடுத்து தாங்கியிருக்கிறதை நாம் வசனங்களின் வாயிலாக அறிகிறோம். இப்படி ஆண்டவருக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் தங்ளை ஒப்புக்கொடுக்கக்கூடிய சகோதர, சகோதரிகள் சபைகளில் எழும்பவேண்டும்.

அதைப்போல தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு பாவியாகிய ஸ்திரீயைக்குறித்துப்படிக்கிறோம். "அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:38). இவள் தான் ஒரு பாவி என்பதை அறிந்து தன்னை முழுவதுமாக தாழ்த்தி இயேசுவின் முன்பு நிற்பதற்கு தான் தகுதியற்றவள் என்பதை எண்ணி இயேசுவின் பின்பாக நின்றுகொண்டு அழுது, தன்னுடைய பாவத்தை கண்ணீரால் அவருடைய பாதங்களில் ஊற்றி பரிமள தைலத்தினால் நனைத்து தன்னுடைய கூந்தலினால் அவைகளை துடைத்தாள். அவளுடைய கீழ்ப்படிதலையும், மனமாறுதலையும் கண்டு கர்த்தர் அவளை மன்னித்து இனி பாவம் செய்யாதே என்று அனுப்பிவிட்டார்.

அழைத்த பரிசேயன்; அவருக்கு, கால்களை கழுவ தண்ணீர் தரவில்லை, ஆனால் இவளோ இயேசுவின் மீது கொண்ட அன்பினால் அவருடைய பாதங்களை பரிமளதைலங்கொண்டு பூசினாள். இவள் ஆண்டவருக்கு செலுத்தின பரிமளதைலம் மிகவும் விலையேறப்பெற்றது. ஒரு சாதாரண தைலத்தை கொண்டு வந்து இயேசுவுக்கு பூசும்படியாக இவள் நினைக்கவில்லை. மிகவும் விலையேறப்பெற்ற தைலத்தை அவருக்கு பூசவேண்டும் என்று எண்ணினவளாக பரிசேயனுடைய வீட்டிற்கு வந்து இயேசுவை சந்தித்தாள். அவளுடைய ஒப்புக்கொடுத்தலைப்பார்த்தீர்களா? உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டதாக இருக்கிறது? உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட நீங்கள் அவருக்குச் செலுத்தப்போகும் காரியம் எப்படிப்பட்டது? முதலாவது உங்களையே அவருக்கு ஒப்புக்கொடுங்கள், பின்பு



உங்களுடைய உடைமைகளை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். வானமும் பூமியும் கர்த்தருடையது.

இயேசுவின் நாட்களில் திரளான ஜனங்கள் தம்மை பின்பற்றுவதை அறிந்த கர்த்தர் அவர்கள் சாப்பிடாமல் அவருடைய உபதேசங்களை கேட்பதை அறிந்து, அவர்களுக்கு உணவு கொடுக்கும்படி சீஷர்களை கேட்டுக்கொண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் இத்தனை திரளான ஜனங்களுக்கு வேண்டிய உணவு எங்கே கிடைக்கும் என்று சொல்ல ஆரம்பித்தனர். உங்களிடம் என்ன இருக்கிறது என்று கேட்கும்போது, "இங்கே ஒரு சிறுபையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்" (யோவா.6:9). அதை வாங்கி ஆசீர்வதித்துகொடுத்தார். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்களும் ஸ்திரீகளும் சாப்பிட்டு மீதமானதை பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்.

அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஆண்டவர் இயேசு கேட்டவுடன் அந்த சிறுபையன் அதை சீஷர்களிடம் கொடுத்தான் அல்லவா அதை நினைக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதினால் தான் ஆண்டவர் இயேசு சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள் என்றாரோ! என்று எண்ணத் தோன்றுகிறது. பாருங்கள் சிறுபிள்ளை களுக்குக்கூட கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் அந்த பையன் கொடுத்தபடியினாலே அங்கே அநேகர் சாப்பிட்டு திருப்தியடைந்தனர். புதிய ஏற்பாட்டு காலத்தில் இந்த சிறுபையனும் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறான் என்றால் அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுடைய பிள்ளைகளை இந்த விதமாக கொடுக்கும் விஷயத்தில் பழக்கப்படுத்துகிறீர்களா? மேலைநாடுகளில் உள்ள சபைகளில் பிள்ளைகளும் அதிகமாக கொடுக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உள்ள கர்த்தருடைய சபைகளிலும் கொடுக்கும் பழக்கம் உருவாகவேண்டும்.

இயேசுவின் உபதேசங்களை அதிகமாகக் கேட்ட குடும்பங்களில் மார்த்தாளின் குடும்பமும் ஒன்று. ஒருநாள் "அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்" (யோவா.12:2).

தேவ ஊழியர்களை உபசரிப்பதில் ஒரு தனி கவனத்தை மார்த்தாள் பெற்றிருந்தாள். அதுவும் ஆண்டவர் இயேசுவுக்கு உபசரிப்பதில் அவளுடைய பங்கு அதிகமாயிருந்தது. இப்படி பணிசெய்யும்படியாக ஒப்புக்கொடுத்தவர்

களைப்பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். மேலும், யோசேப்பு என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இயேசுவின் சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி "தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்" என்று மத்.27:60 வசனங்களில் படிக்கிறோம்.

இந்த காலத்திலும் கல்லறை பெரிய பிரச்சனையாகவே இருக்கிறது. இதனால் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்ளக்கூட தயக்கமாக இருக்கின்றனர். இயேசுவை ஏற்றுக்கொண்டால் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்துவிடுவோம் என்று பயமுறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் எங்களுடைய அடக்க ஸ்தலத்தில் நீங்கள் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறவர்களும் உண்டு.

இதே சூழ்நிலை இயேசுவின் நாட்களில் இருந்திருக்கக்கூடும். மேலும் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. ஆகையால் யோசேப்பு தான் வெட்டிய கல்லறையிலே இயேசுவின் சரீரத்தை கொண்டுபோய் வைத்தான் எனக் காண்கிறோம். இவர்களெல்லாரும் இயேசுவின் உபதேசத்தினாலே தங்களையும், தங்களுடைய உடைமைகளையும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தார்கள். உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டது?.

தொற்காள் என்று சொல்லப்படும் தபீத்தாள் நற்கிரியைகளை மிகுதியாய் செய்துவந்தாள் என்று அப்.9:36-ல் படிக்கிறோம். தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக என்ற வசனத்தை கைக்கொள்ளுகிறவளாக இருந்தாள். நமக்கு இந்த வசனம் தெரியும், கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தெரியும் ஆனால் யார் இதைக்கைக்கொள்ளுவது? தொற்காளைப்போல இயேசுவுக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் ஒப்புக்கொடுத்தவர்கள் செய்கிறார்கள். நீங்களும் செய்யும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். மேலும் "சகோதரரே, ஸ்தேவானுடைய வீட்டார் அகாயாநாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே" என்று பவுல் கொரிந்திய சபையாருக்கு கடிதம் எழுதுகிறார் (1கொரி.16:15). அப்படியானால் இந்த ஸ்தேவானின் வீட்டார் முதல் நூற்றாண்டு சபையில் மாதிரியான குடும்பமாகவும், தங்களை கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்த குடும்பமாகவும் செயல்பட்டிருக்கிறார்கள் என காண்கிறோம். சூழ்நிலைகளை அறிந்தது சபை வளர்ச்சியடைய உதவியாயிருந்திருக்கிறார்கள். நீங்களும் அவ்விதமாக இருக்க முயற்சியுங்கள்.



ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தவர்களில் பவுலும் ஒருவர். அவர் "தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்" என அப்.28:30,31-வசனங்களில் படிக்கிறோம்.

தேவாலயங்களிலும், சந்தைகளிலும், மேடைகளிலும், கடலோரங்களிலும் கிடைக்கக்கூடிய வீடுகளிலும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்துக்கொண்டுவந்த பவுல் கடைசிநாட்களில் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி தானே தன்னுடைய வேலைகளைக் கவனித்துக்கொண்டும் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு தடையில்லாமல் ராஜ்யத்தை குறித்து பிரசங்கித்திருப்பா ரென்றால் அவருடைய வைராக்கியத்தை பார்த்தீர்களா? இது ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட அன்பு அல்லவா?

### கேள்வி நேரம்

**ஒப்புக்கொடுத்தலில் மாதிரியாக கொடுக்கப்பட்ட சபையார் யார்?**

புதிய ஏற்பாட்டு காலத்தில் மக்கெதோனியா சபையார் மாதிரியானவர்கள் என பவுல் சொல்லுகிறார். "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கும் அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.

மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2கொரி.8:1,2,5). நீங்கள் கூடி வருகிற சபை மக்கெதோனியா சபையாரைப்போல கொடுத்தலிலே மாதிரியான சபையாக இருக்கிறதா? அப்படியில்லை என்றால், கொடுத்தலில் இந்த சபையாரை நோக்கிப்பாருங்கள். அவர்களை பெலப்படுத்தினவர் உங்களையும் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"உமது கிருபை வானபரியந்தமும்,**
**சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது"**
**சங்கீதம் 57:10**

# 40. இஸ்ரவேலின் நான்கு பெரிய பாவங்கள்

## Four Greater Sins of Israel

**பா**வங்கள் பலவழிகளில் மனிதனை தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடச் செய்கிறது. இதில் இஸ்ரவேலர் நான்கு விதமான பாவங்களில் விழுந்து தேவனுக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். முதலாவது கொடிதான அருவருப்பை கர்த்தர் அவர்களுடைய வாழ்வில் கண்டார். "நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன்தன் கையிலே தன்தன் தூபகலத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்" (எசே.8:10-12).

இன்றைக்கும் பலவீடுகளில் பாரம்பரியமாக அநுசரித்து வந்த அந்த வீணான விக்கிரகங்களை அழித்துப்போடும்படியாக எண்ணங்கொள்ளாமல் அதை அப்படியே வைத்திருப்பார்கள். வீடுகளில் உள்ள சிலபெலவீனர்கள் அதை வணங்கிக்கொண்டும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டும் அதை நமஸ்கரித்துக்கொண்டும் இருப்பார்கள். அப்படிப்பட்ட வீணான விக்கிரகங்களை முழுவதுமாக அழித்துப்போடும்படியான கட்டளை ஆதியிலே கர்த்தரால் பிறபிக்கப்பட்டிருந்தது.

இதைக்குறித்து உபா.12:1-3 வசனங்களில் வாசிக்கும்போது; "உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக்கொடுக்கிற தேசத்திலே, நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவன: நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து, அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால்



சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின் பேரும் அவ்விடத்தில் இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்" என்றார். அந்தப்படியாக அந்நாட்களில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள் அவைகளை அழித்துப்போட்டனர். நாளடைவில் அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் அதற்கு தூபங்காட்டவும் துணிந்து செயல்பட ஆரம்பித்தனர். இது கர்த்தருக்கு அவருவருப்பாக இருந்தது. இதனால் அவர்களை கர்த்தர் கைவிட்டார். ஆகையால் இஸ்ரவேலில் அநேகர் கர்த்தர் எங்களை கைவிட்டார். எங்களுடைய விண்ணப்பத்தை தள்ளிவிட்டார். அவர் எங்களை நோக்கிப்பார்க்கிறதில்லை என்று சொல்லி வீணான விக்கிரகங்களை நாடஆரம்பித்தனர். கண்ணை உண்டாக்கினவர் காணாதிருப்பாரா? காதை உண்டாக்கினவர் கேளாதிருப்பாரா? அவர்கள் சற்றும் சிந்திக்காமல் விக்கிரகங்களை நாடினர். இந்த கொடிய அருவருப்பை இஸ்ரவேலிலே கர்த்தர் கண்டு தீர்க்கதரிசியாகிய எசேக்கியாவைக் கொண்டு எச்சரித்தார்.

**இரண்டாவது அதிக அருவருப்பு** என்னவென்றால்; "பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி, என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டுபோனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்" (எசே.8:13-14).

நாம் கேள்விப்படுகிறோம் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக, இந்த தம்மூசு என்ற விக்கிரகம் பெண்கள் வழிபடும் ஒரு விக்கிரகமாக இருந்தது. இதை சாலொமோனை வழி விலகிப்போகப்பண்ணின பெண்கள் வழிபட்டனர். சீதோனியரின் தேவி என்று அழைக்கப்பட்டது. "சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான்" என்று 1இரா.11:4,5-வசனங்களில் வாசிக்கிறோம்.

சிலர் விக்கிரக ஆராதனை செய்கிற குடும்பங்களில் சம்பந்தம் கொள்ளுகின்றனர். அவர்கள் தங்களுடைய விக்கிரங்களை விட்டுவிடாமல் அவைகளை மறைமுகமாக வைத்து நமஸ்கரித்துக்கொண்டிருப்பார்கள். அது அக்குடும்பங்களுக்கு பெரிய பாவத்தைக்கொண்டு வரும். யாக்கோபின் மனைவி ராகேல் தன் தகப்பனாகிய லாபானுடைய சுரூபங்களை திருடி ஒட்டகசேணத்திற்குள் வைத்துக்கொண்டாள். பின்பதாக யாக்கோபு தன்

குடும்பத்தாரிடத்தில் இருந்த விக்கிரகங்களையும் அந்நிய தெய்வங்களையும் வாங்கி ஒரு கர்வாலிமரத்தின் கீழ் புதைத்துப்போட்டான் என காண்கிறோம். அதை அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வீட்டிற்கு சாபத்தை கொண்டுவந்துவிடுவார்கள் என்று அறிந்த யாக்கோபு அவைகளை அழித்துப்போட்டதைப்போல இன்று ஒவ்வொரு குடும்பத்தலைவர்களும் பெண்கள் மறைமுகமாக வைத்து வழிபடுகிறதான விக்கிரகங்களை அழித்துப்போட தயங்கக்கூடாது. அவைகள் கர்த்தருடைய பார்வையில் அதிக அருவருப்பாக இருக்கிறது.

**மூன்றாவது இதிலும் அதிக அருவருப்பை** கர்த்தர் இஸ்ரவேலில் காண்டார். அது என்னவென்றால்; "அவர்; மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று என்னுடனே சொல்லி, என்னைக் காத்தருடைய ஆலயத்தின் உட்பிரகாரத்திலே கொண்டுபோனார்; இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்" (எசே.8:15,16).

தேவனால் உண்டாக்கப்பட்டவைகளை நமஸ்கரிக்கும்படியாக கர்த்தருடைய ஆலயத்திலே இதை துணிந்து செய்தார்கள். உலகத்திலே உண்டாக்கப்பட்டவைகள் எல்லாம் மனிதனுக்கு நன்மை பயக்கக்கூடியவை களாக இருக்கிறது, இதை மனிதன் அறியாது சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும், ஊரும்பிராணிகளையும், கடல்வாழ் சந்துக்களையும் நமஸ்கரித்துக்கொண்டிருக்கிறான். இவைகளை உண்டாக்கின கர்த்தருக்குத்தான் எவ்வளவு வேதனையாக இருக்கும்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே! சற்றே சிந்தித்துப்பார். இஸ்ரவேலர் செய்த இந்த அருவருப்பான காரியங்களை நீயும் செய்யாதே, உண்டாக்கின தேவனை தொழுதுகொள் அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய். வீணானவைகள் உன்னை ஒருபோதும் இரட்சிக்காது, உன்னுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் செய்யாது. ஏனென்றால் அவைகள் பூமியில் மனிதனுடைய எண்ணத்தினால் உண்டானவைகள். வானமும் பூமியும் அழியும்போது அவைகளும் ஒருநாளில் அழிந்துபோம்.

மேலும், இஸ்ரவேலர் "எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்குத் தூபங்காட்டி,



அவளுக்குப் பானபலிகளைவார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்" என்றார்கள் (எரே.44:17,18). அற்புதவிதமாக வனாந்தரத்தில் 40 வருடங்களாக மன்னாவினாலும் காடைகளினாலும் போஷித்து வந்த கர்த்தரை மறந்து. நாங்கள் விக்கிரங்களை நமஸ்கரித்தபோது அப்பத்தினால் திருப்தியாகி ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்தோம் என்று வாய் கூசாமல் சொன்னார்கள். மேலும் பஞ்சத்தாலும் பட்டயத்தாலும் அழிந்துபோனோம் என்றார்கள். எல்லாவித நம்மைகளையும் நமக்குச் செய்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர். அவர் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறவர். ஆதிமுதலாக மனிதனுக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுக்கும் பூமியை உண்டுபண்ணினார்.

அந்த ஜீவனுள்ள கர்த்தரை மறந்து அந்நிய தேவிகளையும் அந்நிய தேவர்களையும் நாடி அதை நாங்கள் நாடாதபடியால் எங்களுக்குக் குறைவுபட்டது என்று சொன்னது எவ்வளவு வேதனையை கர்த்தருக்குக் கொடுத்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்களுக்கு ஒருவர் நன்மை செய்திருக்கும்போது அந்த நன்மையை நீங்கள் மறந்தவர்களாகவும், அவரை கண்டுகொள்ளாதவர்களாகவும் இருந்துகொண்டு அவருக்கு விரோதமாக எனக்கு நன்மை செய்தது இந்த கல்லுதான் என்று சொன்னால் நன்மை செய்தவருக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும். அன்பானவர்களே, இஸ்ரவேலோ கர்த்தரை அறியாது போனார்கள்.

**நான்காவது யூதாவின் அருவருப்பு**; கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை நோக்கி: "மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இங்கே யூதா வம்சத்தார் செய்கிற அருவருப்புகள் அற்பமான காரியமா? அவர்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்பி என்னை அடிக்கடி கோபமூட்டுகிறார்கள்; இதோ, அவர்கள் திராட்சக்கிளையைத் தங்கள் நாசிக்கு நேராகப் பிடிக்கிறார்கள்" என்றார் (எசே.8:17). திராட்சையை மனுஷனுடைய நன்மைக்காக படைத்தார். இவர்களோ அதில் ஒரு கட்டையை எடுத்துக்கொண்டு அதை நமஸ்கரிக்கவும் அதை வழிபடவும் செய்தனர். ஏசாயா மூலமாக சொல்லும்போது; "மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக்

குளிர்காய்கிறான்; நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான்" என்றார் (ஏசா.44:15). மனிதன் சிந்திக்காமல் அவைகளை வணங்கிக்கொண்டு வருகிறான். மூதாதையர் அதைக்குறித்த ஒரு பயத்தை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீணான தேவர்களையும், தேவிகளையும் இஸ்ரவேலர் நாடி மோசம்போனதைப்போல நீங்களும்போய் விடாதிருக்க உங்களை அவைகளிலிருந்து விலக்கி பாதுகாத்துக் கொள்ளுங்கள். இஸ்ரவேலர் இப்படிப்பட்டவைகளை நாடியபடியால்; கர்த்தர் ஒரு எச்சரிப்பை அவர்களுக்கு கொடுத்தார்.

"நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன்; என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை; அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை என்றார்" (எசே.8:18). அவர்களுடைய நான்குவிதமான அருவருப்பு கர்த்தருக்கு எரிச்சலை மூட்டியது. அன்பானவர்களே, கர்த்தர் கிருபையுள்ள தேவன் மன்னிக்கிற தேவன். எப்பொழுது என்றால் அருவருப்பானவைகளை நம்மை விட்டு முற்றிலும் அகற்றிப் போடும்போது. அதைச் செய்வீர்களா? இன்றே செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு இரக்கம் செய்வார்.

**கேள்வி நேரம்**

**இஸ்ரவேலர்கள் அந்நிய தேவர்களை அகற்றினார்களா?**

ஆம், அவர்கள் யோசுவாவின் நாட்களில் அந்நிய தேவர்களை அவர்களை விட்டு அகற்றிப்போட்டார்கள் என்று யோசுவா 24:23,24 வசனங்களில் படிக்கிறோம். "அப்பொழுது அவன்: அப்படியானால், இப்பொழுதும் உங்கள் நடுவே இருக்கிற அந்நியதேவர்களை அகற்றிவிட்டு, உங்கள் இருதயத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு நேராகத் திருப்புங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் யோசுவாவை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம் என்றார்கள்."

இவ்விதமான மனந்திரும்புதலை தேவன் எதிர்பார்க்கிறார். இன்றே நீங்களும் உங்களிடம் உள்ள வீணானா விக்கிரகங்களை அகற்றிப்போட்டு கர்த்தருக்கு நேராக உங்களுடைய இருதயத்தை திருப்புங்கள். வானமும் பூமியும் கர்த்தருடையவைகள் கர்த்தரால் உண்டாக்கப்பட்டவைகள். அவைகளை மனிதனுக்காக கர்த்தர் சிருஷ்டித்தார். நித்தியமானவரிடம் நாம் செல்லும்போது நாம் பார்க்கிற வானமும் பூமியும் அவைகளில் உண்டாக்கப்பட்ட



யாவும் ஒருநாளில் அழிந்துபோகும். ஆகையால் அழிந்துபோகும் இவைகளின் மீது உங்களுடைய கவனத்தை செலுத்தி, அவைகளை நம்பி மோசம்போய்விடாதிருங்கள். கர்த்தரையும் கர்த்தருடைய உபதேசத்தையும் கைக்கொள்ளுங்கள். அவைகள் உங்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும். கர்த்தர்தாமே உங்களை விக்கிரகங்களிலிருந்து காத்து இரட்சிப்பாராக! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 41. அப்போஸ்தலர்களை மாதிரியாக பின்தொடருங்கள்

## Follow Apostolic Example

கிறிஸ்துவானவர் தம்முடைய மாதிரிக்குப்பின்பதாக அப்போஸ்தலர்களை நமக்கு மாதிரியாக கொடுத்திருக்கிறார். இதை அப்போஸ்தலர்கள் நமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் இதைக்குறித்து படிக்கிறோம். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்" (பிலி.4:9). சபையை உருவாக்குவதற்கும், உபதேசங்களை போதிப்பதற்கும், ஜனங்களை கர்த்தருக்கு நேராக வழிநடத்துவதற்கும் வேதாகமம் பல மாதிரிகளை நமக்கு காண்பிக்கிறது. அதில் அப்போஸ்தலர்களின் மாதிரி மிகவும் முக்கியமானதாகயிருக்கிறது.

அப்போஸ்தல நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர் இதற்கு காரணம் என்ன? அங்கே பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டனர். அவர்கள் வசனத்தை கேள்விப்பட்டபடியால் உடனே அதற்கு கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டனர். இதையே பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்லுகிறார். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? எதைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று நீங்கள் சிந்தித்ததுண்டா? சமாதானத்தின் தேவன் நம்மோடிருக்க அப்போஸ்தலர்களுடைய மாதிரியை நாம் பின்பற்றவேண்டும்.

மேலும், யோவான் குறிப்பிடும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து

உங்களுக்கு அறிவிக்கிறோம்'' என்றார்கள் (1யோவா.1:1). அவர்கள் தங்களுடைய சொந்தக்கருத்துக்களை சொல்லவில்லை, நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தை அதாவது உயிருள்ள வார்த்தைகளை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்றார்கள்.

இன்றைக்கு அந்த வார்த்தைக்கு எத்தனைபேர் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆண்டவரும் நான் என் சுயமாய் ஒன்றும் சொல்லுகிற தில்லை பிதாவானவர் எனக்கு சொன்னவைகளையே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். ஆண்டவர் இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டவை களையே அப்போஸ்தலர்கள் நமக்குச் சொல்லுகிறார்கள். நாமும் அவர்கள் நமக்குச் சொன்னவைகளையே மற்றவர்களுக்கும் சொல்லவேண்டும். இதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் பவுல் சொல்லும்போது; ''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' என்கிறார் (1கொரி.1:11).

இங்கே பவுல் கிறிஸ்துவை தன் சரீரத்தில் தரித்துக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவராயிருந்தார். ஆகையால் நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோல என்று சொல்லுகிறார். இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறி முழுவதும் கிறிஸ்துவை விட்டு பிரிந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். முதல் நூற்றாண்டில் உருவான சபையை இன்று பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஒரு விளையாட்டுப்போட்டியை எடுத்தக்கொள்ளுங்கள் அது அப்படியே தொடர்கிறது. அதில் நவீன வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது ஆனால் அந்தப்போட்டியினுடைய விதிகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஏன் சபைகள் மட்டும் வேதாகமத்தையும், அப்போஸ்தலர்களால் முன் சொல்லப்பட்ட வசனங்களையும் விட்டு விட்டு மனிதகோட்பாடுகளுக்கும், மனித பாரம்பரியங்களுக்கும் திரும்புகின்றனர். இது மிகவும் வேதனை அளிக்கும் செய்தியாக இருக்கிறது. சில முதல் நூற்றாண்டு சபைகள் மிகுந்த உபத்திரவத்திலும் அப்போஸ்தலர்களை மாதிரியாக கொண்டும் செயல்பட்டுள்ளது.

தெசலோனிக்கேய சபை அதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ''நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி'' என பவுல் எழுதுகிறார் (1தெச.1:6). சோதனை வந்தவுடன் அநேகர் பின்மாற்றமாகி போய்விடுவார்கள் ஆனால் தெசலோனிக்கேயர் இந்த விஷயத்தில் அப்போஸ்தலர்களையும் கர்த்தரையும்



பின்பற்றுகிறதில் உபத்திரவக்காலத்திலும் சோர்ந்துபோகாமல் பின்பற்றியிருக்கிறார்கள்.

ஆகையால், அப்போஸ்தலர்களையும் அவர்களுடைய மாதிரியையும் பின்பற்றுகிறதில்; ''நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக'' (பிலி.3;17). நாம் அறியாத காலங்களில் வழிதவறிபோக வாய்ப்புகள் உண்டு. ஆனால் நாம் தேர்ச்சியடைந்த அளவு வசனத்தின்படி நம்மை மாற்றியமைத்துக்கொண்டு தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நமக்குள் இருக்கவேண்டும். அவர் எப்பொழுதும் தேவனுடையசித்தத்தை நிறைவேற்றுகிறவராக இருந்தார். நமக்குள்ளாக அந்தவிதமான சிந்தை அவசியம் இருக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் அநேக சபைக்கு மாதிரியாக இருந்தனர். ஆனால் அவர்கள் வேறு அப்போஸ்தலர்களை உருவாக்கவில்லை. இன்றைக்கு அப்போஸ்தலர்களை மாதிரியாக நோக்குகிறோம் என்று சொல்லி அப்போஸ்தல பட்டங்களை உருவாக்குகிறார்கள். அநேக சபைகளில் அப்போஸ்தலர்களை ஏற்படுத்துகிறார்கள். யூதா என்ற அப்போஸ்தலனுக்கு பதிலாக மத்தியா என்பவர் சீட்டுபோட்டு தேர்வு செய்யப்பட்டார். இதைக்குறித்து அப்போஸ்தல நடபடிகள் முதலாம் அதிகாரத்தில் படிக்கிறோம். இந்த மத்தியா என்பவன் இயேசுவின் நாட்களில் உயிரோடிருந்த சீஷர்களில் ஒருவன். யோவான்ஸ்நானகன் நாட்கள் முதல் இயேசுவின் உயிர்த்தெழுதல்வரை இருந்தவர்களில் ஒருவன். ஆகையால் இவனை தேர்ந்தெடுத்தார்கள். இயேசுவுக்கும் அவருடைய நாட்களும் சம்பந்தமில்லாத ஒருவரை அவர்கள் அப்போஸ்தலர்களாக தெரிந்துகொள்ளவில்லை. இன்றைக்கு தேர்வு செய்யப்படும் அப்போஸ்தலர்கள் இயேசுவின் நாட்களில் இருந்தவர்களா? இல்லையே, அப்படியானால் அவர்கள் அப்போஸ்தலர்களா?

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் இதைக்குறித்து வேதாகமும் எச்சரிக்கிறது. ''ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுதும் கண்ணீரோடும் சொல்லுகிறேன்'' (பிலி.3:18). உபதேச சட்டத்தின்படி நடக்காதவர்கள் கபடமுள்ள வேலையாட்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மாற்றிப்போதிப்பதால் சிலுவையின் உபதேசத்திற்கு விரோதமாக செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களாலே சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இவர்கள் தங்களுடைய சொந்தக்கருத்துக்களையும் உபதேசங்களையும் ஜனங்களுக்குக்

கொடுக்கும்படியாக விரும்புகின்றனர். நாங்களும் வேதாகமத்தின்படிதான் ஞானஸ்நானம் கொடுக்கிறோம், சபை நடத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டே போவார்கள் ஆனால் சொல்லப்பட்டிருக்கிற வேதாகமத்தின்படி சபையை நடத்தமாட்டார்கள். உபதேசிக்கமாட்டார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. "ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்" (அப்.5:36,37). இப்படி முதல் நூற்றாண்டில் இயேசுவைப்போல ஒரு திரளான ஜனங்களை இழுக்க வேண்டும் என்று தங்களுடைய சுயகருத்துக்களை எடுத்துச்சொல்லி அநேகர் வசப்படுத்த நினைத்தனர். ஆனால் அந்த மார்க்கங்கள் எல்லாம் பொறாமையினாலும், தற்புகழ்ச்சியினாலும் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகள் அழிந்துபோயின.

இன்றைக்கும் அநேக மார்க்கங்கள் தோன்றிக்கொண்டிருக்கிறது. தோன்றிய பல மார்க்கங்கள் அழிந்துகொண்டும் இருக்கிறது. ஆனால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் என்றும் நிலைத்திருக்கும் மார்க்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் மெய்யாகவே இரட்சிக்கப்படுகிறார்கள். சந்தோஷத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தினவராலே பெற்றுக் கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் இன்றைய தினம்வரை அதைப்பெற்றுக் கொள்ளாமல் தண்ணீரற்ற மேகங்களைப்போல சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

"கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9). இவ்வளவு தெளிவாக வசனம் சொல்லப்பட்டிருக்கும்போது, தங்களை கிறிஸ்துவின் உபதேசத்தில் இனைத்துக்கொள்ளாமல், வேறுவிதமாக சிந்திக்கவும் செயல்படவும் விரும்புகின்றனர்.

இப்படிப்பட்ட உபதேசத்தை உங்கள் வீடுகளில் ஒருவன் கொண்டுவராமல் இருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளக்கூடாது எனவும் எச்சரிக்கப்படுகிறோம். இன்றைக்கு ஓநாய்களைப்போல உள்ளவர்கள் ஆட்டுத்தோலை



போர்த்திக்கொண்டு மந்தைகளுக்குள்ளாக உலா வருகின்றனர். இவைகளை ஆடுகள் ஏமாந்துபோய் தன்னைப்போன்ற ஆடுகள் என்று நினைத்துவிடுகிறது. ஆகையால் வசனம் அவர்களைக்குறித்து எச்சரிக்கிறது. இவர்கள் ஒருவகையில் பிசாசின் கருவிகளாக இருக்கிறார்கள். இவர்களுக்காக அவியாத அக்கினிவைக்கப்பட்டுள்ளதாக வேதம் சொல்லுகிறது. ஆகையால் இச்செய்தியை வாசிக்கும தேவஜனமே, அப்போஸ்தலர்களால் முன் சொல்லப்பட்ட உபதேச சத்தியத்தை ஒருவன் உங்கள் மத்தியில் கொண்டுவராமலிருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளாதிருங்கள். "நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்" (கலா.5:10). ஆகையால் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்துகொள்ளுங்கள்.

உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விடை காண புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தை நாடுங்கள். அதில் ஆதி அப்போஸ்தலர்கள் எப்படி நடந்துகொண்டார்கள். சபைகளில் ஏற்படும் பிரச்சனைகளை எப்படி சரி செய்தார்கள். வேதாகமத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்களை எப்படி வசனத்தைக் கொண்டு அவர்களை மேற்கொண்டார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். குறிப்பாக அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் ஆதி சபையின் செயல்பாடுகளை நமக்கு பட்டியலிட்டுக்காட்டுகிறது. அது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்கிறது. ஆகையால் உங்களுடைய கவனத்தை அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் செலுத்துங்கள். யூதா என்ற தாசன் எழுதின பொதுவான நிருபத்தில்; "நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள். கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர் களுமாமே" யூதா 17-19 என நினைப்பூட்டுகிறார். ஆகையால் இவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**கேள்வி நேரம்**

**முதல் நூற்றாண்டு சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்களா?**

ஆம், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும்

உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என அப்போஸ்தலநடபடிகள் 2:42-ம் வசனத்தில் படிக்கிறோம். இயேசுவானவர் பரமேறியவுடன் எருசலேமிலே மூவாயிரம் அங்கத்தினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சபை இந்த உபதேசத்தை பின்பற்றியதற்கான ஆதார வசனம் நமக்கு இருக்கிறது. அந்த சபை இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அது கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்ட சபை. அதுதான் ''கிறிஸ்துவின் சபை''. இந்த சபையை நீங்கள் அடைளாம் கண்டுகொள்ள வேதாகமத்திற்குச் செல்லவேண்டும்.

உலகமெங்கிலும் இச்சபையானது இருக்கிறது, இவர்கள் புதிய ஏற்பாட்டில் யோவான்4:24-ல் குறிப்பாக கர்த்தர் சொன்னபடி தொழுகையை செய்கிறார்கள். இந்த தொழுகை வேதவசனத்தின்படியான தொழுகை. இதை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார். இதையே ஆதி அப்போஸ்தலர்கள் செய்தார்கள். நாமும் இப்படியே செய்யவேண்டும் என வேதம் எதிர்பார்க்கிறது. இதன்படி செயல்படாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும். ஆகையால் முதல் நூற்றாண்டு சபையாரைப்போல கவனமாக செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 42. சிறுமையானவன்
## The Poor

**வே**தம் சொல்லுகிறது; ''உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாந்தீர்த்து, சிறுமையும் எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்'' என்று (நீதி.31:9). இன்றைக்கு எத்தனைபேர் இந்த விதமாக சிறுமையானவர்களுக்கு இரக்கம் செய்து நீதியாய் நியாயந்தீர்க்கிறார்கள்? முடிந்தவரை சிறுமையானவர்களை உபத்திரவப்படுத்துகிறதை தான் நாம் காண்கிறோம். ஒரு சிறு விவசாயி இருந்தால் அவனிடத்தில் இருக்கிற அந்த கொஞ்ச நிலத்தையும் எடுத்துக்கொள்ளும்படியாகவே பெரிய விவசாயி எண்ணுகிறான். இப்படியிருந்தால் சிறுவிவசாயி எப்பொழுது முன்னேறுவது? இப்படியே சிறுமையானவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் இருக்கிறதையும் எடுத்துக்கொள்ளும்படியாக முயற்சிக்கிறார்கள்.

வேதம் அப்படிப்பட்டவர்களை நேசிக்கவேண்டும், அவர்களுக்கு உதவிடவேண்டும், அவர்களுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என போதிக்கிறது. யோசேப்பு சொல்லுகிறான்; ''நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளைவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்'' (ஆதி.41:52). யோசேப்பு பெரிய குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் அவனுடைய சகோதரர்களாலே தூக்கி இஸ்மவேலரிடம்



விற்கப்பட்டவன். அடிமையாய் விற்கப்பட்டவன். எகிப்தின் அதிபதியானான். அவனோடு அவனுடைய தேவனாகிய கர்த்தர் இருந்தார். அப்படி தனிமையில் இருந்த அவன் எகிப்திலே திருமணமாகி அவனுக்கு பிள்ளைகள் பிறக்கும்போது அவனுடைய சிறுமையை எண்ணிப்பார்த்து தன் இளைய மகனுக்கு எப்பிராயீம் என்று பேரிடுகிறான். சிறுமையானவனுக்கு நியாயஞ்செய்ய வேண்டும் என்று சொன்ன கர்த்தர் யோசேப்பின் சிறுமையை எண்ணிப்பார்த்தார்.

சங்கீதக்காரன் பாடும்போது; ''எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார்'' என்ற சங்.107:41-ன்படி யோசேப்பின் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நான் சிறுமைப்பட்டு இருக்கிறேன் என்று கலங்குகிறீர்களா? கவலைப்படாதிருங்கள். யோசேப்பை பெலப்படுத்திய கர்த்தர் உங்களையும் உங்கள் சிறுமையினின்று மீட்டு இரட்சிப்பார்.

யோசியா என்ற ராஜா தன்னுடைய இராஜ்யபாரத்தில் ''அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே.22:16). புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவனை அறிகிற அறிவிலும், கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவிலும் வளருங்கள் என்று நிருபங்களில் வாசிக்கிறோம். ஆவியானவர் இந்த வசனங்களை எழுதும்படியாக ஆதி சீஷர்களை ஏவினதின் காரணம் என்ன? நம்மை உண்டாக்கின தேவனையும், அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசுவையும் அறிந்துகொள்வதே நித்திய ஜீவன். அவரை அறிகிற அறிவில் வளரும்போது இந்த விதமான சிந்தை நமக்குள் ஏற்படும்.

தேவனுக்குப் பிடித்தமான உபவாசங்களும், அவருக்கு செலுத்தும் காணிக்கைகளும் தள்ளுண்டவர்களை சேர்த்துக்கொள்ளுவதும், சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்து அவர்களுக்கு உதவிடுவதுமே தேவனுக்கு பிடித்தமானவைகளாக இருக்கிறது. அவர் தமக்கு யாதொன்று தேவையானதுபோல மனிதர்களுடைய கைகளில் பணிவிடைகொள்ளுகிற தேவன் நம்முடைய தேவன் அல்ல. இதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். இதை அறிந்த யோசியா ராஜா சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான். ஆகையல் சுகமாய் வாழ்ந்தான். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஜனங்கள் சுபிட்சமாக வாழ்ந்தார்கள். இதை நீங்களும் செய்து தேவனை

அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். மற்றபடி நீங்கள் கர்த்தருக்காக கணக்கில்லா காணிக்கைகளைக் கொடுத்தாலும் அது அவரை அறிகிற அறிவுக்கு நிகராகாது.

எளிமை என்று பார்க்கும்போது; தன்னைத்தான் தாழ்த்துவது எளிமையை குறிக்கிறதாக இருக்கிறது. அநேகர் தங்களை தாழ்த்துவதில்லை எப்பொழுதும் உயர்வாகவே தங்களை எண்ணிக்கொள்ள விரும்புகின்றனர். "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று இயேசு சொல்லுகிறார் (லூக்.14:11). இந்த வசனத்தின்படியாக தன்னைத்தான் தாழ்த்துகிறவர்கள் உயர்த்தப்படுவதை நாம் அறிகிறோம். மரியாள் என்ற ஸ்திரீயின் மூலமாக இயேசுபிறந்தார். அநேகருக்கு கிடைக்காத பாக்கியம் இந்த மரியாளுக்குக் கிடைத்தது. இதற்கு காரணம் என்ன? அவள் மற்ற சகோதரிகளைப் பார்க்கிலும் மேலான ஒரு பெண்ணா? இல்லையே. அவள் சொல்லும்போது; "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று சொல்வதை நாம் லூக்.1:48-ல் படிக்கிறோம். ஆம், அவள் பாக்கியவதி என்று அழைக்கப்பட்டாள். தாழ்த்துகிறவர்கள் தேவனால் உயர்த்தப்படுவதை நாம் அறிகிறோம். அதைப்போல கானானிய ஸ்திரீயைப்பற்றி படிக்கும்போது அவளுடைய தாழ்மையை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

இயேசுவை நோக்கி: "அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்" (மத்.15:27,28). கீழே விழும் துணிக்கைகளைத் தின்னும் நாய்க்குட்டிகளைப்போல தன்னை தாழ்த்தி அந்த ஆசீர்வாதத்தையாவது தாருங்கள் என்று தன்னை முழுவதுமாக தாழ்த்தும்போது ஆண்டவர் அவளைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார். தாழ்மை என்பது இருதயத்திலிருந்து வரவேண்டிய ஒன்று. முகஸ்துதி செய்வார்கள். பார்த்தால் ஒன்று பின்பு காணாதிருக்கும்போது வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுவார்கள். அப்படியிருந்தால் அது தாழ்மைக்கு அழகல்ல. இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் ஆராய்ந்து அறிகிற தேவன் நம் தேவன். அவருக்கு முன்பாக தாழ்மைப்படுவோரை அவர் உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கிறார்.

"கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" என



சங்.138:6 சொல்லுகிறது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் தாழ்மையுள்ளவராயிருக்கிறீரா? அல்லது எனக்கு நிகரானவர் யார் என்று சொல்லி மேட்டிமை கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் உயர்ந்தவரும் சகலத்தையும் உண்டாக்கினவருமாயிருக்கிறார். அவருடைய சமுகத்தில் தன்னை தாழ்த்துகிறவனை அவர் நோக்கிப்பார்க்கிறார். மேட்டிமையான வனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

நாம் கஷ்டத்தில் இருக்கும்போது நம்மை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். நமக்கு வசதிவாய்ப்புகள் வந்துவிட்டால், நண்பர்களும் உற்றார் உறவினர்களும் எங்கிருந்தாலும் தேடி வந்துவிடுவார்கள். ஆனால் நம்முடைய தேவன் அப்படிப்பட்டவரல்ல. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவர். ஆகையால் "நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" என்று சங்கீதக்காரன் பாடுகிறார் (சங்.136:23). ஆம், நாம் தாழ்ந்தநிலையில் இருக்கும்போது நம்மை யாரும் கண்டுகொள்ள வில்லை. ஆனால் நம்மை உண்டாக்கின கர்த்தர் கண்ணோக்கினார். இப்பொழுது நமக்கு இருக்கும் ஆசீர்வாதம் அவரால் உண்டானது. "இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்" (நியா.6:6).

சிறுமைப்படுத்தப்படும்போது அநேகர் கர்த்தரை தூஷிப்பார்கள் அல்லது எங்களை இந்தவிதமான சிறுமைக்கு தேவன் ஒப்புக்கொடுத்துவிட்டாரே என்று ஓலமிடுவார்கள். ஆனால் இங்கே இஸ்ரவேலர் அவ்விதமாக செய்யவில்லை; கர்த்தரை நோக்கி ஜெபித்தார்கள். அவர்களுடைய விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டு, அவர்களை இரட்சிக்க அவர்களில் ஒருவனாகிய கிதியோனை தெரிந்துகொண்டார். அவனோ, "ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" (நியா.6:15). எல்லா மனுஷனும் சொல்வதைப்போல இங்கே கிதியோனும் கர்த்தரை நோக்கிச் சொன்னான். நாம் சிலவேளைகளில் நம்முடைய சூழ்நிலையைப் பார்க்கிறோம். நம்மில் இருக்கிறவரை மறந்துபோய்விடுகிறோம்.

கிதியோனை கர்த்தர் சந்திக்கும்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அவன் களத்தில் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவைகளெல்லாம் எங்களுக்கு

நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுதும் கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

"அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன். ஒரே மனுஷனை முறியஅடிப்பதுபோல நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார்" (நியா.6:16). அந்தப்படியாக கிதியோன் என்று சொல்லக்கூடிய இந்த மனிதனைக்கொண்டு இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு தப்புவித்தார். ஒரே மனிதனைக்கொண்டு வெற்றிகொண்டார். மொத்தத்தில் வேதாகமம் முழுவதும் அவ்வப்போது ஒரே மனிதனைக்கொண்டே தேவன் பல காரியங்களைச் செய்துகொண்டுவருகிறார். யாக்கோபைக்கொண்டு தேவன் பெரிய காரியங்களை செய்தார். அவன் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டான்.

மோசேயை தேவன் தெரிந்துகொண்டு பார்வோனின் கைகளினின்று கர்த்தர் இஸ்ரவேல் மக்களை விடுவித்தார். அதன் பின்பு யோசுவாவை தேவன் தெரிந்துகொண்டார். பின்பு நியாயாதிபதிகளில் கிதியோன் போன்றவர்களை தெரிந்துகொண்டார். பின்பு தாவீது போன்ற அரசர்களை தேவன் தெரிந்துகொண்டு இஸ்ரவலேை வழிநடத்தினார். தீர்க்கதரிசிகளில் இறுதியாக யோவான்ஸ்நானகனை தெரிந்துகொண்டு கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி செய்தார். கடைசியா தம்முடைய ஒரே பேரான குமாரனை தெரிந்துகொண்டு அவர்கள் மூலம் உலக மக்கள் அனைவரையும் இரட்சித்துக்கொண்டு வருகிறார் என்பதை நாம் அறிகிறோம்.

ஒரே தேவன் ஒரே மனுஷனைக்கொண்டு இந்த உலகத்தில் அநேக சந்ததிகளை உண்டுபண்ணினார். அந்த ஒரே தேவன் கர்த்தராகிய இயேசு என்னும் ஒருவரைக்கொண்டு உலகத்தை இரட்சிக்கிறார். நீங்கள் இந்த உலகத்தில் சிறுமையானவர்களாக இருந்தாலும், எளிமையானவர்களாக இருந்தாலும் கவலைகொள்ளாமல் கர்த்தருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களுடைய சிறுமையை கண்ணோக்கிப்பார்ப்பார். உலகத்தில் நீங்கள் இருக்கும்வரை சிறுமையானவர்களை நேசியுங்கள். அவர்களுடைய நியாயத்தை விசாரித்து அவர்களுக்கு உங்களால் ஆன உதவிகளை செய்யுங்கள். அது தேவனுக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கிறது. இதை நீங்கள் செய்வீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.

**"... ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்;அதைப்பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது" நீதி. 24:14**



**கேள்வி நேரம்**

**ஆண்டவர் சிலரை கடினமாக வழிநடத்துகிறாரா?**

கர்த்தர் தாம் நேசிக்கிறவர்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார் என காண்கிறோம். எரேமியா என்ற தீர்க்கதரிசி சொல்லுகிறார்; "ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை" (எரே.3:1,31-33). சிலவேளைகளில் கஷ்டங்கள் வந்தவுடன் கர்த்தரை மறுதலிக்கிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். யோபு கஷ்டங்கள் வந்தவுடன் தன் மனைவிக்கு சொன்ன ஆலோசனை இவ்வளவு நாட்களாக நன்மைகளை அனுபவித்த நாம் தீமைகளையும் அனுபவிக்கவேண்டாமோ என கேட்கிறார். நல்லதே நடக்கவேண்டும் என்று எண்ணக்கூடாது. மேடு பள்ளம் இருந்தால்தான் காலத்திற்கு உதவும். தேவன் அப்படியே எல்லாவற்றையும் உண்டுபண்ணியுள்ளார்.

கோடைகாலமும் மாரிகாலமும் மாறி மாறி வருதுபோல நன்மை தீமைகள் நம்முடைய வாழ்வில் வரும்போது அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய கோபத்தினால் சிறுமையைக்கண்டவர் எரேமியா. அவர் சொல்லுகிறார் அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். இப்பொழுதும் முழுவதும் பாவத்தில் கிடக்கும் ஜனங்களை தம்முடைய குமாரன் மூலமாக இரட்சிக்கிறார் என அறிகிறோம். இரக்கங்களின் தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 43. இயேசுவுக்கு சீஷனாயிருக்க தகுதியற்றவர்கள் யார்?

## Who Is Not Eligible To Be as Disciples to Jesus

எல்லாவற்றிற்கும் ஒரு தகுதி அவசியமாக இருக்கிறது. தகுதியில்லாதவர்கள் நலமான காரியங்களை பெற்றுக்கொள்ள இயலாது. இயேசுவின் சீஷர்களாவதற்கு சில தகுதியாம்சங்கள் இருக்கவேண்டும் என இயேசுவானவர் போதித்தார். அது என்னவென்றால்; "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:26). ஒட்டுமொத்தத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரையும்

வெறுக்கச்சொல்லுகிறாரே என்ற தயக்கம் எல்லோருக்கும் ஏற்படும். இது இயல்பான ஒன்றுதான். ஆண்டவர் வெறுக்கச் சொல்லுவது அவர்களை முற்றிலுமாக பகைத்துவிடவேண்டும் என்ற அர்த்தத்தில் இங்கு சொல்லவில்லை. இந்த வசனத்தை அநேகர் தவறாக புரிந்துகொள்ளுகின்றனர். வெறுப்பது என்பது ஆண்டவரிலும் அதிகமாக அவர்களை நேசிக்கக்கூடாது என்பதுவே உண்மை. குடும்பத்தில் உள்ளவர்களை அதிகமாக நேசிக்கும் போது ஆண்டவருடைய கட்டளைகளை நாம் நிறைவேற்றுவது சிலவேளைகளில் கூடாது போய்விடும். எடுத்துக்காட்டாக சபையில் நீங்கள் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஞாயிற்றுகிழமை நீங்கள் சீக்கிரமே சபைகூடுகைக்கு செல்லவேண்டும் அதற்காக ஆயத்தமாகிக்கொண்டு இருக்கிறீர்கள் அப்பொழுது உங்கள் மீது அதிமான பாசம் கொண்ட உங்களுடைய இளைய மகன் ஒரு பொருளைக்கேட்டு அடம்பிடிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்களுடைய நேரம் வீணாகும் நீங்கள் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற இடத்துக்குப்போவது தாமதமாகும் ஒருவேளை இதனால் போகமுடியாமல் கூட போய்விடும். எனவே வெறுக்கச்சொல்லுகிறார். "அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்" (மத்.8:21,22).

இங்கே தன் தகப்பனை அடக்கம் பண்ணகேட்ட சீஷனைப்பார்த்து மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். இதனால் அவன் தன் தகப்பனை அடக்கம்பண்ணபோக வேண்டாம் என்று அர்த்தமல்ல. மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். ஆண்டவருடைய அழைப்பு எல்லாவற்றைக்காட்டிலும் மேலானது.

"அவர் அவ்விடம் விட்டுப்போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (மத்.4:21-22). பிறந்ததுமுதல் தன் தாய்தகப்பனை விட்டுப் பிரியாதவர்கள் இயேசுவின் அழைப்பை கேட்டவுடன் இருவருமே தாங்கள் வேலைசெய்து கொண்டு வந்த மீன்பிடி படவையும், தங்களுடைய தகப்பனையும் விட்டு இயேசுவின் பின்னே சென்றார்கள்.



யாக்கோபு, யோவானுடைய தகப்பனாகிய செபதேயுவிற்கு எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஆனால் தன்னுடைய பிள்ளைகள் இயேசுவின் பின்னே செல்வதை செபதேயு தடுக்கவில்லை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? ஆண்டவர் பின்னாலேதானே போகிறார்கள், நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள் என்ற மனநிறைவு அந்தப் பெற்றோருக்கு இருந்திருக்கும். இன்றைக்கு பிள்ளைகளை சபைக்கூட்டங்களுக்கு அனுப்பும் எத்தனை பெற்றோரைப் பார்க்கிறோம்.

கர்த்தருடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுங்கள் அப்பொழுது உங்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படும். இங்கே இயேசுவுக்கு சீஷர்களாயிருக்க யாக்கோபும் யோவானும் தகுதியுடையவர்களாக காணப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் கர்த்தர் சொன்னபடியாக குடும்பத்தை வெறுத்து அவர் பின்னே சென்றார்கள். தன் தகப்பனிடத்தில் கூட அவர்கள் அனுமதி கேட்டதாக வசனம் எங்கும் சொல்லவில்லை. அனுமதி கேட்டிருந்தால் என்னவாகும்? ஒன்று அவர்களுடைய தகப்பன் அனுமதித்திருக்கலாம் இல்லையென்றால் உன்னுடைய தாயை கேள் என்று சொல்லியிருக்கலாம் இல்லையென்றால் கொஞ்சம் வேலைகள் இருக்கிறது அதையெல்லாம் முடித்துவிட்டு பின்பு நீங்கள் இயேசுவின் பின்னே செல்லுங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் தேவனுடைய சித்தத்தின்படியாக ஒரு வார்த்தையும் சொல்லாமல் உடனே எல்லாவற்றையும் விட்டு இயேசுவின் பின்னே சென்றனர். இப்படிப்பட்ட தகுதி உங்களுக்கு இருக்கிறதா? என்பதை வசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

**இரண்டாவது** "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:27). சிலுவை என்று சொல்லும்போது அது பாடுகளைக்குறிக்கிறதாக இருக்கிறது. சிலுவையை கழுத்தில் எடுத்து மாட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தனக்கு வரக்கூடிய பாடுகளை சகிக்கமுடியாமல் விசுவாசத்தை விட்டு விலகியும், அவரை அநேக சூழ்நிலைகளில் மறுதலித்தும் போகிறார்கள். ஒருவன் இயேசுவை பின்தொடரும்போது அவனுக்கு அநேக பாடுகள் உண்டு. இவைகளை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றவேண்டும் என்றே இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுவை பின்பற்றினால் பாடுகள் வராது பிரச்சனைகள் வராது என்று சொல்லி யாரையும் அவர் ஏமாற்றவில்லை.

பவுலும் கூட அவருக்கு இருக்கும் போராட்டத்தைப் பற்றி கொலோசெயருக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம். கொலோ.2:1-ம் வசனம் "உங்களுக்காகவும் லாவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில்

என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன்". அப்போஸ்தலர்களில் குறிப்பாக பவுலை கர்த்தர் அதிகமாக எடுத்து ஊழியத்திலே பயன்படுத்தினார். இவர்களால் சுகமாக்கப்பட்டவர்கள் அநேகராயிருந்தனர். ஆனால் இவர்களுக்கு பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தது. "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் (ரோ.8:38-39). அந்த அளவு இயேசுவின் மீது அன்புள்ளவராயிருந்தார். அவர்மீது வைத்துள்ள அன்பை எந்த ஒரு அதிகாரங்களானாலும் பிரிக்கமுடியாது என்பது பவுலுடைய ஆணித்தரமான நம்பிக்கையாக இருந்தது.

உங்களுடைய அன்பும் நம்பிக்கையும் எத்தகையது? சின்ன சின்ன கஷ்டங்கள் வந்தவுடன் அநேகர் உங்களைப் பார்த்து கேட்கக்கூடும் உங்களுடைய ஆண்டவர் உங்களை கைவிட்டுவிட்டாரா? ஏன் இந்த கஷ்டங்கள் போராட்டங்கள் என்று கேட்கக்கூடும். நீங்கள் இப்படி கேட்கக்கூடியவர்ளுக்கு மத்தியில் சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவேண்டும். ஆகையால்தான் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அநேக பாடுகள் இருந்தது மரணபரியந்தமும் துன்பப்பட்டார். அநேகமுறை காவலிலும் மரண அடிகளிலும் அவதிப்பட்டார். இத்தனை பாடுகளையும் அநுபவித்து இன்று அநேகர் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ளும்படி அநேக நிருபங்களை எழுதியிருக்கிறார். நன்றாக இருக்கிற காலத்திலே நாம் சிலருக்கு கடிதங்கள்கூட எழுதமுடியவில்லை. ஆனால் பவுல் சிறைச்சாலையில் இருந்துகொண்டும் மற்றசகோதரர்களை எழுதச்சொல்லி, பாடுகளோடுகூட ஆவியானவருடைய உதவியோடு கடிதங்களை எழுதி அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறதை நாம் அறியமுடிகிறது. எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே இயேசுவை பாடுகளோடு பின்பற்றும் ஒரு சீஷனாயிரு. அப்பொழுது சீஷனுக்குரிய தகுதியை அவரால் பெற்றுக் கொள்ளுவாய்.

**மூன்றாவது,** "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:33). உலகத்தில் வாழ்கிறோம்.



உலகத்தில் உள்ளவைகள் நம்முடைய வாழ்க்கைக்கு தேவை அவைகளையெல்லாம் வெறுத்துவிட்டால் நாம் எப்படி வாழ்வது என்று நினைக்கிறீர்கள். இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும் முன்பு 1யோவான் 2:15-ம் வசனத்தை படித்துவிட்டு பின்பு இதனுடைய விளக்கத்தை அறிவோம். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை". ஆம், உலகத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் உலகத்தில் உள்ளவைகளில் அன்புகூராதிருக்கவேண்டும். எனவே தான்; என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்றார். நேசம் வேண்டும் இயேசுவுக்கு மேலாக எதையும் நாம் நேசித்துவிடக்கூடாது. அது நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்துவிடும். உலகத்தில் உள்ளவைகள் என்று சொல்லும்போது குடும்பம், பொருட்கள், நிலங்கள் இன்னும் இதுபோன்றவைகள் அடங்கும் இவைகளை ஒருவன் நேசிக்கும்போது பிதாவின் அன்பை இழக்கிறான். இவைகளை நமக்கு கொடுத்த தேவனுக்கு அவன் முதலாவது நன்றியுள்ளவனாயிருக்கவேண்டும். இதையே பிதாவாகிய தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆபிரகாமை தேவன் அழைக்கும்போது; "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரனூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் அவனுக்குச் பிள்ளையில்லாதிருக்கும்போது உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்" (அப்.7:3-5). ஆபிரகாம் உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் நேசிக்காதவனாயிருந்தபடியால் அவைகளை அவன் விட்டு விட்டு கர்த்தர் தமக்கு காண்பித்த தேசத்திற்கு விசுவாசத்துடனே சென்றான்.

உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்ற கட்டளையை அவன் பெற்றுக்கொள்ளாத காலத்திலும் அந்த கட்டளையின்படி நடந்து தன் தகப்பனை அடக்கம் பண்ணினான் என்று காண்கிறோம். ஆனால் தேவனுக்கு மேலாக ஆபிரகாம் தன் தகப்பனை நேசிக்கவில்லை. அப்படி அவர் நேசித்திருப்பாரேயானால், தகப்பனுடைய வழியில் ஒரு விக்கிரகாராதனைக் காரனாக இருந்திருப்பார். அவர் தேவனை நேசித்தபடியால் தகப்பனுடைய

வழியை தெரிந்துகொள்ளாமல் கர்த்தர் காட்டிய வழியில் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் புறம்பே தள்ளிவிட்டு காணாத தேசத்திற்கு கடந்துவந்தார் எனக் காண்கிறோம். நீங்களும் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு செலுத்தாமல் இயேசுவின் மீது அன்பு செலுத்துங்கள். அப்பொழுது அவருக்கு சீஷராயிருப்பீர்கள்.

**கேள்வி நேரம்**

**இயேசுவுக்கு சீஷர்களாயிருக்க தகுதியென்ன?**

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என்றார் (யோவா.8:31). இயேசுவுக்கு சீஷர்களாயிருப்பதற்கு ஒரே தகுதி அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கவேண்டும். அவருடைய உபதேசம் பாரமான ஒன்றல்ல. அவைகளின்படி ஒருவன் வாழமுடியும் என்பதற்கு ஆண்டவர் இயேசு நமக்கு முன் மாதிரியை முன்வைத்துச் சென்றுள்ளார். அந்த மாதிரியின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது நாம் இயேசுவுக்கு ஏற்ற சீஷர்களாயிருப்போம். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சீஷர்கள் இயேசுவின் போதனையின்படி வாழ்ந்தார்கள். அதைக்குறித்து ஜனங்களுக்கு போதித்தார்கள். அந்தப்போதனையின்படியாக சபையை உருவாக்கினார்கள்.

இதைக்குறித்து அப்போஸ்தலநடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இன்றைக்கு நீங்கள் அந்தப்படியாக நடந்துகொள்ளுகிறீர்களா? அப்படி நிலைத்திருக்கும்போது மெய்யாகவே அவருடைய சீஷர்களாயிருப்பீர்கள். இல்லையென்றால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். உங்களுடைய விசுவாசத்தை இயேசுவின் உபதேசத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள். நீங்களே உங்களுக்குத்தானே ஒரு உபதேசத்தை வளர்த்துக்கொண்டு செல்வீர்களானால், அது உங்களை கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரித்து விடும். ஆகையால் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி உங்களை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 44. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்
## The Chosen People

**மு**தலாவது ஆண்டவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்போது; "அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்.6:13). உலக மக்களை பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்து தம்முடைய நித்திய



வாசஸ்தலத்தில் சேர்க்கும்படியாகவும், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் இந்த அப்போஸ்தலர்களை முதலாவது தம்முடைய ராஜ்யத்தின் பணிக்காக தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பேரிட்டார் என காண்கிறோம். அதைத் தொடர்ந்து அநேகர் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். பேதுரு தமது நிருபத்தில் எழுதும்போது; "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது; கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது" என எழுதுகிறார் (1பேது.1:2).

இன்றைக்கு இவ்விதமாக தேவன் நம்மையும் தெரிந்துகொள்கிறார். அழைக்கப்பட்டவர்கள் அநேகர் ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்ற வாக்கியத்தின்படி கீழ்ப்படிதலுக்கும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படுவதற்கும் சிலரே ஒப்புக்கொடுக்கிறார்கள் அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பரதேசிகள் என வேதம் சொல்லுகிறது. மேலும், பைத்தியமுள்ளவர்கள் எனவும் சொல்லுகிறது. "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவை களைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1கொ.1:27).

ஆம், ஞானிகள் தங்களுடைய ஞானத்தை நம்பி மோசம்போகிறார்கள். தங்களுடைய ஞானத்திலே மேட்டிமை கொண்டு கர்த்தர் யார்? அவரை நாங்கள் விசுவாசிக்கவேண்டியதின் அவசியம் என்ன? போன்ற கேள்விகளை கேட்டு மோசம்போகிறார்கள். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுடைய பார்வையில் பைத்தியமாயிருக்கிறது என்பதை அவர்கள் அறியாது போகிறார்கள். ஆகையால் தேவன் தள்ளுண்டவர்களையும் பைத்தியமாக எண்ணப்படுகிறவர்களையும் தெரிந்துகொண்டு அவர்களை ஞானவான் களாக்குகிறார். அந்தப்படியாக கலிலேயரை தேவன் தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாக அவருடைய ராஜ்யம் கட்டப்படுவதை விரும்பினார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படியாகவே தேவன் இவ்விதமான மக்களைத் தெரிந்துகொண்டார்.

சபையில் உள்ள தெரிந்துகொள்ளப்பட்ட சகோதரிக்கு அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது; "தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்;

இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான். உங்கள் செய்கையின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என எழுதுகிறார் (2யோவா.2,7,8). அப்போஸ்தலர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எச்சரித்து புத்திசொல்லியிருக்கிறதை நாம் காண்கிறோம்.

ஏனெனில் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என வகைதேடிச்சுற்றித்திரிகிறான் என வேதத்தில் வாசிக்கிறோம். கொஞ்சகாலம் உண்டென பிசாசு அறிந்து கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தெரிந்துகொள்ளப்பட்டவர் களுக்குள்ளே செய்வான். ஆகையால் அவனுடைய வஞ்சகத்தை குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

பிசாசினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்: கள்ளக்கிறிஸ்துகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளுமாயிருக்கின்றனர்; "ஏனெனில் கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" என காண்கிறோம் (மாற்.13;22). இந்நாட்களிலும் இப்படிப்பட்டவர்களைக் காணமுடிகிறது. இயேசுவின் பெயராலே ஓநாய்கள் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறார்கள். இவர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வதாக சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இதனால் சத்தியத்தில் நிலைத்திருக்கிறவர்கள்கூட இவ்விதமான பொய்யான அடையாளங்களையும் அற்புதங்களையும் நம்பி ஏமாற்றப்பட்டுப்போகிறார்கள்.

கடைசி நாட்களிலே கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படியாக சாத்தான் இவ்விதமான கள்ளப்போதகர்களை எழுப்பிக் கொண்டு வருகிறான். இவர்களைக் குறித்தும், இப்படிப்பட்டவர்களுடைய உபதேசங்களை நம்பி மோசம்போகிறவர்களைக்குறித்தும் யூதா புத்தகத்தில் படிக்கிறோம்; "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்" (யூதா 11). மேலும் பேதுரு சொல்லும்போது; "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்"



என எச்சரிக்கிறார் (2பேது2:1). ஆதலால் நாம் செய்யவேண்டியது என்ன? "இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகிவிழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து"... என வாசிக்கிறோம் (2பேது.3:17). ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை விட்டுவிடாதபடி கள்ளப்போதகர்களைக்குறித்தும், கள்ளத்தீர்க்கதரிசிகளைக்குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருந்து அவர்களுடைய கொடிய வஞ்சகத்திலே நாம் இழுப்புண்டு போகாதபடிக்கு வசனத்தை உற்று நோக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய முடிவு எப்படிப்பட்ட தாயிருக்கும்? தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களை இரட்சிக்கும்படியாக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த திட்டத்தை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். "அவர் தம்முடைய தூதரை அனுப்பி; தாம் தெரிந்துகொண்டவர் களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்" (மாற்.13:27). ஒருவரும் விடுபட்டு போய்விடக்கூடாது என்பதற்காகவே வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமுள்ளவர்களை கூட்டிச்சேர்ப்பார் என காண்கிறோம். அப்பொழுது பல பாஷைகளைப் பேசுகிறவர்களும், பல நிறத்தவர்களும், பல நாட்டவர்களும் அவருடைய சமுகத்தில் சேர்க்கப்படுவார்கள்.

அந்த கூட்டத்தில் நாமும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருப்பது எவ்வளவு சந்தோஷத்தை கொண்டுவரும் என்பதை எண்ணிப்பாருங்கள். இப்பேர்பட்ட ஆசீர்வாதத்தை பெற தகுதியுடையவராக நீங்கள் இருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் உங்களை தகுதிப்படுத்திக்கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட உங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

மரித்தோரின் நிலை என்ன என்ற ஒரு கேள்வி உங்களுக்கு எழும்பும். "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:52). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்; மரித்தாலும் உயிரோடிருந்தாலும் அவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையில் அப்படியே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு கடந்து செல்லும். மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். லாசருவை எழுப்பும்போது அங்கே கூடியிருந்தவர்கள் நாறுமே நான்கு நாள் ஆகிவிட்டதே என்றார்கள். ஆனால் நடந்தது என்ன? லாசரு அழிவில்லாதவனாய் உயிரோடு

அப்படியே எழுப்பப்பட்டான். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் நாம் இதைக்குறித்து வாசிக்கும்போது; "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி.20:6). கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கிறவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரம் இல்லை; ஏனெனில் இவர்கள் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டவர்கள். ஆகையால் இவர்கள் இனி மரிப்பதில்லை, மரணம் அவர்களை ஆண்டுகொள்ளுவதுமில்லை. அவர்கள் தேவனுக்காக பூமியிலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றுமாக வாழுவார்கள். அவர்களுக்கு இனி மரணம் என்பதில்லை.

இயேசுவின் இரண்டாம் வருகையின்போது; என்ன நடக்குமென்றால்; "அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்பார் (மத்.25:34). நீங்கள் வலப்பக்கத்திலா அல்லது இடப்பக்கத்திலா? வலப்பக்கத்தில் உள்ளவர்களுக்கு தேவனால் உண்டாக்கப்பட்ட இடம் கிடைக்கும் அவர்களுக்காக தேவன் ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த ஆசீர்வாதம் உலகம் உண்டானது முதற்கொண்டு ஆயத்தம்பண்ணப்பட்ட இடம். உலகத்தில் உள்ள சிறப்பான கட்டிடங்களை கட்ட பல வருடங்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி பல வருடங்கள் கட்டப்பட்ட கட்டிடங்களை நாம் பார்க்கும்போது அப்படியே அசந்துபோய்விடுகிறோம். உலகம் உண்டானது முதற்கொண்ட நமக்காக தேவன் ஆயத்தம்பண்ணியிருக்கிற இடம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தையே சரிவர பார்க்காதவர்கள் கோடிக்கணக்கானோர் உண்டு. இந்த பூமியே இவ்வளவு அழகாக இருக்கும்போது; தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களுக்கு உண்டாக்கிவைத்திருக்கும் அந்த பரலோகம் எவ்வளவு அழகாகயிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது நாம் அதற்கு தகுதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியவர்



களாயிருக்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் அவரால் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட கர்த்தருடைய வேதத்தை வாசித்து, அந்த மெய்யான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுங்கள், தேவனுடைய பிள்ளையாக மாற பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை தெரிந்துகொள்ளுவார்.

**கேள்வி நேரம்**

**தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய வேலை என்ன?**

நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருக்கும்படியாக தேவன் நம்மை தெரிந்துகொள்ளவில்லை; வேதம் சொல்லுகிறது; "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:9). அவருடைய மகத்துவங்களை அறிவிக்கும்படியாக நாம் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாயிருக்கிறோம். தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்து, அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், சபைகள் எழும்பவும் வழிகளை ஏற்படுத்தினார்கள்.

அதைப் போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய உண்டு, அதற்காக நாம் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சந்ததியாகவும், ராஜாரீகமான ஆசாரியக்கூட்டமாகவும், அசுத்தமான உலகத்தில் பரிசுத்த ஜாதியாகவும், நாங்கள் அந்த கோத்திரத்தை சேர்ந்தவர்கள், நாங்கள் இந்த வகையராவைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய இந்த உலகத்தில் நாம் அவருக்குச் சொந்தமானவர்களாகவும் இருக்கிறோம். நீங்கள் தேவனுடைய வேலையை ஏதாவது ஒருவகையில் செய்து, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை நிரூபியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல்,**
**கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்"**
**எபேசியர் 6:8**

# 45. மரித்தோரை விட்டு எழுந்திரு

## Arise From the Dead

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு இதை நினைப்பூட்டி எழுதுகிறதை நாம் எபேசியர் 5:14-ம் வசனத்தில் படிக்கிறோம். "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்". ஆம், இன்று அநேகர் தங்களுடைய வாழ்க்கையில் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படியே தூக்கத்தை விரும்புவார்களானால் வாழ்க்கையில் அநேக ஆசீர்வாதங்களை இழந்து விடுவார்கள். தூங்குகிறவர்களைப் பார்த்தாலே நமக்கும் தூக்கம் வருவதுபோல் இருக்கும். ஆகையால் தூங்குகிற நீ மரித்தோரை விட்டு எழுந்திரு என்கிறார். மரித்தோர் என்று பார்க்கும்போது; ஆவியில் அநேகர் மரித்தோராயிருக்கிறார்கள். உயிருடன் இருந்தும் செத்தவர்களைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மரித்தோர். அவர்களை விட்டு எழுந்திருக்கவேண்டும். அப்படி எழுந்திருக்கும்போது கிறிஸ்துவானவர் நம்மை பிரகாசிக்கப்பண்ணுவார்.

ஆண்டவர் ஒருமுறை ஜெபிக்கும்படி வனாந்தரமான ஒரு தனிமையான இடத்திற்கு கடந்துசென்றார். அப்பொழுது அவருடைய சீஷர்களும் அவருடன் சென்றனர். அவர் அவர்களை நோக்கி: இங்கே என்னுடன் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார். அவர்களோ ஜெபத்தில் நிலைத்திராமல் நித்திரை செய்தனர். இதைப்பார்த்த கர்த்தர் நீங்கள் நித்திரை பண்ணுகிறது என்ன என்னோடே சேர்ந்து ஜெபத்திலே தரித்திருங்கள் என்று சொல்லி பின்பு தேவனை நோக்கி ஜெபித்தார். பின்பு சீஷர்களைக் கண்டபோது அவர்கள் மீண்டும் நித்திரை செய்கிறதைக் கண்டு; "நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்" (லூக்.22:46). அவர் எழுந்திருங்கள் என்று சொல்லும்போது அவர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

பல வேளைகளில் நாமும் இப்படி தூங்குகிறவர்களாக இருக்கிறோம். தூங்கவேண்டிய நேரங்களில் தூங்கியாக வேண்டும். அதே வேளையில் சதா தூங்குகிறவர்களாக இருக்கக்கூடாது. எலியா என்ற தேவனுடைய மனுஷனை அறிவீர்கள் அவன் சோர்ந்துபோய் வழியிலே தூங்க ஆரம்பித்தான். இதைக்கண்ட கர்த்தருடைய தூதன் "திரும்ப இரண்டாந்தரம் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்" (1இரா.19:7,8). இந்த எலியா கர்த்தருடைய தூதனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து எழுந்து புசித்து தூதன் சொன்னபடியே 40 பது நாள் இரவுபகலாக நடந்து போனான். எலியா தேவனுடைய சமுகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு அற்புதமான தீர்க்கதரிசி என்பதை நாம் அறிவோம். அநேக அற்புதங்களை செய்தவன். தேவன் அவனை எடுத்து வல்லமையாக பயன்படுத்தியிருக்கிறதை நாம் பழையஏற்பாட்டு புத்தகங்கள் வாயிலாக அறிகிறோம். இப்பேர்பட்ட ஒரு தீர்க்கதரிசியை எழுந்திரு புசி என்றவுடன் தூக்கத்தை விரும்பாமல் உடனே புசித்து பெலனடைந்து ஒரேப் மட்டும் நடந்து சென்றுஇருக்கிறதை நாம் படிக்கிறோம். அன்பானவர்களே, மூன்று மைல் சுற்றளவுள்ள நம்முடைய ஜனங்களுக்கு நாம் முதலாவது நற்செய்தி சொல்லியிருக்கிறோமா? என்பதை சற்று நீங்கள் சிந்தித்துப்பாருங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவோ சந்தர்பங்களை தேவன் கொடுக்கிறார். உங்களுடைய தேவைகளை சந்திக்கிறார். இருந்தபோதிலும் நீங்கள் கர்த்தருக்காக செய்தகாரியங்கள் என்ன? நீங்கள் ஒன்று செய்யுங்கள்; கர்த்தருக்காக விழித்திருந்து ஊழியம் செய்யுங்கள். "தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்" என்ற நீதி.20:13 வசனத்தின்படி கண்விழித்திருந்து ஜெபியுங்கள். அப்பொழுது எலியாவைப்போஷித்த கர்த்தர் உங்களையும் போஷித்து வழிநடத்துவார்.

இரண்டாவது அப்.பவுல்; மரித்தோரை விட்டு எழுந்திரு என்று எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். மரித்தோர் தங்களுடைய ஆவியில் மரித்ததோடல்லாமல் மற்றவர்களையும் ஆவியில் மரிக்கச் செய்திடுவார்கள். ஆகையால் அப்படிப்பட்டவர்களைவிட்டு நாம் எழுந்து புறப்படவேண்டும். மரித்தோர் எப்படி தேவனை துதிக்கமுடியாதோ, அப்படியே ஆவியில் மரித்தோரும் இருப்பார்கள். தம்மை பின்பற்றி வரக்கூடியவர்களுக்கு கர்த்தருடைய போதனையானது; "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்" (லூக்.9:60). இங்கே தன்னுடைய தாயையோ அல்லது தகப்பனையோ அடக்கம்பண்ண போகக்கூடாது என்று அவர் சொல்லவில்லை. மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார். தேவனுடைய ராஜ்யம் ஜீவனுள்ள ராஜ்யம், நித்திய ராஜ்யம், நிலையான ராஜ்யம். ஆவியில் மரித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் ராஜ்யம். ஆகையால் காலதாமதம் பண்ணாமல் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து

பிரசங்கிக்கும்படியாக இப்படிச்சொன்னார். "அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குள் பிழைத்திருக்கிறார்களே என்றார்" (லூக்.20:38). கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு வைக்கப்பட்டுள்ளது. அந்த வாழ்வை பெற்றுக்கொள்ள மரித்தோரை விட்டு எழுந்திரு. நலமான காரியங்களைக் காண நாம் அதிகாலையிலே எழுந்து புறப்படுகிறோம். சூரியன் உதயமாகும்போது எவ்வளவு அழகான காட்சிகளை நாம் பார்க்கமுடிகிறது. அந்த அற்புதமான காட்சிகளை நாம் நித்திரை செய்து கொண்டிருந்தால் பார்க்கமுடியுமா? முடியாதே.

அதைப்போல தேவன் ஏற்படுத்திவைத்திருக்கிறதான நித்திய வாழ்வை நாம் பெறவேண்டுமானால், இப்பூமியில் மரித்தோரை விட்டு எழுந்திருந்து ஆவிக்குரிய சகோதரர்களோடு சேர்ந்துகொண்டு, ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுத்து, கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு தொழுதுகொண்டு இடைவிடாமல் தேவனை நம்பிக்கொண்டிருக்கும்போது; கர்த்தரால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். நீங்கள் ஒரு ஆவிக்குரிய சபையில் அங்கம் வகிக்கின்றீர்களா? அந்த சபை கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட சபையா? அந்த சபை வேதாகமத்தை மையமாக வைத்துபோதிக்கிறதா?

மேற்கண்ட இரண்டு காரியங்களை நீங்கள் செய்யும்போது உங்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மை என்னவென்றால்; "கிறிஸ்து உங்களைப் பிரகாசிக்கப்பண்ணுவார்". நீங்கள் சத்தியத்திற்கு செவி சாய்க்கும்போது; கர்த்தர் உங்களை எடுத்துப் பயன்படுத்துவார். எலியா என்ற தேவ மனிதன் தேவ தூதனுடைய சத்தம் கேட்டு எழுந்திருந்து புசித்துப்படுத்துக்கொண்டாலும், மீண்டும் எழுப்பும்போது உடனே எழுந்து கீழ்ப்படிந்து கடந்துசென்றான். அதைப்போல உங்களுடைய வாழ்க்கையிலும் சோர்வுகள் வரலாம்; இருந்தபோதும் நீங்கள் எலியாவைப்போல செவி கொடுப்பீர்களானால் உங்களை கிறிஸ்து பிரகாசிக்கப்பண்ணுவார். அவர் நம்மை பிரகாசிக்கப்பண்ணும்போது; நமக்கு முன்பாக ஒருவரும் குறுக்கிட முடியாது. ஏனெனில்; யோவான் சொல்லுகிறார்; "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவா.1:9).

நீங்கள் உலகத்தால் கறைபடிந்தவர்களாகயிருக்கலாம் அல்லது எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டவராயிருக்கலாம். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். அவர் உங்களை பிரகாசிக்கப்பண்ணுவார். அவருக்கு எல்லோரும் வேண்டியவர்களே. வேண்டாதவர்கள் என்று எவரும் அவருக்கு இல்லை. பூமியிலே சிலர் சிலரை மட்டுமே நேசிப்பார்கள். ஆனால் கர்த்தர் உலகத்தில் உள்ள எல்லோரையும் அவர் நேசிக்கிறார். ஆகையால் உலகத்தின்



பாவத்தை போக்கும் பலியாக இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தினார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு உலகத்தில் உண்டாயிருக்கிறது. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு மனுஷனுக்கு இல்லை. ஆகையால் கிறிஸ்துவானவர் தம்மை தியாக பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்களை தேவன் வல்லமையாக எடுத்து அவருடைய ராஜ்யத்தின்பணியில் பயன்படுத்திக்கொண்டுவந்தார். பவுல் பர்னபா போன்றோர் கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்துக்கொண்டு வந்தவேளையில்; "பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்குரி என்றும் சொன்னார்கள்" (அப்.14:11,12). அவர்கள் இவர்களை இப்படி சொல்வதற்கு என்ன காரணமென்றால்; பவுலையும், பர்னபாவையும் பார்க்கும்போது அவர்களுக்கு யூப்பித்தரைப் போன்றும் மெர்க்கூரியைப்போன்றும் வெளிச்சமுள்ளவர்களாக அவர்களுக்கு முன்பாக பிரகாசித்தார்கள். கிறிஸ்து அவர்களைப் பிரகாசிக்கப்பண்ணினார் என்றே சொல்லவேண்டும்.

ஆம், அன்பானவர்களே, நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் மரித்தோரை விட்டு எழுந்திருக்கும்போது கர்த்தர் உங்களையும் இந்தவிதமாக எடுத்துப் பயன்படுத்துவார். உங்களைப் பார்க்கிறவர்கள் உங்களோடு கர்த்தர் இருக்கிறதை கண்டு ஆச்சரியப்படுவார்கள். உலகத்தோடு ஒத்துப்போகிற வாழ்க்கையை நீங்கள் செய்வீர்களானால் உங்களுடைய ஜீவியம் அவர்களுக்கு வெளிப்படும். நீங்களும் அவர்களைப்போலவே காணப்படுவீர்கள். கிறிஸ்துஇயேசுவில் இருந்த சிந்தை உங்களில் இருக்கும்போது; உங்களோடு கர்த்தருடைய ஆவியானவர் தங்கியிருப்பார். நீங்கள் தேவனுடைய வீடாகவும், மாளிகையாவும், பரிசுத்த மணவாட்டியாகவும் அநேகருக்குக் காணப்படுவீர்கள்.

இன்றைய நாள்செய்திவேளையில் மூன்று காரியங்களை அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையாருக்கு எழுதிய கடிதத்திலிருந்து தியானித்தோம். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிறப்பு முதல் மரணம் வரை கணக்கிட்டுப்பார்த்தால் மூன்றில் ஒரு பகுதியை தூக்கிங் கழித்திருப்போம். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை என படிக்கிறோம். அவரால் உண்டாக்கப்பட்ட நாம் தூங்கி

நாட்களை விரயம் செய்யாமல். நமக்குக் கிடைக்கக்கூடிய இந்த பொன்னான நேரத்தை விழித்திருந்து கர்த்தரோடு இசைந்திருந்து ஒன்றையே சிந்தித்து அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவோம். இளைப்பாறுகிற காலம் இனி நமக்கு வருகிறதாக இருக்கிறது. அங்கு எப்போதும் நாம் அவரோடு கூட நித்திய நித்தியமாக இளைப்பாறப்போகிறோம்.

ஆகையால், எலியாவைப்போன்றும் பவுல் மற்றும் பர்னபாவைப் போன்றும் கர்த்தருடைய சத்தம் கேட்டு அதற்கு செவி கொடுத்து கர்த்தருடைய ஊழியத்தை செய்ய உங்களை முழுவதும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது கிறிஸ்து உங்களை எடுத்து தம்முடைய ராஜ்யத்தின்பணியில் பயன்படுத்துவார். நீங்கள் பிரகாசமுள்ள வாழ்வை அவரில் நீங்கள் பெற்றிட முடியும். இந்த அறிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் வாழ்வதும் வீழ்வதும் உங்களுடைய கைகளில் இருக்கிறது.

**கேள்வி நேரம்**

**மரித்தோரை விட்டு எழுந்திருக்கும் போது கர்த்தர் கொடுக்கும் வேறு ஆசீர்வாதங்கள் உண்டா?**

ஆம், கணக்கில்லா ஆசீர்வாதங்கள் உண்டு. உலகத்தில் வெற்றியடையக்கூடியவர்களுக்கு கோடிக்கணக்கான மதிப்புள்ள பொருட்களை பரிசாக வழங்கும்போது, தம்முடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்கிறவர்களுக்கு தேவன் பரிசுகளை கொடுக்காமல் இருப்பாரா? கண்டிப்பாக கொடுப்பார். உலகம் கொடுக்கிற பரிசுகளை அத்தோடு ஒப்பிட முடியாது. அது அவ்வளவு சிறப்பான பரிசாக இருக்கும். பூமியில் அப்படிப்பட்ட பொருள் ஒன்றுமில்லை. "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது" (வெளி.2:26-29).

இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமுள்ள கிறிஸ்தவராயிருக்கிறீர்களா? ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த ஆசீர்வாதங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினால் பிரகாசிக்கப்பட்டவர்களுக்கு இந்த ஆசீர்வாதங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளைப் பெற்று தேவனோடு நித்திய நித்தியமாக வாழ மரித்தோரை விட்டு எழுந்திருந்து தேவனுடைய சித்தம் செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்களுடைய



குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். உங்களுக்கு ஆவிக்குரிய புத்தகங்கள் தேவைப்பட்டால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் நாங்கள் உங்களுக்கு புத்தகங்களை அனுப்பிக்கொடுக்க ஆவலாக உள்ளோம்.

## 46. இயேசு சுயமாய்ப் பேசவில்லை

## Jesus Has Not Spoken of the Own Authority

இன்றைக்கு தங்களுடைய சொந்தக்கருத்துக்களை ஜனங்கள் மத்தியில் திணிக்கிறவர்களைப் பார்க்கிறோம். ஆனால் முழுஅதிகாரத்தையும் பெற்ற ஆண்டவர் இயேசு, தான் சுயமாய் ஒன்றும் பேசவில்லை என்கிறார். "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்" (யோவா. 12:49). ஒருவரிடம் ஒரு காரியத்தை சொன்னால் அந்த காரியத்தை அப்படியே மற்றவர்களிடம் சொல்லமாட்டார்கள் ஏதாவது சிலவற்றை கூட்டியோ அல்லது குறைத்தோ சொல்லுவார்கள். ஆனால் தேவனிடத்திலிருந்து வந்த இயேசுவானவர் பிதா என்ன சொன்னாரோ அதை அப்படியே ஜனங்களுக்கு உபதேசித்தார். அவர் சுயமாய் ஒரு காரியத்தையும் சொல்லவுமில்லை, செய்யவுமில்லை.

பிதாவை எல்லாவகையிலும் இயேசுவானவர் கனப்படுத்தினார். மேலும் அவர் சொல்லும்போது; "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" என்றார் (யோவா.7:16,17).

ஆம், அன்பானவர்களே கிறிஸ்துவானவர் போதித்த உபதேசம் தேவனுடைய உபதேசமாக இருந்தது. அவர் சுயமாக ஒன்றும் பேசாமல் பிதாவானவரிடம் தான் பெற்றுக்கொண்டதையே பேசினார். ஆகையால் இந்த வசனத்தை கேட்டு அவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.5:24).

தேவனுடைய உபதேசம் எல்லோரையும் இரட்சிக்கும்படியான உபதேசம். ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று தேவன்

நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆகையால் ஒருவன் அவருடைய வசனத்தை கேட்டு விசுவாசித்து மனந்திரும்பும்போது அவன் இரட்சிப்பின் வழியே வழிநடத்தப்படுகிறான். இதைக் கர்த்தர் சொல்லும்போது அவன் மரணத்தை விட்டு விலகி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன் என்கிறார். அவர் திரும்ப திரும்ப மெய்யாகவே, மெய்யாகவே என்று வலியுறுத்தி சொல்வதன் காரணம் என்னவென்றால்; அந்த ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டு என்பதை அழுத்தமாக சொல்லுகிறார். இந்த நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? அப்படியானால் தொடர்ந்து தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள்.

சுயமாய்பேசுகிறவன் சுயமகிமையைத் தேடுகிறான் என வேதம் போதிக்கிறது. "சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மை யுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை" என்கிறார் (யோவா.7:18). சுயமகிமை என்று பார்க்கும்போது; தன்னைக்குறித்து மற்றவர்கள் புகழவேண்டும், தன்னுடைய கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டு அதைப் பின்தொடரவேண்டும் என நினைக்கக்கூடியவர்கள். இப்படி எண்ணக்கூடியவர்கள் இருந்தபடியாலே புதிய ஏற்பாட்டு சபையில் பிரிவு ஏற்பட்டது. தேவன் ஒருபோதும் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்.

தன்னை அனுப்பினவரை உயர்த்தவேண்டும் என்று நினைக்கிறவன் அவருடைய மகிமையை தேடுகிறான் அவனிடத்தில் அநீதியில்லை என காண்கிறோம். இயேசுவானவர் பிதாவை மகிமைப்படுத்தினார். பிதாவினிடத்தில் சகலத்தையும் கேட்டு பெற்றுக்கொண்டார். அவர் தாம் சுயமாய் ஒன்றும் செய்யவில்லை. தன்னை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கும்போதுகூட பிதாவே என் ஆவியை உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி ஒப்புக்கொடுத்தார். அவர் ஒரே சபையை ஏற்படுத்தினார். அது பிதாவுக்கு மகிமையைக் கொண்டுவந்தது. ஆனால் இயேசுவுக்குப்பின் அநேகர் தங்களுடைய சொந்தக்கருத்துக்களை ஜனங்களிடத்தில் சொல்லி சுயமகிமையை தேட ஆரம்பித்தனர்.

அவர்களில் ஒருவனாகிய தெயுதாஸ் என்பவனைக்குறித்து படிக்கிறோம். "தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்" என அப்.5:36-ம் வசனத்தில் படிக்கிறோம். முதல் நூற்றாண்டில் இந்தவிதமான பிரிவினை வாதிகள் எழும்பி பிரிவினை மார்க்கங்களை உருவாக்கினர். அதில் ஒரு சிலர்



சேர்ந்துகொண்டு அவர்கள் இருக்கும்வரை அந்த மார்க்கத்தை நம்பி மோசம்போனார்கள். இன்றைக்கும் இந்தவிதமான பிரிவினை வாதிகள் எழும்பி அநேகரை வஞ்சித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை நம்பி அநேகர் மனிதனுடைய உபதேசங்களுக்குச் செவிகொடுத்து ஏமாற்றப்பட்டுப்போய்க் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய உபதேசத்தை மாற்றாமல் அப்படியே நமக்குக் கொடுத்தவர் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அந்த "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" என்கிறார் (2யோவா.9,10).

அநேகர் கிறிஸ்துவின் நாமத்தினாலே வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாக கடந்துசெல்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை கொண்டுவருகிறார்களா என்பதை நாம் வசனத்தைக் கொண்டு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள் என்று சொல்லப்பட்டபடி வருவார்கள். அவர்களை அடையாளம் கண்டு கொண்டு அப்படிப்பட்டவர்களை உங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமலும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என எச்சரிக்கப்படுகிறோம்.

தேவனுடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறது என காண்கிறோம். ஆம், கர்த்தர் சொல்லும்போது; அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்" (யோவா.12:50). ஏட்டு சுரக்காய் கறிக்காகுமா? என்று சொல்லப்படும் பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கே அது நித்தியஜீவனாயிருக்கிறது என்கிறார்.

ஆம், விசுவாசிக்கிற நமக்கு அது நித்திய ஜீவனைக்கொடுக்கும். விசுவாசிக்கிறவர்கள் இந்த நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். விசுவாசியாதவர்களோ ஆக்கினைக்குள்ளாக தள்ளப்படுவார்கள். இதை விசுவாசியாத ஐசுவரியவான் பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது ஆபிரகாம் மடியிலே உட்கார்ந்திருந்த கொடிய தரித்திரமுடையவனாய் வாழ்ந்து மரித்த லாசருவை பார்த்தான். தேவனுடைய கட்டளையை ஏற்று விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதற்கு இச்சம்பவம்

ஆதாரமாயிருக்கிறது. கர்த்தர் பிதாவானவர் கொடுத்த கட்டளையை அப்படியே ஜனங்களுக்குப் போதித்தார். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். அந்த கட்டளையை நீங்கள் எவ்வாறு கைக்கொள்ளுகிறீர்கள், மற்றவர்களுக்கு அவைகளைக்குறித்து எவ்விதமாக போதிக்கிறீர்கள்? அது நித்திய ஜீவனை ஒருமனிதனுக்கு கொடுக்கக் கூடியது. ஆகையால் அவைகளை அப்படியே போதிக்கும்படியாக நாம் முயற்சிக்கவேண்டும். அதை மாற்றிப்போதிப்பதோ, அல்லது குறைத்துப் போதிப்பதோ கொடிய தண்டனையை நமக்கு ஏற்படுத்தும். ஆகையால் கர்த்தராகிய இயேசுவானவர் போதித்ததைப்போல தேவனுடைய வார்த்தைகளை மாற்றாமல் மற்றவர்களுக்கு போதிப்போம்.

மேலும், "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்கிறார் (யோவா.6:63). விதைக்கு எப்படி ஜீவன் இருக்கிறதோ, அதைப்போல வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இதை ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அவன் ஜீவனுள்ள மனிதனாகவும், ஆவிக்குரிய மனிதானாகவும் மாற்றப்படுகிறான். ஆனால் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மாம்சம் ஒன்றுக்கும் உதவாது என வேதம் போதிக்கிறது. ஆனால் இந்த மாம்சத்தை பேணுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை அழகுபடுத்தும்படியாக ஒவ்வொருநாளும் அதற்காக எடுத்துக்கொள்ளும் நேரம் அதிகமாக இருக்கிறது. தங்களுடைய ஆத்துமாவைக்குறித்தும், நாம் மரித்தபின் என்ன செய்யப்போகிறோம்? என்பதைக்குறித்தும் சிந்திப்பார் மிக குறைவாகவே உள்ளனர். கர்த்தருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இந்த வசனங்கள் ஒரு மனிதனை உயிர்ப்பிக்கும். ஆகையால் பேதுரு; இயேசுவை நோக்கி சொல்லும்போது; "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்றான் (யோவா. 6:68,69).

உங்களுடைய விசுவாசம் இப்படிப்பட்டதாக இருக்கிறதா? பேதுருவும் அவருடைய சீஷர்களும் கர்த்தரை நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அவரிடத்தில் நித்திய ஜீவவசனங்கள் இருந்தது. பணமிருந்தால் அநேகர் ஒட்டிக்கொள்ளுவார்கள். ஏனென்றால்; அவனிடத்தில் பணம் இருக்கிறது ஒன்றுக்கும் கவலையில்லை தேவைப்படும்போது உதவுவான் என்று சொல்லி அவனை ஒட்டிக்கொள்ளுவார்கள். ஆனால் இயேசுவிடம் பணமோ பொருளோ



இல்லை. ஆனாலும் இயேசுவின் சீஷர்கள் அவரை ஒட்டிக்கொண்டிருந்தனர். காரணம் அவரிடத்தில் யாரிடமும் இல்லாத தேவனுடைய வசனம், ஜீவனுள்ள வசனம் இருந்தது. அது ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனைக்கொடுக்கும் வசனமாயிருந்தது. உலக சம்பத்துக்கள் உலகத்தோடு அழிந்துபோய்விடும். ஆனால் வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், கர்த்தருடைய வசனம் ஒருக்காலும் ஒழிந்துபோகாது என்ற அசையாத நம்பிக்கையுடையவர்களாக ஆண்டவருடைய சீஷர்கள் இருந்தார்கள். ஆகையாலே யாரிடத்திலே போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்திலே உண்டே என்றார்கள்.

ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே இயேசுவிடம் தேவனுடைய மெய்யான உபதேசம் இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவிகொடுங்கள். அது உங்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும். உலகத்திலே சுயமாய் ஏற்படுத்தப்பட்ட சுயகோட்பாடுகளைக் கொண்டுள்ள மார்க்கங்களை நம்பி மோசம்போய்விடாதிருக்க தேவனுடைய உன்னதமான உபதேசத்திற்கு திரும்புங்கள். அந்த உபதேசம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து மனிதர்களால் பின்பற்றப்பட்டுக்கொண்டு வருகிறது. அதை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருக்கிறது. அந்த குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்தவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு நீங்களும் சேர்ந்துகொண்டு உங்களுடைய ஆவி ஆத்துமா இரட்சிக்கப்பட உங்களை கர்த்தருடைய வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**நான் ஏன் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவிகொடுக்கவேண்டும்?**

கிறிஸ்துவானவர் பூமிக்கு அப்பாற்பட்டவர், தேவனுடைய குமாரன், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர், ஆதியிலே தேவனோடிருந்தவர், சகலமும் அவர் மூலமாகவே உண்டானது. நம் முற்பிதாக்களை வழிநடத்திக்கொண்டு வந்த சகல தீர்க்கதரிசிகளும் பூமியிலிருந்து உண்டானவர்கள். யோவான்ஸ்நானகனுக்குப்பின்பு இறுதியாக தேவன் தம்முடைய குமாரனைத் தெரிந்துகொண்டார். ஆகையால் இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று திருவுளம்பற்றினார்.

ஆகையால் அவருக்குச் செவிகொடுக்கவேண்டும். மேலும், "உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர்

எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்" என யோவா.3;31,32 வசனங்களில் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட உன்னதமானவர் உன்னதத்திலிருந்து வந்திருக்கும்போது அவருடைய வசனங்களுக்கு நாம் செவிகொடுக்கவேண்டியது அவசியமல்லவா? அவர் பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தும்படியாக அவருடைய கட்டளைகளை அப்படியே நமக்கு கொடுத்தார். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாக அறிவிக்கிறார். அவைகளை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 47. அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுகிறதில்லை

## He Does Not Forsaketh His Saints

**மோ**சே தன்னுடைய காலம் முடியும் தருவாயில் யோசுவா என்ற தாசனை நோக்கி சொல்லும்போது; "கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்" (உபா.31:8). 40 வருடங்களாக வனாந்தர பயணத்தில் வந்த யோசுவாவுக்கு இந்த வார்த்தைகள் அவனை இன்னும் கொஞ்சம் உற்சாகப்படுத்தியிருக்கும். மோசேக்கு அடுத்தபடியாக தேவனுடைய ஜனங்களை வழிநடத்தும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவன் இந்த யோசுவா. ஆகையால் மோசே அவனை அழைத்து இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க அவனை நோக்கி இவ்விதமாகச் சொன்னார். ஒருவேளை அவன் 40 வருட காலமாக மோசேயின் பின்னே சென்றவனாக இருந்தான். மோசேயின் காலம் முடியப்போகிற நேரம் வந்தது. ஆகையால் அவனைப் பெலப்படுத்தும்படியாக கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர் அவர் உன்னோடே இருப்பார் என்று மோசே அவனை உற்சாகப்படுத்தினான். புதிய பொறுப்பை கொடுத்தவுடன் சிலருக்கு கலக்கம் ஏற்படும் எப்படி வழிநடத்தப்போகிறோம்? என்ன செய்யபோகிறோம்? யார் நமக்கு உதவியாயிருப்பார் என்ற கேள்விகள் மனதுக்குள் ஏற்படும். இதற்கெல்லாம் விடையாக அமைந்தது மோசேயின் வார்த்தைகள்.

தேவன் தமக்கு முன்பாக செல்லும்போது கலக்கம் ஏன்? கவலை ஏன்? பயம் ஏன்? ஆகையால் அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றார். நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாக இருப்பீர்களானால் இவ்வார்த்தைகள் உங்களுக்கும் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. அன்று யோசுவாவை



வழிநடத்தின கர்த்தர் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார். அப்போஸ்தலர்களை கர்த்தர் இறுதி கட்டளை கொடுத்து அனுப்பும்போது "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களோடுகூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:20). இது அப்போஸ்தலர்களுக்கு பெலத்தைக் கொடுத்தது. அதைப்போல நமக்கும் இவ்வசனம் பெலத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

மேலும், நாம் வாசிக்கிறோம்; "உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்" (உபா.4:31). இஸ்ரவேலின் தேவன் வாக்குமாறாதவர். ஆகையால் இஸ்ரவேலரை அதிகமாக நேசித்தார். பல முறை அவர்களை மன்னித்து தான் முற்பிதாக்களுக்கு ஆணையிட்ட வாக்கின்படியாக அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாக கொடுத்தார். "கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்" என சங்.37:28-ல் வாசிக்கிறபடி அவர் தமது பரிசுத்தவான்களை கைவிடாத தேவனாயிருக்கிறார். இஸ்ரவேலரை அழைத்த தேவன் அவர்களுடைய தேவைகளை சந்தித்து அற்புதவிதமாக வனாந்தரத்தில் நடத்திக்கொண்டுவந்தார்.

எட்டு வயதில் ராஜாவான யோசியாவைக்குறித்து 2இராஜா.22:2-ம் வசனத்தில் படிக்கிறோம். "அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்". இன்றைக்கும் நம்மால் அவ்விதமாக நடக்கமுடியும். சிறுபிள்ளைகளை அந்தவிதமாக வழிநடத்துங்கள். அவர்கள் முதிர்வயதிலும் அவைகளை விட்டுவிடாதிருப்பார்கள். இந்த யோசியாவுக்கு எட்டுவயதில் என்ன தெரியும் என்று அநேகர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அவனைக்குறித்து அவன் தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான் என்று வேதம் சொல்லுகிறது அப்படியானால் தாவீதைப்போல கர்த்தருக்குப்பிரியமாய் நடந்திருக்கிறான். ஆகையால் இவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

மற்ற ராஜாக்களைப் பார்க்கிலும் அதிகநாட்கள் ராஜ்யபாரம் செய்தான். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடு இருந்து அவனுடைய கைபிரயாசத்தை ஆசீர்வதித்தார். இன்றைக்கு நாமும் அவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட நம்முடைய முற்பிதாக்கள் எப்படி பக்திவைராக்கியத்தோடு வாழ்ந்தார்களோ அந்தப்படியாக தேவனுக்குப் பிரியமாக வாழும்போது;

அவர்களோடு இருந்து அவர்களை வழிநடத்தின கர்த்தர் நமக்கு முன்பாக இருந்து, நம்மையும் வழிநடத்துவார்.

நாம் அவரை விட்டு விலகும்போது என்ன சம்பவிக்கும். "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்களை தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப் படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோம.1:21-24).

மேலும், "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோ.1;28). தேவன் மனிதனை மிக அழகானவனாக இந்த பூமியை ஆண்டு கொள்ளும்படியாக அவனைப் படைத்தார். அவனோ, அநேக உபாய தந்திரங்களை தேடிக்கொண்டு தேவனைவிட்டு வீணானவைகளைப் பின்பற்றி வீணராய்ப் போய்விட்டான். "தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருப்பான்" என்ற நீதி.27:8-ன்படி நடந்தது. அன்பானவர்களே, நம்மை உண்டாக்கினவரை மறந்து அவரை விட்டு விலகும்போது அநேக ஆசீர்வாதங்களை நாம் இழக்கநேரிடும். தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற ஒரு குருவியைப்போலவே இருப்போம்.

உங்களுடைய நிலைமை எப்படிப்பட்டதாயிருக்கிறது? உன் தேவனைப் பற்றிக்கொண்டிரு கர்த்தர் காரியங்களை வாய்க்கச்செய்வார். அவர்மேல் இருக்கும் நம்பிக்கையை விட்டுவிடாதே! "வழியை விட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான்" என வேதம் எச்சரிக்கிறது (நீதி.15:10). இஸ்ரவேலர் பலமுறை எச்சரித்தும் கீழ்ப்படியாமல் போனார்கள் அதினால் அநேகருடைய சவங்கள் வனாந்தரத்திலே விழுந்தது. எஸ்றா என்ற தேவமனிதன் ஜனங்களை காக்க உபவாசம் கூறினான். அதை ஏற்றுக்கொண்டவர்கள் அந்த உபவாசத்தில் கலந்துகொண்டார்கள். இதை ஏற்க மறுத்தவர்கள், அவரை விட்டு விலகினவர்கள் மேல் அவருடைய கோபம் இருந்ததாக எஸ்றா சொல்லுகிறார்.



"எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருந்ததென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார்மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்" என்கிறார் (எஸ்றா8:22). கர்த்தரை விட்டு விலகுகிற யாவர்மேலும் கர்த்தருடைய கோபம் இருக்கிறது. அவர்கள் அழிவின் பாத்திரமாக இருக்கிறார்கள்.

தேவனை விட்டு விலகி எங்கே போகிறார்கள் என்றால் வீணான விக்கிரகங்களை நாடும்படியாக போகிறார்கள். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும் அவைகள் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட பொருளாயிருக்கிறதென்றும் மனதார அறியாமலிருக்கிறார்கள். அந்தப்படியாக; "அவர்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டி, தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொண்ட அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும் நான் என் நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாகக்கூறுவேன்" என்றார் (எரே.1:16).

தேவன் விக்கிரகஆராதனை செய்கிறவர்களை தண்டியாமல் விடார். அவருடைய நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி சொல்லும்போது; "நீ உன் பிதாக்களோடே படுத்துக்கொள்ளப்போகிறாய்; இந்த ஜனங்கள் எழும்பி, தாங்கள் போயிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, என்னைவிட்டு, தங்களுடனே நான் பண்ணின உடன்படிக்கையை மீறுவார்கள். அந்நாளிலே நான் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களைக் கைவிட்டு, என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அதினால் அவர்கள் பட்சிக்கப்படும்படிக்கு அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்; அந்நாளிலே அவர்கள்; எங்கள் தேவன் நடுவே இராததினாலே அல்லவா இந்தத் தீங்குகள் எங்களைத் தொடர்ந்தது என்பார்கள்" (உபா.31:16,17).

தேவன் தம்முடைய ஜனங்களை நேசித்து நல்ல வழிநடத்துனர்களை அவர்களுக்குக் கொடுத்தார். அந்த வழிநடத்துனர்கள் மரித்தபின்பு தாங்கள் விட்டுவிட்ட அந்த வீணான அல்லது அந்த தேசத்தின் ஜனங்களுடைய வீணான தேவர்களை நாட ஆரம்பித்தனர். இது இஸ்ரவேலின் தொடர்ந்த தொற்றுவியாதியைப்போன்ற ஒரு பாவமாக இருந்தது. இன்றைக்கும் கூட வழிநடத்துனர்கள் இல்லாவிட்டால் மந்தை சிதறடிக்கப்படுகிறது. அது வேதனைக்குரிய ஒரு விஷயமாகவே இருக்கிறது. தேவனுடைய அன்பையும் அவருடைய வழிநடத்துதல்களையும் பார்க்கும்போது; அவர் எவ்வளவாய் தம்முடைய ஜனத்தை நேசித்து அவர்களை தம்முடைய அற்புதமான

கரத்தினால் வழிநடத்திக்கொண்டு வந்திருக்கிறார் எனக் காணமுடிகிறது. இப்படிப்பட்ட ஜீவனுள்ள தேவனை மறந்தவர்களை தேவன் ஒருபோதும் மன்னிக்கமாட்டார். அவர் தமது பரிசுத்தவான்களை காப்பாற்றுகிறார். அவருடைய சமுகம் அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக செல்கிறது. மோசேயோடும் யோசுவாவோடும் அவருடைய அற்புத கரம் இருந்தது. இஸ்ரவேலரை அவர்கள் இருக்கும் நாட்களில் அற்புதமாக வழிநடத்திக்கொண்டுவந்தார்கள். இன்றைக்கும் அந்தவிதமான தேவனுடைய ஊழியக்காரர்கள் மந்தைக்கு மாதிரியாக இருந்துகொண்டு செயல்படுகிறார்கள். அவர்களோடு கர்த்தருடைய கரம் இருக்கிறது. அவர்கள் வேதாகமத்தை வைத்துக்கொண்டு மந்தையை சரிசெய்துகொண்டு வழிநடத்துகிறார்கள். அப்படிப்பட்ட பரிசுத்தவான்களை கர்த்தர் கைவிடுகிறதில்லை.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பரிசுத்தவானாக இருக்கின்றீர்களா? அப்படியிருப்பீர்களானால், பிதாவாகிய தேவன் உங்களோடு இருப்பார். மோசேயோடும் யோசுவாவோடும் இருந்த கர்த்தர் உங்களோடும் இருந்து உங்களை வழிநடத்துவார். அவர் உங்களோடு இருக்கும்போது நீங்கள் பயப்படவேண்டியதில்லை. அவரை விட்டு விலகாமலிருக்க நீங்கள் வேதத்தை நேசியுங்கள். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள். அவருக்குப் பிரியமாயிருக்க நாடுங்கள். உங்களில் இருக்கும் வீணான பாவத்தையும், பாவத்தை தூண்டுகிற காரியங்களையும் உங்களை விட்டு களைந்துபோடுங்கள். பாவத்தோடு கர்த்தரைப் பின்பற்ற முடியாது. உங்களை சுத்தவானாக காத்துக்கொள்ளும்போது பரிசுத்தமுள்ள கர்த்தர் உங்களோடு இருப்பார்.

**கேள்வி நேரம்**

**கர்த்தருடைய வழியை விட்டு விலகுகிறவர்கள் மனந்திரும்பும்போது அவர்களை கர்த்தர் மன்னிப்பாரா?**

கட்டாயம் மன்னிப்பார். "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" (ஏசா.55:7). தேவன் மன்னிப்பதற்கு கிருபை பொருந்தின தேவனாயிருக்கிறார். அவர் ஆதிமுதலாக மனிதனை மன்னித்துக்கொண்டே வருகிறார். மனந்திரும்புகிறவர்கள் அவரிடம் மன்னிப்பைப்பெற்று இரட்சிக்கப்படுகிறார்கள். மனந்திரும்பாமற்போன வணங்கா கழுத்துள்ளவர்கள் மாண்டுபோனார்கள்



என்று பார்க்கிறோம். ஒவ்வொரு நாளும் தம்முயை ஜனங்கள் மனந்திரும்பவேண்டும் என்று தேவன் எதிர்பார்த்துக்கொண்டே நாட்களை கூட்டி வழங்கிக்கொண்டு வருகிறார். அதினாலே வானமும் பூமியும் இன்றும் நிலைத்திருக்கிறது. இல்லையென்றால் என்றோ சோதோம் கோமோராவைப் போல அழிந்துபோயிருக்கும். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என்று நம்மில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என காண்கிறோம்.

இன்றே உங்களுக்கு ஒரு மனந்திரும்பக்கூடிய வாய்ப்பை தேவன் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். இன்றே இரட்சணிய நாள் இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுங்கள். அப்பொழுது உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்திலே எழுதப்படும். மேலும், கர்த்தருக்கு சாட்சியாக வாழுங்கள். அப்பொழுது இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப் படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 48. முப்புரிநூல்

## A Threefold Cord

"ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (பிர.4;12). ஆம், முப்புரிநூல் ஒரே நோக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அதை ஒரே காரியத்திற்குப் பயன்படுத்தும்போது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட அந்த நூல் பயன்படுத்தக்கூடிய காரியத்திற்கு உதவியாக இருக்கும். அது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறபடியால் வசனம் சொல்லுகிறபடி சீக்கிரமாய் அறாது. அதைப்போல மூவர் ஒருமனப்பட்டிருக்கும்போது அந்த ஒன்றுமையை யாராலும் பிரிக்கமுடியாது. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" நம்முடைய ஆண்டவர் இயேசு (மத்.18:20).

இயேசு என்ற நாமத்திலே முப்புரிநூலைப்போல எவர்கள் கூடுகிறார்களோ அங்கே கர்த்தர் இருப்பார். அவர்களுடைய நோக்கம் ஆசீர்வதிக்கப்படும். கணவன் மனைவி இருவரும் கர்த்தருடைய நாமத்தினாலே இணைக்கப்படுகிறார்கள். பின்பு முப்புரிநூலைப்போல பிள்ளைகள் வருகிறார்கள். அந்த குடும்பம் ஒரே காரியத்தை செய்து கர்த்தருக்குச் சாட்சியாக வாழுகிறார்கள். அதைப்போல மூன்று சக்கர சைக்கிளைப்பாருங்கள் யாருடைய உதவியுமின்றி நிறுத்தப்படும். இருவர்

அல்லது மூவர் ஒருமனப்பட்டு இருந்தால் பெரியகாரியங்களைச் செய்யலாம். ஒரு டிரஸ்ட் அமைப்பதற்கு கூட மூவர் அவசியமாயிருக்கிறது. தேவன் முதலாவது குடும்பத்தை ஏதேன் தோட்டத்தில் இப்படியே ஏற்படுத்தினார். மூவர் ஒருமனப்பட்டிருக்கும்போது பிதாவாகிய தேவன் நம்மில் அன்பாயிருப்பார் என காண்கிறோம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" (யோவா.14;23). குமாரனும் தேவனும் நம்மில் வாசம்பண்ண நாம் இயேசுவில் அன்பாயிருந்து அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளவேண்டும். ஆகையால் நாம் இயேசுவின் நாமத்தில் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் சொல்லுகிறார்; "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்கிறார் (பிலி.4:13). நம்மைப்பெலப்படுத்துகிறவரும் அவரே சிலவேளைகளில் நாம் சோர்ந்துபோகிறோம். அச்சமயத்தில் நம்மை பெலப்படுத்துகிறார். முப்புரிநூல் என்று சொல்லும்போது அதில் பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் இருக்கவேண்டும் அத்துடன் ஆவியானவரும் இருக்கவேண்டும். அப்பொழுது நாம் முழுபெலத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். தேவனுடைய ஆவியில்லாமல் நாம் ஒன்றையும் செய்யவோ சாதிக்கவோ முடியாது. அவருடைய ஆலோசனைக்கு நாம் முதலிடம் கொடுக்கவேண்டும்.

இயேசுவானவர் ஜெபிக்கும்போது; "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்.22:42-44).

இயேசுவை ஒரு தேவதூதன் பலப்படுத்தினான் என்று பார்க்கிறோம். அந்த அளவு அவர் மிகவும் வியாகுலத்தோடும், வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழும் அளவிற்கு அவர் பிதாவை நோக்கி ஜெபித்தார். ஆண்டவரே அவ்விதமாக ஜெபித்திருக்கும்போது நாம் எந்த அளவு ஜெபிக்கவேண்டும். ஆவிக்குரிய குடும்பத்தில் நிலைத்து அவரோடு ஐக்கியப்பட்டு ஜெபிக்கவேண்டும். அப்படி ஜெபிக்கும்போது தேவன் நம்மையும் பெலப்படுத்தி அந்த ஜெபத்திற்கு பதில் கொடுப்பார்.



ஜெபத்தில் ஒருமனம் இருக்கவேண்டும். ஆதி அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் "ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார்கள்" என அப்.2:46-ம் வசனத்தில் படிக்கிறோம். ஒருமனதோடு ஜெபிக்கும் ஜெபத்திற்கு வல்லமையுண்டு, அதை தேவன் ஏற்றுக்கொள்ளுவார். மேலும் அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும்போது; "அவர்கள் அதைக்கேட்டு ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு; கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" என்றார்கள் (அப்.4:24). ஒருமனம் உயர்வைக்கொண்டுவரும். தேவனை அறிகிற அறிவுக்கு நேரே நம்மை வழிநடத்தும்.

உங்களுடைய சபைகளிலும் குடும்பத்திலும் ஒருமனதோடு இருக்க முயற்சியுங்கள். அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும். ஆண்டவர் ஜெபிக்கும்போதுகூட; "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார் (யோவா.17:21). இந்த ஜெபத்தைக் கவனித்தீர்களா? இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள். இந்த ஒன்றுமை எல்லா இடங்களிலும் வரவேண்டும் இதுவே இயேசுவின் ஜெபமாயிருந்தது. நீங்கள் ஒற்றுமைக்காக ஜெபிக்கிறீர்களா? பிரிவினையை ஏற்படுத்தும் தீயவர்களை கடிந்துகொள்ளுகிறீர்களா? நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கவும் ஒருமனப்பாட்டிலே தேறினவர்களாயிருக்கவும் ஆண்டவர் விரும்புகிறார். முப்புரிநூலைப்போல இருந்து ஒரே காரியத்தைப் பேசவும் செய்யவும் முற்படவேண்டும். அதைச் செய்வீர்களா? அப்படிச் செய்யும்போது தேவனால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். இஸ்ரவேலின் ராஜ்யங்கள் பிரிந்தது அதை தேவன் விரும்பவில்லை. மனிதர்கள் பிரித்தார்கள். அதைப்போல பிரிவினைவாதிகள் சபையைப் பிரிக்கிறார்கள். ஆனால் தேவன் பிரிவினையை விரும்பவில்லை எல்லோரும் ஒன்றாயிருக்கும்படியே விரும்புகிறார். ஆகையால் ஒரே பரலோகத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். பிரிவினை செய்கிறவர்கள் அதில் பிரவேசிக்கமுடியாது. பிரிவினையை பிசாசு ஏற்படுத்துகிறான் அவன் ஆதிமுதலாக மனிதனுக்குள் பிரிவினையை உண்டாக்குகிறான்.

பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்கிறார் (1கொரி.1:10). பிரிவினைகளை முதல் நூற்றாண்டிலே அப்போஸ்தலர்கள் கடிந்துகொண்டிருக்கிறதை நாம் காண்கிறோம். தேவன் கலகத்திற்கு தேவன் அல்ல. நாம் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படியே தேவன் விரும்புகிறார். சபையாக கூடுகிறவர்கள் ஒரே காரியத்தைப் பேசவேண்டும், ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டும். இதில் குறைய காணப்படுவோமென்றால் அதை சரிசெய்து கெள்ள சகோதர சிநேகத்திலே ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒருமனத்திற்கு மாதிரியாக நாம் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்களை கவனிக்கவேண்டும். "(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறாகள் பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" என வேதம் தெளிவாகபோதிக்கிறது (1யோவா.5:7,8). இவர்களைப்போல நாமும் ஒன்றாயிருக்கவும் ஒரே காரியத்தை பேசவும் தியானிக்கவும் இருக்கும்போது முப்புரிநூலைப்போல இருப்போம்.

ஆண்டவர் தனித்திருக்கும்படி கடந்து செல்லும்போது; அவர் சில சீஷர்களை அழைத்துக்கொண்டு போனார். "ஆறுநாளைக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி மலையின்மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்" (மத்.17:1-3).

இங்கே தனித்திருக்கும்படி சென்றார் ஆனால் நடந்தது என்ன? அவர் மோசேயோடும் எலியாவோடும் பேசுகிறதை சீஷர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர் எதைக்குறித்து பேசினார் தன்னுடைய மரணத்தைக்குறித்து அவர்களோடு பேசினார். மோசேயும் எலியாவும் பழையஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் என்றே சொல்லவேண்டும். இருவருமே மிகப்பெரிய வழிநடத்துனர்கள். இவர்களோடு ஆலோசனை செய்து இருக்கிறார் என்றால் அது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? நாம் ஒரு ஆலோசனை கேட்க அந்நியர்களை நாடுகிறோம். நம்முடைய சகோதரர்கள் இருக்கும்போது நாம் ஏன் அந்நியர்களை நாடவேண்டும். ஒருமனம் என்பது இங்கே வெளிப்படுகிறது. ஒரே குடும்பத்தில் உள்ள ஆவிக்குரிய சகோதரர்கள்



இருக்கும்போது அவர்களோடு பேசும்போது அது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். மோசேயும் எலியாவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய மனிதர்கள் ஆகையால் அவர்களோடு பேசினார். அதுமாத்திரமல்ல இவர்கள் நிஜத்தை நோக்கிப்பார்த்தவர்கள். ஆனால் நிழலில் வழிநடத்தப்பட்டார்கள்.

ஒன்று பட்டு தேவனுடைய சித்தத்தை நாம் நிறைவேற்றவேண்டும். இயேசு சொல்கிறார்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்றார் (மத்.7:21). அநேகர் இப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டவரை கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லி கூப்பிடுகிறார்கள் ஆனால் அவர் சொல்லுகிறபடி ஒன்றும் செய்வதில்லை. ஒவ்வொருவரும் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தம் செய்யவேண்டும். அவருடைய சித்தம் என்ன? நாமெல்லாரும் அவர்களைப்போல ஒன்றாயிருக்கவேண்டும். ஏனெனில்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்றார் (மத்.12:50).

நீங்கள் ஆண்டவருக்கு சகோதரனாகவும் சகோதரியாகவும் தாயாகவும் இருக்கவிரும்பினால் தேவனுடைய சித்தத்தின்படி வாழுங்கள். அப்பொழுது அவருக்கு சகோதர, சகோதரிகளாக இருப்பீர்கள். இல்லையேல் உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். தேவசித்தம் பரலோகத்திலே எப்படி செய்யப்படுகிறதோ அதைப்போல பூமியிலேயும் செய்யப்படவேண்டும். அது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இயேசுவானவர் ஜெபிக்க கற்றுக்கொடுக்கும்போது அதைச் சொல்லுகிறார்; "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்றார் (மத்.6:10).

பூமியிலே தேவ சித்தம் எப்படிச் செய்யப்படவேண்டும். ஆவிக்குரிய தொழுகை நடைபெறவேண்டுமென்றால்; "உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத்

தொழுதுகொள்ளவேண்டும் என்றார்" (யோவா.4:23,24). இந்த விதமாக தொழுதுகொண்டு தேவசித்தம் செய்கிறீர்களா? அப்படிச்செய்வதையே தேவன் விரும்புகிறார்.

**கேள்வி நேரம்**

**முப்புரிநூலைப்போல முதல் நூற்றாண்டில் இருந்து கொண்டு வேலைபார்த்தவர்கள் யார்?**

பவுல் சொல்லுகிறார்; "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர் களாயிருக்கிறார்கள்" என குறிப்பிடுகிறார் (ரோம.16:3,4). ஒருமனப்பட்டவர்கள் என்றால் இப்படித்தானிருக்க வேண்டும்.

பவுல் மற்றும் பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாளும் முப்புரிநூலைப்போல புதியஏற்பாட்டு கிறிஸ்தவத்தில் நிலைத்திருந்தவர்கள். கர்த்தருடைய ஊழியத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இவர்களைப்போல கள்ளங்கபடமில்லாதவர் களாக இருந்துகொண்டு கர்த்தருடைய ஊழியத்தை சிறப்புடன் செய்ய ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். இப்படியிருப்போமானால் முப்புரிநூலைப்போல இருப்போம். நீங்களும் அவ்விதமாக இருந்து செயல்பட உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 49. கிறிஸ்தவர்கள் நான்கு காரியங்களிலிருந்து விலகியிருக்கவேண்டும்

## The Christians Should Abstain from Four Things

**கி**றிஸ்தவனாயிருந்தால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என அநேகர் நினைக்கின்றனர். அது தவறாகும். ஒரு கிறிஸ்தவன் இப்படித்தான் வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால் கிறிஸ்தவர்கள் சில காரியங்களுக்கு விலகியிருக்கவேண்டும் என எருசலேம் சபையில் மூப்பர்களுடன் திட்டமிடப்பட்ட சிலவற்றை நாம் இச்செய்திவேளையில் தியானிப்போம். "எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே" (அப்.15:28). இதிலே முதலாவது நாம் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைக்குறித்த விஷயத்தில் அவைகளுக்கு



விலகியிருக்கவேண்டும். ஏன்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. இதைக்குறித்து பவுல் விளக்கும்போது; "மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார் களல்லவா?" (1கொரி.10:18). அதைப்போல விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிறவர்கள் அவைகளோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். ஆகையால் அவைகளுக்கு விலகவேண்டும். நாம் தேவனோடு ஐக்கியமுள்ளவர்கள் விக்கிரகங்களோடு அல்ல. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1கொரி.10:16).

இப்படி ஐக்கியப்பட்டுள்ள நாம் விக்கிரகத்தோடே எப்படி ஐக்கியம் கொள்ளமுடியும். அதுவும் வேண்டும் இதுவும் வேண்டும் என்று அநேகர் நினைக்கின்றனர். ஒன்று சாக்கடையில் வாழுங்கள் அல்லது பரிசுத்தத்தை தெரிந்துகொண்டு கர்த்தரோடு வாழுங்கள். "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை" (1கொரி.10:20) என மிகத்தெளிவாக பவுல் குறிப்பிடுகிறார். அவர்கள் பேய்களுக்கே பலியிடுகிறார்கள். அந்த பேய்களோடே உங்களுக்கு ஐக்கியம் உண்டா? அப்படியில்லாதபடியால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவிஷயத்தில் ஒரு கிறிஸ்தவன் அதற்கு விலகியிருக்க வேண்டும்.

மேலும், "இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்; பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது" (1கொரி.10:28). விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று நாம் அறிவோம். அது வெறும் கல்லாகவும், மரமாகவும், வெள்ளியாகவும், மனுஷனுடைய கைவேலையாகவும் இருக்கிறது. ஆனால் அதை நம்பி ஒருவன் அதற்கு பலிசெலுத்தும்போது அவைகளில் நாம் பங்குகொள்ளக்கூடாது. பங்குகொள்ளாதிருக்கும்போது அவனுக்குள் ஒரு சந்தேகம் ஏற்படும், ஒருவேளை அவன் அந்த வீணான விக்கிரகவழிபாட்டை விட்டு மனந்திரும்புகிறதற்கு ஏதுவான ஒரு சூல்நிலை உருவாகும். ஆகையால் அப்படி அறிவித்தவனிமித்தமாக அதை புசியாதிருக்கவேண்டும் என பவுல் உணர்த்துகிறார்.

அதைப்போல இரத்தத்திற்கும் ஒரு கிறிஸ்தவன் விலகியிருக்கவேண்டும். ஏனென்றால் இரத்தத்தில் உயிர் இருக்கிறது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில்

இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பிலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்'' (லேவி.17:11,14). இது இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட கட்டளையே, நாம் சாப்பிடலாமே என்று அநேகர் நினைப்பதுண்டு. சில காரியங்கள் நமக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; இரத்தத்திற்கும் என்று குறிப்பாக சொல்வதை நாம் படித்தோம்.

மேலும், ''கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்று சொல் என்றார்'' (லேவி.3:17). தேவன் ஆதியிலிருந்தே சில காரியங்களை நித்திய கட்டளையாக ஸ்தாபித்திருக்கிறார். எப்படி ஆதிமுதல் பாவத்தை வெறுத்தாரோ அதைப்போல இரத்தத்தையும் தம்முடைய பிள்ளைகள் புசிக்கக்கூடாது என்ற கட்டளையை கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் உற்றுநோக்கிப்பார்த்து அவைகளுக்கு விலகி இருப்பது நலமாயிருக்கும்.

கர்த்தர் ஆறு காரியங்களை வெறுக்கிறார்; ஏழும் அவருக்கு அருவருப்பு; அவை எதுவென்றால்; ''மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரர்களுக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே'' (நீதி.6:16-19). இதிலே ஒன்றுதான் இரத்தம் சிந்தும் கை நாம் இரத்தக் கறைகள் உள்ளவர்களாக இருக்கக்கூடாது என தேவன் விரும்புகிறார். ஆகையால் ஒட்டுமொத்தத்தில் இரத்தத்திற்கு நாம் விலகியிருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

காயின் ஆபேலின் சம்பவத்தில் காயீனை கர்த்தர் வெறுத்தார். காரணம் என்ன? அவனிடத்தில் அவனுடைய சகோதரரைப்பற்றி கேட்கும்போது அவன் நான் அவனுக்கு காவலாளியோ என்றான். ''அதற்கு அவர்; என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது'' என்றார் (ஆதி.4:10). முதல் கொலையாளியாக காயின் மாற்றப்பட்டான். சகோதரனுடைய இரத்தத்தை பூமியில் சிந்தினான். இதை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த கொலைபாதகச் செயல் தொடர்ந்து



இன்றும் நீடிக்கிறது. ஆகையால் மாபெரும் கட்டளையை தற்போது நாம் பெற்றவர்களாக இருக்கிறோம். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் எச்சரிப்புடன் இருந்து. இரத்தத்திற்கும் இரத்தம் சிந்த தீவிரிப்பதற்கும் பங்காளிகளாகாதிருங்கள்.

மூன்றாவது நெருக்குண்டு செத்ததிற்கும். ஆதியிலே நம்முடைய முற்பிதாக்களுக்கும் இவைகள் கட்டளையிடப்பட்டிருந்தது. ''தானாய் இறந்துபோனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பின்பு சுத்தமாயிருப்பான்'' (லேவி.17:15). கர்த்தருடைய கட்டளைகளை அறியாதவர்கள் இவைகளை துணிந்து சாப்பிடுகிறார்கள். சிலவீடுகளில் கோழிகள் இருக்கும் ஆனால் அவைகளை அடித்து சாப்பிடமாட்டார்கள். என்றாவது ஒரு நாள் அவைகளுக்கு சீக்கு வந்து அல்லது ரோட்டில் அடிபட்டு இறந்துவிட்டால் அவைகளை அப்படியே எடுத்துவந்து சமையல் பண்ணிவிடுவார்கள். நல்லவைகளை எல்லாம் விற்றுவிடுவார்கள். ஒரு கிறிஸ்தவன் அப்படியிருக்கக்கூடாது சுத்தமானவைகளை சமைத்து சாப்பிடவேண்டும். கர்த்தர் மனுஷனுக்கு வேண்டியவைகளை கொடுத்திருக்கும்போது நெருக்குண்டு செத்ததை ஏன் சாப்பிடவேண்டும்.

நீங்கள் தேவனுடைய ஜனங்கள் ஆகையால் தள்ளுண்டு போனதையும் நோய்கொண்டதையும், நெருக்குண்டு செத்ததையும் சமைத்து சாப்பிடாதிருங்கள். ஒருவேளை இந்த கட்டளைகளைப் பெற்றிருந்தும் மீறி சாப்பிடும்போது என்னவாகும். ஒன்று தேவ கோபம் நம்மீது பற்றியெரியும். மற்றொன்று அநேக நோயினாலும், இயலாமையினாலும் தள்ளப்பட்டு முடிவில் சரீரத்தில் பலபாடுகளை அனுபவிக்கவேண்டியவர்களாக தள்ளப்படுவோம். இப்படி மோசமான சூழ்நிலைக்கு தள்ளப்படாதிருக்க கர்த்தருடைய வசனத்திற்குச் செவிகொடுத்து நாம் இந்தவிதமான நெருக்குண்டு செத்ததிற்கும், தானாய் செத்ததிற்கும் விலகி தேவனுக்கு பரிசுத்தமானவர்களாக இன்றும் என்றும் ஜீவிக்க நம்மை காத்துக்கொள்ளுவோம்.

நான்காவது ஒரு கிறிஸ்தவன் மிகவும் முக்கியமாக வேசித்தனத்திற்கு விலகியிருக்க போதிக்கப்படுகிறான். ஏனென்றால்; ''வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்'' (1கொரி.6:18). நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும்

நினைக்கவேண்டும். அப்படியிருக்கிறபடியால் நாம் கிறிஸ்துவின் சரீரத்தை வேசியின் அவயவங்களாக்கலாமா? கூடாதே. கிறிஸ்து என்னில் வாழுகிறாரே, நான் அவருக்குச் சொந்தமானவனே, என்னை அவர் தம்முடைய இரத்தத்தினாலே விலைக்கு வாங்கியிருக்கிறாரே என்ற உணர்வு எப்பொழுதும் இருக்கவேண்டும்.

"வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" (1கொரி.6:13). சரீரத்திலே இருந்துகொண்டு நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறோம். இந்த சரீரம் வேசித்தனத்திற்கு அல்ல கர்த்தருக்கே சொந்தமானது. விக்கிரகாரதனையும் வேசித்தனத்திற்கு இணையாக இருக்கிறது. "ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல் நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக" என பவுல் எழுதுகிறார் (1கொரி.10:8). வேசித்தனம் நம்முடைய சுயசரீரத்திற்கு விரோதமான ஒரு பாவச்செயலாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தன் தன் சரீரத்தை மிகவும் கவனமாக ஆண்டுகொள்ளவேண்டும். "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்" என போதிக்கப்படுகிறோம் (1கொரி.1:2).

மோசமான கலாச்சாரங்கள் வந்து நாகரீகத்தை கூறுபோட்டுவிட்டது. இந்த விஷயத்தில் பரிசுத்தமானவர்களைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய சரீரங்களும் கர்த்தருக்குச் சொந்தமானது. கணவன் மனைவியை, கர்த்தர் இணைத்தபடியால் இருவருடைய சரீரங்களும் அவரவருக்கு சொந்தமாக இருக்கிறது. இதில் மற்றவர்களுக்கு பங்கில்லை. இதிலே ஒவ்வொருவரும் தங்களுடைய சரீரங்களை வேசியின் சரீரங்களாக மாற்றாது பாதுகாத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

இன்றைய நாள் செய்தியில் கிறிஸ்தவர்கள் விலகியிருக்கவேண்டிய நான்கு காரியங்களைக்குறித்து தியானித்தோம். உங்களுடைய வாழ்க்கையில் அவைகளைக் கைக்கொண்டு வருகின்றீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள் அவைகளின்படி வாழும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். நாம் இப்படித்தான் வாழுவேண்டும் என்ற ஒரு நியதியை தேவன் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளார். ஆகையால் நாம் அந்தப்படியாக வாழவேண்டும். இந்த விஷயத்தில் ஆதிமுதலாக நம்முடைய முற்பிதாக்கள் புறஜாதிகளுடைய மார்க்கபோதனைகளைக் கற்றுக்கொண்டு அநேகர்



தேவனைவிட்டு விலகி சோரமார்க்கம் போனார்கள். அந்தவிதமாக போய்விடாதிருக்க வேதாகமத்தின் போதனைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**ஸ்தோத்திரத்தோடே எல்லவற்றையும் புசிக்கலாமா?**

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" என்கிறார் (1தீமோ.4:4,5). அதற்காக விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை அவர்கள் அறிய ஸ்தோத்திரம் பண்ணிசாப்பிடலாம் என்று அர்த்தமல்ல. பழையஏற்பாட்டில் விரிகுளம்பு இல்லாத ஒன்றும் புசிக்கவேண்டாம் என்ற கட்டளை இருந்தது. இதை மையமாக வைத்து ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல என்கிறார். ஒருவருக்கு மாமிசம் புசிப்பது இடையூறாக இருக்குமானால் அவர் நிமித்தமாக நீ மாமிசம் புசியாதிருக்க வேண்டும் என போதிக்கப்படுகிறோம்.

அந்த பெலவீனமான மனிதனுக்கு முன்பாக நான் அப்படித்தான் செய்வேன் என்று சொல்லி புசிப்போமானால் அவனுடைய மனதை புண்படுத்துகிறவர்களாக இருப்போம். இதை தேவன் விரும்பவில்லை. உனக்கு நலமென்று நிச்சயித்த காரியத்தில் நீ நிலைத்திரு. ஒருவன் மரக்கறிகள் மட்டும் புசிக்கிறான். ஒருவன் மாம்சம் மட்டும் புசிக்கிறான். ஒருவன் எல்லாமாம்சத்தையும் புசிக்கிறான். இதில் அவரவர் நிச்சயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். பொதுவாக தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. தேவன் அவைகளை ஆசீர்வதித்து மனிதனுக்கு கட்டளையிட்டார். தேவன் ஆசீர்வதித்ததை மனிதன் தீட்டாக எண்ணக்கூடாது. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 50. மேலானவைகளைத் தேடுங்கள், மேலானவைகளை நாடுங்கள்

## Seek Those Things Which Are Above

**நீ**ங்கள் எவைகளைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள், எவைகளை நாடிக்கொண்டிருக்கிறீர்கள். பரிசுத்த வேதம் செல்லுகிறது; "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய

வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்" என்று (கொலோ.3:1,2) வாசிக்கிறோம். இவ்வுலகத்தில் நம்மை பாவத்திலிருந்து மீட்கவந்த ஆண்டவர் இயேசு நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நீங்கள் அவரோடு ஞானஸ்நானத்திலே எழுந்தவர்களாயிருக்கிறீர்கள். அப்படி அவரோடு எழுந்ததுண்டானால் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல மேலானவைகளையே நாடவேண்டும். "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ.3:3,4). இந்த நம்பிக்கையோடு காத்திருக்கிறீர்களா? சதா உலகத்தையும், அதிலுள்ளவைகளையும் நினைத்துக்கொண்டு சோர்ந்துபோகாதிருங்கள்.

நம்முடைய குடியிருப்பு நித்திய நித்தியமாக தேவனோடிருக்கிறது. அங்கிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அவர் சீக்கிரத்திலே வருவார். அவருடைய வருகையின்போது நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம். "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும். பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1தெச.4:16). அநேகருக்கு இயேசுவின் வருகையின்போது மரித்தவர்களுடைய நிலைமை என்னவாகும் என்ற சந்தேகம் இருக்கிறது.

வேதம் மிகத்தெளிவாக நமக்கு போதிக்கிறது. அவருடைய வருகையின்போது முதலாவது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுப்பப்படுவார்கள். பின்பு நாமும் அவரோடு எடுத்துக்கொள்ளப்படுவோம். இப்படி மேலானவைகளை எதிர்பார்த்துக்காத்திருக்கிற நாம் கீழானவைகளை பார்த்து வீணாய்போய்விடாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிற நாம் அழித்துப்போடவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அவைகள் எவையென்றால்; "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ.3:5). இவைகளை நம்முடைய அவயவங்களில் நாம் அழித்துப்போடாமல் இருந்துகொண்டு மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயலாது. இவைகள் நம்முடைய ஆத்துமாக்களை



கறைப்படுத்தக்கூடியவைகள். இவைகளை உங்களுடைய சரீரத்திலே உண்டுபண்ணுகிறவன் பிசாசு. மாம்சத்தின் இச்சையையும், கண்களின் இச்சையையும், ஜீவனத்தின்பெருமையையும் உண்டுபண்ணி உங்களை மேற்கண்ட பாவங்களுக்கு உட்படுத்துவான். இவைகளை உங்களுடைய சரீரத்தில் அனுமதியாதிருங்கள். பாவத்தையும் பாவத்தை தூண்டுகிற பிசாசின் செயல்பாடுகளையும் உங்களைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும்.

"உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்று ஆண்டவர் சொல்லும் போதனை எவ்வளவு அருமையானது (மத்.18:9). நாம் இரண்டு கண்கள் உடையவர்களாக எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் மேலான ஆசீர்வாதத்துக்குள் பிரவேசிப்பது மேன்மையாயிருக்குமல்லவா? ஆகையால் உங்கள் அவயவங்களில் பொல்லாப்பானதை உண்டுபண்ணு கிறவைகளை அழித்துப்போட தயங்காதிருங்கள். இவைகளை அழித்துப்போடாதிருந்தால் என்ன நேரிடும்?

"இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்" என பவுல் நினைப்பூட்டுகிறார் (கொலோ.3:6,7). தேவ கோபாக்கினைக்கு தப்பிக்கொள்ள சகல அசுத்தத்தையும் உண்டுபண்ணும் அவயவங்களை களைந்துபோட்டு, கிறிஸ்துவின் உன்னதமான சரீரத்தையுடையவர்களாகயிருங்கள்.

மேன்மையானவைகளை நாடுகிற நாம் விட்டுவிடவேண்டியவை என்னவென்று பார்க்கும்போது; "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" எனக் காண்கிறோம் (கொலோ.3:8). கோபம் அநேகருடைய இல்லத்தில் குடிகொண்டிருக்கிறது. என்னசெய்வது திடீரென டென்சன் ஆகிவிடுகிறேன் என்ன செய்வதென்று தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டே டென்சன் ஆனால் எப்படி? அவைகளை குறைக்கவும் கோபம் கொள்ளாமல் இருக்கவும் முயற்சிக்கவேண்டும்.

நெருப்பு பற்றியெறியும்போது ஐயோ! நெருப்பு பற்றியெறிகிறதே என்று சொல்லிக்கொண்டே இருந்தால் எப்படி? அவைகளை அணைக்க முயற்சிக்க வேண்டுமல்லவா? அதைப்போல வாழ்க்கையில் ஏற்படும் கோபத்தை குறைக்க

வேண்டும். அதைப்போல பொறாமை, தூஷணவார்த்தைகள் இவைகளையெல்லாம் விட்டுவிடும்போது பிதாவின் மெய்யான குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் காணப்படுவோம். "மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" என வேதம் சொல்லுகிறது (யாக்.1:20). ஆம், தேவனுடைய நீதி கோபத்தில் அல்ல குணத்தில் இருக்கிறது. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லுகிறது. சண்டையிடுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று ஒரு இடத்திலும் வேதம் சொல்லவில்லை. ஆகையால் நீங்கள் தேவனுடைய ஜனங்களாக இருப்பீர்களானால் தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியுங்கள். அநேகராலே நற்சாட்சி பெறத்தக்கதாக, மேலானவைகளை நாடுங்கள், தேடுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.

நாம் களைந்துபோடவேண்டியவைகள் எவைகளென்றால்; "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு" என காண்கிறோம் (கொலோ.3:9). பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருந்தும் பழைய சுபாவங்கள் அவர்களை விட்டுவிடாமல் தொற்றிக்கொண்டிருக்கிறது. காரணம், அவர்கள் இன்னும் களையவேண்டிய காரியங்களை களையவில்லை. இயேசு நம்முடைய பழைய பாவங்களை மன்னித்தார். ஆனால் நாம் அவைகளை மீண்டும் செய்யாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். பொய் என்பது மனிதனை விட்டு நீக்கமுடியாத ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக நான் பொய்பேசாமல் இருக்கமுடியாது என்று சொல்லக்கூடாது. ஏனெனில் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் என போதிக்கப்படுகிறோம்.

அந்தப்படியாக பொய்யைக் களைந்து பிறனுடன் மெய்யைப்பேச வேண்டும். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற வசனத்தின்படி அவன் புதியமனுஷனாயிருக்கிறான் (2கொரி.5:17). தேவன் கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனை ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார் என்று பார்த்தீர்களா? இந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாக புதிய மனுஷனாக நடந்துகொள்ளுகிறீர்களா? அநேகர் காய்ந்த பாவியாக இருந்து ஞானஸ்நானத்திற்கு பின்பு நனைந்த பாவியாக வெளியே வருகிறார்கள். இது எத்தனை வேதனையாக இருக்கிறது. ஞானஸ்நானத்தில் தேவனுடைய பிள்ளையாக பிறக்கிறோம். ஒரு குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு சந்தோஷம் கொள்ளுகிறோம். அந்த குழந்தையின் முகத்தைப் பார்க்க உறவினர்களும் நண்பர்களும் வருகிறார்கள். அந்த புதிய



முகத்தைப் பார்க்கவும் அதனுடைய அழகான உருவத்தைப் பார்க்கவும் வருகிறார்கள். ஒரு பாவி மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கும்போது இந்தவிதமாக பிறந்தால் அது எத்தனை ஆசீர்வாதத்தை அந்தக் குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் கொண்டுவரும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

நாம் தரித்துக்கொள்ளவேண்டியவைகள் எதுவென்றால்; "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" என சொல்லப்பட்டுள்ளது (கொலோ.3:10). ஆதாம் தேவசாயலை ஏதேன் தோட்டத்தில் இழந்தான். அதை மீண்டும் பெற்றுத் தரும்படியாக இயேசு இப்பூமிக்கு வந்தார். பாவத்தில் மரித்துக்கிடந்த மனுஷனை அவருடைய இரத்தத்தினால் மீட்டு எடுத்தார். அவர் மீட்டு எடுத்தபடியால் நாம் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவன் கிறிஸ்துவை உடையவனாக இருக்கிறான். கிறிஸ்துவை தரித்தவனாயிருக்கிறான். அவன் தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டான். இப்படி நீங்கள் கிறிஸ்துவையும் அவருடைய சாயலையும் தரித்து புதிய மனுஷனாயிருக்கிறீர்களா? "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்கிறார் (கலா.3;27).

அநேகர் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று உள்ளார்களா என்று கேட்டால் எனக்கு சின்னவயதிலே கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அன்பானவர்களே, கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத்தரித்துக்கொண்டீர்களே என்கிறார். நன்மை தீமை அறியத்தக்க பருவம் வந்து, பாவமன்னிப்புக்கென்று எத்தனைபேர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்களோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்தவர்களாக கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை.

"ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு.. இவையெல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ.3:12,14). இப்படி நாம் தரித்துக்கொள்ளவேண்டியவற்றை தரித்துக்கொண்டு மேலானவைகளைத்

தேடுவோம். மேலும், நாம் மன்னிக்கவேண்டியவைகள் எவைகளென்றால்; "ஒருவரையொருவர் தாங்கி, ஒவருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ.3:13). ஒரு கிறிஸ்தவன் மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கிறிஸ்து நம்முடைய பாவத்தை மன்னித்திருக்கும்போது நாமும் மற்றவர்களுடைய பாவங்களை மன்னிக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக் கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). நாம் குணப்படவேண்டும் என வேதம் போதிக்கிறது. அதற்கான வழி ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னியுங்கள். இதைச் செய்வீர்களா? செய்து தேவஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

**கடைசியாக:** மேலானவைகளை தேடிக்கொண்டும் நாடிக்கொண்டும் இருக்கிற நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென வேதம் எதிர்பார்க்கிறது. "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ.3:15). தேவன் நமக்கு எவ்வளவோ நன்மைகளை செய்திருக்கிறார். அவைகளை எண்ணி நாம் ஒவ்வொரு நாளும் நன்றியுள்ளவர்களா ஒரே சரீரமாக இருந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தவேண்டும். "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்" (1கொரி.1226). ஆகையால், நீங்கள் இசைந்த ஆத்துமாக்களாக ஒன்றையே சிந்தித்து அந்த மேலான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

### கேள்வி நேரம்

**தேவன் எனக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று ஒருவர் சொல்லிவிட முடியுமா?**

முடியாது. ஏனெனில், ஒவ்வெரு நாளும் எத்தனையோ நன்மைகளை அனுபவிக்கிறோம். தேவன் உண்டுபண்ணின பூமி நமக்கு வேண்டிய அனைத்தையும் ஒவ்வொருநாளும் தடையின்றி கொடுத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய இச்சையின்படி நாம் எடுத்துவைத்தவைகள்கூட கெட்டுபோய்விடும். ஆனால் தேவன் கொடுப்பது ஒவ்வொன்றும் புதியவைகளாகவும், சிறப்பாகவும் இருக்கும். எனவே, "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என 2கொரி.9:15-ல் வாசிக்கிறோம். அவ்வளவு நன்மைகளை தேவன் நமக்குச் செய்துள்ளார். அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லி ஜெபிப்போம்.



## 51. எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது

## Our Sufficiency Is From God

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்கிறார் (2கொரி.3;5). ஆம், அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரே அவர்களை அழைத்தும் இருக்கிறார். பிதாவாகிய தேவன் அவர்களை தகுதிப்படுத்தியிருக்கிறார். அவர்கள் தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை. எங்களால் எல்லாம் கூடும் என்று சொல்லவுமில்லை.

சகல அதிகாரமும் உடைய ஆண்டவருடைய ஊழியக்காரர்களாக, சீஷர்களாக, அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள். ஒருமுறை பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்கு போகும்போது ஒரு சப்பாணி குணமாக்கப்பட்டான்; அந்த "குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள். பேதுரு அதைக் கண்டு ஜனங்களைநோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?" என்று கேட்டார்கள் (அப்.3:11,12).

இப்படிப்பட்ட அற்புதத்தை அவர்கள் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியத்துடன் பேதுருவையும், யோவானையும் நோக்கிப்பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்களிடத்தில் எந்தவிதமான சக்தியோ அல்லது அவர்களுடைய பக்தியுள்ள காரியத்தினாலோ இந்த சப்பாணி சுகமாக்கப்படவில்லை. ஆனால் இவர்களால்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்ற ஆச்சரியத்தோடு அவர்களை நோக்கிப்பார்த்தனர். அநேகர் தங்கள் மூலமாகவே எல்லாம் நடைபெறுகிறது என்று சொல்லி தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்தை விரும்புகின்றனர். ஆனால் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய நாமத்தையே உயர்த்த விரும்பி இயேசுவின் நாமமே இந்த சர்வாங்சுகத்தை இவனுக்குக் கொடுத்தது என்றனர். மேலும் "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச்

சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்'' என அப்.5:12-ல் வாசிக்கிறோம். கர்த்தர் பரமேறி சென்றபின்பு அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களை புதிய ஏற்பாட்டு சபையின் துவக்க காலத்தில் செய்துகொண்டுவந்தார்.

அதைப்போல பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்துகொண்டுவந்த நாட்களில் ஒரு சம்பவம் நடந்தது; ''பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்'' என்றார்கள் (அப்.14:11,12,15). பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் இருந்த அவனை பவுல் உற்றுப்பார்த்து அவனுக்கு இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று கண்டு; நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொல்ல அவன் குதித்தெழுந்து நடந்தான்.

இந்த அற்புதத்தைக் கண்ட ஜனங்கள் மனுஷர்கள் தேவர்கள் ரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு பூமாலைகளையும் எருதுகளையும் பலியிடும்படியாக கொண்டுவந்தார்கள். இந்த புகழ்ச்சியை எற்றுக்கொள்ள மனமில்லாத பவுலும் பர்னபாவும் கூட்டத்திற்குள்ளே தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு ஓடி நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தானே என்று சொன்னார்கள். இன்றைக்கு இப்படி சொல்லுகிறவர்களை நாம் பார்த்திருக்கிறோமா? எப்பொழுதும் தங்களை புகழவேண்டும் என்று எதிர்பார்ப்போடு காத்திருக்கிறவர்களைத்தான் பார்க்கிறோம். மனுஷரால் வரும் புகழ்ச்சியை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால்; அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என்றோ அல்லது எங்களால் எல்லாம் செய்யமுடியும் நாங்கள் அப்போஸ்தலர்கள் என்றோ எங்கும் தங்களை அவர்கள் உயர்வாக பேசிக்கொள்ளவுமில்லை, கருதிக்கொள்ளவும் இல்லை.

கிதியோன் என்று சொல்லக்கூடிய தேவ மனுஷனை நீங்கள் அறிவீர்கள். அவனை இஸ்ரவேலை இரட்சிக்கும்படியாக கர்த்தர் தெரிந்துகொண்டார். அப்பொழுது அவன்; ''ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே



ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்'' (நியா.6:15). ஆனால் கர்த்தர் கிதியோனைப் பெலப்படுத்தி உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்று சொல்லி அவனைத் தகுதிப்படுத்தி அனுப்பினார். அவன் முன்னூறுபேரைத் தெரிந்துகொண்டு அவர்களைக் கொண்டு இஸ்ரவேலை ரட்சித்தான். தகுதியற்றவர்களைத் தேவன் தகுதிப்படுத்துகிறார் என அறிகிறோம்.

மேலும் பவுல் சொல்லும்போது; எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது என்கிறார். அப்போஸ்தலர்களைப் பெலப்படுத்தியவர் கர்த்தர். ''பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்'' (அப்.1:8). அந்தப்படியாக அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் முதல் நூற்றாண்டு காலத்தில் பெரிய காரியங்களைச் செய்தார். அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படி உலகமெங்கும் புறப்பட்டுச் சென்று சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்து, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பலமாய் சாட்சிகொடுத்தார்கள்.

எருசலேம் துவங்கி பல இடங்களில் கர்த்தருடைய சபை உருவானது. மேலும் பவுல் சொல்லும்போது; எங்களுக்குத்தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்'' (1கொ.4:9). இன்று அப்போஸ்தலர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. இவர்களே கடைசி அப்போஸ்தலர்கள். இவர்களுக்கு பின்பு எந்த ஒரு அப்போஸ்தலர்களையும் ஆண்டவர் தெரிந்துகொள்ளவில்லை, ஏற்படுத்தவும் இல்லை. வேதத்தில் எங்கும் சொல்லப்படவுமில்லை. ஏனெனில் ஆரம்பமுதல் இயேசுவின் உயிர்த்தெழுதல் வரை இருந்தவர்கள் இவர்களே எனக்காண்கிறோம்.

''இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்'' என்கிறார் பவுல் (2கொரி.4:7). பிதாவாகிய தேவனே இவர்களை தம்முடைய ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தினார். அந்தப்படியாக அவருடைய அனாதி திட்டத்தின்படியே இவர்களை எடுத்துப்பயன்படுத்தினார். இவர்கள் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றவர்களாயிருந்தனர். இன்றைக்கு பதவி, பட்டங்கள்

என்று ஜனங்கள் அடித்துக்கொள்ளுகின்றனர். இவர்கள் அப்போஸ்தலர்களுக்குரிய பட்டங்களைப் பெற்றும் தங்களை உயர்வாக எண்ணிக்கொள்ளவில்லை. தேவனையே மகிமைப்படுத்தினார்கள். உங்களுடைய தகுதி எவரால் உண்டானது? உங்களைத் தகுதிப்படுத்திய கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்களா? அப்படி உண்மையுள்ளவர்களாக இருந்து அப்போஸ்தலர்களைப்போல பாடுபடும்போது வாடாத ஜீவகிரீடத்தை அவரால் பெற்றுக்கொள்வீர்கள்.

இஸ்ரவேலை இரட்சிக்கும்படி மோசேயை தேவன் தெரிந்துகொள்ளும்போது; "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான். அதற்கு அவர்; நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்தவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்" (யாத்.3:10-12).

மோசே தன் மாமனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது தேவன் அவனை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார். அப்பொழுது அவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவர நான் எம்மாத்திரம் என்றான். இப்படிச் சொன்ன மோசேயை தேவன் அழைத்து அவனைத் தகுதிப்படுத்தினார். இந்த தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது. அன்பானவர்களே, நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக செய்கிற தேவன் நம் தேவன். அவர் உங்களையும் பெலப்படுத்தி வழிநடத்த அறிந்திருக்கிறார். நீங்கள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும், அவருடைய வேலைகளைச் செய்யவும் ஆயத்தமாக இருங்கள்.

மேலும், அப்.பவுல் சொல்லும்போது அவரே எங்களை தகுதியுள்ள வராக்கினார் என்கிறார். ஆம், அவரே அவர்களைத் தகுதிப்படுத்தினார் எனக் காண்கிறோம். "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" என்கிறார் (1கொரி.2:12). இன்றைக்கு ஆவியைப் பெற்றோம், ஆவியைப் பெற்றோம் என்று சொல்லிக்கொண்டு ஒரு சாரார் தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் எந்த ஆவியைப் பெற்றார்கள்? ஆவிக்குரியவைகளை அறியும்படி ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். அந்த ஆவியானவருடைய



உதவியுடன் அநேக நிருபங்களை எழுதியிருக்கிறார்கள். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்ற வசனத்தின்படி எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் அனுப்பப்பட்ட ஆவியை வாக்குத்தத்தின்படி பெற்றுக்கொண்டார்கள். நாம் விசுவாசிக்கும்போது ஆவியானவரால் அவருக்குள் முத்திரையிடப்படுகிறோம். அப்படி முத்திரையிடப்பட்டவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான். இதினாலோ ஆவிக்குரியவர்கள் இன்னாரென்று நாம் அறிந்துகொள்ளலாம். மேலும், அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; "நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்" (1கொரி.3:9). அப்போஸ்தலர்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாக இருந்தார்கள். அதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தினவர் தேவன்.

தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொண்டு வேலைபார்க்கிறவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லமுடியாது. "உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்" என்று பவுல் சொல்லுகிறார் (கொலோ.1:26). தேவனாலே இந்த தகுதி ஏற்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவும் தம்மைத்தாமே உயிர்த்தவில்லை பிதாவாகிய தேவனே அவரை உயர்த்தினார்.

ஆம், பிரியமானவர்களே, தேவன் ஆதி அப்போஸ்தர்களை தகுதிப்படுத்தி தம்முடைய ஊழியத்திற்கு தெரிந்துகொண்டார். இன்றைக்கு உங்களுக்கு ஒரு தகுதியிருக்குமானால் அது தேவனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒன்றா அல்லது அந்த தகுதிக்கு நான் ஏற்றவனாயிருக்கிறேனா? என்று வசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களுடைய தகுதி தேவனாலே இருக்கட்டும்.

### கேள்வி நேரம்

**எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரம் உண்டா?**

பவுல் இதற்கான விடையை அளிக்கிறார். "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது" என்கிறார் (1கொரி.10:23). தான் ஒரு அப்போஸ்தலனாக இருந்தபோதும்.

அந்த அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல் தன்னைத் தானே எல்லாரும் அடிமையாக ஒப்புக்கொடுத்தார். ஆண்டவர் சொல்லுகிறபடி முதன்மையானவன் ஊழியக்காரனாயிருக்க வேண்டும். அப்பொழுதே முதன்மைக்குரிய தகுதியை பெறுகிறோம். அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி மேட்டிமை

கொள்ளக்கூடாது. அது பக்திவிருத்தியையும் உண்டாக்காது. இதில் தன்னை முழுதுமாக ஒப்புக்கொடுத்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவரைப்போல நீங்களும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 52. தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்

## He Who Humble Himself Shall Be Exalted

**த**ன்னை உயர்வாக கருதுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நம்மை நாமே உயர்வாக கருதுவதற்கு என்ன இருக்கிறது. நம்மால் ஏதாவது ஒன்றை உருவாக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியுமா? ஆதிமுதலாக மனிதன் இந்த உலகத்தில் சுற்றிச் சுற்றிச் வருகிறான். அவனால் செய்யமுடிந்தது அதுவே மற்றொன்றையும் செய்யமுடியாது. இப்படியிருக்கிறபடியால்; இயேசுவானவர் சொல்வதைக் கவனிப்போம்; "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்.23:12).

சொல்லப்பட்ட வசனத்தை கவனித்தீர்களா? உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். பார்வோன் என்ற எகிப்தின் அதிபதி தன்னை முழுவதுமாக உயர்த்தினான். அவனை மனமடிவடையச்செய்யும்படியாக தேவன் அவனிடத்தில் மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார். "அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து; உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமுகத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களைப் போகவிடு" என்று சொல்லும்படி தேவன் இவர்களை பார்வோனிடத்திற்கு அனுப்பினார் (யாத்.10:3). இதைக்கேட்ட பார்வோன் கொஞ்சமும் அசையவில்லை. எகிப்தின் அதிபதியாகிய அவன் மேட்டிமையுள்ளவனாகவும் இஸ்ரவேலை அற்பமாகவும் எண்ணி அவர்களை கொடுமையாக வேலைவாங்கி அடிமையாக வைத்திருந்தான். இதற்கு ஏற்றாற்போல பார்வோனின் ஜனங்கள் இவர்கள் பலுகிப்பெருகாதபடி ஆலோசனை சொல்லி பல உபாய தந்திரங்களை கையாண்டார்கள்.

இருந்தபோதும் இஸ்ரவேலர் தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே பலுகி பெருகினார்கள். இதைப்பொறுக்க மனதில்லாதிருந்த பார்வோன் இஸ்ரவேலை செங்கல் சூலையில் வேலைவாங்கி கொடுமைப்படுத்தினான். அவர்களோ தேவனை ஆராதிக்கும்படி எங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லி பத்துமுறை முறையிட்டார்கள். எகிப்திலே அநேக வாதைகளை தேவன் ஏற்படுத்தினார். அவனோ அவர்களை போகவிடாதிருந்தான். கடைசி வாதையில் பார்வோன் பயந்துபோய் அவர்களை வழிவிட்டான். பின்பு



அவர்களை துரத்த ஆரம்பித்தான். செங்கடல் நடுவாக தேவன் பெரிய வெற்றியை இஸ்ரவேலுக்கு கட்டளையிட்டார். "ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை" (யாத்.14:28). தன்னை உயத்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி அவனும் அவனுடைய ஜனங்களும் தாழ்த்தப்பட்டு அழிந்துபோனார்கள்.

புதிய ஏற்பாட்டில் ஏரோதைக்குறித்து படிக்கிறோம்; "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்" (அப்.12:23). அவன் பேசும்போது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, தேவ சத்தம் என்றார்கள். அதை அவன் ஏற்றுக்கொள்ளும்போது அவன் அடிக்கப்பட்டான். மற்றவர்களால் புகழப்படுவதை விரும்பினான். தன்னை தேவனுக்குச் சமமாக ஜனங்கள் பேசுவதை பெருமையாக எண்ணினான். ஆகையால் கர்த்தர் அவனை அடித்தார். மனுஷனுக்கு ஏற்படும் புகழ்ச்சி கண்ணியை வருவிக்கும் என்ற வசனத்தின்படி அவனுக்குச் சம்பவித்தது.

தன்னை ஒருவன் தாழ்ததும்போது அவனுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்கள் அதிகமாயிருக்கும். ஆண்டவர் இயேசு; "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8). மேலான இடத்திலிருந்து கீழான இடத்திற்கு வருவது கூடாதகாரியம் என்று அநேகர் கருதுகின்றனர். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கும் போது நாம் எம்மாத்திரம். நம்மையும் தாழ்த்தவேண்டுமல்லவா? நாம் மண்ணாயிருக்கிறோம்.

அவர் தேவனுடைய சமுகத்திலிருந்து மாம்சத்திலே நம்மை மீட்கும்படியாக பிறந்தவர். அவர் மரணபரியந்தமும் தம்மை தாழ்த்தியிருக்கிறார் என காண்கிறோம். நாமும் இந்தவிதமாக இயேசுவை மாதிரியாக கொண்டு நம்முடைய வாழ்க்கையில் நம்மை முழுவதுமாக தேவசமுகத்தில் தாழ்த்துவோம். அப்பொழுது தேவனால் உயர்த்தப்படுவோம். "நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும்,

சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு'' என கொலோ.3:12-ல் வாசிக்கிறோம். நாம் நமக்காக வாழாமல் கர்த்தருக்காக தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாக ஒப்புக்கொப்போம். நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால் இயேசுவைப்போல இரக்கசிந்தையுடையவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், நீடிய பொறுமையுள்ளவர்களாகவும் இருந்து பிதாவாகிய தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும்போது தேவனால் இயேசுவைப்போல உயர்த்தப்படுவோம். கர்த்தர் நம்மை உயர்த்த வல்லவராயிருக்கிறார். மனிதனுக்காக தாழ்மையாய் நடக்க முற்படாதிருங்கள். அது மாய்மாலமாக இருக்கும்.

தேவன் நம்மை அறிகிறார் என்ற உணர்வு எப்பொழுதும் நமக்குள் இருக்கவேண்டும். ''கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்'' (யாக்.4:10). பொதுவாக ஜனங்கள் மனுஷருக்கு முன்பாக தாழ்மையாக இருப்பதைப்போல கும்பிடுபோடுவார்கள். இது அரசியல் வாதிகளில் பலரிடமிருந்து கற்றுக்கொண்ட கலையாக இருக்கிறது. இதனால் மனிதர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை. அவரவர் நல்லநிலைக்கு சென்றவுடன் எல்லாவற்றையும் மறந்து தனக்காக வாழ ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் நாம் அப்படிபோதிக்கப்படவில்லை உன்னைப்போல பிறனை நேசி எனவும், தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்ற வசனத்தின்படி வாழவேண்டும்.

ஆகையால் எனக்கு அன்பானவர்களே, ''ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' (1பேது.5:6). உங்களை தெரிந்துகொண்ட கர்த்தர் உங்கள் மூலமாக பல காரியங்களைச் செய்வார். பூமியில் தேவனால் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்தோடு உண்டாக்கப்பட்டு உள்ளது. அதைப்போல மனிதனை மேன்மையாக தம்முடைய சாயலில் உண்டாக்கினார். உண்டாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறும்படியாக தேவனுக்கு உங்களை முழுவதுமாக தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள்.

ஒப்புக்கொடுக்கும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அற்புதமானவை களாகயிருக்கிறது. ''என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன்'' என்று



நம்முற்பிதாக்களுக்கு கர்த்தர் சொல்லியிருந்தார் (2நாளா.7:14). இஸ்ரவேல் கர்த்தருடைய நாமத்தை தரித்த ஜனமாக இருந்தது. இன்றைக்கும் நாம் கிறிஸ்தவர்கள் என்று கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்ட தேவனுடைய ஜனங்களாகயிருக்கிறோம். அந்த நாமத்திற்கு மகிமைக்குறைச்சலை ஏற்படுத்துகிறவர்களாக ஒருபோதும் வாழக்கூடாது. அந்த நமத்தை அறியாதவர்களும் அறிந்து இரட்சிக்கப்படும்படியாக அதற்கு மகிமையைக் கொண்டுவரவேண்டும்.

இஸ்ரவேலர் தங்களைத் தாழ்த்தி பொல்லாதவழிகளைவிட்டு திரும்பினால் செவிகொடுப்பேன் என்றார். அதைப்போல இன்றும் மனந்திரும்புகிற பாவிகளை கர்த்தர் மன்னித்து தம்முடைய சபையில் சேர்க்கிறார் எனக் காண்கிறோம். ''நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்; உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொருங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்'' என்கிறார் (ஏசா.57:15). தேவன் தன்னைத்தான் உயிர்த்துகிறவர்களிடத்தில் வாசம்பண்ணுகிறதில்லை.

மேற்கண்ட வசனத்தின்படியாக யார் ஒருவன் தன்னைத் தாழ்த்துகிறானோ அப்படிப்பட்டவர்களிடத்தில் வாசம்பண்ணுகிறார். அவர்கள் தேவனுடைய வீடாகவும், சபையாகவும், பரிசுத்த சந்ததியாகவும், ஆசாரியகூட்டமாகவும் அழைக்கப்படுகிறார்கள். வாழ்க்கையில் பணிவு வேண்டும். பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறார். மேட்டிமைகொண்ட எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். அப்படிப்பட்டவர்களை அவர் தூரத்திலிருந்து அறிகிறார். ஒரு சிறுபிள்ளையைப்போல தன்னை தாழ்த்தவேண்டும் என்பதற்காக; ''இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்'' என்றார் (மத்.18:4).

சிறுபிள்ளைகளிடத்தில் ஒரு காரியத்தை சொன்னால் உடனே மறுப்பு சொல்லாமல் அதைச் செய்வார்கள். அதிகமான கீழ்ப்படிதல் அவர்களிடத்தில் காணப்படும். இதையே பெரியவர்களிடம் சொன்னால் எதற்கு? ஏன்? மற்றவர்களை சொல்லக்கூடாதா? நான்தான் அதைச் செய்யவேண்டுமா? போன்ற பல கேள்விகளை கேட்டு அதற்கு கீழ்ப்படிய மாட்டார்கள். ஆனால் சிறுபிள்ளைகள் அப்படியல்ல, உடனே கீழ்ப்படிந்து செய்வார்கள். ஆகையால் பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்கிறார். நீங்கள் அந்த

ராஜ்யத்தில் பிரவேசிக்க உங்களை முழுவதுமாக சிறுபிள்ளைகளைப்போல தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள்.

தாழ்மைக்கு இருவருடைய ஜெபத்தை ஆண்டவர் நமக்கு எடுத்துக்காட்டாக சொல்லுகிறார். "இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்.18:10-14).

இந்த இரண்டுபேரில் பரிசேயனுடைய ஜெபம் நிராகரிக்கப்பட்டது. அவன் மேட்டிமையாக, தன்னைத் தாழ்த்தாமல் ஜெபித்தான். ஆனால் ஆயக்காரனோ தன்னை முழுவதுமாக தாழ்த்தி தான் ஒரு பாவி என்பதை அறிக்கையிட்டு கிருபையாய் இறங்கும்படி கேட்டுக்கொண்டான். ஆகையால் அவன் நீதிமானாக்கப்பட்டவனாய் வீடுதிரும்பினான். உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டதாயிருக்கிறது. நீங்கள் உங்களை தேவ சமுகத்தில் தாழ்த்தும்போது கர்த்தரால் உயிர்த்தப்படுவீர்கள். உங்களுடைய ஜெபம் ஆயக்காரனுடைய ஜெபத்தைப்போல இருக்கட்டும்.

**கேள்வி நேரம்**

**தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார்?**

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது" (யாக்.4:6). மற்றவர்கள் பெருமையுள்ளவர்களுக்கு எதிராக இருக்கிறார்களோ இல்லையோ தேவன் அப்படிப்பட்டவர்களுக்கு எதிராளியாக இருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து ஒரு ஆசீர்வாதமும் பெருமையுள்ளவர்களுக்கு வந்துசேராது. ஆகையால் உங்களில் பெருமை, அதாவது மேட்டிமை, தன்னைத் தான் உயர்த்துவது போன்ற மோசமான எண்ணங்கள் இருக்குமானால் அவைகளை உங்களை விட்டு அகற்றிப்போடுங்கள்.



தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக உங்களை அவருடைய சமுகத்திற்கு ஒப்புக்கொடுங்கள். பெருமையோடு வாழ்ந்து மரித்தவர்களுடைய நிலைமை என்னவானது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அப்படி வாழ்ந்து மரித்தவர்களை வேதாகமத்தில் பார்க்கலாம். அவர்களுடைய முன்நிலைமையைக்காட்டிலும் பின்நிலைமை மிகவும் கேடுள்ளதாகப் போயிருக்கும். அந்தவிதமாக போய்விடாதிருக்க பெருமையை உங்களில் உண்டாக்கும் மாம்சஇச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் இடமளிக்காது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்க நாடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.